# தமிழ்ப் பேழை

பதிப்பாசிரியர்

டாக்டர்-ஆறு-அழகப்பன்

O-:ஓ
N81
119656

# தமிழ்ப் பேழை

454

பதிப்பாசிரியர்:

டாக்டர் ஆறு. அழகப்பன்

தமிழ்ச்சுரங்கம்

49, தெற்கு ஆவணி மூல வீதி,

மதுரை-1

தமிழ்ச் சுரங்க வெளியீடு—க
முதற் பதிப்பு—1981

O-:9
N81

விலை: ரூ. 22-00

49656

ஏஷியன் அச்சகம்,
சென்னை - 600 014.

# பேழையின் பெருமை

தமிழ், தமிழ் மக்கள், தமிழ்நாடு— அளக்க முடியாத பெருமையுடையன! புலவர்கள் கவிதைகளால் கட்டியும் கட்ட முடியாத வனப்புடையன! அத்தகைய ஓங்குபுகழ் பெற்ற பெருமை படைத்தவைகளை நவமணிகளாகப் பகுத்துப் பேழைக்குள் அடக்கத் தமிழ்ச்சுரங்கத்தார் நினைத்தார்கள். அதனை ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கூடும் வேளையில் வெளிக் கொணரவும் விரும்பினார்கள்.

இத்தமிழ்ப்பணியைத் திருப்பணியாக ஏற்றுக் கலைக்காவலர் டாக்டர் ஆறு. அழகப்பன் செய்து தர இசைந்தார்கள். தமிழ், தமிழ்நாடு, தமிழ் மக்கள்மீது தனிக்காதலும், பற்றும் மிக்க அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, பல தமிழறிஞர்கள் கருத்திற்கேற்பத் தமிழ்த்தாய் திருவுருவத்தை ஓவியத்திலும்,பஞ்சலோகத்திலும் செய்து பல கோடி தமிழ்க்கண்கள் கண்டுகளிக்கச் செய்தவர். நாட்டுப்புறப் பாடல்கள், நாடகக்கலை — இவைகளில் அருந்தொண்டாற்றிவரும் அவர்கள்,

பேழையை அழகுபடுத்தித் தமிழன்னை மகிழ மலர்த்தாள்களில் காணிக்கையாகவும் ஆக்கி அன்னையை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறார்கள். செந்தமிழுக்குரிய செய்திகளைச் செம்மைப் படுத்திப் பதிப்பித்துத் தந்த அவர் தமிழ்த்தொண்டு மேலும் வளர்க என வாழ்த்துகிறோம். கலைக் காவலருக்கு நற்றுணையாக இருந்த புலவர் நாக சண்முகத்தினை நன்றியுடன் நினைக்கிறோம்.

நவமணியில் மேலும் சேர்க்கப்பட வேண்டிய கருத்துப் பொருள்கள் உண்டு. தொடர்ந்துவரும் பதிப்புகளில் அவை சேர்க்கப்படும்.

தமிழ்ப்பேழை — தமிழின் பெருமை!
தமிழ்ப்பேழை — தமிழ்நாட்டின் வரலாறு!
தமிழ்ப்பேழை—தமிழனின் சொத்து!
ஒவ்வொரு தமிழன் கைகளிலும் இருக்க வேண்டிய நூல் — தமிழ்ப் பேழை!

—தமிழ்ச்சுரங்கத்தார்

## பேழையின் உள்ளே


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வைரம் | — தமிழ் | ... | *1* |
| 2. | முத்து | — இலக்கணம் | ... | *47* |
| 3. | மாணிக்கம் | — இலக்கியம் | ... | *103* |
| 4. | மரகதம் | — புலவர்கள், புரவலர்கள் | ... | *151* |
| 5. | நீலம் | — ஊரும் பேரும் | ... | *199* |
| 6. | புட்பராகம் | — உயிரினங்கள் | ... | *217* |
| 7. | வைடூரியம் | — கலைகள், விழாக்கள் | ... | *259* |
| 8. | கோமேதகம் | — பண்பாடும் மரபுகளும் | ... | *283* |
| 9. | பவளம் | — தமிழகம்—இன்று | ... | *303* |



ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி
டாக்டர் ஆறு. அழகப்பன் தலைமையில்,
ஆய்வுக்குழுவினர் கருத்திற்கேற்ப வரையப்பட்ட
**தமிழ்த்தாய் ஓவியம்**



தமிழ்த்தாய் — பஞ்சலோகச் சிலை

# நவமணிகள்

உலக நாடுகளில் நாகரிகம் என்று தோன்றியதோ அன்று முதல் இன்றுவரை நவமணிகள் செல்வாக்குப் பெற்று வழங்கி வருகின்றன.

எந்த நாட்டையும்விட இந்தியத் திருநாடு இரத்தினங்களின் பயன்களை நன்குணர்ந்து போற்றி வந்துள்ளது. தமிழ் மக்களின் வாழ்வில் இவை இன்றளவும் பெரும் பங்கு வகித்து வருகின்றன. அன்றிருந்த நிலை இன்றும் மாறவில்லை.

அடியவர்கள் ஆண்டவனைப் பாடும்போது

"அரும்பொனே மணியே என்
அன்பான அறிவே!"

என்று பாடுகின்றனர்.

"பொன் ஆனாய்; மணியானாய்;
போகம் ஆனாய்"

என்பது அப்பர் அருள் வாக்கு.

தாய் தன் அருமைக் குழந்தையினைத் தொட்டிலில் கிடத்தித் தாலாட்டுப் பாடும் போது,

"கொட்டி வைத்த முத்தே !
குவித்தநவ ரத்தினமே!
கட்டிப்பசும் பொன்னே!
கண்மணியே கண்வளராய்!"

என்று பாடுகின்றாள்.

கொட்டி வைத்த முத்தும், குவித்த நவரத்தினமும் தொட்டிலில் வந்து கட்டிப் பசும் பொன்னாகக் கண்ணுறங்குகின்றது என்பது அத்தாயின் எண்ணம்! இந்த எண்ணம் எவ்வளவோ உயர்ந்தது; எண்ணத்தின் உயர்வை மட்டுமா? மணிகளின் உயர்வையும் அல்லவா இப்பாடல் காட்டுகின்றது!

காதலன் தன் காதலியை அழைக்கும் போது,

"அத்தைமகள் ரத்தினமே!
தங்கமே தங்கம்!

ஆணிமுத்துப் பெட்டகமே
தங்கமே தங்கம் !''

எனப் பாடி மகிழ்கின்றான்.

உலக வழக்கில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு இரத்தினம், முத்து, மாணிக்கம், வயிரம் போன்ற பெயர்களை வைத்து ஆசையுடன் அழைக்கிறார்கள். இந்திய மக்கள் நேருவை 'மனிதருள் மாணிக்கம்' எனப் போற்றுகின்றனர். இந்தியாவில் அளிக்கப்பெறும் பட்டங்களில் எல்லாம் சிறந்தது 'பாரத ரத்னா' என்பதுதான்.

இவ்வாறு எத்துறையினும் ஏற்றம் பெற்று விளங்கும் இரத்தினங்களை 'மணி' என்ற பெயரால் தமிழிலக்கியங்கள் குறிக்கின்றன.

"திருமணி பொருத
திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வயிரமொடு
உறழ்ந்துபூண் சுடர்வர்''
—பதிற். 16:15-16.

உலக நாடுகள் எல்லாவற்றிலும் இரத்தினங்கள் கிடைத்து வந்தன எனினும், அவற்றின்

பயனை மிகவும் அறிந்தவர்கள் இந்தியர் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

தமிழிலக்கியங்களில் இம்மணிகளைப்பற்றிய பல செய்திகளைக் காணலாம்:

"பந்தர்ப் பயந்த
பலர்புகழ் முத்தம்......
நலம்பெறு திருமணி
கூட்டும் நற்றோள்"
—பதிற்றுப். 74:6-16.

"அருவிலை நன்கலம்
வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்
தந்துபிறர்க் குதவி."
—பதிற்றுப். 2:10-11.

என்பன போன்ற பாடல் அடிகளை இலக்கியங்களில் மிகுதியாகக் காணலாம். முத்தும் வயிரமும் இழைக்கப்பெற்ற அணிகளைத் தமிழ் மக்கள் விரும்பி அணிந்தனர். அவ்வாறு அணிவதால் நலம் விளையுமெனவும் நம்பினர்.

அயல் நாட்டிலிருந்து நம் நாடு போந்த பண்டைக்காலப் பயணிகளான பிளினி, டாலமி, பெரிப்

புளூஸ், மார்கோ போலோ போன்றவர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளினின்றும், நூல்களினின்றும் மணிகளைப் பற்றிய பல செய்திகள் அறியப்படுகின்றன.

பழங்கால மன்னர்கள், அரசியர் முதலியோரின் அணிகள், ஆலயங்களில் இறைவனுக்காகச் செய்து வைக்கப்பட்டிருந்த பெருங்கலன்கள், வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மணிகள் ஆகியனபற்றி இக்குறிப்புகள் கூறுகின்றன.

மணிகள் பலவகைப்படும். அவற்றுள் சிறப்புடையவை ஒன்பது எனக் கொண்டனர். இவற்றை நவமணிகள் எனத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

அவை :

1. வைரம்
2. முத்து
3. மாணிக்கம்
4. மரகதம்
5. நீலம்
6. புட்பராகம்

7. வைடூரியம்
8. கோமேதகம்
9. பவளம்

நவமணிகளைப்பற்றி இலக்கணம் கூறும் நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் உண்டு.

திருவிளையாடற் புராணம் - மாணிக்கம் விற்ற படலத்தில் மணிகளின் இலக்கணம் கூறப்படுகிறது. பழந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் நவமணிகளின் இயல்பு, சிறப்பு முதலியவற்றை எடுத்துரைக்கின்றார்; சான்றாகப் பல நூல்களை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

வடமொழியில் அக்கினி புராணம், உத்பலபரிமளம், விசுவகர்மீயம் போன்ற பல நூல்கள் 'மணிகள்' பற்றிய இலக்கணம் கூறுகின்றன.

உத்பலபரிமளம் என்னும் நூலில் 22 வகை இரத்தினங்கள் கூறப்படுகின்றன. அக்கினி புராணம் 37 வகை மணிகளைப் பற்றிக் கூறுகின்றது. இவ்வாறு

பல மணிகள் கூறப்படினும் இவற்றுள் 9 மணிகளே சிறந்தன என்பதைப் பல நூல்களும் ஒப்புகின்றன.

## நவமணி மிளிரும் தமிழ்ப்பேழை

நவமணி என்னும் வழக்கு தமிழர்க்குப் புதியதன்று. சங்க காலத்திற்கு முன்பே இவ் வழக்கு பயின்றுள்ளது.

நாடக அரங்கில் சயந்தனாக எண்ணி வைக்கப்படும் தலைக் கோலில் நவமணிகள் பதிக்கப் பட்டிருந்தன எனச் சிலப்பதி காரம் அரங்கேற்று காதை கூறுகின்றது.

''கண்ணிடை நவமணி ஒழுக்கி, மண்ணிய
நாவலம் பொலந்தகட்டு இடைநிலம் போக்கி''

என்பர் இளங்கோவடிகள்.

தமிழகத்துப் பொருள்கள் பொன்னினும் மணியினும் சிறந் தவை; தமிழ் நூல்களில் முத்தும் வைரமும் உண்டு; தமிழ் அறி

ஞர்களில் பல மாணிக்கங்களும் வைடூரியங்களும் உண்டு. தமிழகத்து உயிரினங்கள் பவளத்தினும் சிறந்தவை; தமிழ் நாட்டுத் தாவரங்கள் மரகதத்தினும் பசுமையானவை. மலையிடைப்பிறந்த மணிகளும், அலையிடைப்பிறந்த பவளமும், கனிகளில் வெட்டிய தங்கமும் ஒன்றாக இணையும் போது விலைமதிப்பற்ற நவமணிகள் ஆரமாக மாறுகின்றன.

அவ்வாறே, அறிஞர் பலரது உள்ளக்கடலின் ஆழ்தளத்தினின்றும் வெளிப்போந்த சிந்தனை முத்துகளும், தேமதுரக் கவிதைகளும், தங்கத் தமிழ் உரைகளும் ஒன்றாக இணையும் போது விலைமதிப்பற்ற இலக்கிய மணிமாலைகளும், இலக்கண ஆரங்களும் உருவெடுக்கின்றன.

இவ்வாறு தமிழகச் சிறப்புகள் பொன்தளத்தில் இழைக்கப் பெற்ற நவமணிகள் போன்று அமைந்திருப்பதால்அவற்றைத்

'தமிழ்ப்பேழை' என்ற பெயரில் இந்நூலை அமைத்து அவற்றை விளக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மணிகள் அனைத்தும் நவமணிகளுள் அடங்குவன போலத் தமிழகச் சிறப்புகள் அனைத்தையும் ஒன்பது வகைகளில் அடக்கி, அவைபற்றிய விளக்கங்களைத் தந்து தமிழ் மக்களின் கைகளில் காணிக்கையாக அளிக்கின்றோம்.

தமிழகம் இதனை வரவேற்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்நூல் வெளிவருகின்றது.

வைரம் முதலான ஒன்பது மணிகளின் இயல்புகளும் அவ்வத் தலைப்புகளில் விளக்கம் பெறுதல் இந்நூலின் தனிச்சிறப்பு.

பழமையின் சுவடு மாறாமல் புதுமை உலகக் கருத்துக்களையும் விளக்கிக் காட்டுவதே இந்நூலின் நோக்கம். இந்நூலினுள் புகுவோர் பழந்தமிழகம் முதல் இன்றையத் தமிழகம் வரை ஓரளவு காணமுடியும். தமிழ்த் தொடர்பான எல்லாச் செய்திகளையும் அறிய முடியும்.

தமிழ், உலகம் தழுவிய ஒரு மொழியாக உள்ளது. தமிழர்கள் தமிழகத்தில் மட்டுமன்றி, அயல் மாநிலங்கள், மலேயா, சிங்கப்பூர், இலங்கை, பிஜி, மொரேஷியஸ், தெ. ஆப்பிரிக்கா, பர்மா முதலிய நாடுகளிலும் வாழ்ந்து வரும் மக்களாகவும், கணியன் பூங்குன்றன் பாடிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதற்கு இலக்கியமாகவும் விளங்குகின்றனர். பெருமை மிகு அவர்தம் |நெஞ்சம் தமிழ்ப் பேழையைப் படிக்கும் போது செம்மாந்து உயர்ந்து நிற்கும்.

வாழ்க தமிழ் !
வளர்க தமிழர் !
ஓங்குக தமிழகம் !

— ஆறு. அழகப்பன்

# வைரம்

## தமிழ்



## வைரம்


1. தமிழ் மொழி
2. தமிழின் சிறப்பு
3. தமிழ்நாடு
4. தமிழினம்
5. தமிழகத்தை ஆண்ட மரபினர்
6. பண்டைத் தமிழ் அரசுகள்
7. தமிழ்ச்சங்கம்
8. தமிழ்க்கொடை
9. தமிழ் நீதி
10. தமிழ் வீரம்
11. தமிழ்ப்படை
12. தமிழ் எழுத்துகள்

# வைரம்

நவமணிகளுள் முதன்மையானது வைரம். அன்று முதல் இன்று வரை தன்னிலையில் மாற்றம் இன்றி, ஏற்றமும் தோற்றமும் பெற்று இலங்குவது வைரம்!

வைரம் உறுதியும் திண்மையும் வாய்ந்தது. வைரத்தை எதனாலும் துளைக்க முடியாது. முத்து முதலிய பிற மணிகளைத் துளை இடவோ, அறுக்கவோ வைரத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். வைரத்தை அறுக்க வேண்டுமானாலும் மற்றொரு வைரந்தான் வேண்டும்.

> ''வைர ஊசியும் மயன்வினை இரும்பும்
> செயிர்அறு பொன்னைச் செம்மைசெய் ஆணியும்
> தமக்கமை கருவியும் தாம்ஆம்''
>
> —பேரகத்தியம்

என்பதைத் தமிழர் பண்டுதொட்டே அறிந்திருந்தனர்.

வைரத்தின் குணங்கள் மிக உயர்ந்தவை. வைரம், உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும்விடச் செறிவுடையது ; மிகக் கடினமானது ; வன்மை உடையது ; அடிபட்டால் உடையுமே தவிர நசுங்காது ; எவ்வளவு காலம் அணிந்திருந்தாலும் தேய்வதில்லை ; ஒளி குன்றுவதுமில்லை.

இந்நவமணிப் பேழையில் இடம் பெறும் முதல் பொருளான தமிழ், வைரமாக உருவகிக்கப்படுகின்றது.

வைரத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சில பண்புகள் உண்டு. எனவே, தமிழை வைரமாக அமைத்துக் காட்டுகின்றது இப் பேழை.

மணிகளுள் சிறந்தது, வைரம். மொழிகளுள் சிறந்தது, தமிழ். திண்மை, செறிவு, உயர்வு, ஒளியுடைமை—இவை வயிரத்தின் பண்புகள்.

அழுத்தமுடைமை, இலக்கண இலக்கியச்செறிவு, எம்மொழிக்கும் தலைமை, அறிவுடைமை ஆகியன தமிழின் பண்புகள்.

வைரம் இழைக்க இழைக்கத் தேய்வதில்லை ; ஒளி வீசித் திகழ்வது.

தமிழ், காலம் செல்லச்செல்லக் குறைவதில்லை ; அழிவதில்லை ; நாளுக்கு நாள் வளர்வது; கலை ஒளி வீசிப் புகழுடன் விளங்குவது.

பட்டை திட்டத் திட்ட ஒளி வீசுவது, வைரம். பயிலப் பயில நயம் தோற்றி இன்பத்தைப் புலப்படுத்துவது, தமிழ்.

எனவே, தமிழ், வைரமாக வைத்து இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

# 1. தமிழ்மொழி

**தமிழின் தொன்மை :**

“ தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்— இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய் !”

எனத் தாய்நாட்டின் தொன்மையைக் குறித்துப் பாடினார் பாரதியார். தாய்மொழியாம் தமிழும் அத்தகையதுதான். ‘கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளொடு முன்தோன்றி மூத்தகுடி’ எனப் பாராட்டப்பட்ட தொன்மை உடையது தமிழ்க்குடி !

ஆங்கில மொழியைச் ‘சாஸர்’ என்னும் அறிஞரும், இத்தாலி மொழியை ‘தாந்தே’ என்னும் கவிஞரும் உண்டாக்கி வளர்த்தனர் என்ற நம்பிக்கை பண்டைய ஐரோப்பியரிடையே நிலவி வந்தது. அதைப் போலவே,

சிவபெருமான் வடமொழியைப் பாணினி முனிவருக்கு அருளிச் செய்து, அதற்கிணையான தமிழை அகத்தியருக்கு அருளிச் செய்தார் எனப் பழங்காலத் தமிழர் நம்பி வந்தனர். மேனாட்

டார் தொடர்பும் மொழிநூலறிவும் பெருகப்பெருகச் சூழ்நிலை மாறியது.

மொழி தனிப்பட்ட ஒருவரால் தோற்றுவிக்க முடியாதது. 'மக்களது உள்ளுணர்வினின்றும் மெள்ள மெள்ள முகிழ்த்தெழுந்து பன்னூறாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் ஒரு கலை' என்பதை மொழிநூல் வல்லுநர்கள் தெள்ளத் தெளிய கண்டு உணர்த்தியுள்ளனர்.

உலக முதன் மொழிகள் என மொழி நூல் அறிஞரால் ஒப்பப் பட்ட மொழிகள் சில. அவற்றுள் தமிழும் ஒன்று.

ஆரியம், எபிரேயம், இலத்தின் போன்ற பண்டைப் பெருமொழிகள் உலக வழக்கிழந்து ஏட்டளவில் அடங்கிவிட்ட நிலையில், உலகமெங்கும் பரந்து வளர்ந்து, உயர்தனிச்செம்மொழி என்னும் தகுநிலையைப் பெற்றுத் தழைத்து நிற்கின்றது, தமிழ் மொழி.

பிற மொழிகள் யாவற்றினும் தான் வழங்கும் பகுதியில் உயர்வும் தகுதியும் பெற்றுப் பீடுற்று நிற்கும் மொழி, உயர் மொழி.

பிற மொழிகளின் உதவியின்றித் தானே தனித்தியங்கும் தன்மையும் வன்மையும் பெற்றிருப்பது, தனிமொழி.

இலக்கிய வளமும் இலக்கணச் செம்மையும் பெற்றுத் திகழ்வது, செம்மொழி.

இம்மூன்று பண்புகளையும் பெற்றுள்ளமையால் தமிழ் 'உயர்தனிச்செம்மொழி' என்னும் தகுதியைப் பெறுகின்றது.

இக்காரணம் பற்றியே பேராசிரியர் சுந்தரனார்,

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமும், துளுவும்
உன்உதரத்து உதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

எனக் கன்னித்தமிழின் கட்டிளமையைப் பாராட்டுகின்றார்.

மொழிநூல் வல்லுநர்கள் உலக மொழிகளை நுனித்தாராய்ந்து அவற்றைத் தனிநிலை மொழிகள், ஒட்டுநிலை மொழிகள், உட்பிணைப்புநிலை மொழிகள் என மூவகையாகப் பகுத்துள்ளனர்.

தமிழும், பிற திராவிட மொழிகளும் ஒட்டுநிலை மொழி வகையைச் சார்ந்தவை. விகுதி, இடைநிலை முதலியனபற்றி இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதப்படும் தொல்காப்பியம் கூறுகின்றது. தொல்காப்பியத்துக்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே இவ்விடைநிலை போன்றவை இருந்திருக்க வேண்டும். இவை அதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே தனித்தனிச்சொற்களாக வழக்கிலிருந்து, காலப்போக்கில் சிதைந்து பெயரோடும் வினையோடும் ஒட்டி வழங்கும் நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். இம்மொழிநூல் கூற்றினை ஆய்ந்து நோக்கும்போது தமிழ்மொழி எத்துணை, கால வரலாறு கடந்த தொன்மொழி என்பதை உய்த்துணரலாம்.

தமிழ்மொழி மிகப்பழமையான காலத்தில் தென்னகமெங்கும் பரவி, நிலை பெற்று வளர்ந்து வந்தது. தமிழ் மக்கள் வடநாட்டிலும் அயல்நாடுகளிலுமுள்ள பல இனத்து மக்களோடு, வாணிகம் அரசியல் போன்ற பல காரணங்களுக்காகப் பழக நேரிட்ட காலத்து, வடமொழி பிராகிருதம் போன்ற மொழிகளிலிருந்து பல சொற்கள் தமிழில் வந்து கலக்கும் நிலை ஏற்பட்டது.

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழில் பிறமொழிகள் கலந்தன என்பதை அறிகின்றோம். தொல்காப்பியர், தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பதற்கு உடன்பட்டுத் தமிழில் புகுந்துள்ள வடசொல், திசைச்சொல் ஆகியவற்றிற்கு இலக்கணம் வகுத்திருக்கின்றார். இதனை நுனித்து நோக்குமிடத்து, தமிழ் மொழிக்குப் பிறமொழிக் கலப்பற்றுத் தனித்து இலங்கும் நிலை முன்னர் இருந்ததென்பதும், அது காலப்போக்கில் ஆரிய மொழிச்சொற்களையும் பிராகிருதச் சொற்களையும் பிற அயல் மொழிச் சொற்களையும் தன்னோடிணைத்துத் தழைத்ததென்பதும் அறியப்படுகின்றன.

பிறமொழிக் கலப்பால் தமிழ் நலியவில்லை; வளம் பெற்றே செழித்தது என்பதை,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்னும் தொல்காப்பிய நூற்பா தெளிவுறுத்துகின்றது.

இந்தியாவில் இக்காலத்தில் வழங்கும் திராவிட மொழிகள் பன்னிரண்டு என்பர், டாக்டர் கால்டுவெல். அவற்றுள் செம்மை பெற்றவை, ஆறு ; செம்மை அற்றவை, ஆறு.

செம்மை உடையவை : தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்பன.

செம்மை பெறாதவை : தோதவர் மொழி, கோத்தர் மொழி, கோண்ட், கூ, ஒரைவான், ராஜ்மகால் என்பன.

இவை அனைத்தும் ஒரே திராவிட மொழிக் குடும்பத்தின் பிரிவுகள் என்பது மொழி ஆய்வாளரின் துணிபு.

இப்பன்னிரு மொழிகளிலும் தமிழே தலைமை உடையது எனவும், தொன்மையான திராவிட மொழிக்குரிய அமைப்புகள் அதன்கண் அமைந்துள்ளன எனவும் கால்டுவெல் தமது ஒப்பிலக்கண நூலில் (Comparative Grammar of the Dravidian Languages. int- PP. *81-83)* Ed.*3*. கூறியுள்ளார்.

தொல்காப்பியர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முன்பே தமிழ் மக்களும் கோண்ட் இனத்தவரும் வட இந்தியாவில் ஒன்று பட்டு வாழ்ந்தனர்; ஒரே குடும்ப மொழியைப் பேசிவந்தனர் என்பது கால்டுவெல் கருத்து. இன்றும்கூட கோண்ட் இனமக்கள் தமிழ்ப் பழக்கவழக்கங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் நிலமகளைத் தரிப்பெண் (தரைப்பெண்) என்றே அழைத்து வருகின்றனர்.

மொழி நூல் ஆராய்ச்சியாளர்கள் பல சான்றுகளைக்கொண்டு ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுவதிலும் திராட மொழியே வழங்கியதென்றும், திராவிடரே வாழ்ந்து வந்தனரெனவும் திட்ட வட்டமாக நிறுவியுள்ளனர்.

ஆரியர் வந்து இருக்கு வேதம் செய்த காலத்தில், அந்நூலினுள் பல திராவிடச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பது அவர்கள் காட்டும் சான்றுகளுள் ஒன்று. திராவிட மொழியின் அமைப்பை முற்றப்பெற்றிருப்பது திராவிட இன மொழிகளுள் தமிழ் ஒன்றே என்பது உளங்கொள்ளத் தக்கது.

## 2. தமிழின் சிறப்பு

(தமிழ் மிகத்) தொன்மையானது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலம் எனக் கூறப்படும் வரலாற்றுக்கும் எட்டாத பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்தது. உலக மொழிகள் அனைத்தினும் மூத்த பழமை உடையது.

எண்ணற்ற இலக்கிய வளமும் இலக்கணச்செழுமையும் உடையது.

தனித்தியங்கும் தன்மை வாய்ந்தது.

தென்னகத்தில் வழங்கும் மொழிகள் அனைத்தினும் உயர்ந்தது.

எம்மொழிகளிலும் இல்லாத இலக்கண அமைப்பு-சிறப்பாகப் பொருள் இலக்கணப் பகுப்பு - உடையது.

ஒலிப்பதற்கு இனிய எழுத்தொலிகளை உடையது; பிற மொழிகளைப் போன்று கனைத்தோ, கடிந்து அழுத்தியோ உச்சரிக்க வேண்டிய எழுத்தொலிகள் அற்றது. எளிய சொல்லமைப்பு வாய்ந்தது.

காலத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் நெகிழ்வு உடையது. பழைமை போற்றலும், புதுமை ஏற்றலும் இயல்பெனக் கொண்டது.

உலக வழக்கு, செய்யுள் வழக்கு—இரண்டையும் பெற்று உயிர் மொழியாக நாள்தோறும் வளர்ந்து வருவது.

இத்தகைய சிறப்புகளை உடைய தமிழின் பெருமையை அன்று முதல் இன்றுவரை அறிஞர்கள் எவ்வாறு பாராட்டியுள்ளனர் என்பதைப் பின்வரும் பாடல்கள் உணர்த்தும் :

“தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை”

— சிறுபாணாற். — 66-67.

“சோமன் வழிவந்த பாண்டியநின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்”

— நச். உரை மேற்கோள்.

“பாடுதமிழ் வளர்த்த கூடல்”

— புறத்திரட்டு

"இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல்."

புறம் — 58

"தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை"

— சிலம்பு

"சங்கமலி தமிழ்"

—திருமங்கையாழ்வார்

"உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழ்"

— மாணிக்கவாசகர்.

"இனிய தென்தமிழ் நாடு"

"எத்திறத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்."

— கம்பர்.

"பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்து
இருப்பிலே இருந்து, வையை
ஏட்டிலே தவழ்ந்த பாவை"

— வரந்தருவார்

"கண்ணுதற்பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா
எண்ணவும் படுமோ?"

— பரஞ்சோதி முனிவர்.

"வையம் ஈன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையி னால்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பசுந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்.

— நீ. கந்தசாமிப்பிள்ளை

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

— பாரதியார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தாய்மொழியாம் தமிழின் இனிமையைச் சுவைத்துச் சுவைத்துப் பாராட்டியுள்ள இடங்கள் தேன்போல் இனிப்பவை :

"கன்னல் பொருள்தரும் தமிழே ! நீஓர் பூக்காடு ;
நானோர் தும்பி"

"தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்குநேர் "

"தமிழுக்கு அமுதென்று பேர்"

"தண்டமிழின் இனிமையைப்போல் இனியசொல்லாள் "

"தெள்ளும் தமிழின்இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ்மறவர் யாம் "

"தழல்நிற மாம்பழத்தில்
தமிழ்நிகர் சுவையைக் கண்டாள்"

"மங்கை ஒருத்திதருஞ் சுகமும் — எங்கள்
மாத்தமிழ்க்கு ஈடில்லை என்றுரைப்போம்"

தமிழ்விடுதூது நூலார் கூறும் தமிழின் சிறப்பு கற்குந்தோறும் கற்கண்டு போல் இனிக்க வல்லது :

"பஞ்சிபடா நூலே ; பலர்நெருடாப் பாவேகீண்டு
எஞ்சியழுக் கேறா இயற்கலையே ; — விஞ்சுநிறம்
தோயாத செந்தமிழே ; சொல்லே ருழவரகம்
வீயாது நெய்விளைக்கும் செய்யுளே"

"மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
விஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் "

## 3. தமிழ்நாடு

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

எனத் தமிழகத்தின் பெருமையைப் பாடினான் பாரதி.

தமிழ்நாடு பழஞ்சிறப்புடையது; வரலாற்றுப்பெருமை உடையது; பதிஎழு வறியாப் பண்டைக் குடிமக்கள் வாழப்பெற்றது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே — அதன்

முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந் நாடே"

என எண்ணி எண்ணிப் பெருமைப்படத்தக்க ஏற்றமும் தோற்றமும் இயற்கை வளங்களும் பெற்றது இன்தமிழ்நாடு.

"நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு"

என்பது வள்ளுவன் கண்ட வளநாடு. தமிழகத்தை மனத்தில் வைத்துத்தான் வள்ளுவன் இக்குறளைப் பாடினான் என்பது கூறத் தேவையில்லை.

உள்நாட்டு வாணிகத்திலும் கடல் வாணிகத்திலும் சிறந்துள்ள நாடே நாகரிக நாடு என்பர்.

கி. மு. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாலமன் என்ற மன்னனுக்குக் கப்பல் கப்பலாக மயில் தோகை, யானைத்தந்தம், நறுமணப்பொருள்கள் போன்றவற்றை அனுப்பி வைத்தது தமிழகம் என வரலாறு கூறுகின்றது.

கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர் கருங்கடலிடையே பெருங்கலங்களைச் செலுத்தி யவனம், சீனம், கிரேக்கம், ஈழம், சாவகம் போன்ற நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தனர் என்பதைத் தாலமி, பிளினி போன்ற அயல் நாட்டார் குறிப்புகளிலிருந்து அறியலாம்.

காற்றுச் செல்லும் திசையறிந்து கலங்களைச் செலுத்துவதில் தமிழர் நிகரற்று விளங்கினர்.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!"

எனக் கரிகால் வளவனைச் சிறப்பிக்கின்றது சங்கப்பாடல்

கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் பாபிலோன் நகரத்திற்குக் கடல் வழியாக அனுப்பப்பட்ட அரிசி, மயில் தோகை, சந்தனம் போன்ற பொருள்களின் பெயர்கள் திராவிட மொழிப் பெயர்களாகவே அந்நாட்டு மொழிகளில் வழங்கப்பட்டன.

தமிழகம் கிறித்துவுக்குப் பின்பும் ரோமப் பேரரசோடு தொடர்ந்து வாணிகம் நடத்திவந்தது. இரும்பு, ஆட்டுமயிர், தோல் முதலியன கலங்களில் அனுப்பப்பட்டன. சேர நாட்டுத் தொண்டி, முசிறி

போன்ற துறைமுகங்களினின்று மிளகுப் பொதிகளும் யானைத் தந்தங்களும் பெரும் அளவிற்கு ஏற்றுமதியாயின.

கொற்கையில் குளித்த முத்து ரோம் நாட்டுப் பொன் நாணயங்களைத் தமிழகத்தில் கொண்டுவந்து கொழித்தது. கி. பி. 150-இல் இந்தியாவிற்கு வந்த தாலமி, இந்நாட்டைப் பற்றிய பல விவரங்களைத் தந்திருக்கின்றார்.

மூவேந்தர் ஆட்சியில் தமிழகம் தழைத்திருந்ததென்றும், சேரர், பாண்டியர், பரதர், சோழர், அருளாளர், கரையார் போன்ற பல இனத்தவர் இங்கு வாழ்ந்தனர் என்றும், மதுரை, உறையூர், தொண்டி, முசிறி, கருவூர், கொற்கை, நாகப்பட்டினம், பொதுசா (புதுவை), மாவிலங்கை, கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டினம், மோகூர் முதலிய நகரங்கள் சிறந்திருந்தன என்றும் அவர் குறிப்புகள் கூறுகின்றன.

பண்டைத் தமிழகத்தோடு யவனர்கள் பெருமளவு தொடர்பு கொண்டிருந்தனர்.

**தமிழக எல்லை :**

தமிழகத்தின் பழங்கால எல்லைகள்: வடக்கில் வேங்கடம்; தெற்கில் கன்னியாகுமரி; மேற்கிலும் கிழக்கிலும் கடல்கள்.

> "வடவேங்கடம் தென்குமரி
> ஆயிடைத் தமிழ்கூறு நல்உலகம்"

என்பது தொல்காப்பியப்பாயிரம்.

> "வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
> வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்என்
> றிந்நான் கெல்லை அகவயின் கிடந்த
> நூலதின் உண்மை வாலிதின் விரிப்பின்"

என்பர் காக்கைபாடினியார்.

> " நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு"

என கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் எல்லையை வரையறுக்கின்றது சிலப்பதிகாரம்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலும் இவ்வெல்லை மாறவில்லை

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும்நான்கு எல்லையின் இருந்தமிழ்க் கடல்"

என நன்னூல் தமிழக எல்லையைச் சுட்டுகின்றது.

இக்காலத்தில் ஆந்திர மாநிலம் உருவான பின்னர்த் தமிழ்நாட்டின் வட எல்லை திருத்தணியாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. தெற்கே குமரி முனை. மேற்கே மேற்குத்தொடர்ச்சி மலை. கிழக்கில் வங்கப் பெருங்கடல். இதுவே தற்கால தமிழகத்தின் எல்லைகள்.

குமரியொடு வடஇமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட தமிழகம் இன்று இக்குறுகிய எல்லைக்குள் அடங்கிவிட்டது.

**பரப்பு :**

தமிழ்நாட்டின் நிலப்பரப்பு 2,07,840 சதுர கிலோமீட்டர். இது பிரிட்டன், அயர்லாந்து-இரண்டின் நிலப்பரப்புக்குச் சமமானது.

## 4. தமிழினம்

"தமிழன் என்றொரு இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு."

எனப் பாடினார் நாமக்கல் கவிஞர்.

இன வேற்றுமைகள் மறைந்து வரும் காலம் இது. ஆனால், வரலாறுகள் இன வேற்றுமை அடிப்படையில் தான் எழுதப்பட்டுள்ளன. எனவே, வரலாற்றை நன்கு அறியவேண்டு மானால் இனங்களின் மரபு, பண்பாடு ஆகியன பற்றி அறிந்தே யாக வேண்டும்.

உலகம் தோன்றிய காலத்தில் தீக்குழம்பாக இருந்த மண், குளிர்ந்து அமைந்த முதல் நிலப்பகுதி தென்னிந்தியாவே என்றும், இங்குதான் மனித இனம் முதன் முதலில் தோன்றியது எனவும் புவி இயல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அவ்வாறாயின் தென்தமிழகத்தில் வாழ்ந்த பழந்தமிழின மக்களே உலகில் தொன்மையான மக்கள் இனத்தவர் எனக் கொள்ளவேண்டும். அவர்கள் பிற்காலத்தில் வெவ்வேறாகப் பிரிந்து சென்று உலகின் பல பகுதிகளில் வாழத் தொடங்கிய

பின்னர் பல்வேறு இனப்பெயர்களைப் பெற்றனர் என்று கருதுகின்றனர்.

தென்னிந்தியாவில் மிகப்பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் தமிழர் என்று குறிக்கப்பட்டதோடு 'திராவிடர்' எனவும் வழங்கப்பட்டனர். வடநாட்டார் தமிழரைத் திராவிடர் (தமிழர்-தமிடர்-த்ரமிடர்-திராவிடர்) என அழைத்தனர். ரோமானியர்கள் தமிழகத்தை 'தமிரிகி' என்றும், சீனர்கள் 'தெஹிமோளோ' என்றும் குறித்தனர்.

வரலாற்றுக்கும் எட்டாத காலத்தைக் 'கல்தோன்றி மண் தோன்றாக் காலம்' எனத் தமிழ் நூல்கள் குறிக்கின்றன. அதாவது, உலகம் தோன்றத் தொடங்கிய காலத்தில் தீப்பிழம்பு குளிர்ந்து பாறைகளாக இறுகிவிட்ட நிலை; மேலும் பாறைகள் பொடிபட்டு மணலாகவோ மண்ணாகவோ மாறாத நிலை. அப்பழங்காலத்தைத்தான் இச்சொற்றொடர் குறிக்கின்றது.

அப்பழங்காலத்திலேயே தமிழகத்தில் சேரர் சோழர் பாண்டியர் என மூன்று அரச மரபுகள் தோன்றின. இவை வழிவழியாகத் தமிழகத்தை ஆண்டுவந்தன. தமிழகம், சேரநாடு சோழநாடு பாண்டிநாடு என மூவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

முடியுடை மூவேந்தர்களுக்குட்பட்ட பல குறுநில மன்னர்கள் ஆங்காங்கு ஆட்சி செலுத்தி வந்தனர். அவரகள் வேளிர் எனப்பட்டனர். வேளிர் குடும்பங்களோடு மூவேந்தரும் பெண் கொண்டு மண உறவு பூண்டனர்.

குடிமக்கள் மன்னனுக்கு அன்புடன் ஆறில் ஒரு பங்கைத் திரையாகச் செலுத்தி வாழ்ந்தனர். மன்னரைத் தெய்வமாக மதித்து வந்தனர். மன்னர்தாமும், மன்னுயிர் நலமே தம் உயிரினும் சிறந்ததென எண்ணிச் செங்கோல் வழுவாமல் ஆண்டு வந்தனர்.

அரசியல் இனிது நடக்க, குடி தழுவிக் கோலோச்சும் மாநில மன்னனுக்கு இரு அவைகள் உதவின. ஒன்று, ஐம்பெருங்குழு; மற்றது, எண்பேராயம்.

அமைச்சர், அந்தணர், சேனைத்தலைவர், தூதுவர், ஒற்றர் ஆகிய ஐம்பாலினரை உள்ளிட்ட குழு 'ஐம்பெருங்குழு' ஆயிற்று.

அரசியல் தலைமைக் கணக்கர், அரசியல் கருமங்களை நடத்தும் தலைமைச் செயலர், கருவூலத் தலைவர், நாடு காவல் அதிகாரி

கள், நகரத் தலைவர்கள், காலாட்படைத் தலைவர், குதிரைப் படைத் தலைவர் யானைப்படைத் தலைவர் ஆகியவர்கள் அடங்கியது எண்பேராயம்.

ஒருவனும் ஒருத்தியும் காதல் கொண்டு, களவொழுக்கம் நிகழ்த்தி, மணம் செய்துகொள்ளும் வாழ்க்கை தமிழினத்தில் மிக உயர்வாக மதிக்கப்பட்டது. போர்க்கலையிலும் தமிழர் பெரும் அளவு முன்னேற்றம் பெற்றிருந்தனர். காதல், வீரம் என்னும் இரண்டுமே அவர்தம் வாழ்க்கைக் குறிக்கோள்களாய் இருந்தன. இந்த இரு பண்புகளை அடிப்படையாகக்கொண்டே இலக்கிய இலக்கண நூல்கள் எழுந்தன.

தமிழர், வாணிகத்தில் சிறந்திருந்தமை முன்னரே விளக்கப் பட்டது. கருங்கடலில் காற்றை ஏவல் கொண்டு பெருங்கலங்களைச் செலுத்தியவர்கள் தமிழ்நாட்டு வணிகர்கள். தமிழரைப் போலவே யவனம், சோனகம், சீனம் போன்ற நாடுகளிலிருந்தும் ஏராளமான வணிகர்கள் தமிழகம் போந்து, வாணிகம் செய்து வந்தனர். தமிழகத்து மிளகையும் முத்தையும் வாங்கிச் செல்வதற்காக வெளிநாட்டு வணிகரின் கலங்கள் தொண்டி, முசிறி, பூம்புகார் போன்ற தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் பந்தி பந்தியாகக் காத்து நின்றன என வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

தமிழர், கலைகளை வளர்த்தனர்; கலைஞர்களைப் போற்றினர்; தமிழை வளர்த்தனர் ; தமிழ்ப்புலவர்களைப் போற்றினர் ; எண்ணற்ற தொழில்களை இயற்றினர் ; எனினும், ஒற்றுமையாக வாழ்ந்தனர். பழந்தமிழ்நாட்டில் தொழில் பாகுபாடு இருந்ததேயன்றிச் சாதிப் பாகுபாடு இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள் அவ்வைந்திணைகளின் பெயராலும், அவரவர் செய்த தொழிலாலும் குறிக்கப்பட்டனர். சாதிப்பெயர் அக்காலத் தமிழகத்தில் சிறிதளவும் இடம் பெறவில்லை.

பழந்தமிழக மக்கள் கல்வியின் பெருமையை உணர்ந்திருந்தனர். எண்ணையும் எழுத்தையும் இருகண்ணெனப் போற்றினர் ; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தையும் சால்பின் நிலைக்களமாகக்கொண்டு ஒழுக்கத்துடன் வாழ்ந்தனர் ; அவ்வொழுக்கத்தை உயிரினும் சிறந்ததெனப் போற்றி வந்தனர். அவ்வொழுக்கத்தைப் பெற உதவுவது கல்வியே என்பதை நன்கறிந்திருந்தனர்.

உழவுத்தொழிலே நாட்டின் உயிர்நாடியாக இருந்தது. உழுவார், 'உலகத்தார்க்கு ஆணி' என மதிக்கப்பட்டனர். விருந்தோம்புதல் தமிழரின் வாழ்க்கைக் குறிக்கோளாய் இருந்தது. துறவறம் தமிழரிடையே போற்றப்படவில்லை. இல்லறமே நல்லறமாக மதிக்கப்பட்டது.

நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்த உயரின மக்கள் எனத் தமிழர், வரலாற்றறிஞரால் கணிக்கப்பட்டுள்ளனர்.

## 5. தமிழகத்தை ஆண்ட மரபினர்

தமிழகம் பல காலங்களில் பலருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என வரலாறு கூறுகின்றது. பெரும்பான்மையான காலப்பகுதி சேர சோழ பாண்டியர்களின் ஆட்சியாக அமைந்திருந்தது; சிறுபான்மை பிற வமிசத்தினரும் ஆண்டனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம், சேர சோழ பாண்டி நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றை முறையே சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆண்டனர்.

**சங்க காலம் (கி. மு. 100—கி. பி. 200) :**

கி. மு. 100 முதல் கி. பி. 200 வரை உள்ள காலப்பகுதியைக் கடைச்சங்க காலம் என்பர். இக்காலப்பகுதியில் தமிழகம் மூவேந்தர் ஆட்சியிலும், குறுநில மன்னர்களின் பாதுகாப்பிலும் தழைத்திருந்தது; கலைகள் பல வளர்ந்தன ; வாணிகம் தழைத்தது; செல்வ வளம் பெருகியிருந்தது. இதனைத் தமிழகத்தின் பொற்காலம் என வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர்.

**களப்பிரர் காலம் (கி. பி. 200—600) :**

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் தமிழகம் 'களப்பிரர்' என்ற அந்நிய மரபினரின் ஆளுகைக்குட்பட்டது. களப்பிரர் சற்றேறக்குறைய 400 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்டனர். இக்காலத்தைத் 'தமிழகத்தின் இருட்காலம்' என வரலாறு கூறுகின்றது.

**பல்லவர் காலம் (கி. பி. 300—900) :**

கி. பி. நான்காம் நூற்றாண்டில் பல்லவர் என்ற மரபினர தோன்றிக் களப்பிரர்களை வென்று தமது ஆட்சியை நிறுவினர். கி. பி. 8 - ஆம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழகம், பல்லவ ராட்சிக்குட்பட்டிருந்தது. பாண்டியர்கள் தென்பகுதியை ஆண்டனர். சேர சோழ வேந்தர்கள் அவர் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசுகளாய் இருந்து வந்தனர்.

பல்லவர் காலத்தில் வடமொழி வளர்ச்சியுற்றது. ஏராளமான வடநாட்டவர்கள் தமிழகத்தில் குடியேறினர். சைவம், வைணவம் ஆகிய வைதிக மதங்கள் தழைத்தோங்கிய காலம் இது. பிராகிருதம் அரசு மொழியாகவும், வடமொழி ஆதரவு மொழியாகவும் இருந்ததால் தமிழ்மொழி பெருவளர்ச்சி அடையவில்லை. எனினும், பல்லவர்கள் தமிழைப் புறக்கணித் தனர் என்று கூறுவதற்கில்லை. ஒருபுறத்தில் தமிழ் இலக்கிய இலக்கணப் பணிகள் நடந்தவண்ணம் இருந்தன.

**சோழப் பேரரசு (கி. பி. 900—1250) :**

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் விசயாலய சோழன் வலிமை பெற்றுத் தஞ்சையைப் பல்லவரிடமிருந்து மீட்டான். அதுமுதல் சோழப் பேரரசு வளர்ந்து இராசராசன், இராசேந் திரன் போன்ற மாமன்னர்கள் காலத்தில் தழைத்தோங்கியது.

பாண்டி நாடு பராந்தக சோழன் ஆட்சிக்குட்பட்டிருந்து, பின்னர் மூன்றாம் இராசராசன் காலத்தில் தன்னுரிமை பெற்று நிமிர்ந்தது.

**பாண்டியர் காலம் (கி. பி. 1250—1350) :**

கி.பி.1250 - இல் சோழர்கள் வலிகுன்றியதும் பாண்டியர்கள் தலையெடுத்தனர். ஏறத்தாழ 100 ஆண்டுகள் பாண்டியர் ஆட்சியில் தமிழகம் சிறப்புற்றிருந்தது.

அதன் பின்னர் தமிழகத்தில் தமிழ் வேந்தரின் ஆட்சி ஏற்பட வில்லை ; முடிவுற்றது என்றே கூறலாம்.

**நாயக்கர் ஆட்சி (கி. பி. 1350—1750) :**

கி. பி. 14-ஆம் நூற்றுண்டு முதல் தமிழகம் பல அந்நியர்களின் ஆட்சிக்குட்பட நேரிட்டது. பாண்டியரின் ஆட்சி இறுதியில் உள்

நாட்டுக் கலகங்கள் மூண்டன. இதைப் பயன்படுத்திக்கொண்ட முகம்மதியர்கள் கி. பி. 1324-இல் தமது ஆட்சியை நிறுவினர். இந்துக் கோயில்களை இடித்தனர்; பிற இடங்களைக் கொள்ளையடித்தனர்.

முகம்மதியர் ஆட்சியில் வெறுப்புற்ற மக்கள், இந்து சமயத்தையும் கலாச்சாரங்களையும் காப்பதற்காக விசய நகர மன்னர்களின் உதவியை நாடினர். அதன் பயனாக மதுரையில் கி. பி. 1370-இல் 'நாயக்கர் ஆட்சி' எனப்படும் விசய நகர ஆட்சி ஏற்பட்டது. நாயக்கர் ஆட்சியில் வைணவம் தழைத்தது; தெலுங்கு இலக்கியம் வளர்ந்தது. தமிழகத்தில் தெலுங்கர்கள் ஏராளமாக இடம் பெற்றனர். இஸ்லாமியமும் கிறித்தவமும் தமிழகத்தில் புகுந்தன.

**ஐரோப்பியர் ஆட்சி (கி. பி. 1750—1947):**

பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பியரின் ஆட்சி கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் (கி. பி. 1752) தமிழகத்தில் ஏற்பட்டது. ஏறக்குறைய 250 ஆண்டுகள் இவ்வாட்சி நடைபெற்றது.

இக்காலத்தைச் 'சமயக் கலப்புக் காலம்' அல்லது ''உரைநடைக்காலம்' என்பர். ஆங்கில ஆட்சி காரணமாகத் தமிழகத்தில் அமைதியான சூழ்நிலை உருவாகியது. மேனாட்டு அறிவியல் காரணமாகப் புரட்சிகரமான பல மாற்றங்கள் விளைந்தன. பலவகைகளில் தமிழகம் முன்னேற்றம் பெற்றது.

1947-இல் பாரதம் வெள்ளையர் ஆட்சியினின்றும் விடுதலை பெற்றது.

இன்று சுதந்திரத் தமிழகம் பல துறைகளில் அயல் நாடுகளுடன் போட்டியிட்டு முன்னேறி வருகின்றது.

## 6. பண்டைத் தமிழ் அரசுகள்

வரலாற்றுக்கும் எட்டாத பழங்காலந்தொட்டுத் தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு என்னும் முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது.

அவற்றை முறையே சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடைய மூவேந்தர்கள் ஆண்டுவந்தனர்.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி'

என இவர்களை இலக்கியங்கள் பாராட்டுகின்றன.

**சேரர் :**

கொச்சி, குடகு, மலையாளம், திருவிதாங்கூர் உள்ளிட்ட பகுதிகள் சேர நாடு என அக்காலத்தில் வழங்கப்பட்டன. இக்காலத்தில் வழங்கும் பெயர், கேரளம்.

சேரர்களின் இலாஞ்சனை, வில். அடையாளமாலை, பனந்தோடு. தலைநகர், வஞ்சி. துறைமுகப்பட்டினங்கள், தொண்டி, முசிறி.

விளைபொருள் : மிளகு, யானைத்தந்தம், குடகடல் பவளம், நறுமணப் பொருள்கள்.

சிறப்பிக்கும் இலக்கியங்கள் : பதிற்றுப்பத்து, சிலப்பதிகார வஞ்சிக் காண்டம்.

சிறந்த நகரங்கள் : நறவு, கொடுமணம், கருவூர், பந்தர், மாந்தை, காந்தளூர், விழிஞம்.

சேர நாடு தந்த செந்தமிழ்ச்செல்வர், சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள். வில்லவன், வானவன், மலைநாடன், கோதை என்னும் பெயர்கள் சேரரைக் குறிக்கும். நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் போன்ற வீரமன்னர்கள் சேரருள் புகழின் எல்லை கண்டவர்கள்.

**சோழர் :**

'சோழ வளநாடு சோறுடைத்து' எனப் பாராட்டப்பெற்ற புனல் நாட்டை ஆண்டவர்கள் சோழப் பேரரசர்கள்.

வற்றாது பெருகும் மலைத்தலைய கடற்காவிரி பாய்ந்து வளங் கொழிப்பதால் சோழ நாடு 'புனல் நாடு' என்று வழங்கப் பட்டது ; சோழர்கள் வளவர்கள் வளவர் எனப்பட்டனர். செம்பியன், கிள்ளி, சென்னி என்னும் பெயர்களும் இவர்களுக் குண்டு.

சோழரின் இலாஞ்சனை, புலி; அடையாள மாலை, ஆத்தி; தலை நகரம், உறையூர். துறைமுகப்பட்டினம் பூம்புகார், நாகை. விளை பொருள், நெல். சோழரின் தஞ்சைத்தரணி 'தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்' என இன்றும் புகழப்படுகிறது.

சிறந்த நகரங்கள் : ஆரூர், தஞ்சை, செயங்கொண்ட சோழபுரம், பழையாறை, வல்லம், நாகப்பட்டினம், காஞ்சி, குடந்தை.

சிறப்பிக்கும் இலக்கியங்கள் : பட்டினப்பாலை, பொருநராற்றுப் படை, சிலப்பதிகாரப் புகார்க்காண்டம்.

கோவை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, சேலம், வடார்க்காடு மாவட்டங்களைக் கொண்ட பகுதி, சோழநாடு.

கரிகாலன், இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் முதலியோர் சோழருள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**பாண்டியர் :**

பாண்டியரின் தலைநகர், மதுரை. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பழம்பெருமை பாண்டியர்க்குண்டு.

வையை, தாமிரபரணி போன்ற ஆறுகளால் வளம் பெறுவது பாண்டி நாடு. செந்தமிழ் நாடு என்ற சிறப்புக்குரியது, பாண்டி நாடுதான்.

மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மாவட்டங்களைக் கொண்டது, பாண்டி நாடு.

பாண்டி நாட்டின் தலைநகர், மதுரை. துறைமுகம், கொற்கை. விளைபொருள், முத்து. இது உலகப்புகழ் பெற்றது.

பாண்டியரின் இலச்சினை, மீன் ; அடையாள மாலை, வேம்பு ; சிறப்பிக்கும் இலக்கியங்கள்: மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, திருவிளையாடற்புராணம் முதலியன.

பாண்டியருள் சிறந்தோர்: ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சுந்தர பாண்டியன், நின்றசீர் நெடுமாறன் போன்றோராவர்.

## 7. தமிழ்ச்சங்கம்

மூன்று என்ற எண், பண்டைத் தமிழர்களின் வாழ்வில் மிக நெருங்கிய தொடர்பு பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் அரசுகள், மூன்று; தமிழ்நாட்டுப் பிரிவுகள், மூன்று ; இயல் இசை நாடகம் என்ற தமிழ் வகை, மூன்று; தமிழ்நாட்டில் சிறப்புற்ற மலைகள், மூன்று; ஆறுகள், மூன்று; தலைநகரங்கள், மூன்று; தமிழ் மறை

வகுத்துக் கூறும் பால்கள், மூன்று. இவற்றைப் போலவே தமிழ் ஆய்ந்த சங்கங்களும் தலை- இடை-கடை என மூன்று!

இதனைத் திருவள்ளுவமாலை வெண்பா ஒன்று அழகாகப் பாடுகின்றது :

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் — மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்!"

உலகில் எந்த மொழியும் சங்கம் வைத்து வளர்த்ததாகத் தெரியவில்லை. தமிழ் ஒன்றுதான் முச்சங்கங்கள் என்னும் தொட்டிலில் வைத்துத் தாலாட்டப்பெற்ற தனிச்சிறப்புடன் 'சங்கத் தமிழ்' என வழங்கப்பட்டு வருகிறது.

மூன்று சங்கங்களையும் நிறுவித் தமிழ் ஆய்ந்தவர்கள், பாண்டிய மன்னர்கள்.

முதல் சங்கம் கடல்கோளுக்கு முன் இருந்த குமரிக் கண்டத்தில், பஃறுளியாற்றின் கரையில், மதுரையின்கண் அமைந்திருந்தது. முரஞ்சியூர் முடிநாகராயர் முதலான ஐநூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் அதில் தமிழ் ஆய்ந்தனர்.

இரண்டாம் சங்கம் எனப்படும் இடைச்சங்கம் இப்போதுள்ள குமரி முனைக்குத் தென்பால் இருந்த கபாடபுரத்தில் இருந்தது. தொல்காப்பியர் உள்ளிட்ட ஐம்பத்தொன்பது புலவர்கள் அதில் இருந்து தமிழ் வளர்த்தனர். கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை போன்ற பல நூல்களை அவர்கள் இயற்றினர்.

இவ்விருசங்கங்களும் கடற்கோளால் அழிந்தன. அதனால் மூன்றாம் சங்கம் எனப்படும் கடைச்சங்கம் தற்போதுள்ள மதுரையில் நிறுவப்பட்டது. நக்கீரர், மருதனிளநாகனார் போன்ற நாற்பத்தொன்பது புலவர்கள் இதில் தமிழாய்ந்தனர். எட்டுத்தொகை நூல்கள் இச்சங்கத்தில் தொகுக்கப்பட்டன.

அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கண நூல்களாக வழங்கின.

## 8. தமிழ்க்கொடை

தமிழ் வேந்தர்களும் குறுநில மன்னர்களும் கொடையில் சிறந்தவர்கள். அவர்கள் எக்காலத்தும் படைமடம் படாதவர்கள் ; ஆனால், கொடைமடம் பட்டவர்கள்.

தன்னகம் புக்க குறுநடைப் புறவு ஒன்றிற்காகத் தன் தசையை அறுத்துத் துலாக்கோலில் இட்டான், சிபி ; இவன் சோழரின் முன்னோன்.

கடுங்குளிரால் நடுங்குகின்றதென்று கருதித் தோகை விரித்தாடிய கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கினான், ஆவியர் பெருமகன் பேகன்.

பூத்தலை மணக்கும் பூங்கொடி முல்லை காற்றில் அசைந்தாடுவதைக் கண்டு பொறாமல் மனம் வருந்தித் தன் கறங்குமணி நெடுந்தேரை அதன் பக்கத்தில் பற்றுக்கோடாக நிறுத்தித் தன் இணையடி சிவப்ப நடந்து சென்றான், பறம்பு நாடாண்ட வள்ளல் பாரி.

தன்னைப் பாடி வந்த பாணர் முதலானோர்க்கு யானைகளையும் குதிரைகளையும் தந்து தன் நாட்டையும் வழங்கினான், காரி.

நாகம் ஒன்று தனக்களித்த நீலநிற ஆடையை ஆலமர் செல்வனுக்கு ஆர்வமுடன் அளித்தான், ஆர்வ நன்மொழி ஆய்.

மலைச்சாரலில் தான் அரிதாகப் பெற்ற அமிழ்தம் போன்ற நெல்லிக்கனியைத் தானுண்ணாமல் ஔவைக்கு ஈந்து மகிழ்ந்தான், அதிகன்.

தன்னை நாடி வந்தோர் வறுமை நீங்க நாள்தோறும் பொன்னையும் பொருளையும் அள்ளி வழங்கினான், நளிமலை நாடன் நள்ளி ! அவ்வாறே வழங்கிய மற்றொரு வள்ளல், வல்வில் ஓரி.

தமிழ் வாழ்வதற்காகத் தலைகொடுக்க முன்வந்தான், வள்ளல் குமணன்.

தன்மீது குமட்டூர்க்கண்ணனார் பாடிய ஒரு பாடலுக்காக உம்பல் காட்டைச் சேர்ந்த ஐந்நூறு ஊர்களையும் பிரமதாயமாய்க் கொடுத்தான், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர்க்கு நாற்பது நூறாயிரம் பொன்னை

யும் தான் ஆண்ட நாட்டின் ஒரு பகுதியையும் தந்தான், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்.

தன்மீது ஆறாம் பத்தைப் பாடிய காக்கைப்பாடினியார் நச்செள்ளையாருக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசு வழங்கினான்.

ஏழாம் பத்தைப் பாடிய கபிலருக்கு நூறாயிரம் காணம் பொன்னும், 'நன்றா' என்னும் குன்றின்மேல் ஏறி நின்று கண்ணில் கண்ட நாடுகளையும் வழங்கினான், செல்வக் கடுங்கோ வாழியாதன் !

தமிழின் அருமை அறிந்த பண்டைய மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைப் பொன் போல் போற்றினர் ; கண்ணை இமை காப்பது போல் காத்தனர்.

செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி. இவ்வாறு தமிழுக்குக் கொடை தந்த வள்ளல்கள், வரலாற்றில் பலர்.

## 9. தமிழ் நீதி

நீதிக்காக வாழ்ந்தவர் தமிழர் ; நீதியை உயிரினும் மேம்பட்ட தாகக் கருதினர் தமிழ் வேந்தர்.

வேறு எந்த நாட்டிலும், எந்த மன்னரவையிலும் காணவியலாத நீதியின் துலாக்கோல் ஒன்று சோழ மன்னரது அவையில் நாட்டப்பட்டிருந்தது. அதாவது, அரண்மனையின் முன் மண்டபத்தில் ஆராய்ச்சி மணி ஒன்று கட்டப்பட்டிருந்தது. குறை வேண்டுவோர் எந்த வேளையிலும் அம்மணியை அடித் தால் அரசன் மேன்மாடத்தில் தோன்றுவான். அவர்கள் குறையைக் கேட்டு நீதி வழங்குவான்.

இந்த மணி, குலோத்துங்கனது ஆட்சியில் ஒருமுறைகூட ஒலித்தது இல்லையாம். எவ்வளவு அருமையான செங்கோல்!

"ஆடும் கடைமணி நாவசையாமல் அகிலமெல்லாம்
நீடும் குடையில் தரித்தபிரான்"

என்னும் பாடல் இதனை அறிவிக்கின்றது.

"மறைநா வோசை யல்லதி யாவதும்
மணிநா வோசை கேட்டலும் இலனே"

எனப் பாண்டியரது கோலின் செம்மையைச் சிலப்பதிகாரம் பாடுகின்றது.

நீராடிவிட்டு வந்த மங்கை ஒருத்தியை வழியில் மறித்துக் கை நீட்டினான் தன் மகன் என்பதை அறிந்து, நீட்டப்பட்ட அவன் கையை, மகன் என்றும் பாராமல் வெட்டி வீழ்த்தினான், சங்க காலத்தில் ஆண்ட சோழ மன்னன் ஒருவன்.

கன்றை இழந்த தாய்ப்பசுவின் கண்ணீரைத் துடைப்பதற்காகத் தன் ஒரே மகனான குலக்கொழுந்தைத் தேர்க்காலின் கீழ்க் கிடத்தி மடியச்செய்தான், மனுநீதி கண்ட சோழன்

கணவன் ஊரில் இல்லாத ஒருநாள் இரவில், ஆள் அரவம் கேட்டு, யார் என அறிவதற்காகக் காரிகை ஒருத்தியின் வீட்டுக் கதவைத் தட்டினன், ஊர்காவலுக்காக மாறுவேடத்தில் வந்த மன்னன். ஆனால், உள்ளே இருந்தது, விரைந்து வீடு திரும்பிய காரிகையின் கணவனே என அறிந்து, தன் பிழையுணர்ந்து, நீதியை நிலை நாட்ட, கதவைத் தட்டிய தன் கையையே வெட்டி வீழ்த்தினன், மன்னன் பொற்கைப்பாண்டியன்.

கோவலனைக் கள்வன் என்று கருதி, ஆராயாமல் கொலைத் தண்டனை வழங்கிய செயலுக்காக வருந்தி, அரியணையிலிருந்து வீழ்ந்து உயிர் நீத்தான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

'நமது வழக்கில் உரை முடிவு காணான்; இவன் இளமையோன்' என்று கருதிய நரைமுது மக்கள் உவக்கும்வண்ணம், நரை முடித்து வந்து, அவர்கள் சொல்லைக்கொண்டே அவர்கள் வழக்கைத் தீர்த்து, முறை வழங்கினான், இளைஞனான கரிகாலன்.

இவை போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகள் தமிழரின் துலை நாவன்ன நீதியையும் நேர்மையையும் எடுத்துரைக்கின்றன.

## 10. தமிழ் வீரம்

தமிழர்கள் வீரம்மிகுந்தவர்கள். போருக்குப் பின்வாங்காதவர்கள். திண்மையான உடலும், வன்மையான வயிர நெஞ்சமும் கொண்டவர்கள். வீர வாழ்க்கையே தமிழரின் காவியமாக மலர்ந்திருப்பதைக் காணலாம்.

போர்க்களத்தில் புறமுதுகு காட்டுவதைவிட உயிர் நீப்பதே சிறந்ததென்பது தமிழர் போர்க்கொள்கை. விழுப்புண் படுவதை அவர்கள், வெற்றி மங்கை முத்தமிட்டளிக்கும் முத்திரையாகக் கொண்டனர்.

மார்பில் வேல் பாய்ந்து முதுகில் ஊடுருவிப் புறப்புண் ஏற்பட்டதற்காக நாணி வடக்கிருந்த சேரலாதனைப்பற்றி வரலாறு கூறுகின்றது.

இமயம் வரையில் படை எடுத்துச் சென்று எதிர்ப்பவர் இல்லாமையால் இமய நெற்றியில் தன் புலிப்பொறியைப் பொறித்து மீண்டான், கரிகாலன்.

வாய் காவாமல் வண்டமிழை இகழ்ந்த வட ஆரிய மன்னர்களான கனகவிசயரைக் கங்கைக்கரையில் வென்று, அவர்கள் தலையில் கருங்கல்லைச் சுமத்தி வந்து, அக்கல்லில் பத்தினிக் கடவுளுக்குப் படிமம் சமைத்தான், சேரன் செங்குட்டுவன்.

கங்கைச் சமவெளியில் ஆண்ட ஆரிய மன்னர்கள் அனைவரையும் வென்று அடிப்படுத்திக் 'கங்கைகொண்டான்' என்னும் சிறப்புப்பெயரைப் பெற்றான், இராசேந்திர சோழன்.

கருங்கடலிடையே கப்பல் படையைச் செலுத்திக் கடாரம், சாவகம், ஈழம் முதலிய தீவுகளையும், முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும் வென்று 'கடாரங்கொண்டான்' என்னும் சிறப்புப்பெயரைப் பெற்றான், இராசராசசோழன்.

தமிழ்நாட்டின்மீது படையெடுத்து வந்த ஆரியர்களின் பெரும் படையை அலறத் தாக்கி வடதிசைக்குத் துரத்தியடித்து, புலவர் பாடும் பெரும்புகழ் பெற்றான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

குமரி முதல் வட இமயம்வரை உள்ள அனைத்து நாடுகளையும் வென்று, அடிப்படுத்தி, ஒருமொழி (தமிழ்) வைத்து உலகாண்டான், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

தமிழ்நாட்டுப் பெண்பாலாரும் வீரத்தில் சிறந்திருந்தனர்; மறக்குடி மகளிராய் விளங்கினர்; தம் குடியில் பிறந்த ஆடவரும் மைந்தரும் வீரப்போர்க்குச் சென்று, பகைவரை வென்று, புகழை நிலை நாட்டுவதையே அவர்கள் விரும்பினர்.

புறமுதுகிட்டு ஓடிவரும் ஆடவரை எந்தத் தமிழ் மங்கையும் மதிப்பதில்லை !

போரில் தன் மகன் புறமுதுகு காட்டினான் எனப் பிறர் கூறக் கேட்ட வீரத்தாய் ஒருத்தி 'அவ்விழிமகனுக்குப் பாலூட்டிய என் மார்பை அறுத்தெறிவேன்' என வஞ்சினம் கூறி, வாளைக் கையில் ஏந்திப் போர்க்களம் சென்றாள். அங்கே தன் மகன் மார்பில் வேல் பாய்ந்து மடிந்து கிடப்பதைக் கண்டு, அவனை ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்து உவகைக் கண்ணீர் வடித்தாள்.

ஒரு முறை, பகைவர்கள் தன் நாட்டை முற்றுகை இட்டது கண்ட வீரமங்கை ஒருத்தி, உள்ளம் துடித்தாள். போர் கடுமை யாக மூண்டது. முன்னாள் போரில் அவள் தமையன் பகைவரது பெரும்படையடன் மோதி வீரப்போர் புரிந்து உயிர் நீத்தான் ; அதற்கு முன்னாள் நிகழ்ந்த போரில் அவள் தந்தை பகைவரது யானைப்படையை எதிர்த்துக் களிறுகளை வேலினால் வீழ்த்தி, வீரத்துறக்கம் எய்தினான்.

அன்றும் வீரர்களை அழைக்கும் போர்ப்பறை முழங்கியது ; போருக்கனுப்பத் தன் குடியில் ஆள் இல்லாமையால் அவள் மயங்கினாள்.

அப்பொழுது, அவள் குடியில் உள்ள ஒரே மகன் - பால்மணம் மாறாப் பச்சிளம் புதல்வன்—நினைவு அவள் உள்ளத்தில் எழுந்தது.

அவள், தெருவில் விளையாடிக்கொண்டிருந்த அவனை அழைத்து வந்து, நீராட்டி, வெள்ளாடை அணிவித்து, தன் முன்னோர்கள் வைத்திருந்த வீரவேல் ஒன்றை எடுத்து அவன் கையில் கொடுத்துப் 'போர்க்களம் சென்று வா மகனே, வென்று வா !" என வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினாள்.

உலகம் உள்ளளவும் குன்றாத வீரம் உடையவர்கள் தென்றமிழ் நாட்டு மறக்குடி மகளிர். மூதின்முல்லை என்னும் புறத்துறை இவர்களின வீரத்தைப் பாராட்டுகின்றது.

## 11. தமிழ்ப்படை

தமிழர்கள் போர் வீரம் மிகுந்தவர்கள். யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற்பெரும்படைகளை நடத்தும் போர்க்கலை பயின்றவர்கள். அப்படைகளேயன்றிப் பின்வரும் படைப்பிரிவு களும் தமிழ் மன்னர்களால் அமைக்கப்பட்டிருந்தன,

அவை :

1. **மூலப்படை :** நாட்டின் மூலாதாரப் படை. இராவணன் மூலபல சேனை வைத்திருந்தான் என இராமாயணத்தால் அறிகிறோம்.

2. **வேளக்காரப்படை :** அரசன் உயிரைக் காக்கும் மெய்காவல் படை.

3. **கூலிப்படை :** போர்க்காலங்களில் மட்டும் சேர்க்கப்பட்டுக் கூலிக்காகப் பணியாற்றும் படை.

4. **துணைப்படை :** நட்புக்காரணமாகப் போரில் வந்து உதவும் படை.

5. **அமயப்படை :** அவசர நிலையில் சேர்க்கப்படும் படை.

6. **வன்படை :** நாட்டுப்பற்று ஊக்கிய மன எழுச்சியால் அமையும் படை.

7. **பயிற்சிப்படை ;** போர்ப்பயிற்சியில் தேர்ந்துள்ள படை.

8. **பயிற்சியில் படை :** பயிற்சி போதாத, போர் உணர்வு கொண்ட தொடக்கநிலைப் படை.

9. **குழுப்படை :** மன்னனால் நியமிக்கப்பட்ட தளபதியின் படை.

10. **தனிப்படை :** தளபதி இன்றித் தானாகவே இயங்கும் படை.

11. **கருவிபெறு படை :** மன்னரால் வழங்கப்பெற்ற போர்க் கலங்களைப் பெற்றுள்ள படை.

12. **தற்கருவிப் படை :** தம்தம் போர்க்கருவிகளைக் கொண்டு போர் செய்யும் படை.

13. **ஊர்திப் படை :** மன்னர்களால் தரப்பட்ட ஊர்திகளைக் கொண்டு போரிடும் படை.

14. **தன் ஊர்திப் படை :** தாமே வாகனங்களை அமைத்துக் கொண்டு போரிடும் படை.

15. **கானப்படை:** காட்டில் வாழும் வேடர், கானவர் முதலியவர் களைக்கொண்டு அமைந்த படை.

16. **பகை விடு படை :** பகைவனை விட்டு வந்து தம்பால் சேர்ந்துள்ள படை.

இவை அனைத்தும் பழங்காலப் படைகள். இக்காலத்தில் இவை வழக்கில் இல்லை.

## 12. தமிழ் எழுத்துகள்

தமிழ் எழுத்துகள் நால்வகைப்படும் என இலக்கண நூல்கள் இன்று வரையறுக்கின்றன. அவ்வெழுத்துகள் பண்டைக் காலந்தொட்டு இக்காலம் வரை எத்தனையோ மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளன என்பதும், அவை பல்வேறு வகைப்பட்டு வழங்கின என்பதும் அறியத்தக்கன.

தமிழ்மொழி படிப்படியாக வளர்ச்சி பெற்று ஒழுங்கான நிலையைப் பெற நால் வகை எழுத்துகள் பயன்பட்டன என்பர்.

அவை :

**1. உருவெழுத்து** (*சித்திர எழுத்து*) **:** மனிதன் பேச இயலாத விலங்கு நிலையில் இருந்து, நாளடைவில் தன் கருத்தைப் பிறரிடம் கூறச் சில உருவங்களை எழுதினான். அவை உருவெழுத்து எனப்பட்டன.

**2. தன்மை எழுத்து :** பொருளின் குணத்தைத் தன் செய்கைகளால் அறிவித்து, அதை உணர வைத்தான். அவை தன்மை எழுத்து எனக் குறிக்கப்பட்டன.

**3. உணர்வெழுத்து :** ஒரு பொருளுக்கு ஓர் எழுத்தை அடையாளமாக இடும் எழுத்து, உணர்வெழுத்து எனப்பட்டது.

**4. ஒலி எழுத்து :** ஒலிகளாகவே சொற்றொடர்களைக் குறிக்கும் எழுத்துகள், ஒலி எழுத்துகள் எனப்பட்டன.

**5. கண்ணெழுத்து :** பூம்புகார்த் துறைமுகத்தில் இறக்குமதியான மூட்டைகளுக்கும், பண்டம் ஏற்றிய வண்டிகளுக்கும் கண்ணெழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது:

> "வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
> கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி"

**6. கரந்தெழுத்து :** சாசனத்துறையினரால் வெளியிடப்பட்டுள்ள சில நூல் தொகுதிகளைக் காணுமிடத்துத் தமிழில்

முன்னாளில் வழங்கிய சங்கேத எழுத்துகளைக் காண்கின்றோம். அவை குறியீட்டெழுத்துகள் அல்லது கரந்தெழுத்துகள் எனப்படும்.

காந்தருவதத்தை சீவகனுக்கு எழுதிய 'காதல் கடிதத்தில் கரந்தெழுத்துகளைப் பயன்படுத்தியதாகத் திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியில் குறிப்பிடுகின்றார்.

**7. கிரந்த எழுத்துகள் :** தொல்காப்பியர் காலத்திலேயே தமிழகத்தில் ஆரியர்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர் என அறிகின்றோம். தமிழகத்தில் வாழ்ந்த வடமொழியாளர்கள் எழுதிவந்த எழுத்து, கிரந்த எழுத்து எனப்பட்டது. தமிழகத்தில் தமிழ் எழுத்துகள் பேரளவிலும், கிரந்த எழுத்துகள் சிறிய அளவிலும் வழங்கி வந்தன.

**8. வட்டெழுத்து :** தமிழ்க்கல்வெட்டுகளில் பயன்படுத்தப் பட்ட ஒருவகை எழுத்து, வட்டெழுத்து எனப்பட்டது. இது தமிழ்நாடு முழுவதும் ஒரு காலத்தில் பரவியிருந்தது. ஆனால், இவ்வெழுத்து முறை எப்போது தோன்றியதென அறிய முடிய வில்லை.

வட்டெழுத்துகட்கும் பிராமி எழுத்துகட்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. வட்டெழுத்துகள் பாண்டி நாட்டிலும், மலையாள நாட்டுக் கல்வெட்டுகளிலுமே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன.

சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை உள்ள கல்வெட்டுகள் தமிழ் எழுத்தில் அமைந்து உள்ளன. கி. பி. 11-ஆம் நூற்றாண்டிற்குப்பின் உள்ளவை வட்டெழுத்துகளில் அமைந்துள்ளன.

**1979-இல் ஏற்பட்ட மாற்றம்:** 1979-ஆம் ஆண்டில் அன்றுவரை வழங்கி வந்த சில உருவங்களை மாற்றிப் பயன்படுத்தும்படி தமிழக அரசு தன் இலாகாக்களுக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

| பழைய வடிவம் | — | புதிய மாற்றம் |
| --- | --- | --- |
| ரு | — | றா |
| ணு | — | ணா |
| னு | — | னா |
| ஊண | — | ணை |
| ஊன | — | னை |
| ஊல | — | லை |
| ஊள | — | ளை |
| ெணு | — | ணொ |
| ெனு | — | னொ |
| ெரு | — | றொ |
| ேணு | — | ணோ |
| ேனு | — | னோ |
| ேரு | — | றோ |

# முத்து

## இலக்கணம்



## இலக்கண நூல்கள்

1. அகத்தியம்
2. தொல்காப்பியம்
3. இறையனார் களவியல்.
4. புறப்பொருள் வெண்பா மாலை.
5. அவிநயம்.
6. இந்திரகாளியம்.
7. யாப்பருங்கலம்.
8. யாப்பருங்கலக்காரிகை.
9. அமுதசாகரம்.
10. வீரசோழியம்.
11. தமிழ்நெறி விளக்கம்.
12. நேமிநாதம்.
13. சின்னூல்
14. வெண்பாப்பாட்டியல்.
15. தண்டியலங்காரம்.
16. நன்னூல்.
17. நம்பி அகப்பொருள் விளக்கம்.
18. களவியல் காரிகை.
19. பன்னிரு பாட்டியல்.
20. நவநீதப் பாட்டியல்.
21. வரையறுத்த பாட்டியல்.
22. சிதம்பரப் பாட்டியல்.
23. மாறனலங்காரம்.
24. மாறன் அகப்பொருள்.
25. பாப் பாவினம்.
26. பிரபந்த மரபியல்.
27. சிதம்பரச் செய்யுட்கோவை.
28. பிரயோக விவேகம்.

29. இலக்கண விளக்கம்.
30. இலக்கண விளக்கச் சூறாவளி.
31 இலக்கணக் கொத்து.
32. தொன்னூல் விளக்கம்.
33. பிரபந்த தீபிகை.
34. முத்து வீரியம்.
35. சாமிநாதம்.
36. சந்திரா லோகம்.
37. குவலயானந்தம்.
38. அறுவகை இலக்கணம் — ஏழாம் இலக்கணம்.
39. வண்ணத்தியல்பு.
40. பொருத்த விளக்கம்.
41. யாப்பொளி.
42. திருவலங்கல் திரட்டு.
43. காக்கைபாடினியம்.
44. இலக்கண தீபம்.
45. பிரபந்த மரபியல்.
46. விருத்தப் பாவியல்.
47. மறைந்த இலக்கண முத்துகள்

# முத்து

நவமணிகளுள் வைரத்துக்கு அடுத்த நிலையில் சிறப்புப் பெற்றிருப்பது, முத்து. வரலாற்றுக்கும் எட்டாத பழங்காலத்தில் தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் உணரச்செய்தவை முத்துகளே.

அயல் நாட்டுக் கடலோடிகள், யவனர்கள், அராபியர்கள், ரோமானியர்கள், வெனிஸ் நகர வணிகர்கள் ஆகியோரின் கவனத்தைப் பெருமளவு கவர்ந்தவை, கொற்கைத்துறை முத்துகள்.

தென்கடலில் குளிக்கப்பட்ட பருமுத்துகள் உரோமபுரி அரசிகளின் மணிக்கழுத்துகளை அணி செய்தன என, அயல் நாட்டுப் பயணிகளின் குறிப்புகள் கூறுகின்றன.

வேத வேதாகமங்களிலும், சங்க நூல்களிலும் கொற்கையம் பெருந்துறை முத்துகள் பேசப்படுகின்றன.

வால்மீகி தமது இராமாயணத்திலும், சாணக்கியர் பொருள் நூலிலும் தமிழ்நாட்டு முத்துகளைச் சிறப்பித்துள்ளனர்.

பாண்டி நாட்டு முத்துகள் தாமிரபர்ணிகம், பாண்டிய கவாடகம், சூர்நேயம் என மூவகைப்படுமென்றும், இரகு என்னும் மன்னனுக்குப் பாண்டி நாட்டு முத்துகள் கையுறையாக அனுப்பப்பட்டன என்றும் காளிதாசன் ரகுவம்சத்தில் கூறுகின்றான்.

உலகத்தில், முதன்முதலாக, ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தவர்கள் தமிழர்களே என்று வரலாறு கூறுகின்றது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பனிக்கடலில் மூழ்கி முத்துக் குளிக்கும் வழக்கம் தமிழரிடையே இருந்தது. உலகின் பல பகுதிகளில், சிறப்பாக ஜப்பான், சீனா, மன்னார் வளைகுடா, பாரசீக வளைகுடா, அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில்

உள்ள கலிபோர்னிய வளைகுடா, பனாமா விரிகுடா ஆகிய இடங்களில் முத்துகள் குளிக்கப்படுகின்றன. எனினும், தமிழ் நாட்டுக் கொற்கை முத்துகளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு.

தமிழ்நாட்டில் முத்து மிக உயர்வாக மதிக்கப்படுகிறது. உயிருக்கு உணவாக உதவும் நென்மணிகளை 'முத்து' என வழங்குவர். குழந்தைகளை 'முத்து' எனப் பெயரிட்டழைப்பர். மலைநிலக் கடவுளான முருகனை 'முத்துக்குமரன்' என இலக்கியங்கள் அருமையாக வழங்குகின்றன. "முத்துக்குமரா! உலகில் பிறக்கும் எந்த முத்துக்கும் விலை உண்டு ; உன் களி மழலை சிந்தும் கனிவாய் முத்துக்கு விலை இல்லை ; முருகா, முத்தம் தருகவே, எனப் பாடுகின்றார், பகழிக்கூத்தர் என்னும் பாவலர்.

"கத்துந் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலைஉண்டு;

தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலைஉண்டு ;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்

கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலைஉண்டு ;
கொண்டல் தருநித் திலம்தனக்குக்
கூறும் தரம்உண்டு; உன்கனிவாய்

முத்தம் தனக்கு விலைஇல்லை !
முருகா, முத்தம் தருகவே ;
முத்தம் சொரியும் கடல் அலைவாய்
முருகா முத்தம் தருகவே !

— திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

எவ்வளவு அழகான கற்பனை இது! இறைவனோடு ஒப்பிட்டு மதிக்கும் அளவுக்குத் தமிழ்நாட்டு முத்து சிறந்திருந்தது.

**முத்தின் பண்புகள்**

முத்து, விண்மீன் போன்று ஒளி வீசுவது ; உருட்சி உடையது; காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை என்னும் நால்வகைக்

குற்றங்களும் இல்லாதது; திண்மை உடையது. பார்வைக்கு இனியது; பளிங்கு போன்ற தெளிவுடையது.

பருமை, வட்டம், உருண்டை, ஒளி உடைமை, வெண்மை, திண்மை, மழமழப்பு, உரிய இடத்தில் தொளை உடைமை ஆகியவை முத்தின் பண்புகள் எனச் சாணக்கியரின் பொருள் நூல் கூறுகின்றது.

**இலக்கண நூல்களும் முத்தும் :** முத்துகளுக்குக் கூறப்பட்ட பண்புகள் இலக்கண நூல்களுக்கும் பொருந்தும்.

திண்மை, ஒளி உடைமை, வெண்மை என்ற மூன்றும் இருபகுதி கட்கும் உரிய பொதுமைப் பண்புகளாக அமைகின்றன.

ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுப்பது போலவே, இலக்கியக் கடலில் மூழ்கியே இலக்கண நன்முத்துகளை எடுக்கிறார்கள்.

உலகத்திற்குத் தமிழ்நாட்டின் உயர்வை அறிவிக்க உதவியவை தென்கடல் முத்துகள்.

உலக நாடுகளில் தமிழின் உயர்தனிச் செம்மையை உணர்த்த உதவியவை தமிழ் இலக்கண முத்துகள் !

எனவேதான் தமிழ் இலக்கண நூல்கள் முத்து என்னும் தலைப்பின் கீழ் இங்கு அறிமுகம் பெறுகின்றன.

## இலக்கண நூல்கள்

**இலக்கணம் :**

இலக்கணம் என்பது தூய தமிழ்ச்சொல். இலக்கு + அணம் = இலக்கணம். இலக்கு-குறிக்கோள். அணவுதல்-நெருங்குதல். குறிக்கோளை அடைய உதவும் வரையறை என்பது பொருள்.

இலக்கணம் என்ற சொல்லை முதன்முதல் எடுத்தாண்டவர் தொல்காப்பியர். 'பல பொருள்களையும் உய்த்துணர்ந்து அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறிவித்தற்குக் காட்டப் படும் வரையறை' என்ற பொருளிலேயே இவர் இச்சொல்லை ஆளுகின்றார். புலம், இயல் என்னும் சொற்கள் இலக் கணத்தைக் குறிக்கும் என்பர்.

**தமிழ் இலக்கணம்**

தமிழ் மூவகைத்து. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பன. முத்தமிழுக்கும் இலக்கணங்கூறும் நூல்கள் உண்டு.

இயற்றமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகைப்படும். அவற்றை ஐந்திலக்கணம் என்பர்.

ஐந்திலக்கணமும் கூறும் நூல்கள்: தொல்காப்பியம், வீர சோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், தமிழ் நெறி விளக்கம், சாமிநாதம். தண்டபாணி சுவாமிகள் இயற்றிய 'அறுவகை இலக்கணம்' என்னும் நூலும் ஐந்திலக்கணம் கூறுவது என்பர்.

**எழுத்தும் சொல்லும் கூறும் இலக்கண நூல்கள் :** தொல் காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், தொன்னூல், இலக்கண விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம் என்பன.

**அகப்பொருள் இலக்கண நூல்கள் :** தொல்காப்பியம், இறையனார் களவியல், மாறன் அகப்பொருள், நாற்கவிராச நம்பி அகப்பொருள், இலக்கண விளக்கம், தமிழ்நெறி விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம். களவியல் காரிகை என்பன.

**புறப்பொருள் இலக்கண நூல்கள் :** புறப்பொருள் பற்றிக் கூறும் இலக்கண நூல்கள் தமிழில் மிகுதியாகத் தோன்றவில்லை. தொல்காப்பியர் புறத்திணை இயலில் மட்டும் புறப்பொருள் இலக்கணம் கூறுகிறார். இதன்பின் தோன்றிய புறப்பொருள் இலக்கண நூல் பன்னிரு படலம். பன்னிருபடலத்தின் வழி நூல் 'புறபொருள் வெண்பாமாலை'. இது மிகச்சிறந்த புறப் பொருள் இலக்கண நூல். வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் என்பன ஓரளவு புறப்பொருள்பற்றிக் கூறுகின்றன.

**யாப்பிலக்கண நூல்கள் :** தொல்காப்பிய செய்யுள் இயல் யாப்பின் இலக்கணங்களை விரித்துரைக்கின்றது. தொல் காப்பியத்துக்குப் பின்பு பாவிற்கும், பாவினங்களுக்கும் இலக் கணம் கூறும் யாப்பு நூல்கள் பல தோன்றின.

அவை யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீர சோழியம், மாறன் பாப்பாவினம், சிதம்பரச்செய்யுட்கோவை, சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், திருவலங்கல் திரட்டு, பல்சந்தப் பரிமளம், விருத்தப் பாவியல், வண்ணத்தியல்பு என்பனவாம்.

**அணி இலக்கண நூல்கள் :** தொல்காப்பியர் தமது உவம இயலில் உவமையணி ஒன்றே கூறினார். மற்ற அணிகளெல்லாம் உவமத்தின் வேறுபாடுகளே என்பது அவர் கருத்து. அணி களுக்கெல்லாம் தாயான உவமத்திலிருந்து எண்ணற்ற அணிகள் பிற்காலத்தில் தோன்றின.

வடமொழிக் காவியாதர்சத்தை அடியொற்றித் தமிழில் 'தண்டி யலங்காரம்' எழுந்தது. இதில் 35 அணிகள் கூறப்படுகின்றன. அதன் வழிநூலான 'மாறனலங்காரம்' 64 அணிகளைக் கூறு கின்றது. வடமொழித்தொடர்பால் தமிழில் அணியிலக்கண ஆராய்ச்சி விரிந்தது.

வடமொழியிலுள்ள சந்திராலோகத்தையும், அதன் உரையான குவலயானந்தத்தையும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் மொழியாக்கம் செய்தனர். அவற்றில் 100 அணிகள் கூறப் படுகின்றன.

**தமிழில் உள்ள அணி இலக்கண நூல்கள் :** தொல்காப்பியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சந்திரா லோகம், குவலயானந்தம் என்பன.

**பாட்டியல் நூல்கள் :** 'பாட்டியல்' என்பது யாப்பிலக்கணத்தில் அடங்குமெனினும் பாடல்கள் பற்றிய சில விரிவான கருத்து களைக் கூறும் முறையில் தனி நூலாகப் பிற்காலத்தில் விரிந் தது. 'யாப்பின் ஒழிபு' என இதனைக் கூறலாம்.

பாட்டியல் நூல், இருபகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி பாட்டுக்கும், பாடப்படுவோனுக்கும் உரிய பத்துப் பொருத்தங் களை ஆராய்ந்து கூறும். அவை மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் என்பன. இவை சோதிட நூலார் கூறும் மணப்பொருத்தங்களைப் போல இலக்கண நூலார் கூறும் இலக்கியப் பொருத்தங்கள்.

பாட்டியலின் இரண்டாம் பகுதி சிற்றிலக்கிய வகைகளின் இலக்கணங்களைக் கூறும்.

**தமிழுக்குக் கிடைத்துள்ள பாட்டியல் நூல்கள் :** பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கப் பாட்டியல், பிரபந்த தீபிகை, பிர பந்த மரபியல் என்பன.

ஆயினும், வருணப் பாட்டியல், தத்தாத்திரேயப் பாட்டியல், மாமூலர் பாட்டியல், பாட்டியல் மரபு, பிரபந்த தீபம், பிரபந்தத் திரட்டு முதலிய பாட்டியல் நூல்கள் தமிழில் இருந்தன என அறிகின்றோம்.

## 1. அகத்தியம்

அகத்தியரால் இயற்றப்பட்ட இலக்கண நூல், அகத்தியம். இது தலைச்சங்கத்திலும், கடைச்சங்கத்திலும் இலக்கண நூலாக வழங்கியது. அகத்தியம், தொல்காப்பியத்திற்கு முதல் நூல். அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவருள் தொல்காப்பியர் முதன்மையானவர்.

**பன்னிருவராவார் :** தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், துரா லிங்கர், செம்பூட்சேய், வையாபிகர, வாய்ப்பியனார், பனம் பாரனார், கழாரம்பனார், அவிநயர், காக்கை பாடினியார், நற்றத் தனார், வாமனர் என்போர்.

அகத்தியம் முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் நூல் எனவும், 12000 நூற்பாக்களை உடையதெனவும் கூறுவர். இந்நூல் இப் போது வழக்கிறந்து மறைந்தது. அகத்தியம் என்ற பெயரால் இளம்பூரணர், மயிலைநாதர் முதலியவர்கள் சில நூற்பாக் களைத் தமது உரைகளில் எடுத்தாண்டுள்ளனர். வேறு தனி நூல் கிடைத்திலது.

## 2. தொல்காப்பியம்

"ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியன்" எனப் பாராட்டப் பெற்ற தொல்காப்பியரால் இயற்றப்பட்ட தனி இலக்கணத் தமிழ் நூல், தொல்காப்பியம். காலப்பழமையும், கருத்தின்

கனிவும் 'சாலச்சிறந்து, தமிழரின் கலைக்களஞ்சியமாகத் திகழ்வது, தொல்காப்பியம்.

காலவெள்ளத்தைக் கடந்துநிற்கும் இந்நூல், பண்டைத்தமிழரின் பண்பாட்டையும், நாகரிகப் பாங்கையும், இலக்கணச் சிறப் பையும் உலக நாடுகட்கு எடுத்துக் காட்டும் ஒப்புயர்வற்ற கலங் கரை விளக்கமாய்த் திகழ்கிறது.

தொல்காப்பியம் தமிழகத்தின் வரலாற்றுப் பேரேடு. தமிழ் மொழியின் பிறப்பை அறிய உதவும் மொழியாராய்ச்சி நூல். இதன் பெருமைகள் உரைத்தால், சொல்லில் அடங்கா; எழுதின், ஏட்டில் அடங்கா!

தொல்காப்பியம் பரந்துபட்ட இலக்கணக்கடல். விரிந்த நூலா யினும் செறிந்த கருத்துகளைத் தன்னகத்தே கொண்டது. இதன் நூற்பாக்கள் பின்னர்த் தோன்றிய எந்நூலைக்காட்டிலும் எளிமையும், படிப்பதற்குச் சலிப்புத் தோன்றாத இனிமையும் உடையவை. இதைப் படிக்கும் போது ஒரு இலக்கண நூலைப் படிக்கின்றோம் என்ற உணர்வு தோன்றாது. இனிய இலக்கியம் ஒன்றைச் சுவைக்கின்றோம் என்ற எண்ணமே எழும்.

இலக்கணம் மட்டுமன்றி இலக்கியக் கூறுகளும் அமைந்த நூல், தொல்காப்பியம். இன்றுவரை தமிழருக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் ஒன்றுதான். இதற்கு இணை யான நூல் எதுவும் இன்றுவரை தோன்றவில்லை.

தொல்காப்பியத்தை இயற்றியவர், தொல்காப்பியர். பழமை யான காப்பியக்குடியில் பிறந்தமையால் இவர் தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றார் என்பது உரையாசிரியர்கள் கருத்து. இது இவரது இயற்பெயர் என்பர் சிலர்.

பனம்பாரனார் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் செய்துள்ளார். இவர் தொல்காப்பியருடன் பயின்ற ஒருசாலை மாணவர்.

**காலம்:** தொல்காப்பியரது காலம்பற்றியும் பல்வேறு கருத்துகள் உள்ளன.

'ஐந்திரம்நிறைந்த தொல்காப்பியன் என' இவரைப் பனம்பாரனார் பாராட்டுகின்றார். ஐந்திரம் என்பது வடமொழியில் உள்ள மிகப் பழமையான இலக்கண நூல். இது பாணினீயத்துக்கும் முற் பட்டது. பாணினீயம் இயற்றிய பாணினி கி. மு. 4-அல்லது 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

பாணினீயம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது 'ஐந்திரம்நிறைந்த தொல்காப்பியன்' எனப் பனம்பாரனார் கூறியதால், இவர் பாணினிக்கும் முற்பட்டவராதல் வேண்டும் எனக் கருதப்படுகின்றது. எனவே, இவரது காலம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு எனக் கொள்வது பொருந்தும். ஆயினும், அறிஞர் பலர் இவரது கால எல்லை கி.மு. 5320 முதல், கி பி. 6-ஆம் நூற்றாண்டு வரை உள்ளது எனப் பலவகையாக கூறுகின்றனர். பின்வரும் பட்டியல் இதனை விளக்கும்.

| ஆய்வாளர் | நூல் | குறிக்கும் காலம் |
|---|---|---|
| க. வெள்ளைவாரணனார். | தமிழ் இலக்கிய வரலாறு, பக்-127 | கி.மு. 5320க்கு முன் |
| மறைமலையடிகள். | மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், பக்-595. | கி.மு. 3500க்கு முன் |
| கா. சுப்பிரமணியப் பிள்ளை | இலக்கிய வரலாறு, பக்கம்-67. | கி.மு. 2000க்கு முன் |
| ச. சோமசுந்தர பாரதி. | கலைக்களஞ்சியம், தொகுதி-6 ; பக் 217. | கி.மு. 1000க்கு முன் |
| ஞா. தேவநேயப் பாவாணர். | தென்மொழி, இலக்கிய இதழ் இயல் இசை-1. | கி.மு. 7-ஆம் நூற்றாண்டு |
| சி. இலக்குவனார். | தொல்காப்பிய ஆராய்ச்சி, பக்-31. | do |
| டாக்டர் மு. வ. | கலைக்களஞ்சியம்-தொகுதி 5 ; பக்-479. | கி.மு. 5-ஆம் நூற்றாண்டு |
| M. சீனிவாச அய்யங்கார். | Tamil Studies P. 117. | கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன் |
| K G. சங்கர அய்யர். | செந்தமிழ், தொகுதி-15. பக்-648. | கி.மு. மூன்றாம் நூற்றாண்டு |
| R. இராகவையங்கார். | தமிழ் வரலாறு, பக்கம்-261. | கி.மு. 145-க்கு முற்பட்டவர். |
| P. T. சீனிவாச அய்யங்கார். | History of Tamils, P-70. | கி.பி. முதல்இரண்டு நூற்றாண்டுகள் |
| தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். | சமணத் தமிழிலக்கிய வரலாறு பக்-28. | கி.பி. 2-ஆம் நூற்றாண்டு |
| பெரிடேல்-கீத். | தமிழ்ச்சுடர்மணிகள், பக்-39. | கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் பின் |
| S. வையாபுரிப்பிள்ளை. | தமிழ்ச்சுடர்மணிகள், பக்-39. | கி.பி. 4 அல்லது 5 நூற்றாண்டு |
| K. A. நீலகண்ட சாஸ்திரியார் | | கி.பி. 5-ஆம் நூற்றாண்டு |
| K. N. சிவராஜ பிள்ளை. | | கி.பி. 6-ஆம் நூற்றாண்டு. |

**நூலமைப்பு :** தொல்காப்பியம் ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல். ஆயினும், இதன்கண் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களே உள்ளன. அணியதிகாரமும், யாப்பதிகாரமும் தனியாகக் கூறப்படவில்லை.

அணி, உவம இயலிலும் யாப்பு, செய்யுளியலிலும் அடக்கிக் கூறப்படுகின்றன.

ஒவ்வோரதிகாரத்துக்கும் ஒன்பது இயல்கள் வீதம் 27 இயல்கள் இந்நூலில் உள்ளன. அவை :

**1. எழுத்ததிகாரம் :**

(1) நூன் மரபு
(2) மொழி மரபு
(3) பிறப்பியல்
(4) புணரியல்
(5) தொகைமரபு
(6) உருபியல்
(7) உயிர் மயங்கியல்
(8) புள்ளி மயங்கியல்
(9) குற்றியலுகரப் புணரியல்

**2. சொல்லதிகாரம் :**

(1) கிளவியாக்கம்
(2) வேற்றுமை இயல்
(3) வேற்றுமை மயங்கியல்
(4) விளி மரபு
(5) பெயரியல்
(6) வினை இயல்
(7) இடை இயல்
(8) உரி இயல்
(9) எச்சவியல்.

**3. பொருளதிகாரம் :**

(1) அகத்திணையியல்
(2) புறத்திணையியல்
(3) களவியல்
(4) கற்பியல்
(5) பொருளியல்
(6) மெய்ப்பாட்டியல்
(7) உவமவியல்
(8) செய்யுளியல்
(9) மரபியல்

தொல்காப்பிய நூற்பாக்களின் எண்ணிக்கை உரையாசிரியர்களின் கருத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றது. இவர்கள் ஒரே வகையான எண்ணிக்கையை மேற்கொள்ளவில்லை.

இளம்பூரணர் கூறும் நூற்பாக்கள், 1595.

நச்சினார்க்கினியர், பேராசிரியர் கருத்தின்படி, 1611.

**தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கை**

தமிழ் இலக்கணக் கோட்பாடுகளை எடுத்துரைப்பதில் தலையாயது, தொல்காப்பியம். தொல்காப்பியர் காலத்தில் இலக்கணக் கோட்பாடுகளுள் பல பிரிவுகள் இருந்தன. அவற்றுள் ஐந்திரக்கோட்பாடும் ஒன்று. இக்கோட்பாட்டைத் தொல்காப்பியர் நன்குணர்ந்து தம் நூலிலும் கையாண்டார் என்பதை,

"ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்"

என்னும் பாயிரப்பகுதி விளக்குகின்றது.

தொல்காப்பியரது எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும், இக்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள மொழியியல் துறையினரை வியக்க வைக்கின்றன.
இக்காலத்தில் பல அறிவியல் நுட்பக் கருவிகளோடு கண்டறியப்பட்டுள்ள மொழியின் அடிப்படை உண்மைகள் பல, தொல்காப்பியரால், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மொழியப்பட்டிருப்பது தமிழரின் மொழி நுட்ப அறிவின் மேம்பாட்டைப் புலப்படுத்துகின்றது.

தமிழ்மொழி எழுத்துகளின் பிறப்பு பற்றிய பல நுட்பங்களைத் தொல்காப்பியர் கூறுகின்றார். அவற்றை இன்றைய மொழி இயல் - ஒலி இயல் அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

இன்னின்ன எழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் இவ்வளவின என்று வரையறுத்துக் கூறுவது இந்நூலின் சிறப்பு.

சொல்லதிகாரத்தில், சொல்லிலும் சொற்பொருளிலும் நிகழும் திரிபுபற்றிக் கூறுகின்றார். சொற்றொடர் அமைப்பு, சொற்களின் இயல்பு ஆகியவைபற்றிக் கூறும் கருத்துகள் தமிழுக்கு ஆணிவேர் போன்றவை.

வடமொழி இலக்கணம் வேறு, தமிழ் இலக்கணம் வேறு என்பது தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கை. வடமொழிக்குத் தமிழில் இலக்கணம் கூறத் தேவை இல்லை என அவர் கருதினார். பிற்காலத்தெழுந்த நன்னூலார், 'வடமொழி ஆக்கம்' என ஒன்றை வகுத்துக்கொண்டு தமிழில் வந்து கலந்துள்ள வடசொற்களுக்கு இலக்கணம் கூறுவதைப் போன்று அக்காலத்தில் தொல்காப்பியர் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

எனக் கூறியமைவதோடு அவர் நிறுத்திக்கொண்டார்.

மற்ற மொழி நூலாசிரியர்கள் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கண்டனர். தொல்காப்பியரின் இலக்கண நெறி அந்த அளவோடு அமைந்திலது. மக்களின் அக வாழ்வுக்கும், புற வாழ்வுக்கும் இலக்கணம் காண வேண்டு மென விழைந்தது. முதன்முதலாகத் திணை துறைகளை வகுத்த பெருமை தொல்காப்பியருக்கே உரித்து.

வாழ்க்கைக்கு மட்டுமல்ல; மக்களின் மன உணர்ச்சிகட்கும் இலக்கணம் கண்டது தொல்காப்பிய நெறி. உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிகள் எவ்வாறு மெய்ப்பாடுகளாக வெளிப் படுகின்றன என்பதை 'மெய்ப்பாட்டியல்' அழகுற எடுத்துரைக் கின்றது. இது தமிழுக்கு மட்டுமே கிடைத்துள்ள தனிச் செல்வம்.

பொருளியலில், அக வாழ்வைக் களவு என்றும் கற்பென்றும் வகுத்து இலக்கணம் கண்டவர் தொல்காப்பியர் ஒருவரே. கற்பினும் களவே சிறந்ததென்பது தொல்காப்பியர் கொள்கை. சங்க இலக்கியங்கள் முழுவதிலும் தொல்காப்பிய ஆட்சி செங்கோல் செலுத்தி நிற்கின்றது.

மொழிக்கலையின் மூலக்கூறுகள் நிறைந்த நூல் இது. உலக வழக்கும் செய்யும் வழக்கும் நாடி வகுக்கப்படுவதே இலக்கணம் என்பது இவர் கண்ட முடிவு. தொல்காப்பியருக்குப் பின்வந்த அறிஞர்கள் தொல்காப்பியரின் ஆணை பெருமை வாய்ந்தது; அதை மீறக்கூடாதது எனக் கருதி மதித்தனர். கடவுள் ஆணையைவிட மேலாக அதனைக் கொண்டனர் என்றேகூறலாம்.

"தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்
ஆணையில் தமிழறிந் தோர்க்குக் கடனே"

என்பது பல்காயனார் வாக்கு.

**தொல்காப்பிய உரையாசிரியர்கள்:**

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பண்டை உரையாசிரியர்கள் அறுவர். அவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்போர்.

சிவஞான முனிவரும் அரசஞ்சண்முகனாரும் சில பகுதிகளுக்கு மட்டுமே உரைகண்டுள்ளனர். நாவலர் சோமசுந்தர பாரதியார் சில பகுதிகளுக்கு ஆய்வுரை ஒன்று எழுதியுள்ளார். க.வெள்ளை வாரணனார் தொல்காப்பியத்தைப் பலர் எழுதிய உரையோடு ஒப்பிட்டு ஓர் உரைச்செம்மை நூல் வகுத்துள்ளார்.

தொல்காப்பியத்துக்கு உரை கண்ட பெருமக்கள் மிக அச்சத்தோடு நுனித்து ஆய்ந்தே எழுதியுள்ளார். தொல்காப்பியர் ஆணையை அவர்கள் மதித்தே உரை கண்டனர். தொல்காப்பியர் தவறு செய்திருக்க மாட்டார் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது.

**1. இளம்பூரணர்:** தொல்காப்பிய உரையாசிரியர்களுள் காலத்தால் மூத்தவர், இளம்பூரணர். மூல நூலாசிரியரின் உளக்கருத்தை நன்குணர்ந்து இவர் உரை எழுதியுள்ளார். திருக்குறளுக்கு உரை கண்ட மணக்குடவரும், இளம்பூரணரும் ஒருவரே என்னும் கருத்தும் நிலவுகின்றது.

தொல்காப்பியம் முழுமைக்கும் இவர் உரை எழுதியுள்ளார். முதன் முதல் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய உரையாசிரியர் இவராதலின் இவரை 'உரையாசிரியர்' என்றே சிறப்பித்து வழங்குவர்.

இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. தொல்காப்பியத்துக்கு மட்டுமன்றித் திருக்குறளுக்கும் பெருங்கதைக்கும் இவர் உரை எழுதினமை இவரது உரைச்சிறப்புப் பாயிரத்தால் அறியப்படுகின்றது.

இவரது சமயம், திகம்பர சமணம்.

**2. சேனாவரையர்:** இவர் தொல்காப்பிய சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரை கண்டவர்.

இவரை, ''வடநூற் கடலை நிலைகண் டுணர்ந்த சேனா வரையர்' என சிவஞான முனிவர் பாராட்டுகின்றார்.

தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்பது இவர் இலக்கணக் கொள்கை. அதன் காரணமாக வடநூல் மரபுகளையும், கொள்கைகளையும் தமிழ் இலக்கணத்தில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறும் பாங்கு இவர் உரையில் காணப்படுகின்றது.

கல்வெட்டொன்று *(1650 of 1929-30)* இவரை 'ஆற்றூர்ச் சேனாவரையன்' எனக் குறிக்கின்றது. இக்கல்வெட்டு மாற வர்மன் குலசேகர பாண்டியனுக்கு உரியது. எனவே, இவரது காலம் கி.பி. 1268—1311 என அறியப்படுகின்றது. இவர் சைவ சமயத்தவர் என்பர். இவர் உரை, தருக்க முறைப்படி அமைந்தது.

3. **பேராசிரியர்:** பேராசிரியர் என்பது இவரது சிறப்புப்பெயர். தொல்காப்பியம் பொருளதிகார மெய்ப்பாட்டியல், உவமஇயல், செய்யுளியல், மரபியல் என்னும் நான்கு இயல்களுக்கு மட்டும் இவர் உரை கிடைத்துள்ளது. எனினும், தொல்காப்பியம் முழுமைக்கும் இவர் உரை எழுதினார் என்பது, 'அகத்திணை இயலுட் கூறினாம்', 'களவியலுள் கூறினாம்' என வரும் இவரது உரைக் குறிப்புகளால் அறியப்படுகிறது.

தமிழ் வரலாற்றில் பேராசிரியர் என்னும் பெயருடன் நால்வர் காணப்படுகின்றனர்:

1. ஆத்திரையன் பேராசிரியன்.
2. திருக்கோவையாருக்கு உரை கண்ட பேராசிரியர்.
3. யாப்பருங்கல விருத்தியுரையில் 'செய்யுளிலக்கண ஆசிரியர்' என்று குறிக்கப்படும் பேராசிரியர்.
4. தொல்காப்பிய உரை வரைந்த பேராசிரியர்.

இந்நால்வருள் இப்பேராசிரியர் இளம்பூரணருக்குப் பின் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி என மதிக்கப்படுகிறது.

4. **நச்சினார்க்கினியர்:** தமிழ் நூல் உரையாசிரியர்களிடையே 'நச்சினார்க்கினியர்' என்னும் பெயர் இமயம் போல் நின்று நிலவுகிறது.

> "நச்சினார்க் கினியன் எச்சில்
> நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

என வரும் செய்யுட்பகுதியால் இவரது சிறப்பு உணரப்படும். "'அமிழ்தினும் இனிய தமிழ்மடவரல் செய்த அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்த அறிஞர் நச்சினார்க்கினியர்" என டாக்டர் .உ.வே. சாமிநாதய்யர் இவரைப் பாராட்டுகின்றார். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும், பத்துப்பாட்டுக்கும், கலித்

தொகைக்கும், குறுந்தொகையில் 20 பாடல்களுக்கும், சீவக சிந்தாமணிக்கும் உரை கண்டவர்.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், உவமஇயல், மரபியல் ஆகிய மூன்று இயல்களுக்கு மட்டும் இவர் உரை கிடைக்கவில்லை.

நச்சினார்க்கினியர் உரை 'தமிழ் இலக்கியக் கருவூலம்' என மதிக்கப்படுகிறது.

இவரது காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியும் 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.

இவர் சைவ சமயத்தினர். நச்சினார்க்கினியர் என்பது சிவ பெருமானுக்கு உரிய பெயர். எனினும், சில காலமேனும் இவர் சமணராய் வாழ்ந்திருக்கக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது. மதுரை நகரில் பாரத்வாச கோத்திரத்தில் பிறந்த ஸ்மார்த்தப் பிராமணர் என்பது இவர் உரையால் அறியப்படும் செய்திகள்.

**5. தெய்வச்சிலையார்:** தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரைகண்டவர் இவர்.

இவரது உரைப்போக்கு இளம்பூரணர் முதலியோர் உலரகளின் நடைக்கும் கருத்துக்கும் மாறுபட்டது. இவ்வுரை 'விருத்தி உரை' என வழங்கப்படுகிறது,

இவர் சைவர். இவரது காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டது.

**6. கல்லாடர்:** ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்துக்கு உரைகண்ட விரகர், கல்லாடர். இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வரைந்தார் எனக் கூறுவர். ஆனால், சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலையில் 'தொல் காப்பியம் கல்லாடனார் விருத்தி' என்னும் பெயருடன் ஒரு சுவடி உள்ளது. அதில் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே இவர் உரை உள்ளது. இவ்வுரையால் பல அரிய செய்திகள் புலனாகக்கூடும்.

**கல்லாடர் மூவர்:** கல்லாடர் என்னும் பெயர் கொண்ட மூவர், தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றனர்.

தொல்காப்பியத்துக்கு உரைகண்ட கல்லாடர், அவர்களுள் மூன்றாமவர். இவர் நச்சினார்க்கினியருக்குப் பிற்பட்டவர். கி.பி. 15-ஆம் நூற்றாண்டினர்.

## 3. இறையனார் களவியல்

அகப்பொருள் இலக்கணம் கூறுவதால் இந்நூல் 'இறையனார் அகப்பொருள்' எனவும், அகப்பொருளிலும் களவு இலக்கணத்தை மிகுத்துக் கூறுவதால், 'இறையனார் களவியல்' எனவும் வழங்கப்படுகிறது.

இதனை இயற்றியவர் இறையனார். இறையனாரை மதுரை ஆலவாய் இறைவன் எனக் கூறுவர்.

நூலின் தோற்றத்திற்குப் பின்வரும் காரணம் இதன் உரையில் கூறப்படுகின்றது.

ஒருகால் பாண்டி நாடு பன்னீராண்டு பஞ்சத்தால் வாடியது. அதனால் பாண்டியன் தன்னுடனிருந்த புலவர்களையெல்லாம் வளமுள்ள நாடுகளுக்குச் சென்று வாழுமாறு வேண்டினான். பஞ்சம் ஒருவாறு நீங்கி நாடு செழித்ததும் அவர்களை அழைத்து வர ஆள் அனுப்பினான். அவ்வாறு வந்த புலவருள், எழுத்திலும் சொல்லிலும் யாப்பிலும் வல்ல புலவர்களே இருந்தனர். பொருளதிகாரம் வல்ல புலவர்கள் இருந்திலர்; அரசன் பெரிதும் கவன்றான். அவன் கவலையைப் போக்க மதுரை இறையனார் இவ்வகப்பொருள் நூலை இயற்றித் தந்தார் என்பர்.

**நூல் அமைப்பு :** இவ்வகப்பொருள் நூல் களவியல், கற்பியல் என்னும் இரு பிரிவுகளையும் 60 நூற்பாக்களையும் கொண்டது.

இந்நூலுக்கு அரிய உரை ஒன்று உள்ளது. அது நக்கீரரால் எழுதப்பட்டதென்பர்.

களவியலுக்குப் பலர் உரை எழுதினர். எழுதியவர்கள் தத்தம் உரையே சிறந்ததென வாதிட்டனர். முடிவு காண, உப்பூரிக்குடி கிழான் மகன் உருத்திரசன்மனை நடுநிலையாளராகக் கொண்டனர். அவர் ஊமையர். பலர் எழுதிய உரைகளும் படிக்கப்படும்

பொழுது அவர் வாளாவிருந்தார் ; மதுரை மருதனிளநாகனாரின் உரையின் சில பகுதியைப் படிக்கக் கேட்டு அவர் கண்களில் கண்ணீர் அரும்பியது. நக்கீரர் உரை கேட்ட போது அவர் பதந் தொறும் கண்ணீர் சொரிந்து, மெய்ம்மயிர் சிலிர்த்து நின்றார் என உரைக்குறிப்பு கூறுகின்றது.

இவ்வுரை, வரலாறு அறியப் பயன்படுகின்றது. முச்சங்கங் களைப்பற்றிக் கூறும் முதல் உரை இதுவே. இதில் அச் சங்கங் கள் பற்றிய அரிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. சங்கம் இருந்த இடம், அது இருந்த ஆண்டுகள், அக்காலம் போற்றப் பட்ட இலக்கியங்களைப் பாடிய புலவர்கள், மன்னர்கள் எண்ணிக்கை, அவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை முதலிய பல செய்திகள தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

சிற்றின்பம், பேரின்பத்துக்கு அடிப்படை என்பது இவ்வுரை யாசிரியர் கொள்கை

## 4. புறப்பொருள் வெண்பா மாலை

புறப்பொருள் இலக்கணத்தை வெண்பா யாப்பினால் விரித் துரைப்பது இந்நூல். தமிழில் தொல்காப்பியத்திற்கு அடுத்த நிலையில் புறப்பொருள் இலக்கணங்கூறும் முழுமையான நூல் இஃது ஒன்றே.

**நூலாசிரியர் :** ஐயனாரிதனார். இவர் சேரர் குடிவழியினர். சைவ சமயத்தினர். இவர் காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு என்பது அறிஞர் துணிபு.

**நூலமைப்பு :** இந்நூல் பன்னிரண்டு படலங்களைக் கொண்டது. அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை என்பன.

இதன்கண் 19 நூற்பாக்கள், 361 வெண்பாக்கள், 341 கொளுக்கள் அடங்கியுள்ளன.

கொளு என்பது, வெண்பாவின் கருத்தைக் கொண்டுள்ள நூற்பா. இது துறையின் இலக்கணத்தை வரையறுக்கும்.

கொளு கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தது வெண்பா.

இந்நூலுக்குச் சாமுண்டி தேவநாயகரால் எழுதப்பட்ட பழைய உரை ஒன்று உண்டு. இவர் வைணவர், இவர் காலம் 14 ஆம் நூற்றாண்டு என்பர்.

## 5. அவிநயம்

தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் இரு கிளைகளாகப் பிரிந்து வளர்ந்தன. தொல்காப்பியத்தை ஒட்டிய கோட்பாடு, ஒன்று ; தொல்காப்பியத்தை வெட்டிய கோட்பாடு, மற்றொன்று.

தொல்காப்பியருக்கு மாறான கோட்பாடு அவிநயக் கோட்பாடு என்று வழங்கப்படுகிறது. தொல்காப்பிய நெறிக்கு மாறுபட்ட சில கருத்துகள் நன்னூல், யாப்பருங்கலம் போன்ற நூல்களில் இடம் பெறுகின்றன. அக்கருத்துகட்கு மூலம் ‘அவிநயம்’ என்றே கருதப்படுகிறது.

இத்தனிப்பெருங் கோட்பாட்டைத் தன்னகத்தே கொண்ட இப் பெருநூல், முற்றிலுமாகக் கிட்டவில்லை. உரையாசிரியர்களால் அவிநயச் சூத்திரங்கள் பல சுட்டப்படுகின்றன. அவற்றைத் தொகுத்து க.ப. அறவாணன் நூல் வடிவில் தந்துள்ளார்.

அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவராக அவிநயர் குறிக்கப்படுகின்றார். அவிநயனார் எழுதியது ‘அவிநயம்’ ஒன்று மட்டுமே எனக் கூறுவர். இக்கூற்று சரியன்று. இவரால் எழுதப்பட்டவை பின்வரும் ஐந்து நூல்கள் ஆகும்.

1. அவிநயம் — ஐந்திலக்கணமும் கூறுவது.
2. அவிநயனார் யாப்பு — யாப்பு இலக்கணம் மட்டும் கூறுவது
3. அவிநயப்புறனடை அல்லது நாலடி நாற்பது — அவிநயனார் யாப்பிற்குப் புறனடையாக இயன்றது. 40 வெண்பாக்களைக் கொண்டது.
4. அவிநயனார் கலாவியல் — பாட்டியல் இலக்கண நூல்.
5. பன்னிருபடலம் — புறப்பொருள் நுவல்வது. இதில் ஒரு படலத்தை அவிநயனார் எழுதினார்.

## 6. இந்திரகாளியம்

கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. சிற்றிலக்கிய வகைகள் தோற்றம் கொண்டன. அதன் விளைவாக இலக்கண நெறியிலும் மாற்றம் ஏற்படலாயிற்று. பாட்டியல் நூல்கள் சில தோன்றின. அவை சிற்றிலக்கிய வகைகட்கு இலக்கணம் வகுத்துரைத்தன. பாட்டியல் நூல்கள் பெருகப்பெருக அவை இருநெறிகளாகப் பிரிந்து தழைத்தன.

ஒன்று, அகத்தியர் நெறி ; மற்றது, இந்திர காளியார் நெறி. அகத்தியர் நெறி வைதிகத்தை அடியொற்றியது. இந்திர காளியர் நெறி அவைதிக நெறி.

நவநீதப் பாட்டியலும், சிதம்பரப் பாட்டியலும் அகத்தியர் நெறி வழி நிற்பன. வச்சணந்திமாலை இந்திர காளியார் நெறியில் படர்ந்துள்ளது. இந்நெறிக்கு ஆதாரமான இந்திர காளியம் இன்று முற்றும் கிடைக்கவில்லை. வச்சணந்திமாலை உரையால் இந்திரகாளியம் என்னும் நூல் இருந்ததாகத் தெரியவருகிறது. பன்னிருபாட்டியல் சில நூற்பாக்களைக் கூறுகிறது.

இந்திரகாளியத்தின் ஆசிரியர் இந்திரகாளியார். இவர் சைனர் ; கி.பி. 9-ஆம் நூற்றாண்டினர். பாட்டியல் துறையில் இந்நூல் தனிப்பாதைக்குத் தலைமை தாங்கியமை இதன் தனிச் சிறப்பு.

## 7. யாப்பருங்கலம்

யாப்புக்கு இலக்கணங்கூறும் நூல்களுள் தலைசிறந்தது, 'யாப்பருங்கலம்' ஆகும். யாப்பென்னும் கடலைக் கடக்க உதவும் கலம் போன்றது ஆதலின், இப்பெயர் பெற்றது எனவும், அருங்கல அணி போன்று யாப்பிற்கு அணிகலனாக விளங்குதலின் இவ்வாறு பெயர் பெற்றது எனவும் கூறுவர்.

இந்நூலாசிரியர் அமித சாகரனார்.

யாப்பருங்கலப்பாயிரம், 'அளப்பருங் கடற்பெயர் அருந்தவத்தோனே' என இவரைச் சுட்டுகின்றது. இதில், 'அளப்பரும்' என்ற சொற்றொடர் 'அமித' என்பதையும், 'கடல்' என்பது சாகரத்தையும் சுட்டுதலால், 'அமித சாகரர்' என்பதே இவர் பெயராக இருக்கலாம் எனத் துணிகின்றனர். அமிர்தசாகரனார்,

அமுதசாகரனார் என்ற பெயர்களும் இவருக்கு வழங்குகின்றன.

யாப்பருங்கலக்காரிகையை இயற்றியவரும் இவரே. இவரது சமயம், சமணம். கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரசோழிய உரையாசிரியர் அமிதசாகரரைக் குறிப்பிடுவதால், இவர் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டு எனக் கொள்கின்றனர்.

**நூலமைப்பு :** இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் இயல்களையும், 96 நூற்பாக்களையும் கொண்டுள்ளது.

யாப்பருங்கலத்தின் உரையாசிரியர் காரிகையின் உரையாசிரியரான குணசாகரரேயாவர். இவரும் சமணர். இவர் காலமும் நூலாசிரியர் காலமும் ஒன்று.

யாப்பருங்கலத்தின் உரை, விருத்தியுரை. இவ்வுரையில் 90 நூல்களிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை தோன்றியுள்ள யாப்பிலக்கணங்களின் கொள்கைகளை அறிய இவ்வுரை பெரிதும் பயன்படுகின்றது. பல்லவர் கால இலக்கியங்களை அறிவதற்கும் இதுவே துணையாக உள்ளது.

## 8. யாப்பருங்கலக்காரிகை

யாப்பருங்கலத்தின் வழிநூல் யாப்பருங்கலக்காரிகை. இது யாப்பருங்கலத்தைவிட எளிமையும் சுருக்கமும் வாய்ந்தது. இதனை இயற்றியவர், அமிதசாகரர்; உரை எழுதியவர், குணசாகரர்.

சூத்திர வடிவமாக உள்ள நூலுக்குச் சுலோக ரூபமாக விளக்கம் கூறும் நூலைக் காரிகை என்பது வடநூல் வழக்கு. அம்மரபை ஒட்டி யாப்பருங்கலத்தின் விளக்கமான இந்நூலும் 'யாப்பருங்கலக்காரிகை' எனப் பெயர் பெற்றதென்பர். 'காரிகை' என்பது கட்டளைக்கலித்துறையைக் குறிக்குமாதலின் கட்டளைக்கலித்துறையால் அமைந்த இந்நூலுக்குக் 'காரிகை' எனப் பெயர் வந்தது என்பாரும் உளர். 'யாப்பருங்கலப் புறனடை' என்ற பெயரும் இதற்குண்டு.

அமிதசாகரர், யாப்பருங்கலக் காரிகையை இயற்றியமைக்காகத் தொண்டை மண்டலத்தில் உள்ள 'குளத்தூர்' என்னும் ஊரைப்

பரிசாகப் பெற்றார் என்பது கல்வெட்டுகளால் புலனாகின்றது. அவ்வூர் இதன் காரணமாகக் 'காரிகைக் குளத்தூர்' என்ற பெயரால் வழங்குகின்றது.

இந்நூலுக்குக் குணசாகரர் எழுதிய உரையேயன்றிச் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் எழுதிய புத்துரை ஒன்றும் உண்டு.

இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று பிரிவுகளையும் நாற்பத்து நான்கு காரிகைகளையும் கொண்டது. யாப்பருங்கலத்தைப் போலவே செய்யுளின் ஆறு உறுப்புகளையும், பாக்களையும் பாவினங்களையும் பற்றிக் கூறுகின்றது.

யாப்பிலக்கணத்துறையில் பெரும்புகழ் பற்று இந்நூலுக்குப் பலராலும் பயிலப்படும் பெருஞ்சிறப்பு உண்டு. அக் காலம் முதல் இன்றுவரை இதற்குப் பரவலான செல்வாக்கு உண்டு.

> "காடும் செடியும் என்னோ தமிழ்க்
> காரிகை கற்கின்றதே !"

என்னும் படிக்காசுப்புலவர் வாக்கு இதனை வலியுறுத்தும்.

## 9. அமுதசாகரம்

அருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகரனார் இயற்றிய நூல்களுள் ஒன்று, அமுதசாகரம். மகடூஉ முன்னிலையில் அமைந்த முதல் இலக்கண நூல் யாப்பருங்கலக்காரிகை. அந் நூலை இயற்றிய அமுதசாகரரே மகடூஉ முன்னிலை அமைத்து இந்நூலையும் எழுதியுள்ளார்.

இது வெண்பா யாப்பினால் அமைந்தது ; யாப்பிலக்கணம் கூறுவது. கவிதை என்ற அமிழ்தம் பற்றியும், வடமொழியில் வழங்கும் பெயர் பற்றியும் கூறுவது இந்நூலின் புதுமை.

## 10. வீரசோழியம்

தமிழகத்தில் பிற்காலத்தில் பெருமாற்றங்கள் நிகழ்ந்தன. மூவேந்தர்களின் ஆட்சிக் காலத்திலேயே வேற்று மொழிகளும்,

மதங்களும் தமிழகத்தில் விரவத் தொடங்கின. மதச்சார்புடைய இலக்கியக் கொள்கைகள் பெருகின. அவற்றிற்குத் தக்கவாறு இலக்கணக் கொள்கைகளும் மாற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. புதிய விதிகள் பல வகுக்க வேண்டியதாயிற்று. இந்நிலையில் எழுந்த இலக்கண நூல்தான் வீரசோழியம். இது, 'வீரசோழியக் காரிகை' எனவும் பெயர் பெறும்.

வீரராசேந்திரன் என்னும் சோழ மன்னன் கி. பி. 1063 முதல் 1070 வரை ஆண்டவன். இவன் விரும்பியவண்ணம் புத்தமித்திரனார் என்னும் புலவர் ஐந்து இலக்கணமும் அடங்கிய இவ்விலக்கண நூலை இயற்றினார். மன்னன் பெயரால் இந்நூலுக்கு வீரசோழியம் எனப் பெயரிட்டார். இதனை,

"தேமேவிய தொங்கல் தேர்வீர சோழன் திருப்பெயரால்
பூமே லுரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே"

என்னும் இந்நூற்பாயிரப்பகுதியால் அறியலாம். இவர் 'பொன்பற்றி' என்னும் ஊரினர் ; புத்தமதத்தினர்.

**நூலமைப்பு :** வீரசோழியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டது. அதிகாரத்தின் உட்பிரிவு, 'படலம்' என ஆட்சி செய்யப்பட்டுள்ளது.

இந்நூலின் அதிகாரங்கள் 5, படலம் 11, செய்யுள் 183, பாயிரச்செய்யுள் 3. நூல், கட்டளைக்கலித்துறை யாப்பினால் அமைந்தது.

இந்நூலின் உரையாசிரியர் பெருந்தேவனார் என்பவர். பெருந்தேவனார் என்ற பெயரில் நால்வர் உள்ளனர். அவர்களுள் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்து, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றில் உள்ள பாடல்களைப் பாடிய சங்ககாலப் பெருந்தேவனார் ஒருவர். தொகைநூல்களுள் கடவுள் வாழ்த்துச் செய்யுள்கள் பாடிய பெருந்தேவனார், இரண்டாமவர். இவர் கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாரதத்தை வெண்பா யாப்பில் பாடிய பெருந்தேவனார், மூன்றாமவர். இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டினர். இம்மூவரினும் வேறானவர், வீரசோழியம் உரை கண்ட பெருந்தேவனார்.

இவர் உரை, விரிவுரையாக விளங்குகின்றது. இதனால் பல அரிய செய்திகள் புலப்படுகின்றன. இவரும் புத்த மதத்தினரே. இவர் குண்டலகேசியை மிகவும் பாராட்டுகின்றார்.

இவரது காலம், கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டின் இறுதியும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆம்.

சொற்களின் மூலம் வரலாறு கூறுதல் இவர் உரையின் சிறப்பு. எடுத்துக்காட்டாக, முருங்கை மரம் தமிழ்நாட்டுக்குரியதன்று எனக் கூறுவர். அவ்வாறாயின் 'முருங்கை' எம்மொழிச் சொல்? அது 'முருங்கா' என்னும் சிங்களச் சொல்லினின்றும் வந்தது என இவர் குறித்துள்ளார். இக்காலத்தில் வழங்குதல் போல அக்காலத்திலும் சில பகுதியில் 'வாயப்பயம்', 'கோயி முட்டை' என மக்கள் வழங்கியதைக் குறிப்பிட்டுத் தமிழின் நிலைபற்றி இவர் வருந்திப் பேசுகின்றார்.

## 11. தமிழ் நெறி விளக்கம்

இலக்கண விளக்கம், இலக்கிய விளக்கம் என வரும் நூல்களைப் போன்று 'தமிழ் நெறி விளக்கம்' என்னும் பெயருடன் ஓர் இலக்கண நூல் இருந்தது. அது ஐந்து தமிழிலக்கணப் பகுதிகளை உடையதாகத் தோன்றுகிறது. ஆனால், இப்போது கிடைத்திருப்பது பொருளியலில் அகப்பொருள் மட்டும் உணர்த்தும் 25 நூற்பாக்கள் மட்டுமேயாம்.

இந்நூலாசிரியர் பெயர் அறியப்படவில்லை. இந்நூலுக்கு உரை ஒன்று உண்டு. உரையாசிரியரும் நூலாசிரியரும் ஒருவரே எனக் கருதப்படுகின்றது.

இந்நூலின் அகப்பொருள் அமைப்பு நம்பி அகப்பொருளினின்றும் வேறாக உள்ளது. எனவே, இவர் காலம் நம்பியின் காலமாகிய கி. பி. 12-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனலாம்.

**பொருளமைப்பு :** இந்நூல் கூறும் அகப்பொருள் அமைப்புக்கும் பிற அகப்பொருள் நூல்களின் அமைப்புக்கும் வேறுபாடு உண்டு.

## 12. நேமிநாதம்

நேமிநாதம் என்பது, எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் உணர்த்தும் இலக்கண நூல்.

தென்மயிலாபுரி நீனிறக் கடவுள் நேமிநாதரின் பெயரால் செய்யப்பட்டமையின் இந்நூல் நேமிநாதம் எனப் பெயர் பெற்றது.

சமணர் போற்றும் இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களுள் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரர் நேமிநாதர். இவருக்குச் சமணர்கள் பல இடங்களில் கோயில்கள் எழுப்பி வழிபாடு ஆற்றினர். மயிலையில் எழுப்பப்பட்ட ஐந்து சைனக் கோயில்களுள் நேமிநாதரின் திருக்கோயிலும் ஒன்று. நேமிநாதரை மயிலை நாதர் எனவும் கூறுவர்.

நேமிநாதத்தை இயற்றியவர் குணவீர பண்டிதர்; களந்தை என்னும் ஊரினர்; சமண மதத்தினர். நேமிநாதம் பாடியதால் 'நேமிநாதர்' என்னும் பெயரும் இவருக்கு உண்டு. 'வச்சணந்தி மாலை' என்னும் பாட்டியல் நூல் செய்தவரும் இவரே. இவருக்கு ஆசிரியர் வச்சணந்தி முனிவர். ஆசிரியரும் மாணவரும் ஒரே ஊரினர்.

இதன் பாயிர உரையில்,

> "இந்நூல் யார் காலத்துச் செய்ததோ எனின்,
>
> 'குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான்
> திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன்'

என்னும் அரசன் காலத்தில் செய்தது என உணர்க" என வருவதால், திரிபுவன தேவன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1178 - 1218) வாழ்ந்தவர் இவர் என்பது பெறப்படுகின்றது.

## 13. சின்னூல்

குணவீர பண்டிதரால் இயற்றப்பட்ட மற்றொரு இலக்கண நூல் 'சின்னூல்' எனப்படும். இந்நூல் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் சுருக்கிக் கூறுகின்றது. இச்சுருக்கம் பற்றியே 'சின்னூல்' எனப்பட்டது.

சின்னூல் ஆயினும் இது செறிவான இலக்கண அமைப்பு உடையது. நன்னூலுக்கு முன்னர் இந்நூல் பெருஞ்

செல்வாக்குப் பெற்றிருந்தது. நன்னூல் தோன்றிய பின்னர் அச்செல்வாக்கை இழந்தது.

இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அவ்வுரையாசிரியரின் பெயர் முதலியன தெரியவில்லை. ஆனால், அவர் கி. பி. 14 - ஆம் நூற்றாண்டினர் என்பது மட்டும் அறியப்படுகிறது.

## 14. வெண்பாப் பாட்டியல்

பாட்டியல் நூல்களுள் குறிப்பிடத்தக்கது 'வெண்பாப் பாட்டியல்' பன்னிரு பாட்டியலின் பின்னர்த் தோன்றிய நூல்களுக்குள் இது சிறப்பு வாய்ந்தது.

இந் நூல் வெண்பாவினால் அமைந்தமையின் இப்பெயர் பெற்றது. இதற்கு 'வச்சணந்தி மாலை' என்னும் பெயரும் உண்டு.

வெண்பாப் பாட்டியலை இயற்றியவர் குணவீர பண்டிதர். தம் ஆசிரியரான வச்சணந்தியின் பெயரால் இந்நூலுக்கு இவர் வச்சணந்திமாலை எனப் பெயரிட்டார்.

பின்வந்த பாட்டியல் நூல்களுக் கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது வெண்பாப் பாட்டியல். முதன் மொழி இயலில் பத்து வகைப் பொருத்தங்கள் கூறப்படுகின்றன. செய்யுளியலில் நால்வகைக் கவிதைகளின் இலக்கணம், பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாக உள்ள சிற்றிலக்கிய வகைகளின் இலக்கணங்கள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. புராணங்கட்கும் இலக்கணம் கூறுவது இந்நூலின் புதுமை.

நான்கு பாக்களுக்கும் உரிய சாதிகள், நாள், இராசி, கடவுளர், நல்லவை, தீயவை முதலியவற்றின் இலக்கணங்கள் கூறப்படுகின்றன. இந் நூலுக்குப் பொழிப்புரையும் குறிப்புரையும் கலந்த பழைய உரை ஒன்று உண்டு.

## 15. தண்டியலங்காரம்

அணி இலக்கணம் கூறும் நூல்களுள் இன்று பெரும்புகழும் தனிச்செல்வாக்கும் பெற்றுத் திகழ்வது தண்டியலங்காரம்.

இந்நூலை இயற்றியவர் தண்டி. இவர் தமிழ்ப்புலவர். இந் நூலுக்கு முதல் நூல் வடமொழியில் தண்டி என்பவரால்

இயற்றப்பட்ட காவியாதர்சம். பெயரொப்புமை கொண்டு இருவரும் ஒருவரே என மயங்குவாரும் உளர்.

வடமொழித் தண்டி கி.பி. ஏழாம் நூற்றாண்டினர்; தமிழ்த் தண்டி கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர்.

இவர் சோழ நாட்டினர்; கம்பருக்கு மைந்தரான அம்பிகாபதி புதல்வர். இதனை,

"பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பி காபதி
மேவரும் தவத்தினில் பயந்த
தாவரும் சீர்த்தித் தண்டிஎன் பவனே."

என வரும் இந்நூல் சிறப்புப்பாயிரத்தால் அறியலாம். இவர் தொல்காப்பியம் போன்ற தென்மொழி இலக்கணங்களையும், வடமொழியையும் நன்கு பயின்றவர். ஆடக மன்றத்து நாடக நன்னூல் பல நுனித்துணர்ந்தவர். இவர் ஒட்டக்கூத்தருக்கு மாணவர் என்பர்.

இவர் காலம், இரண்டாம் குலோத்துங்கன் காலமாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டு; சமயம், சைவம்.

தண்டியலங்காரம் என்பது இந்நூலுக்குப் பிற்காலத்தில் வந்த பெயர். தொடக்கப்பெயர், அணியதிகாரம்; 'அணி இயல்' என்னும் பெயரும் உண்டென்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையால் அறியப்படுகின்றது.

தண்டியலங்காரம் பொதுவணி இயல், பொருளணி இயல், சொல்லணி இயல் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

வடமொழி காவியாதர்சத்தைப் பின்பற்றி எழுதப்பட்ட நூலாயினும் இது மொழிபெயர்ப்பு என்று கூறமுடியாதபடி முதல் நூலைப் போன்றே திகழ்கின்றது. 35 அணிகள் இந் நூலில் விரித்துரைக்கப்படுகின்றன.

இந் நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. இவ்வுரையாசிரியர் பரிமேலழகர் உரையைத் தழுவி எழுதியுள்ளமையால் இவர் காலம் பரிமேலழகருக்குப் பிற்பட்டது எனலாம். சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளை எழுதிய உரை ஒன்றும் இந்நூலை அணிசெய்கின்றது. இவ்வுரை உதாரணச் செய்யுள்களை அணியோடு பொருத்திக் காட்டுவது ஒரு தனிச்சிறப்பு.

## 16. நன்னூல்

தொல்காப்பியத்தைப் போன்று, காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாமல், எக்காலத்தும் நின்று நிலவும் இலக்கணக் கலங்கரை விளக்கம், நன்னூல்!

இக்காலத்தினர் தொல்காப்பியத்தை இலக்கணமாகப் பின்பற்றுவதில்லை. ஆனால், நன்னூல் பெருவழக்காக, இன்றும் பின்பற்றக்கூடிய பேரிலக்கணமாக, தமிழ் பயில்வாரின் கலைக்கூடமாகத் திகழ்கின்றது. கல்லூரிகளுக்கும் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நன்னூல்தான் மேல்வரிச் சட்டம்.

நன்னூலை இயற்றிவர், பன்னூல் உணர்ந்த பவணந்தி முனிவர். இவர் சமணர்; ஊர், கொங்கு மண்டலத்தைச் சார்ந்த சனநாதபுரம்; இது 'சனகை' என வழங்கும்.

இவருக்கு ஆசிரியர், சன்மதி முனிவர். கங்க நாட்டை ஆண்ட சீயகங்கன் வேண்டுகோள்படி இவர் நன்னூலை இயற்றினார் என இந்நூல் பாயிரம் கூறுகின்றது. சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1178-1218) அரசாண்ட சிற்றரசன். எனவே, பவணந்தியின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது தெளிவு.

நன்னூலுக்கு முதல் நூல் தொல்காப்பியம். ஆயினும் தொல்காப்பிய இளம்பூரணர் உரை, அவிநயம், சினேந்திரம் போன்ற சில வடமொழி நூல்கள் ஆகியவற்றைத் தழுவியே பவணந்தி இந்நூலை இயற்றியுள்ளார். தொல்காப்பியருக்குப் பின். கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், பண்டைய இலக்கண மரபுகளையும் இந்நூல் விரித்துரைக்கின்றது.

"அருபொருள் ஐந்தையும் யாவரும் உணர" என வரும் சிறப்புப் பாயிரப் பகுதியைக்கொண்டு இந்நூல் ஐந்திலக்கணமும் கூறுவது என்ற கருத்து நிலவுகிறது. ஆனால், இப்போது உள்ளவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு மட்டுமே.

நன்னூலைப் 'பின்னூல்', 'சிற்றதிகாரம்' என்னும் பெயர்களால் வழங்குவர். இதன் நூற்பாக்கள் திட்பநுட்பம் செறிந்தவை; எடுத்தாளுவதற்கு எளிமையானவை. தொல்காப்பிய விதிகளை வகுத்தும் தொகுத்தும் வரையறுத்து அமைக்கப்பட்டவை.

தொல்காப்பியர் கூறாத வடமொழி ஆக்கம் இந்நூலில் காணப்படும் புதுவது புகுதல்.

இந்நூலுக்கு உரை கண்டவர் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மயிலைநாதர், ஆண்டிப்புலவர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், முகவை இராமானுச கவிராயர், விசாகப்பெருமாளையர், ஆறுமுக நாவலர், சடகோப ராமானுசாச்சாரியார், பவானந்தம் பிள்ளை என்போராவர்.

## உரைக்குறிப்புகள் :

**மயிலை நாதர் :** இவர் எழுதியுள்ளது காண்டிகை உரை. இவ்வுரை தொல்காப்பிய இளம்பூரணர் உரையை அடியொற்றுகின்றது ; வரலாற்றுப் புதைபொருள் என மதிக்கப்படுகின்றது. இளம்பூரணர் துறவி என்பதையும், அவிநயனார் சைனர் என்பதையும், அவிநய நூலின் உரையாசிரியர் இராச பவித்திர பல்லவதரையன் என்பதையும் கூறியவர் இவர். இவர் சமணர்; கி. பி. 13-ஆம் நூற்றாண்டினர்.

**ஆண்டிப்புலவர் :** இவர் வளையறுக்கும் குலத்தினர் ; தாம் எழுதிய நன்னூல் உரையைச் சில இடங்களில் செய்யுள் வடிவாக அமைத்தவர். கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர் ; ஞானப்பிரகாசகுருவுக்கு மாணவர்.

**சங்கர நமச்சிவாயர் :** பாண்டி நாட்டுத் திருநெல்வேலியைச் சார்ந்தவர் ; சைவ வேளாளர் ; இலக்கணக் கொத்து இயற்றிய சுவாமிநாத தேசிகரிடம் தமிழ் பயின்றவர். திருவாவடுதுறை ஆதீனத் துறவி ; கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

இவர் எழுதியது நன்னூல் விருத்தியுரை. இவ்வுரை புலவர் போற்றும் புகழ் நலம் பெற்றது. பதசாரம் அமைந்தது ; சைவ சித்தாந்தக் கருத்துகள் செறிந்தது ; சொல் விரித்துரைக்கும் தனிச்சிறப்பு உடையது.

**சிவஞான முனிவர் :** இவரால் எழுதப்பட்டது நன்னூல் விருத்தியுரை. சங்கர நமச்சிவாயர் உரையைத் திருத்தியும் கூட்டியும் விளக்கியும் எழுதப்பட்ட புத்துரை இது. இலக்கண விளக்கச் சூறாவளியில் காணப்படும் பல கருத்துகளுக்கு உரிய விளக்கங்கள் இவ்வுரையில் தரப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளருக்கு இவ்வுரை பெரிதும் பயன்தர வல்லது. உரையாசிரியர் காலம், கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி.

**கூழங்கைத் தம்பிரான் :** காஞ்சிபுரத்தவர் ; சைவ வேளாளர் ; திருவாவடுதுறையில் தம்பிரானாய் இருந்தவர் ; கை கூழை யானது பற்றி இப்பெயர் பெற்றவர். இவர் எழுதிய நன்னூல் உரை அச்சாகவில்லை. இவரது காலம், கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

**முகவை இராமானுசக் கவிராயர் :** சிறந்த இயற்றமிழ்ப்புலவர் ; இவர் உரை எளிமையானது ; விளக்கமானது. இவரது காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு ; சமயம், வைணவம்.

**விசாகப்பெருமாள் ஐயர் :** திருத்தணிகையில் பிறந்தவர் ; தமிழிலும் வடமொழியிலும் வல்லவர் ; வீர சைவர். முகவை இராமானுசக்கவிராயருக்கு மாணவர். இவர் உடன்பிறந்தவர் சரவணப்பெருமாள் ஐயர்.

விசாகப்பெருமாளையர் எழுதிய ஐந்திலக்கண வினா விடை புகழ்மிக்கது. இவர் எழுதிய நன்னூல் காண்டிகை உரை முக்காண்டிகை என்ற சிறப்புப்பெயரால் வழங்கப்படுகிறது. இலக்கணங் கற்பார்க்குப் பயன்தரும் யாப்பிலக்கண வசனம், அணி இலக்கண வசனம் என்னும் நூல்களை இவர் எழுதியிருக்கிறார்.

**ஆறுமுக நாவலர் :** யாழ்ப்பாணத்தில் 'நல்லூர்' என்னும் ஊரில் பிறந்தவர். தமிழில் பெரும்புலமை பெற்றவர் ; சைவம் வளர்த்தவர். தமிழ் நூல்கள் பல ஆய்ந்து பதிப்பித்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தாரால் 'நாவலர்' என்னும் பட்டம் பெற்றவர். காலம், கி. பி. 1882—1879.

இவர் எழுதிய நன்னூல் காண்டிகை உரையே இன்று பலராலும் போற்றிப் பயிலப்படுகின்றது.

## 17. நம்பி அகப்பொருள் விளக்கம்

அகப்பொருள் இலக்கண நூல்களுள் பெரும் புகழ் பெற்றது, நம்பி அகப்பொருள் விளக்கம். அகப்பொருள் பற்றிய இலக்கணங்களைத் தெளிவாக—விளக்கமாக—இந்நூல் எடுத்துரைக்கின்றது. நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. ஆதலின், இவர் பெயரோடு சேர்த்து இதனை, 'நாற்கவிராச நம்பி அகப்பொருள்' என வழங்குகின்றனர்.

இவரது இயற்பெயர், நம்பி நயினார். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாட வல்லவராதலின் நாற்கவிராச நம்பி என்னும் சிறப்புப்பெயர் பெற்றார். ஊர், பாண்டி நாட்டுப் புளியங்குடி. காலம், கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியும், 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.

**நூலமைப்பு :** நம்பி அகப்பொருள் அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து பிரிவுகளையும், 252 நூற்பாக்களையும் உடையது.

இந்நூல் தொல்காப்பிய அகத்திணைப் பொருளையும், இடையில் எழுந்த இலக்கியங்களையும் தழுவி எழுதப்பட்டது. காலப்போக்கில் அகப்பொருள் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் இதில் காணலாம். இந்நூலுக்கு ஒரு பழைய உரை உள்ளது. இது நூலாசிரியராலேயே இயற்றப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. கருத்துரை, பொழிப்புரை, விசேட உரை ஆகியவை இவ்வுரையில் இடம் பெறுகின்றன. தஞ்சைவாணன்கோவைச் செய்யுள்கள் உதாரணமாகத் தரப்பட்டுள்ளன. இந்நூலுக்கு த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட புத்துரை ஒன்றும் உண்டு.

## 18. களவியல் காரிகை

இந்நூல் அகப்பொருள் இலக்கணம் கூறுவது. நூல் முழுவதும் கிடைக்கவில்லை ; 60 பாக்கள் இதன்கண் உள்ளனவாதல் வேண்டும் எனத் திரு எஸ். வையாபுரிப்பிள்ளை கருதுகிறார்.

இப்போது 53 கட்டளைக்கலித்துறைகள் கிடைத்துள்ளன. எனவே, இதற்குக் களவியல் காரிகை என வையாபுரிப்பிள்ளை பெயர் வைத்துள்ளார்.

இந்நூலுக்கு ஓர் அரிய உரை உள்ளது. இறையனார் களவியலில் மேற்கோளாக வரும் பாடல்கள் பாண்டிக் கோவையைச் சார்ந்தன என்பதை அறிய உதவியது இவ்வுரையே.

## 19. பன்னிரு பாட்டியல்

பாக்களின் வகை, பிறப்பு முதலிய பொருத்தங்கள், சிற்றிலக்கிய வகைகள் முதலியனபற்றிக் கூறுவன, பாட்டியல் நூல்கள். பாட்டியல் நூல்களுள் தொகுப்பு நூலாக உள்ளது, பன்னிரு பாட்டியலே.

இந்நூலின்கண் உள்ள நூற்பாக்களைப் பாடிய புலவர்கள் பதின்மூவர். அவர்கள் பொய்கையார், பரணர், இந்திரகாளியார், அவிநயர், அகத்தியர், கல்லாடர், கபிலர், சேந்தம்பூதனார், கோவூர் கிழார், மாபூதனார், சீத்தலையார், பல்காயனார், பெருங்குன்றூர் கிழார்.

இப்பெயர்கள் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களைக் குறிப்பன. ஆனால், உண்மை வேறு. கி.பி. 12ஆம் நூற்றாண்டை ஒட்டிச் சற்று முன்பு வாழ்ந்த பிற்காலப் புலவர்கள் இவர்கள் என்பது நூலைப் படிக்கும் போது புலனாகும் உண்மை. இந்நூலில் வரும் அகத்தியர், பாட்டியல் செய்த அகத்தியராதல் வேண்டும். இந்திரகாளியர், இந்திரகாளி செய்தவராய் இருக்கலாம். கி.பி. 12 - ஆம் நூற்றாண்டில் எழுந்த வெண்பாப்பாட்டியல் இந்திர காளி நெறியைப் பின்பற்றியது எனக் கருதப்படுகிறது. ஆகவே, பன்னிரு பாட்டியல் கி.பி. 12 - ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனலாம்.

இந்நூலில் கூறப்படும் பொருத்தங்கள் 12. ஆதலின், பன்னிரு பாட்டியல் எனப் பெயர் பெற்றிருக்கக்கூடும் எனக் கருத இடமுண்டு. இது ஒரு தொகை நூல். இதன்கண் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னும் மூன்று இயல்களும், 358 நூற்பாக்களும், சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

12 பொருத்தங்கள் மட்டுமன்றி, 66 சிற்றிலக்கிய வகைகளும், மேற்கணக்கு, கீழ்க்கணக்கு, பத்துப்பாட்டு என்பவற்றின் இலக்கணங்களும் இந்நூலில் கூறப்படுகின்றன.

> "ஆயிரம் யானை அமரிடை வென்ற
> மான வனுக்கு வகுப்பது பரணி"

என்ற பரணி இலக்கணத்துக்கு மாறாக, எழுநூறு யானைகளைக்கொன்றவன்மீதும் பரணி பாடலாம் என இந்நூல் வழி வகுக்கின்றது.

## 20. நவநீதப்பாட்டியல்

அகத்தியர் நெறியைப் பின்பற்றி எழுந்த பாட்டியல் நூல் நவநீதப்பாட்டியல். பாட்டியல் நூல்களில் இக்காலத்தில் பயன் படுவது இந்நூல்.

இந்நூலை இயற்றியவர் நவநீதர். 'நவநீத நடன்' எனவும் இவர் குறிக்கப்படுவர். இப்பெயரால் இவர் நாட்டியக்கலைப் புலமை யும் உடையவர் என்பது அறியப்படுகிறது. அரங்கின் ஆசன அமைப்பு முதலிய ஆடல் நூல் குறிப்புகள் இவர் பாட்டியலில் இடம் பெறுவதால் பரத நாட்டியம் பயிற்றுவது இவர் குலத் தொழிலாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இவர் சமயம் வைணவம் ; காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இந்நூலில் முதன் மொழி இயல், செய்யுள் மொழி இயல், பொது மொழி இயல் என்னும் 3 இயல்களும் 102 செய்யுள்களும் உள்ளன. இவையன்றிப் பிற்சேர்க்கையாக 27 செய்யுள்கள் உள்ளன. அனைத்தும் கட்டளைக்கலித்துறைப் பாக்கள். அதன் காரணமாக இது கலித்துறைப் பாட்டியல் எனவும் வழங்கும்.

நவநீதப்பாட்டியலில் நல்லவை, நிறையவை, தீயவை, குறையவை என்ற நான்கு வகை அவைகளின் இயல்பு, பத்து வகைப் பொருத்தங்கள், பிரபந்தங்களின் இலக்கணம் ஆகிய வற்றைக் கூறுகின்றது. அந்தாதி நூற்றுக்குக் குறைவான பாடல்களால் பாடலாம் என்ற குறிப்பு இந்நூலில்தான் முதன் முதல் கூறப்படுகின்றது.

இந்நூலின் உரை மிகப் பழமையானது ; எழுதியவர் பெயர் அறிய இயலவில்லை. எஸ். சண்முகம் பிள்ளை எழுதிய ஒரு புத் துரையும் இதற்குண்டு.

## 21. வரையறுத்த பாட்டியல்

இந்நூலின் காலமோ, ஆசிரியர் பெயரோ அறியப்பட வில்லை.

பிற பாட்டியல்களைப் போலன்றி மங்கலப் பொருத்தம் ஒன்றை மட்டுமே தன் நூலின் பாடுபொருளாகக்கொண்டு வரையறுப்ப

தால் இந்நூல் வரையறுத்த பாட்டியல் எனப் பெயர் பெற்றது.

10 கட்டளைக்கலித்துறைகளால் அமைந்த இந்நூல் சில மங்கலச் சொற்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றின் தன்மையும் தகுதியும் பெற்ற சொற்களைப்பற்றி ஆய்ந்துரைக்கின்றது.

காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

சம்பந்தப்பாட்டியல் எனவும் இதனைக் குறிப்பர்.

## 22. சிதம்பரப்பாட்டியல்

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பாட்டியல் விளக்க நூல் சிதம்பரப்பாட்டியல். இது பிற பாட்டியல் நூல்களினின்றும் வேறுபட்டது. இவ்வேறுபாடு பாட்டியல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டுகின்றது.

நூலாசிரியர், பரஞ்சோதியார். இவர், மதுரை உலா, சிதம்பர புராணம் ஆகியவற்றை இயற்றிய புராணத் திருமலைநாதருக்குப் புதல்வர். இக்குடியினர் சந்தான பரம்பரையில் வந்த ஞானப் பிரகாசரது வழித்தோன்றல்களாவர்.

பரஞ்சோதியார் சைவர்; சிதம்பரத்தில் வாழ்ந்தவர். கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்.

நூலமைப்பு: இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டது. எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள் 47 உடையது.

பிற பாட்டியல்கள் போல் தொடர்நிலைச்செய்யுள் இலக்கணம் மட்டும் கூறாமல் தனிநிலைச்செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் ஆகிய இரண்டின் இலக்கணமும் கூறுவது இதன் தனிச்சிறப்பு. தனிநிலைச்செய்யுளின் இலக்கணம் கூறுவது யாப்பு நூல்களின் இயல்பு. தொடர்நிலைச்செய்யுளின் இலக்கணம் வகுத்துரைப்பவை பாட்டியல் நூல்கள். இவ்விரு வகைப் பணியையும் ஒருசேர ஆற்றுகின்றது, சிதம்பரப் பாட்டியல்.

இந்நூலுக்கு முதலில் உள்ள உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களுக்கு மட்டும் உரை எழுதப் பட்டுள்ளது. உரையாசிரியர் இன்னார் எனத் தெரிய வில்லை.

## 23. மாறனலங்காரம்

வைணவ சமயத்தினர் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் பல. சமணரும் பௌத்தரும் பல இலக்கிய இலக்கண நூல்களைப் படைத்து, அவற்றில் தத்தம் மதச்சார்புடைய மேற்கோள்களை அமைத்துத் தமிழ்ப்பணியும் சமயப்பணியும் ஒருசேர ஆற்றினர். இம்மரபைப் பின்பற்றி வைணவர்களும் சில நூல்களை இயற்றினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மாறன் அகப் பொருள், மாறனலங்காரம். பாப்பாவினம் என்னும் மூன்று இலக்கண நூல்கள்.

மாறனலங்காரம் செய்யுள் அணிவகை பற்றிய இலக்கணங்களை விரித்துரைக்கும் நூல்; தண்டியலங்காரத்தின் வழிநூல்; ஆயினும் தண்டியலங்காரத்தைவிட மிகப்பெரியது; 64 அணி களைக் கூறுவது; பாயிரம், பொதுவியல், பொருளணி இயல், சொல்லணி இயல், எச்சவியல் என்னும் 5 இயல்களையும் 327 நூற்பாக்களையும் கொண்டது.

பாயிரத்தில் உள்ள நூற்பாக்கள் வெண்பாவாலும் ஆசிரியப் பாவாலும் இயன்றவை. ஏனைய இயல்கள் ஆசிரிய யாப்பால் ஆனவை.

பிறர் தொகுத்த அணிவகைகளை வகுத்தும், வகுத்தவற்றை விரித்தும் கூறுதல் இந்நூலின் தனிச்சிறப்பு. பிற அணிநூல் புலவர்கள் கூறாத பூட்டுவில், இறைச்சி, பொருள்மொழி என்னும் மூன்றும் இவரால் அணி எனச் சுட்டப்பட்டுள்ளன.

மாறனலங்கார ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இவரது இயற்பெயர் ‘சடையன்’ என்பர். இவர் வேளாண் குலத்தைச் சார்ந்த வணிக வகுப்பினர்; தென்கலை வைணவர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டினர். இந்நூலின் உரையாசிரியர் பேரை காரி ரத்தினக் கவிராயர்

## 24. மாறன் அகப்பொருள்

வைணவரால் இயற்றப்பட்ட தமிழ் அகப்பொருள் இலக்கண நூல்களுள் ஒன்று மாறன் அகப்பொருள். மாறனலங்காரத்தை இயற்றிய திருக்குருகைப்பெருமாள் கவிராயரே இதனையும் இயற்றியுள்ளார்.

இவர் இந்நூலை இயற்றி, ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்த திருப்பதி சீனிவாச ஜீயர் முன்பு அரங்கேற்றினார். அரங்கேற்றப் பெற்ற ஆண்டு கி.பி 1552. (கொல்லம் - 727).

இது அகப்பொருள் கூறும் இலக்கண நூல். இதில் அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து இயல்கள் இருந்தன என அறிகிறோம். ஆனால், இப்போது கிடைத்துள்ளவை களவியல், வரைவியல், கற்பியல் என்னும் மூன்றுமே.

மாறன் அகப்பொருள், தொல்காப்பியம் போன்ற அகப்பொருள் இலக்கண நூல்களில் கூறப்படும் கருத்துகளைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுகின்றது. எனினும் பெரும்பான்மையாக நம்பி அகப்பொருளையே தழுவியுள்ளது. சிற்சில இடங்களில் மட்டும் நம்பி அகப்பொருளோடு மாறுபடுகிறது.

இந்நூலுக்கு மேற்கோளாக அமைந்த நூல் திருப்பதிக்கோவை. இந்நூற்பாடல்கள் இலக்கிய நயமும் ஆழ்ந்த கருத்தும் கொண்டவை.

## 25. பாப்பாவினம்

பா + பாவினம் = பாப்பாவினம். பாவும், பாவினமுமாக இயற்றப்பட்ட நூலாதலின் இது 'பாப்பாவினம்' எனப் பெயர் பெற்றது.

இதனை இயற்றியவர் திருக்குருகைப்பெருமாள் கவிராயர். இது 'மாறன் பாப்பாவினம்' எனவும் வழங்கும்.

இந்நூலில் 140 பாடல்கள் உள்ளன. அவை வெண்பா முதலாய பத்துப் பாவினங்களை விளக்குகின்றன.

இந்நூலின் பாடல்கள் அனைத்தும் வைணவ சமயத்தின் ஏற்றம் உரைப்பவை. சமய வளர்ச்சிப் பணியை இந்நூல் சரிவர ஆற்றியுள்ளது.

ஒவ்வொரு பாடலின் பின்னும் அப்பாடலைப்பற்றிய இலக்கணக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அக்குறிப்புகளே இது இலக்கண நூல் என்பதற்கான சான்றுகள். இவை, பா அல்லது பாவினம் என அறிவிப்பதோடு அப்பாடலில் அமைந்துள்ள அணி, திணை, துறை என்பனவற்றையும் கூறுகின்றன.

இந்நூல் உரையாசிரியர் பேரைகாரி ரத்தினக்கவிராயர்.

## 26. பிரபந்த மரபியல்

இலக்கிய வகைகளைக் கூறும் இந்நூல், தான் நுவலும் பொருளைத் தன் பெயரிலேயே அடக்கிக் காட்டுகின்றது. இது கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்ததாகக் கருதப்படுகிறது.

முதன் முதலாகப் பிரபந்தம் 96 என வரையறுத்துக் கூறியது இந்நூல்தான். இதன்கண் 35 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. முதலில் உள்ள 21 நூற்பாக்கள் பிரபந்தப் பெயர்களைச் சுட்டி இலக்கணம் வகுக்கின்றன. அடுத்த 14 நூற்பாக்களும் பிற பாட்டியல் நூல்களைப் போலவே பாவின் வருணம், நூல் பெயர் பெறும் விதம் முதலியன பற்றிக் கூறுகின்றன. கவிதையையும் தமிழ்ப் பெண்ணையும் இணைத்துக் கூறும் பாங்கு 32, 33-ஆம் நூற்பாக்களில் காணப்படுகின்றன. இது இந்நூலின் தனிப் பெருமை; எவரும் கூறாத புதுமை.

இந்நூலாசிரியர் பற்றிய செய்திகள் அறியப்படுமாறில்லை. இந்நூல் அண்மையில் தமிழ்நாடு அரசு கீழைச்சுவடிகள் நூல் நிலைய வெளியீடாக மலர்ந்துள்ளது.

## 27. சிதம்பரச் செய்யுட்கோவை

வைணவர்கள் இலக்கண இலக்கிய நூல்கள் வாயிலாகத் தமது சமயத்தை வளர்க்க முற்பட்டது போலவே சைவர்களும் தம் சமயப் பணியைத் தொடர்ந்தனர். அதன் விளைவாக எழுந்த இலக்கண நூல்களுள் ஒன்று, சிதம்பரச் செய்யுட்கோவை.

யாப்பிலக்கண இலக்கிய நூலாக இயற்றப்பட்ட இச்செய்யுட் கோவை சிதம்பரத்தில் ஆடல் புரியும் கூத்தப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.

இந்நூலின் செய்யுள் தொகை 84. இவை நால்வகைப் பா விகற்பம், பாவினம், மருட்பா ஆகியவைபற்றிக் கூறுகின்றன. நூலாசிரியரே இயற்றிய செய்யுளிலக்கணக் குறிப்புகள் ஒவ்வொரு செய்யுளின் கீழும் இடம் பெற்றுள்ளன. இந்நூல் யாப்பருங்கலக் காரிகைக்கு இலக்கியமாய் அமைந்துள்ளது.

இந்நூலாசிரியர் குமரகுருபரர்; சைவத்துறவி; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கைலாசபுரத்தில் வேளாண் மரபில் பிறந்தவர்; சிறுவயதில் ஊமையராய் இருந்து, திருச்செந்தூர் முருகன் அருளால் பேசுந்திறன் பெற்றவர்; தருமை ஆதீனம், நான்காவது பட்டம்-மாசிலாமணி தேசிகரிடம் ஞான உபதேசம் பெற்றவர்; கந்தர் கலிவெண்பா முதலிய பல சிற்றிலக்கிய நூல்களை இயற்றியவர்.

இவரது நூல்கள் இலக்கிய நயமும் கற்பனை வளமும் மிகுந்தவை. இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு. இவர் ஆற்றிய கம்பராமாயண விரிவுரை துளசிதாசரின் இராமாயணமாக முகிழ்த்தது என்பர்.

## 28. பிரயோக விவேகம்

கி. பி.12-ஆம் நூற்றாண்டிற்குப்பின் இலக்கண உலகில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. சிற்றிலக்கிய நூல்கள் பல தோன்றின. இலக்கண நூல்களில் பல மாற்றங்கள் செய்ய வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. வடமொழிச் செல்வாக்கு தமிழில் வளர்ந்தது. வடமொழிக்கும் தென்மொழிக்கும் உள்ள இலக்கண நூல்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அம்முயற்சியின் விளைவுகளுள் ஒன்று, 'பிரயோக விவேகம்' என்னும் இலக்கண நூல்.

வடமொழியில் உள்ள வியாகரணத்துக்கு ஒப்பான தமிழ் இலக்கணம் இல்லாமையைப் போக்கவும், வடமொழி வியாகரணத்தைத் தமிழில் நுழைக்கவும் மேற்கொண்ட முதல் முயற்சியே இந்நூலின் தோற்றமாய் உருவெடுத்தது.

இந்நூலை இயற்றியவர், சுப்பிரமணிய தீட்சிதர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு வடமொழி நியாயத்தை ஒட்டிச் சேனாவரையர் எழுதிய உரை, பிற்காலத்தில் அது போன்ற வேறு நூல்கள் தோன்றாமைக்குக் காரணமானதையும், வடமொழி வியாகரணத்தைப் பின்பற்றி எழுந்த வீரசோழியம் வழக்கிழந்ததையும் கண்டு மனம் வருந்திய தீட்சிதர் பிரயோக விவேகத்தை இயற்றினார் எனக் கூறுவர்.

இராமபத்திர தீட்சிதர் என்பவர் முன்னிலையில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது. இராமபத்திரர் வடமொழியில் பெரும் புலமை பெற்றவர்; 'பதினேழாம் நூற்றாண்டின் பாணினி' எனப் பாராட்டப்பெற்றவர். தஞ்சையை ஆண்ட மகாராட்டிர வமிசத்து மன்னன் சகஜி என்பவனால் ஆதரிக்கப்பட்டவர். இவரது காலம், கி. பி. 1684—1712.

இந்நூல் சொல்லிலக்கணத்தை விரித்துரைக்கின்றது.

"வடமொழிப் பிரயோக விவேகத்திலும் சொல்லிலக்கண மல்லது எழுத்திலக்கணம் கூறாமையின் சொற்பிரயோக விவேகம் என்றாம்" என இவர் கூறுவதால் சொல்லிலக்கணமே இலக்கணம் எனக் கொண்ட வடமொழியாளரின் இலக்கணக் கொள்கையே இவரது கொள்கை என்பது பெறப்படுகின்றது.

இந்நூல் காரக படலம், சமாச படலம், தத்திக படலம், திங்குப் படலம் என்ற நான்கு படலங்களையும், 51 செய்யுள்களையும் உடையது. செய்யுள்கள் கட்டளைக்கலித்துறை யாப்பில் அமைந்தவை.

நூலாசிரியரே நூலுக்கு உரையும் எழுதியிருக்கின்றார். இவ்வுரை சேனாவரையரின் உரைப்போக்கைப் பின்பற்றியுள்ளது. இவரது நூலாலோ உரையாலோ தமிழுக்கு நன்மை ஏதும் விளையவில்லை; மாறாகத் தீமையே விளைந்தது என்னலாம்.

இவர் 'தமிழ்' என்ற சொல் திரமிளத்திலிருந்து வந்தது என்கின்றார். இவர் வடமொழியின்மீது கொண்டுள்ள காதலால், உரையாசிரியர்கள் 'தமிழ்ச்சொல்' எனக் கொண்டுள்ளவற்றை எல்லாம 'வடசொல்' எனநிலை நாட்டப் பெருமுயற்சி செய்துள்ளார். பண்டைத் தமிழ் நூல் உரையாசிரியர்களை 'அறியாமை வயப்பட்டவர்கள்' என வாய் கூசாது இகழ்ந்துரைக்கின்றார்.

வடமொழி இலக்கணமும் தென்மொழி இலக்கணமும் ஒன்று என்பது இவரது இலக்கணக் கொள்கையாயினும், இருமொழி களுக்கும் உரிய இலக்கணங்களின் தனித்தன்மைகளையும் இவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 29. இலக்கண விளக்கம்

தொல்காப்பியத்தைப் போன்று பெரும் இலக்கண நூல்கள் இயற்றப்பட வேண்டும் என்ற முயற்சி பிற்காலத் தமிழறிஞ ரிடையே எழுந்தது. இவ்வெண்ணம் கி.பி. 17-ஆம் நூற் றாண்டில் வலுப்பெற்றது. அதன் விளைவாகச் சில ஐந்திலக்கண நூல்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று 'இலக்கண விளக்கம்' என்னும் நூல்.

இதனை இயற்றியவர் வைத்தியநாத தேசிகர். ஊர், திருவாரூர். மரபு, சைவ வேளாளர். காலம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

இவர் சில மாணவர்க்கு, தமிழ் இலக்கணப் பாடம் சொல்லி வருகையில் நன்னூலும், மயிலைநாதர் உரையும் பல இடங் களில் தொல்காப்பியர் கருத்தோடு மாறுபடுவது கண்டு, தம்மால் இயன்றவரை நன்னூல் சூத்திரங்களைக்கொண்டு வேண்டிய இடங்களில் புத்துரை வகுத்துப் பாடம் போதித்து வந்தார். அதுவே, 'இலக்கண விளக்கம்' என்னும் நூலாகப் பின்னர் உருப்பெற்றது எனக் கூறப்படுகின்றது.

வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கம் செய்தார் என்றும், அவர் மூத்த மைந்தர் சதாசிவ நாவலர் பாயிரமும், சொல் லணி இயலும் செய்தார் என்றும், வைத்தியநாத தேசிகரின் மற்றொரு மைந்தர் தியாகராச தேசிகர் பாட்டியல் இயற்றினார் என்றும் இந்நூலின் இறுதியில் உள்ள பதிகத்தால் அறியப்படு கின்றது.

இலக்கண விளக்கம், தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங் கலம், யாப்பருவங்கலக்காரிகை, தண்டியலங்காரம் முதலிய நூல்களின் நூற்பாக்களை அப்படியே எடுத்துக்கொண்டு பல வற்றை மாற்றியும் கூட்டியும் திருத்தியும் இயற்றப்பட் டுள்ளது. எனவே, இதனைப் பல நூல்களின் மாற்றத்துடன் கூடிய தொகுப்பு எனலாம்.

நன்னூலிலிருந்து 250 நூற்பாக்களை இவர் எடுத்தாளுகின்றார். நன்னூலில் வரும் எட்டுச் சூத்திரங்களை, ஓரிடத்தில் ஒன்றாக இணைத்துள்ளார். ஓரிடத்தில் நன்னூல் சூத்திரங்களையும் தொல்காப்பியச் சூத்திரங்களையும் பிணைத்து ஒன்றாக்கு கின்றார். தண்டியலங்காரச் சூத்திரங்களை அணி இயலில் பெரும்பான்மையாக எடுத்தாளுகின்றார்.

**நூலமைப்பு :** இந்நூல் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்னும் ஐந்திலக்கணமும் கூறுகின்றது. எழுத்ததி காரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களையும் 941. நூற்பாக்களையும் கொண்டது. இது குட்டித் தொல்காப்பியம் எனப் புலவரால் போற்றப்படும் சிறப்புடையது.

இலக்கண விளக்கத்திற்குச் சிறந்த ஓர் உரை உண்டு. அவ்வுரையை எழுதியவர் நூலாசிரியரே என்பர் பலர் ; இவர் மகனார் சதாசிவ நாவலர் எழுதியது என்பர் சிலர்.

நூலாசிரியரைப் போலவே உரையாசிரியரும் முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றி எடுத்தாளுகின்றார். இளம்பூரணர், மயிலைநாதர், சேனாவரையர், நச்சினார்க் கினியர், பரிமேலழகர் போன்றார் உரைகளைப் பல இடங்களில் அவ்வாறே எடுத்தாளுகின்றார். இவ்வுரை சேனாவரையர் கருத்தைப் பல இடங்களில் அடியொற்றிச் செல்லுகின்றது.

## 30. இலக்கண விளக்கச் சூறாவளி

வைத்தியநாத தேசிகரின் இலக்கண விளக்கத்திற்கு மறுப்பாக எழுதப்பட்ட நூல், இலக்கண விளக்கச் சூறாவளி. இதனை எழுதியவர் மாதவச் சிவஞான முனிவர். இவர் மறுப்புரை எழுதுவதில் முடிசூடா மன்னன்; தர்க்கவாதத்திலும் சொல்லம்பு களை எய்வதிலும் தந்நிகரற்றவர்.

சிவஞான முனிவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தவர்; சைவ வேளாண் மரபினர்; இளமையிலேயே துறவு பூண்டவர். இயற்பெயர் முக்களா லிங்கர்.

ஈசான மடம் வேலப்ப தேசிகரிடம் சமயதிக்கையும் துறவும் பெற்ற இப்பேரறிஞர் சிற்றிலக்கியமும் பேரிலக்கியமும் இயற்று

வதில் வல்லவர்; நுண்மாண் நுழைபுலம் மிகுந்தவர். திருவாவடுதுறை ஆதீனம் ஈன்றெடுத்த தமிழ்க் கருவூலம் எனக் குறிப்பிடத்தக்கவர் இப்பெருமகனார்.

இவரது காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

## 31. இலக்கணக் கொத்து

தென்னகத்துச் சைவ மடங்கள் பல, தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டது போல, ஆதீன அடியவர் பலர் தமிழ் பயின்றும், தமிழ் பயிற்றியும், தமிழ் நூல்கள் பல இயற்றியும் தமிழ் வளர்த்து வரலாயினர். அவ்வாறு இயற்றப்பட்ட நூல்களுள் ஒன்று, இலக்கணக் கொத்து.

இலக்கணக் கொத்து, தமிழ்ச்சொல் இலக்கணத்தை விரித்துக் கூறும் நூல். இலக்கண ஆசிரியர் பலர் இயற்றிய நூல்களிலும் உரைகளிலும் பரவிக்கிடந்த சில விதிகளைத் தொகுத்து ஒவ்வொரு நூற்பாவால் ஒருங்கே அறியக் கிடத்தலின் இலக்கணக் கொத்து எனக் காரணப்பெயர் பெற்றது என்பர். இதனால், முன்னோர் நூல்களில் இலைமறை காய் போல் மறைந்து கிடந்த விதிகளைத் தொகுத்துரைப்பது இவ்வாசிரியரின் இலக்கணக் கொள்கை என்பது அறியப்படுகின்றது.

இலக்கணக் கொத்து, சாமிநாத தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் சங்கு நீரால் திருமுழுக்கு ஆட்டப்பெற்று ஈசான தேசிகர் என்ற அபிடேகப்பெயரைப் பெற்றவர். திருநெல்வேலியைச் சார்ந்தவர்; சைவ வேளாண் மரபினர்; திருவாவடுதுறை ஆதீனத்தில் சின்னப் பண்டாரமாய் இருந்த மாசிலாமணி தேசிகரிடம் துறவு பெற்றுக் குட்டித் தம்பிரானாய் இருந்தவர்.

இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத தேசிகரும், பிரயோக விவேகம் இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதரும் இவர் காலத்தில் வாழ்ந்தவர்கள். எனவே, இவர் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு என்பது தெளிவு.

இந்நூலாசிரியர், 'தொல்காப்பியத்தை எழுத்தெண்ணிப் படித்தவர்'' என பாராட்டப்பெற்ற புலமை உடையவர்.

இவரது இலக்கணக் கொள்கை, 'வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்றே' என்பது. வடநூலை விட்டுத் தனியே தமிழ்நூல் நடவாது எனத் துணிந்து கூறியவர் இவர்.

"அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை;
அவற்றுள், ஒன்றேயாயினும் தமிழ்நூல் உண்டோ?

என்று கேட்கும் அளவுக்கு நெஞ்சுரம் இவருக்கு இருந்தது. அது மட்டுமன்று;

'ஐந்தெழுத் தால்ஒரு பாடை' என்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே"

(ஐந்தெழுத்து: ற, ன, ழ, எ, ஒ என்னும் தமிழ்ச் சிறப்பெழுத்து ஐந்து) என்று தமிழை ஏளனம் செய்யவும் துணிந்தவர் இவர். இவ்வளவு செய்தும் இவரை அக்காலத்தில் கடுமையாக ஒறுக்காமல் விட்டிருந்ததுதான் வியப்புக்குரியது. எனினும், தமிழ்ப்பற்றுமிக்க சான்றோரின் சீற்றத்துக்கும் கண்டனத்துக்கும் இவர் ஆளானார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது ஆழ்ந்த புலமையும், பரந்து பட்ட நூற்பயிற்சியும் 'வடமொழிப் பற்று' என்னும் கரிய இருளால் மூடப்பட்டு அமிழ்ந்து ஒழிந்தது. இத்தகைய போக்குக்குக் கூறப்படும் காரணங்கள் இரண்டு.

இந்நூலுக்கு உரையாசிரியரும் இவரேயாதலால் தமது கொள்கைகளை இவர் தெளிவாகக் கூறுகின்றார். ஆயினும், இவ்வுரை சுருக்கமாகவே அமைந்துள்ளது.

இந்நூல் சிறந்த இலக்கண ஆய்வு நூலாகக் கருதப்படுகிறது. முன்னோர் பலர் கூறாது விட்ட இலக்கண விதிகளை நுட்பமாக ஆய்ந்து வகுத்துரைப்பது இந்நூலின் தனிச்சிறப்பு.

## 32. தொன்னூல் விளக்கம்

தமிழுக்குத் தமிழறிஞர்கள் மட்டும் தொண்டாற்றவில்லை. அயல் நாடுகளிலிருந்து அலை கடல் கடந்து வந்த அறிஞர் பலர் தமிழ் பயின்றும், தமிழ் நூல்கள் இயற்றியும், தமிழ் இலக்கணங்கள் வகுத்தும் சிறந்த தமிழ்ப்பணி ஆற்றினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற இயற்பெயரையுடைய வீரமாமுனிவர்.

இவரால் இயற்றப்பட்டது 'தொன்னூல் விளக்கம்' என்னும் தமிழ் இலக்கண நூல். "தொன்னூல் பொன்னூலாக இலங்குகின்றது" என ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளமை ஒன்றே இந்நூலின் சிறப்பை விளக்க வல்லது.

வீரமாமுனிவர் இத்தாலிய நாட்டினர்; காலம் கி. பி. 1680-1747. இவர் கத்தோலிக்க கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்தார். வந்த பின்பு தம் பெயரைத் தைரியநாதர் என மாற்றிக்கொண்டார். சுப்ரதீபக் கவிராயர் என்பவரிடம் தமிழ் பயின்று புலமை பெற்றார். இவரது தகைமையைப் பாராட்டிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் 'வீரமாமுனிவர்' என்ற பட்டம் நல்கினர்.

இவர் ஆற்றிய தமிழ்ப்பணிகள் பல; அவற்றுள் சில: சிந்தாமணியின் அமைப்பும், கம்பன் கவிநயமும் கவின் 'தேம்பாவணி' என்னும் தீஞ்சுவைக் காவியத்தைத் தமிழில் பாடியது.

தமிழில் முதன் முதலாகச் 'சதுரகராதி' தொகுத்தமைத்தது.

வள்ளுவன் குறளில் அறத்துப்பாலை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தது. இதனால் வள்ளுவனை மேலை நாட்டினர் அறிய முதன் முதலாக வாய்ப்பு நேரிட்டது.

தமிழில் முதன்முதலாக உரைநடையை வளர்த்து, 'பரமார்த்த குரு கதை' எழுதியது.

தொன்னூல் விளக்கம் இயற்றியது.

**நூலமைப்பு :**

தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணமும் கூறுவது.

வீரமாமுனிவர் பெரும்பாலும் நன்னூலையே தழுவிச் செல்லுகின்றார். நன்னூலிலுள்ள 38 நூற்பாக்களை அப்படியே எடுத்துத் தமது நூலில் அமைத்துக்கொண்டிருக்கிறார்.

காலத்திற்கேற்ப நிகழ்ந்த இலக்கண மாற்றங்களை இவர் நூல் சுட்டுகின்றது. சொல்லதிகாரம், வீரசோழியத்தைப் பின்பற்றுகின்றது. பொருளதிகாரம், புது மரபை அடியொற்றுகிறது. யாப்பதிகாரத்தின் இறுதியில் பாட்டியல் நூல்களைத் தழுவி செய்யுள் மரபியல் கூறப்படுகிறது.

தற்குறிப்பேற்ற அணியை இவர் 'ஊகாஞ்சித அணி' எனக் கூறுவது புதுமை. வீரமாமுனிவரின் இலக்கணக் கொள்கையைத் தமிழ் அறிஞர்கள் ஆராய்வது இன்றியமையாதது.

## 33. பிரபந்த தீபிகை

பாட்டியல் கூறும் பிற்கால நூல்களுள் ஒன்று பிரபந்த தீபிகை. இந்நூல் மற்ற பாட்டியல் நூல்களைப் போலவே பத்துப் பொருத்தங்களைக் கூறுகின்றது. 97 சிற்றிலக்கிய வகை பற்றிப் பேசுகின்றது.

இந்நூல் முழுமையும் வெளியிடப்படவில்லை. 26 செய்யுள் மட்டுமே 'செந்தமிழ்' 17-ஆம் தொகுதியில் வெளிவந்தன. இவை ஆசிரிய விருத்தங்கள்.

இந்நூலை இயற்றியவர் பாப்புவையர் என்ற முத்துவேங்கட சுப்பையர். இவர் சோழிய வகுப்பினர்; வேம்பத்தூரினர். கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டினர்.

## 34. முத்து வீரியம்

ஐந்திலக்கணமும் கூறும் மிகப் பிற்கால நூல்களுள் முத்து வீரியம் ஒன்று. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

இதனை இயற்றியவர் முத்துவீர உபாத்தியாயர் என்பவர். இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த உறையூரில் வாழ்ந்தவர்; சைவர்; கம்மாள வகுப்பினர். காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு.

'உறந்தை அகத்தெழுந் தருளிய
முத்துவீர மாமுனிவன்'

எனப் பாராட்டப்பெற்றவர். வேறு செய்திகள் எதுவும் இவரைப்பற்றிக் கிடைக்கவில்லை.

இந்நூலின் ஒரு பகுதியான யாப்பதிகாரம் 1862, அக்டோபரில் அச்சிடப்பட்டது. ஐந்திலக்கணமும் கொண்ட முழு நூல் 1889-இல் அச்சாகியுள்ளது.

நூல்: இயற்றியவரின் பெயரால் இந்நூல் 'முத்துவீரியம்' என வழங்கப்படுகின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் என்னும் ஐந்து பெரும் பிரிவுகளையும், 15 இயல்களையும், 457 நூற்பாக்களையும் உடையது.

இந்நூற்பாக்களுள் பல தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங் கலம், காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப்பொருள் போன்ற வற்றிலிருந்து ஆசிரிய வசனமாக எடுத்தாளப்பெற்றவை. பொருளதிகாரத்தில் காட்டப்பெறும் உதாரணச் செய்யுள்கள் திருக்கோவையார் நூலின் பாடல்கள்.

இலக்கண அமைப்பில் இவர் புதியதோர் கொள்கையைப் பின் பற்றுகின்றார்.

நிகண்டு நூல்களில் வருவது போன்ற அமைப்பில் சில நூற் பாக்களை இயற்றியுள்ளார்.

தொகுத்து அறியும் புதிய முறைக் கொள்கை இந்நூலிலேயே முதன்முதலாகப் பின்பற்றப்பட்டுள்ளது.

இந்நூலின் உரையாசிரியர், திருப்பாற்கடல் நாதன் கவிராயர்.

## 35. சாமிநாதம்

இலக்கணத்துறையில் வழக்கிழந்து வரும் நூல்களுள் ஒன்று சாமிநாதம். இது ஐந்திலக்கணமும் கூறும் நூல். இதன் இரண்டு இயல்கள் 'தமிழ்ப் பொழிலில்' வெளிவந்துள்ளன.

'சாமி கவிராசர்' என்னும் புலவரால் இயற்றப்பட்டமையின் இந் நூல் சாமிநாதம் எனப்பட்டது. இவர் திருநெல்வேலி மாவட் டத்தைச் சார்ந்த கல்லிடைக்குறிச்சி என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரைப்பற்றிய பிற வரலாறுகள் அறியக்கூடவில்லை.

இந்நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுளைக்கொண்டு இந் நூலாசிரியர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலமாகிய கி. பி. 19-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளக் கிடக்கின்றது.

இவரது சமயம், சைவம்.

இந்நூல் ஐந்து அதிகாரங்களையும், பாயிரமும் நூன்மரபும் உள்பட 213 செய்யுள்களையும் உடையது. முன்பு வெளியிடப் பட்டுள்ள இரண்டு இயல்களிலும் 28 செய்யுள்கள் வெளிவந் துள்ளன. இந்நூல் சூத்திரங்கள் ஆசிரிய விருத்தங்களால் அமைந்தவை.

இந்நூல் நன்னூலைப் பெரிதும் அடியொற்றியுள்ளது.

தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக முழு வடிவில் வெளிவந்துள்ளது இந்நூல். இதற்குப் பதிப்பாசிரியர் டாக்டர் செ. வை. சண்முகம் உரை எழுதியிருக்கின்றார்.

இதன் நான்காவதாகிய யாப்பதிகாரம் உறுப்பு மரபு, பாவின மரபு, பிரபந்த மரபு என்னும் மூன்று பிரிவுகளையும், 27 விருத்தச் செய்யுள்களையும் உடையது. பாட்டியல் செய்திகளைக் கூறுகின்றது.

## 36. சந்திராலோகம்

சந்திராலோகம் என்பது தமிழ் மொழியில் இயற்றப்பட்ட இலக்கண நூல் அன்று. மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கண நூல். சந்திராலோகம் வடமொழியில் உள்ள அலங்கார நூல் (அணி இலக்கணம்).இதனை இயற்றிய வடமொழி ஆசிரியர் ஜயதேவன் என்பவர். அவரது காலம் கி. பி. 1200-1300. சந்திராலோகம் வடமொழியிலும் பிற்காலத்து எழுந்த நூலாதலின் 100 அணிகளைப்பற்றிப் பேசுகின்றது. சந்திராலோகத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் இருவர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டினரான விசாகப்பெருமாளையர் சந்திராலோகத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். இது வசன நடையில் அமைந்தது. எடுத்துக்காட்டுகள் மட்டும் செய்யுளாக அமைக்கப்பட்டன.

இம்மொழிபெயர்ப்பு நூல் 'அணி இலக்கண வசனம்' என வழங்கப்படுகின்றது.

மு. இராகவையங்காரின் தந்தையான முத்துசாமி ஐயங்கார் சந்திராலோகத்தை ஆசிரியப்பாவாக மொழிபெயர்த்தார். இவரும் 19-ஆம் நூற்றாண்டினரே.

## 37. குவலயானந்தம்

சந்திராலோகம் என்ற வடமொழி அலங்கார நூலுக்கு அதே மொழியில் எழுதப்பட்ட உரை நூலின் பெயர்தான், குவல

யானந்தம். இவ்வுரையை எழுதியவர் கி. பி. 1520-1593-இல் வாழ்ந்த அப்பைய தீட்சிதர்.

இவ்வுரை நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் 'மாணிக்க வாசகர்' என்னும் தமிழ் அறிஞர். இவர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

## 38. அறுவகை இலக்கணம்— ஏழாம் இலக்கணம்

பழைய தமிழ் இலக்கண நூல்களேயன்றிப் புதிய இலக்கண நூல்கள் சில இக்கால அறிஞர்களால் இயற்றப்பட்டுள்ளன. அவை பற்றிய குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம் என்னும் இரு நூல்கள் திருப்புகழ் - முருகதாச சுவாமிகள் என வழங்கப்படும் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டன.

எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்னும் ஐந்திலக் கணங்களோடு 'புலமை இலக்கணமும்' கூறுவது அறுவகை இலக்கணம் என்னும் நூல். இதன்கண் 786 நூற்பாக்கள் உள்ளன.

பண்டைய மரபைப் பின்பற்றாமல் 1. இயலிசைத் தமிழியல்பு, 2. நாடகத் தமிழியல்பு, 3. வண்ணத்தியல்பு, 4. மோனை இயல்பு, 5. எதுகை இயல்பு, 6. நாற்கவி இயல்பு, 7. பனுவல் இயல்பு என்னும் 7 பகுப்புகளைக்கொண்டுள்ள இந்நூல் இவரது புதுமை நயத்தலுக்குச் சான்றாக அமைவதோடு, முத்தமிழ் யாப்பு மொழிய வேண்டும் என்ற விருப்பத்தையும் புலப்படுத்துகின்றது.

**ஏழாம் இலக்கணம்** என்னும் நூல் அறுவகை இலக்கண நூலுக்குப் புறனடையாக அமைந்துள்ளது; 318 நூற்பாக் களைக் கொண்டது ; அறுவகை இலக்கணத்துடன் 'தவ இயல்பு' என ஒன்றும் கூறுவதால் ஏழாமிலக்கணம் எனப் பெயர் பெற்றதோ என எண்ணத் தூண்டுகின்றது.

இவ்வாசிரியர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டினர்.

## 39. வண்ணத்தியல்பு

தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்ட வண்ணம் பற்றிய நூல் இது. 100 நூற்பாக்களை உடையது. தொகை வகை இலக்கணங்களின் பின் ஒவ்வொரு 'சந்தத்தையும் தனித்தனியே விளக்குதல் இந்நூலின் சிறப்பு.

இந்நூலின் முதற்பதிப்பு 1867-ஆம் ஆண்டு முத்தமிழ் ஆராய்ச்சிக்கூடத்தினரால் வெளியிடப்பட்டது. இப்போது பேரூர் சாந்தலிங்க அடிகள் திருமடத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

## 40. பொருத்த விளக்கம்

பாட்டியலின் ஒரு பகுதியான பத்துவகைப் பொருத்தங்களையும் 91 நூற்பாக்களில் விளக்குவது இந்நூல். 1900-ஆம் ஆண்டில் நாகூரில் வாழ்ந்த மகாவித்துவான் ஸ்ரீலஸ்ரீ குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பட்டது. காரைக்காலில் கா. செ. செய்யிதிபுறாகிமோல் அச்சிடப்பட்டது.

நூலாசிரியர் இருபதுக்கு மேற்பட்ட கவிதை, வசன், இலக்கண நூல்கள் எழுதியவர்.

## 41. யாப்பொளி

யாப்பிலக்கண நூல் இது. யாப்பருங்கலக்காரிகை கூறும் இலக்கணம் சில கடினமாகவும், யுக்திவாதத்திற்கேற்ற கட்டுப்பாடுகள் இன்றியும் இருப்பதால், அவற்றுள் சில பொருளற்ற பழைய நியமங்களை நீக்கி, சில புதிய நியமங்களைப் புகுத்தி இந்நூல் இயற்றப்பட்டதென நூலின் முன்னுரை கூறுகின்றது. நூலாசிரியரே விளக்க உரையும் எழுதியுள்ளார்.

இயற்றியவர் ஆர். சீனிவாசராகவாச்சார்ய சிரோமணி அவர்கள். இது 1957-இல் திருவேங்கடவன் கீழ்த்திசைக் கலை ஆராய்ச்சிக் கழகத்தின் வெளியீடாக மலர்ந்துள்ளது.

இதன்கண் கடவுள் வாழ்த்து உட்பட 185 நூற்பாக்கள் உள.

உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்பன இதன் பகுப்புகள். இந்நூலில் தாம் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளதாக

ஆசிரியர் கூறிய போதிலும் எவ்விதப் புரட்சியும் புலப்பட வில்லை.

## 42. திருவலங்கற்றிரட்டு—பல்சந்தப் பரிமளம்

இந்நூல் பாம்பன் சுவாமிகளின் படைப்பு. இது இருபகுதிகளை உடையது. இரண்டாம் பகுதி 'பல்சந்தப் பரிமளம்' என வழங்கப் படுகின்றது.

இது பாப்பாவினம், சிதம்பரச்செய்யுட்கோவை முதலியவற்றைப் போல யாப்பு விதிகளை இலக்கிய நிலையில் உணர்த்துகின்றது.

532 செய்யுள்களை நான்கு இயலாக வகுத்துக்கொண்டு முருகன் புகழ் பாடுகின்றது.

பல சித்திரக் கவிகள் அமைந்துள்ளமை பல்சந்தப் பரிமளத்தின் தனிச்சிறப்பு.

## 43. காக்கைபாடினியம்

தொல்காப்பியரின் ஒருசாலை மாணவர் எனக் கருதப்படும் காக்கைபாடினி என்னும் பெண்பாற்புலவரால் இயற்றப்பட்டது இந்நூல்.

இது யாப்பிலக்கண நூல். உறுப்பியல், செய்யுளில், பொது வியல் என்னும் மூன்று பிரிவுகளையும், 89 நூற்பாக்களையும் உடையது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழிவந்த இந்நூலுக்கு திரு. இளங்குமரன் உரை வகுத்துள்ளார்.

## 44. இலக்கண தீபம்

இதுவரை இலக்கண ஆய்வாளர் குறிக்காத 'இலக்கண தீபம்' என்ற நூல் பற்றிய செய்தியைச் சென்னை அரசின் கீழைச் சுவடிகள் நூல் அட்டவணை குறிக்கின்றது.

இந்நூல், ஆசிரிய விருத்தப்பாவால் அமைந்தது; ஐந்திலக்கணம் கூறுவது. ஆசிரியர், காலம் முதலியனபற்றி அறியப்படவில்லை. ஓரளவு தொல்காப்பியத்தை ஒட்டிச் செல்வது இந்நூல் என அறியப்படுகிறது.

## 45. பிரபந்த மரபியல்

சிற்றிலக்கிய வகைகள்பற்றிக் கூறும் இந்நூல், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தினதாகக் கருதப்படுகின்றது.

ஆசிரியர் பெயர் முதலியன அறியப்படவில்லை. பிரபந்தங்கள் 96 என வரையறுக்கும் முதல் நூல் இதுவே.

இந்நூல் தமிழ்நாடு அரசின் கீழைச் சுவடிகள் நூல் நிலைய வெளியீடாக வந்துள்ளது.

## 46. விருத்தப்பாவியல்

டி. வீரபத்திர முதலியார் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல் பிற யாப்பிலக்கண நூல்களைப் போலன்றி, யாப்பின் ஒரு தனிக் கூற்றுக்கு இலக்கணம் வகுக்கின்றது.

வட மொழியில் வளர்ந்த விருத்த இயல்பை உணர்ந்து, தமிழ் மொழியில் வழங்கிய விருத்தச் செய்யுள்களின் தன்மைகளைக் கண்டு பயின்று வந்த வடிவமைப்புகளைப் பிரித்துக் காட்டுகின்றார் இவ்வாசிரியர். யாப்பிலக்கணத்தைப் பொறுத்த வரையில் இது ஒரு புதிய முயற்சி எனலாம். 83 செய்யுள்களைக் கொண்டது இந்நூல். காலம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

### மறைந்த இலக்கண முத்துகள்

சங்க காலத்திலும் இடைக்காலத்திலும் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூல்கள் பல வழக்கிழந்து மறைந்து போயின. தமிழகம் செய்த தவக்குறைவால் அவை இப்போது கிடைக்க வில்லை. ஆனால், அவை முன்பு வழக்கில் இருந்தன என்பதைப் பல உரைக்குறிப்புகள் கூறுகின்றன. அவை பற்றிய செய்தி கள் அறிந்தவரையில் இங்கு தரப்படுகின்றன.

**1. அகத்தியர் பாட்டியல் :**

அகத்தியர் பாட்டியல் என ஓர் இலக்கண நூல் இருந்ததாகச் சிதம்பரப்பாட்டியல் மூலம் அறிகின்றோம்.

"பாமேவு தமிழ்ப்பொதியக்
குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப்
பகர்ந்திடுவன் யானே."

என வரும் பாடல் இதனை வலியுறுத்தும். அகத்தியர் சங்க காலத்தில் வாழ்ந்தவர். இப்பாட்டியல் பிற்காலத்தது. எனவே, அவர் பெயரை வைத்து எவரோ பிற்காலத்தில் இதைப் பாடியிருக்க வேண்டும். இப்பாட்டியலின் இருநூற்பாக்கள் பன்னிரு பாட்டியலில் காணப்படுகின்றன.

**2. அணியியல் :**

அணிகளின் இலக்கணத்தைக் கூறுவது, பழமையானது; தண்டியலங்காரத்திற்கும் இந்நூலுக்கும் வேறுபாடு உண்டு. நேமிநாத உரையிலும், யாப்பருங்கல உரையிலும் இந்நூலின் நூற்பாக்கள் சில மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன.

**3. கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரம் :**

கடிய நன்னியார் என்னும் புலவரால் பாடப்பட்ட அகப்பொருள் நூல் இது. இவ்வாறு ஒரு நூல் இருந்ததென்பதை யாப்பருங்கல உரை அறிவிக்கின்றது. சில நூற்பாக்களையும் எடுத்தாண்டுள்ளது.

**4. கவிமயக்கறை :**

இப்பெயரால் ஒரு நூல் இருந்ததென்பது யாப்பருங்கல உரையால் அறியப்படுகின்றது. இந்நூலைப்பற்றி எதுவும் தெரியவில்லை.

**5. குறுவேட்டுவச் செய்யுள் :**

இது யாப்பிலக்கண நூல் என்பது மட்டும் யாப்பருங்கல விருத்தியுரையால் அறியப்படுகிறது.

**6. கையனார் யாப்பியல் :**

கையனார் என்ற புலவர் ஒரு யாப்பிலக்கண நூல் செய்தார் என யாப்பருங்கல உரைகாரரும், குணசாகரரும் கூறுகின்றனர். அந்நூலிலிருந்து சில நூற்பாக்களையும் மேற்கோள் காட்டுகின்றனர். அந்த நூல் 'கையனார் யாப்பியல்' என்னும் பெயருடையது என மயிலை சீனி வேங்கடசாமி கூறுகின்றார்.

**7. சங்க யாப்பு :**

இது யாப்பிலக்கண நூல் என அறியப்படுகின்றது. யாப்பருங்கல உரையில் இந்நூலின் சில நூற்பாக்கள் தட்டுப்படுகின்றன.

**8. செய்யுளியல் :**

தொல்காப்பியரின் செய்யுளியல் அன்று; இது வேறு யாப்பு நூல். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை - இவற்றின் உரைகளால் அறியக் கிடக்கின்றது.

**9. செய்யுள் வகைமை :**

நவநீதப்பாட்டியலால் சுட்டப்படும் ஒரு யாப்பு நூல். இந்நூலிலிருந்து 12 நூற்பாக்கள் கிடைத்திருக்கின்றன.

**10. தக்காணியம் :**

யாப்பருங்கல உரையால் குறிக்கப்படுகின்றது; யாப்பு நூலாக இருக்கலாம்.

**11. தத்தாத்திரேயப் பாட்டியல்:**

விருத்த யாப்பினால் அமைந்தது. செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் இந்நூலை உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் பாடம் கேட்டதாகத் தெரிகிறது. நூல் வெளிவரவில்லை.

**12. நக்கீரர் அடி நூல்**

**13. நக்கீரர் நாலடி நானூறு**

**14. நத்தத்தம்**

**15. நல்லாறன் மொழிவரி**

இவை நான்கும் இருந்தன என்பதை யாப்பருங்கல உரையால் அறிகின்றோம். இவை யாப்பு நூல்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றன.

**16. பண்டாரப் பாட்டியல் :**

நவநீதப் பாட்டியலின் முகவுரையால் அறியப்படுகிறது. வேறு செய்திகள் கிடைத்தில.

**17. பரிமாணனார் (யாப்பு) நூல் :**

பரிமாணனார் என்பவர் யாப்பு நூல் செய்தார் என யாப்பருங்கல உரையாசிரியரும், மயிலைநாதரும் குறிக்கின்றனர். நூலின் பெயர்கூட அறியப்படவில்லை.

**18. கலாவியல் முதலிய பல பாட்டியல்கள் :**

நவநீதப்பாட்டியலின் உரைகாரர், பல பாட்டியல் நூல்கள் இருந்தன என அவற்றின் பெயர்களைக் குறிக்கின்றார்.

அவை அவிநயனார் கலாவியல், இந்திரகாளியம், கல்லாடம், கல்லாடனார் கலாவியல், கல்லாடனார் வெண்பா, செய்யுள் வகைமை, திருப்பிரவாசியர் தூக்கியல், தொல்காப்பியர் பாட்டியல், பரணர் பாட்டியல், பொய்கையார் கலாவியல், மாமூலம், முள்ளியார் கவித்தொகை என்பன.

கலாவியல், கவித்தொகை, தூக்கியல் என்பன பாட்டியலில் வேறு பெயர்கள் என்பர். கலாவியல் என்பது 'கவி இயல்' என இருக்கவேண்டும் என எஸ். வையாபுரிப்பிள்ளை கருது கின்றார். இவை அனைத்தும் பிற்காலத்தெழுந்தவை.

**19. பல்காயம் :**

இது தொல்காப்பியத்தின் வழிநூல்; யாப்பிலக்கணம் கூறு வது; பல்காயனாரால் இயற்றப்பட்டது.

**20. பல்காப்பியம் :**

செய்யுள் இலக்கணம் கூறும் நூல். பல்காப்பியர் இயற்றியது.

**21. பல்காப்பியப் புறனடை :**

பல்காப்பியத்தின் சார்பு நூல். இதன் நூற்பா ஒன்று தொல் காப்பியம் பேராசிரியர் உரையில் காணப்படுகிறது.

**22. பனம்பாரம் :**

பனம்பாரனாரால் இயற்றப்பட்டது. நன்னூல் பாயிரச் சூத்தி ரங்களில் இரண்டைப் பனம்பாரம் என மயிலைநாதர் குறிக்கின் றார்.

**23. பன்னிருபடலம் :**

புறப்பொருள் வெண்பா மாலையின் முதல் நூல் இது. புறப் பொருள் இலக்கணத்தை விரித்துரைப்பது. உரைக்குறிப்புகளில் சில நூற்பாக்கள் தென்படுகின்றன.

**24. பாடலம் :**

பாடலனார் இயற்றியதாக யாப்பருங்கல உரை கூறுகின்றது.

**25. பாட்டியல் மரபு :**

பேராசிரியர் தமது தொல்காப்பிய உரையில் 'பாட்டியல் மரபு' என்ற நூலைக் குறிப்பிட்டு, அது 'நின்று பயனின்மை' என்ற குற்றத்தின்பாற்பட்டது எனக் கூறுகின்றார். இந்நூலின் மூன்று நூற்பாக்கள் யாப்பருங்கல உரையில் தட்டுப் படுகின்றன.

**26. பிரபந்த தீபம் :**

இப்பெயருடன் சென்னை அரசாங்கத் தொன்னூல் நிலையத்தில் ஒரு நூல் உள்ளது. இது பிரபந்த இலக்கணங்களைக் கூறுவது.

**27. பிரபந்தத் திரட்டு :**

96. வகைப் பிரபந்தங்களைக் கூறுவது.

**28. மாபுராணம், பூதபுராணம் :**

இந்நூல்கள் இடைச்சங்கத்தில் வழங்கிய இலக்கண நூல்கள் என இறையனார் களவியல் கூறுகின்றது. இது தொல்காப்பியத்திற்கு முந்து நூல் என நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார் ; மாபுராணத்தில் சில நூற்பாக்கள் கிடைத்துள்ளன. பூதபுராணச் சூத்திரம் எதுவும் கிடைக்கவில்லை.

**29. வாருணப் பாட்டியல் :**

நூல் கிடைக்கவில்லை. இதன் நூற்பாக்கள் சில உரைகளில் காணப்படுகின்றன.



# மாணிக்கம்

## இலக்கியம்

119656



## இலக்கியங்கள்

1. தமிழ் இலக்கியங்களில் ஒரு கண்ணோட்டம்
2. சங்க இலக்கியங்கள்
3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
4. காப்பிய இலக்கியங்கள்
5. சைவ, வைணவ நூல்கள்
6. சைவ சித்தாந்த நூல்கள்
7. சிற்றிலக்கியங்கள் சில

# மாணிக்கம்

செந்நிறமுள்ள மணியை மாணிக்கம் என்பர். மாணிக்கம் விலை மதிப்பற்றது.

'செம்மை' என்னும் சொல் நிறத்தை மட்டுமன்றி ஒழுக்கத்தை யும் குறிக்கும். ஒழுக்கத்தை ஊட்ட வல்லவை இலக்கிய நூல்கள். எனவே, ஒவ்வொரு இலக்கியமும் 'செம்மை' மிகுந்த மாணிக்கமாய்க் கருதப்பட்டு இப்பகுதியில் அறிமுகம் செய்யப் படுகின்றன.

'மாண்' என்னும் பகுதியிலிருந்து பிறந்தது மாணிக்கம் என்னும் சொல். 'மாண்பு' என்னும் சொல்லுக்கும் தமிழ் இலக்கியங்கட்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் மக்களின் மாண்புகளை அறிய உதவுவன இலக்கியங்கள். எனவே, மாண்பினை விளக்கும் இலக்கிய நூல்கள் மாணிக்க மாகக் கருதப்படுவது தகுதியும் பொருத்தமும் வாய்ந்த தாகும்.

நல்ல மாணிக்க மணியை அணிவதால் ஆயுள் நீடிக்கும்; மன மயக்கம் தீரும் என நூல்கள் கூறுகின்றன; மாணிக்கம் போன்ற இலக்கியங்களைப் பயின்றோர் மனமயக்கம் தீர்வர் என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

சங்ககாலம் முதற்கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை உள்ள இலக்கியங்கள் பல இப்பகுதியில் அறிமுகம் பெறு கின்றன. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியைப் பவளப் பகுதி படர்ந்துரைக்கின்றது.

## 1. தமிழ் இலக்கியங்களில் ஒரு கண்ணோட்டம்

தமிழ் இலக்கியங்கள் இறைமை நலம் பெற்றவை. இறைவன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்,

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய்த் திகழ் கின்றான்.

தமிழ் இலக்கியங்களும் அத்தன்மையனவே. அவை பண்டைக் காலத்தின் பாங்கும் புத்துலகப் பொலிவும் பெற்றுச் சீரிளமைத் திறம் குன்றாமல் திகழ்கின்றன.

காலத்திற்கேற்ற கோலம் புனைபவள் கன்னித் தமிழ்மங்கை. புதுமை நலமும் காலப்போக்கிற்கேற்ற வளர்ச்சியும் மாற்றமும் பெறுவது தமிழ் மொழியின் தனித்தன்மை. தமிழோடு தோன்றிய பண்டைப் பெருமொழிகள் பல, காலத்திற்கேற்ப தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளும் இயல்பைப் பெறாமை யால் வழக்கொழிந்து ஏட்டளவில் இடம் பெற்று ஒடுங்கின.

கன்னித்தமிழோ காலச் சூழ்நிலைக்கேற்றபடி வளைந்து கொடுத்து வளம் பெற்றுத் தழைத்தது. நாட்டின் அரசியல்-சமய-சமுதாய-பொருளாதார மாற்றங்களுக்கேற்பவும், பிற நாட்டார் தொடர்பு, சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்பவும் தமிழ் தன்னை மாற்றி அமைத்துக்கொண்டுள்ளது. இச்சிறப்பினை,

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமும்துளுவும்
உன்உதரத்து உதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

எனப் பாடுகின்றார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமிழ் மாற்றம் பெற்று வந்திருப் பதை வரலாறு உணர்த்துகின்றது. வரலாற்றுக்கும் வண்டமிழ்க்கும் நெருங்கிய தொடர்புண்டு.

இலக்கியமும் வரலாறும் இணைந்து பிணைந்த இரட்டைப் பிறவிகள் என ஜி. எம். டிராவெல்யான் என்னும் வரலாற்றறிஞர் கூறுகின்றார்.

இலக்கியத்தை நன்கு உணர வரலாறு துணை செய்கின்றது. வரலாற்றை அறிய இலக்கியங்கள் பயன்படுகின்றன. நாட்டு மக்களின் வெளிப்புறச்சூழ்நிலையை விளக்குவது, வரலாறு. அகப்பண்பை அறிவிப்பது, இலக்கியம். எனவே, தமிழக

வரலாறும், தமிழ் இலக்கியங்களும் ஒன்றோடொன்று பிணைந்தே வந்திருப்பதை வரலாறு உணர்த்துகின்றது.

சங்க காலம் எனப்படும் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் செந்தமிழ் செழிப்புற்றிருந்தது. இதனைத் தமிழ் மொழியின் பொற்காலம் எனலாம். அதன் பின்னர் களப்பிரர் ஆட்சியில் தமிழகம் சீர் குலைந்தது. தமிழ் இலக்கிய இலக்கணங்கள் வளர்ச்சி இன்றித் தேங்கிக் கிடந்தன. இதனைத் 'தமிழகத்தின் இருட்காலம்' என வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர். கி. பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்ருண்டு வரை தமிழகத்தில் பல்லவராட்சி நிலவியது. இக்காலப்பகுதியில் கலைகள் பல வளர்ந்தன. காப்பியங்கள் பல எழுந்தன. இக்காலப்பகுதியில் சமணர்களின் தமிழ்ப்பணி தலைசிறந்து நின்றது. சிறந்த பல இலக்கணங்களையும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற பேரிலக்கியங்களையும் படைத்துத் தந்த பெருமை சமணர்களுக்கே உரியது.

பல்லவர் காலத்தில் சமய வளர்ச்சி பெருகியமை வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று. சங்க காலத்தில் அரும்பு நிலையில் முகிழ்த்திருந்த சைவம், வைணவம் போன்ற சமயங்கள் பல்லவர் காலத்தில் மலர்ச்சி நிலை பெற்றன.

தேவாரம், திருவாசகம், நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் போன்ற தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாசுர நூல்கள் எழுந்தது பல்லவர் காலத்திலே என்பது மறுக்க முடியாத உண்மை. வடமொழி வளர்ந்தது; அத்துடன் செந்தமிழும் செழித்தோங்கியது. முத்தமிழும் முதன்மை பெற்றோங்கின.

கி. பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பின் உள்ள காலத்தைச் சங்கம் மருவிய காலம் எனக் குறிப்பதும் உண்டு. சங்க காலத்தில் தோன்றிய நூல்களுள் தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்னும் மூன்றைத் தவிர வேறு இலக்கியங்கள் தமிழுக்குக் கிடைக்கவில்லை. எண்ணற்ற வேறு தமிழ் நூல்களும் இருந்தன என உரைக்குறிப்புகள் கூறுகின்றன. ஆனால், தமிழர் செய்த தவக்குறைவால் அவை அனைத்தும் மறைந்தொழிந்தன.

சங்கம் மருவிய காலம் எனக் குறிக்கப்படுவது பல்லவர் காலத்தின் தொடக்கமே எனலாம். அக்காலத்தில் எழுதப்பட்ட இலக்கிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்.

சங்க காலத்தில் எழுந்த இலக்கியங்களில் அகவற்பாக்களே ஆட்சி செலுத்தி வந்தன. சங்கம் மருவிய காலத்தில் வெண்பாக்களும் உரிமைக்கொடியை உயர்த்திய நிலையைக் காண்கின்றோம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வெண்பாவின் செல்வாக்கு விரிவடைந்துள்ளது.

சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெருங்காப்பியங்கள் ஐந்தும் பல்லவர் காலத்தில்தான் எழுந்தன.

தேவாரப் பாடல்கள்
திருவாசகம்
திருக்கோவையார்
நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்
காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி
திருவிரட்டை மணிமாலை
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
திருமூலரின் திருமந்திரம்
முத்தொள்ளாயிரம்
பெருங்கதை
கிளி விருத்தம்
எலி விருத்தம்
நரி விருத்தம்
பெருங்கதை
கல்லாடம்
பெருந்தேவனார் பாரதம்
கபிலதேவர், பரண தேவர் பாடியவை
திருக்கபிலாய ஞான உலா
நந்திக்கலம்பகம்

இப்பட்டியலைக் காணும்போது மூவேந்தர் காலம் போலவே பல்லவர்கள் காலத்திலும் தமிழ் செழித்து வளர்ந்தது என்பது தடையற்ற உண்மையாகும்.

பல்லவர் காலத்தில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்ற சைவ சமய குரவர்களும், திருமங்கை யாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போன்ற வைணவச் செல்வர்களும் பெரும்பக்தி இயக்கத்தை வளர்த்தனர். பக்தியை வளர்க்கும் பாடல்கள் பல பாடிச் சமய வளர்ச்சியோடு தமிழ் வளர்ச்சிக்கும் வித்திட்டனர்.

சமணர்கள் ஊனுண்ணல், உயிர்க்கொலை புரிதல் ஆகியன தவிர்க்க வேண்டுமென வற்புறுத்தினர். அவ்வடிப்படையில் பல அற நூல்களை இயற்றினர்.

சமணரின் தமிழ்ப்பணி
இலக்கணத் தொண்டு,
இலக்கியத் தொண்டு,
அற இலக்கியத் தொண்டு,
உரை நூல் தொண்டு

என்னும் நால்வகைப் பணிகளாகப் படர்ந்தது. அதன் விளைவாகத் தமிழன்னை பல இலக்கிய இலக்கண அணிகலன்களைப் புனைந்தாள். சமணரின் தமிழ்ப்பணி இல்லாதிருக்குமானால் தமிழ் இலக்கணங்களே இல்லை என்று கூறும் அளவுக்குச் சமணர்கள் தமிழுக்கு மிகச்சிறந்த பணி ஆற்றியுள்ளனர்.

'மேருமந்தர புராணம்' போன்ற பல புராண நூல்களும், 'பிங்கலந்தை' 'திவாகரம்' போன்ற நிகண்டுகளும் இவர்களால் இயற்றப்பெற்றனவே. இவர்கள் எழுதிய நீதி நூல்களும் பல.

'சாதி வேறுபாடு இல்லை' என்னும் கருத்தை நெஞ்சுரத்தோடு அறநூல்களில் எடுத்துரைத்தவர்கள், சமணரே.

"அங்கமெலாம் நொந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராயின்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே"

என நாவுக்கரசர் முழங்கியதற்கு ஒப்ப,

"பறையன் மகன்எனினும் காட்சி உடையான்
இறைவன் எனஉணரற் பாற்று"

— அருங்கலச் செப்பு - 37

எனத் துணிந்துரைத்தவர்கள் சமணரே.

அடுத்து, சோழர் காலத்தில் தோன்றிய இலக்கிய வளர்ச்சி பெரிதும் குறிப்பிடத்தக்கது.

சோழர் காலத்தைத் தமிழிலக்கியப் பாதையின் திருப்புமையம் என்று கூறலாம்.

பல்லவர் காலத்தில் அரும்பிய விருத்தம் என்னும் வீறுயர் பா, சோழர் காலத்தில் தனிச் செங்கோல் செலுத்தியது.

தமிழகத்தில் முடியுடை மூவேந்தரின் ஆட்சி மேம்பட்டு நின்றதைப் போலவே, கவியுலகிலும் முப்பெரும் சக்கரவர்த்திகள் ஆட்சி நடத்தியது சோழர் காலத்திலே. கம்பர், ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் என்னும் முப்பெரும் புலவர்கள் தோன்றி, முறையே கம்பராமாயணம், தக்கயாகப்பரணி, கலிங்கத்துப்பரணி என்பன போன்ற அமர இலக்கியங்களைப் படைத்தனர்.

பன்னிருதிருமுறைகள் தொகுக்கப்பெற்று, சமய இலக்கியங்களின் பொற்காலமெனப் பொலிந்தது, சோழர் காலம். நம்பியாண்டார் நம்பிகள் சைவத்திருமுறைகளைத் தொகுத்தளித்தது போலவே, நாதமுனிகள் நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்து வைணவ உலகுக்கு ஈந்தார்.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுந்த குறிப்பிடத்தக்க பேரிலக்கியங்கள் கம்பராமாயாணமும் பெரியபுராணமும் ஆகும். அவ்வையும் புகழேந்தியும் தோன்றி அருந்தமிழ் பாடிய காலம்; தண்டியலங்காரம், நம்பியகப்பொருள், வீர சோழியம் போன்ற பேரிலக்கண நூல்கள் தோன்றிய காலம்; சிற்றிலக்கியங்கள் பல செந்தமிழில் பல்கிய காலம்; நிகண்டுகள், புராணங்கள், தத்துவ நூல்கள், நாடகங்கள், மெய்க்கீர்த்திகள், உரைநடை நூல்கள் எனப் பல துறை நூல்கள் விரிந்து பைந்தமிழ் நூல்கள் பல்கிய காலம்; தமிழ் நங்கை புத்தணிகள் பல புனைந்து பொலிந்த பொற்காலம் என இக்காலத்தைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

சங்ககாலத்தைப் போலவே, மன்னர்களின் மாட்சியும், மக்களின் பண்பாடும் புலவர்கள் பெருநூல்கள் இயற்றுமளவிற்கு இக்காலத்தில் உயர்ந்திருந்தன. மக்களின் நாகரிகமும், கலாச்சாரங்களும் தழைத்திருந்தன; சமய வளர்ச்சி உச்ச நிலையில் இருந்தமையால் மக்களிடையே ஒழுக்கம் நிலவியது. நாடு பல்வளங்களாலும் நிரம்பி இருந்தது. மக்கள் மன அமைதியோடு வாழ்ந்தனர். சான்றோர்கள் பலர் தோன்றி மக்களை நல்வழிகளில் ஈடுபடச் செய்தனர். மன்னர்கள் பெரும் அளவுக்குப் புலவர்களை ஆதரித்தனர். தமிழை மடியில் ஏந்தி வளர்த்தனர். இக்காரணங்களால் சோழர் காலத்தில் இலக்கியம் பெருவளர்ச்சி பெற்றோங்கியது.

காவியங்களும் புராணங்களும் பெருகியமையால் இதைக் 'காவிய புராண காலம்' எனவும், தமிழகம் பண்பாட்டில் சிறந்

திருந்தமையால் 'தமிழ்ப் பண்பாட்டின் பொற்காலம்' எனவும் வரலாற்றாசிரியர்கள் இதனைக் குறிக்கின்றனர்.

இக்காலத்தில் தமிழில் ஏற்பட்டுள்ள மூன்று முக்கியமான வளர்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை : ஒன்று, தலபுராணங்கள் ; மற்றது, சிற்றிலக்கிய வகை; மூன்றாமவை, உரையாசிரியர் பலரால் வகுக்கப்பட்ட உரை நூல்கள். இதுவரையில் இல்லாத சிற்றிலக்கிய வகை (பிரபந்தங்கள்) கள் வடமொழிக் கலப்பின் விளைவாகத் தமிழில் எழலாயின.

பரணி, உலா, கலம்பகம்: சதகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், தூது, பள்ளு, குறவஞ்சி போன்ற 96 வகைச் சிற்றிலக்கிய நூல்களும், இவற்றிற்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்களும் தோன்றியதைத் தமிழின் இடைக்காலத்தில் நிகழ்ந்த பெருவளர்ச்சி எனக் கூறலாம்.

சிற்றிலக்கியங்களில் கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, பாசவதைப் பரணி என்னும் பரணி நூல்கள் ;

நந்திக்கலம்பகம், மதுரைக்கலம்பகம், கச்சிக்கலம்பகம், திருவரங்கக்கலம்பகம் காசிக்கலம்பகம், திருவருணைக் கலம்பகம், திருவெங்கைக் கலம்பகம் போன்ற கலம்பக நூல்கள் ;

திருக்கயிலாய ஞான உலா, திருப்பூவணநாதர் உலா, மதுரைச் சொக்கநாதர் உலா, ஏகாம்பர நாதர் உலா, திருவெங்கை உலா, திருவாரூர் உலா போன்ற உலா நூல்கள்,

பொன்வண்ணத்தந்தாதி, அற்புதத்திருவந்தாதி, கைலைபாதி காளத்திபாதியந்தாதி, அபிராமியந்தாதி, அழகரந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, பழமலை அந்தாதி, திருவரங்கத்தந்தாதி, ஏகத்தாளிதழகலந்தாதி முதலிய அந்தாதி நூல்கள்,

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் போன்ற பிள்ளைத்தமிழ்கள்.

திருச்சிற்றம்பலக்கோவை, தஞ்சைவாணன்கோவை, திருவெங்கைக்கோவை, குளத்தூர்கோவை, பாண்டிக்கோவை, ஒருதுறைக்கோவை, அம்பிகாபதிக்கோவை போன்ற கோவை நூல்கள்,

முக்கூடற்பள்ளு, குருகூர்ப்பள்ளு, திருமலை முருகன் பள்ளு போன்ற பள்ளு நூல்கள்,

திருக்குற்றாலக்குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, மதுரை மீனாட்சியம்மை குறம் போன்ற குறத்திப் பாடல் நூல்கள்,

கார்மண்டல சதகம் சோழ மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தண்டலையார் சதகம், அறப்பளீசுர சதகம், குமரேச சதகம் போன்ற சதக நூல்கள்,

மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது, கச்சி ஆனந்த ருத்திரேசுரர் வண்டுவிடு தூது, உமாபதி சிவம் நெஞ்சுவிடு தூது பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது, அழகர் கிள்ளைவிடு தூது போன்ற தூது நூல்கள்

குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன.

முதன் முதலில் எழுதப்பட்ட உரை, இறையனார் களவியல் உரை. இது பல்லவர் காலத்தில் எழுந்தது. பல்லவர் காலத்தில் கால்கோள் இடப்பெற்ற உரை எழுதும் முயற்சி சோழர் காலத்தில் பெருவளர்ச்சி பெற்றது. ஆயினும், இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் உரைகாண்பது என்ற முயற்சி பெரும் அளவில் சோழர் காலத்தில்தான் தலை எடுத்தது.

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்ற பெருமக்கள் நுனித்து ஆய்ந்து எழுதிய உரைகள் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவி செய்தன. இவர்கள் உரைக்குறிப்புகள் இல்லாது போயிருக்குமானால் நாம், பல இலக்கியப் பகுதிகட்குப் பொருள் உணரவே முடியாது போயிருக்கும்.

கி. பி. பதினான்காம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தலபுராணங்கள் இயற்றும் முயற்சி தமிழில் கிளைத்தெழுந்தது. தொடக்கத்தில் எழுந்த தல புராணங்களில் குறிப்பிடத்தக்கது பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் புராணம். புராணங்களை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று, இறைவனின் பெருமை கூற எழுந்த வடமொழித் தழுவல்கள்.

விநாயக புராணம், கந்தபுராணம், பாகவத புராணம் போன்றவை இவ்வகையில் அடங்கும். மற்றொருவகை, தலங்களின் சிறப்பையே மையக் கருத்தாகக் கொண்டுரைப்பவை. கடம்பவன புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், அருணாசல புராணம் போன்றவை இவ்வகையில் அடங்கும். தலபுராணங்களை ஏராளமாகப் பாடியவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். இவர் பாடிய புராணங்கள் 22. அவற்றுள் தலபுராணங்கள் 16. பிற்காலத்தெழுந்த பேரிலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கவை நைடதம், அரிச்சந்திரபுராணம், குசேலோபாக்கியானம், வில்லிபாரதம் முதலியன.

புராண நூல்களில் பெரும்பான்மையன வடமொழித் தழுவல்களே. பெரியபுராணம் மட்டும் இதற்கு விதிவிலக்கான முதல் நூல்.

சோழர் ஆட்சியின் பிற்காலப்பகுதியில் எழுந்த சமய இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கவை 14 சித்தாந்த சாத்திர நூல்கள். மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதமும், உமாபதி சிவாச்சாரியார் நூல்களும், ஆளவந்தார். ஜீயர், பெரியவாச்சான் பிள்ளை போன்றார் உரைகளும் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

இவ்வுரைநடைகளில் வடமொழிச் செல்வாக்கின் காரணமாக 'மணிப்பிரவாள நடை' என்றொரு நடை மின்னல் போல் தோன்றியது; மின்னலைப் போலவே மறைந்தொழிந்தது.

ஐரோப்பியர் காலம் என வரலாற்றாசிரியர்கள் சுட்டும் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் தமிழ் பல மாற்றங்களுக்கு உட்பட்டது. முகம்மதியர் படை எடுப்பு, நாயக்க மன்னர்களின் ஆட்சி, பிரெஞ்சியர், ஆங்கிலேயர் போன்ற அயல் நாட்டவரின் ஆதிக்கம் போன்ற பல காரணங்களால் தமிழில் பிற மொழிச் சொற்கள் பெரும்பான்மையாக வந்து கலந்தன. இது தவிர்க்க முடியாத ஒரு நிலை. ஒரு மொழியினரோடு பிற மொழியினர் கலந்து பழகும்போது இத்தகைய மொழிக்கலப்புகளும் இனக் கலப்புகளும் ஏற்பட்டே தீரும்.

இக்காலத்தில் ஏற்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் தமிழில் தோன்றிய உரைநடை வளர்ச்சி. இதுவரை செய்யுள்களுக்கு மட்டுமே எழுதப்பட்டுவந்த உரை, தனித்து, உரைநடையாகப் பிரிந்தது இந்நூற்றாண்டின் புதுமை.

வெளிநாட்டிலிருந்து சமயப்பணி செய்வதற்காக வந்த வீரமா முனிவர், கால்டுவெல், ஜி. யு. போப், சீகன் பால்கு போன்றவர் களால் தமிழில் பல வளர்ச்சிகளும், மாற்றங்களும் எழலாயின. உரைநடை வளர்ந்தது. சதுர் அகராதி முதன் முதலாகத் தொகுக்கப்பட்டது. எளிய இனிய இலக்கண உரைநடை நூல்கள் எழுதப்பட்டன. 'ஒப்பாய்வு' என்னும் புதுமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. மேனாட்டு மரபுகளும், உத்திகளும் தமிழில் பின்பற்றப்பட்டன. அதன் விளைவாக நாவல்களும் சிறுகதைகளும் எழுந்தன. நாடக நூல்கள் பல்கின. செய்தித் தாள்கள் தொடங்கப்பட்டன. அவை தமிழ்நடை வளர்ச்சிக்கு உதவின ; சில, கொச்சைத் தமிழ் நடையைப் புகுத்தின.

எளிய கவிதைகள் பல எழுதப்பட்டன. கடின செய்யுள் நூல் எதுவும் எழாவிடினும் கவிதை நூல்கள்—குழந்தை இலக்கியங்கள்—இந்நூற்றாண்டில் பெருமளவுக்கு எழுதப்பட்டுள்ளன.

## 2. சங்க இலக்கியங்கள்

சங்கம் என்று நாம் குறிப்பது கடைச்சங்கத்தையே. இதன் காலம் கி. மு. சில நூற்றாண்டுகள் தொடங்கி கி. பி. 2-ஆம் நூற்றாண்டு வரை என்பர்.

சங்க இலக்கியம் என்பன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகிய 9 நூல்கள் மட்டுமே ஆகும். இவை கடைச்சங்க காலத்தில் ஆய்ந்து தொகுக்கப்பட்ட தொகை நூல்கள் :

அவைபற்றிய செய்திகள் சில :

சங்க நூல்களை 'அகப்பொருள் நூல்கள், புறப்பொருள் நூல்கள் எனப் பகுத்துள்ளனர்.

சங்கத் தனிப்பாடல்கள் : தொகை—2381
அவற்றுள் அகத்திணைப் பாடல்கள்—1862
புறத்திணைப் பாடல்கள் —519
சங்கப்புலவர்களின் மொத்தத் தொகை—473
அவர்களுள் அகம் பாடியவர்—378
இவருள் பெண்பாற்புலவர்கள்—23 பேர்.
புறம் பற்றிப் பாடியவர் தொகை—95.
இவருள் பெண்பாற்புலவர்—9 பேர்.

*சங்கப்புலவர்கள்—473*
*புறத்துறை மட்டுமே பாடியவர்—95*
*அகம் மட்டுமே பாடியவர்கள்—301*
*அகமும் புறமும் பாடிய இருதிணைப்புலவர்—71*
*அகத்திணையில் கற்பியல் பாடாமல் களவியல் மட்டும் பாடியோர்—145*
*களவியல் பாடாது கற்பியல் மட்டுமே பாடியவர்—140*
*களவும் கற்பும் பாடியவர் எண்—93.*

## எட்டுத்தொகை

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டும் எட்டுத்தொகை நூல்கள் எனப்படும்.

> "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
> ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம்என்று
> இத்திறத்த எட்டுத் தொகை."

என்னும் வெண்பா இதனை உணர்த்தும்.

### 1. நற்றிணை :

எட்டுத்தொகை நூல்களுள் முதற்கண் இடம் பெற்றுள்ளது. ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டடிப் பெருமையும் உடையது. தமிழரின் அகவாழ்வை விரித்துரைப்பது. நானூறு பாடல்களைக் கொண்டது. தொகுத்தவர் பெயர் தெரியவில்லை; தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி; இந்நூற்பாக்களைப் பாடிய புலவர்கள் 175 பேர்.

காதலி சுவரில் கோடிட்டுக் காதலன் வரும் நாள்களை எண்ணும் வழக்கம், 324-ஆம் பாடலில் இடம் பெறுகிறது. பிற்காலத் தூது இலக்கியங்களுக்கு வாயிலாக நாரை, கிளி, குருகு போன்றவற்றைத் தூது விடுவதாகக் கூறப்படும் மரபு நற்றிணையில் காணப்படுகிறது.

கற்புடைய தமிழ் மகளிர், கணவன் வீடு வறுமையுற்ற போதிலும் அதனை வெளிப்படுத்தாது வாழும் இயல்பினர்; தந்தை கொடுத்த உதவியைப் பெறுவது தன் கணவன் பெருமைக்கு இழுக்கென எண்ணி மறுத்துப் பட்டினி கிடந்துண்ணும் மன உறுதி உடையர் என்ற கருத்தை இந்நூலில் காணலாம்.

### 2. குறுந்தொகை :

குறுகிய அடிகளை உடைய 400 அகவல் பாக்களை உடையது. தொகுத்தவர், உப்பூரி குடிகிழார் என்பர். தொகுப்பித்தவன், பூரிக்கோ. பாடல்களைப் பாடிய புலவர்கள் 205 பேர். கடவுள் வாழ்த்து தமிழ்க்கடவுளான முருகனுக்குரியது. கருத்துநயம் மிக்கது. குறுந்தொகைப் பாடல்கள் அனைத்தும் அகப்பொருட் சுவையை இலக்கிய நயம் தோன்ற எடுத்துரைப்பவை.

### 3. ஐங்குறுநூறு :

ஐந்து திணைகளுக்கும் தனித்தனியே பாடப்பட்ட நூறு நூறு பாடல்களைக் கொண்டுள்ளமையாலும், குறைந்த அடிகளை உடைமையாலும் ஐங்குறுநூறு எனப் பெயர் பெற்றது. அடிச் சிறுமை 3; பெருமை 6.

தொகுத்தவர், புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவன், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

இதன் ஐந்து திணைகளும் ஐந்து வெவ்வேறு புலவரால் பாடப் பட்டவை.

> "மருதம்ஓ ரம்போகி, நெய்தல்அம் மூவன்
> கருதும் குறிஞ்சி கபிலன் ;—கருதிப்
> பாலைஓத லாந்தை ; பனிமுல்லை பேயனே ;
> நூலைஓது ஐங்குறு நூறு".

என்னும் பழைய வெண்பா இதனை உணர்த்தும். ஒவ்வொரு நூறும் பப்பத்துப் பாடல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல், கரு, உரி என்ற மூன்றின் அடிப்படையில் ஐந்திணைப் பொருள் களை அழகுற விளக்குவது இந்நூல்.

இந்திர விழா, மார்கழி நீராடல், தொண்டி, கொற்கை பற்றிய பல செய்திகளை இந்நூலால் அறியலாம்.

### 4. பதிற்றுப்பத்து :

பத்து+பத்து=பதிற்றுப்பத்து. சேரமன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய புறப்பொருள் நூல்.

இதன் முற்பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

இந்நூலால் தமிழகத்தின் வளம், போர் வீரம், கொடை, படை மாண்பு முதலியவற்றை அறியலாம். பகைவரது பெண்டிரின்

கூந்தலை நறுக்கிக் கயிறாகத் திரித்து யானைகளைக் கட்டி இழுப்பதுண்டு என்ற வழக்கம் 5-ஆம் பத்தால் அறியப்படு கிறது.

2-ஆம் பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.

3-ஆம் பத்து, பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது.

4-ஆம் பத்து, களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பி யாற்றுக் காப்பியனார் பாடியது.

5-ஆம் பத்து, கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது.

6-ஆம் பத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது.

7-ஆம் பத்து, செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது.

8-ஆம் பத்து, பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் பாடியது.

9-ஆம் பத்து, குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

சேரர் வரலாறு கூறும் செந்தமிழ்க் களஞ்சியமாகத் திகழ்வது பதிற்றுப்பத்து.

## 5. பரிபாடல் :

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு வழங்கியது பரிபாடல் என்னும் யாப்பு. அப்பாவினால் இயன்ற நூல், பரிபாடல் எனவே பெயர் பெற்றது. அகப்பொருள் அமைதியும், பக்தி நெறியும் தழுவிப் பாடப்பட்ட 70 பாடல்களின் தொகுப்பே பரிபாடல் என வழங்கப்படுகின்றது.

மதுரை, திருப்பரங்குன்றம், வையை, திருமாலிருஞ்சோலை ஆகியவை பற்றிய பண்டைக்காலச் செய்திகள் பல இந்நூலால் அறியப்படுகின்றன.

புதுப்புனல் விழாவும், மார்கழி நீராட்டு விழாவும் இதில் இனிதோதப்படுகின்றன. இது தொகுக்கப்பட்ட காலம் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு என்பர்.

**6. கலித்தொகை :**

ஐந்திணைப்பொருள் நுவலும் 150 கலிப்பாடல்களின் தொகுப்பு 'கலித்தொகை' எனப் பெயர் பெற்றது. இது அகப் பொருள் நூல்.

இந்நூலின் ஐந்திணைகளையும் பாடியவர் ஐவர்.

"பெருங்கடுங்கோன் பாலை ; கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் — அருஞ்சோழன்
நல்லுருத் திரன்முல்லை ; நல்லந்துவ னெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

என்னும் வெண்பா இதனை உணர்த்தும். கலிப்பாட்டு ஒவ்வொன்றிலும் ஒரு நாடகமே அடங்கியுள்ளது.

பாலைக் கலிப்பாடல்கள் 36 ; குறிஞ்சிக்கலி 29 ; மருதம் 35; முல்லை 17 ; நெய்தல் 33 ; ஆக 150 பாடல்கள்.

தமிழகத்தின் காதல் வாழ்வை இனிது விளக்குவது கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை.

**7. அகநானூறு :**

அகப்பொருள் பற்றிக் கூறும் நானூறு பாடல்களை உடைமையின் இது 'அகநானூறு' எனப் பெயர் பெற்றது.

இது அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை என்ற பெயர்களால் வழங்கப்படும். அகவொழுக்கம் கூறும் நூல்களுள் மிகச் சிறந்தது. கருத்துச் செறிவும், காதல் விளக்கமும் மிக்கது.

13அடிச் சிறுமையும், 31 அடிப் பெருமையும் உடையது.

தொகுத்தவன் மதுரை உப்பூரி கிழான் மகன் உருத்திரசன்மன். தொகுப்பித்தோன், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

இதன் பாடல்களின் வைப்பு முறை புதுமையானது; ஒற்றை எண்பட வருவன பாலைத்திணைப் பாடல்கள்; 200 பாக்கள்.

10, 20, 30 என பத்தில் முடிவன நெய்தல் திணைப் பாடல்கள்; அவை 40.

2,8 என்னும் எண்களால் முடிவன குறிஞ்சித்திணைப்பாடல்கள் அவை 80.

6-என்னும் எண்ணால் முடிவன மருதப்பாடல்கள் ; அவை 40.

4, 14 என 4-ஆல் முடிவன முல்லைத்திணை நுவலும் பாடல்கள்; அவை 40.

இந்நூல் களியற்றியானை நிரை: 1—120 ; மணிமிடை பவளம்: 121-300 ; நித்திலக்கோவை : 301-400 என்னும் மூன்று பகுதிகளை உடையது.

பாடிய புலவர்கள் 145 பேர்.
தமிழகத்தைப்பற்றிய அரிய செய்திகள் பலவற்றை அறிய இந்நூல் உதவுகின்றது.

8. புறநானூறு :

புறப்பொருள் பற்றிய 400 பாடல்களை உடையது ; தமிழ் நாட்டின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்வது. தமிழரின் போர் முறை, வீரம், கொடை, அரசியல், வாணிகம் முதலியவற்றை அறிய உதவுவது. முடியுடைமூவேந்தர், வள்ளல்கள், புலவர்கள் பலர் வரலாறுகளைக் கூறுவது.

பாடிய புலவர்கள் 160 பேர். அரசர் சிலர் பாடிய பாடல்களும் உண்டு. அரிய கருத்துகளை உள்ளடக்கிய தமிழ்க்கலைக் களஞ்சியம் என இதனைக் கூறலாம்.

## பத்துப்பாட்டு

தமிழகத்தின் பல மன்னர்களைப்பற்றிப் பல புலவர்கள் பாடிய நீண்ட பத்துப் பாடல்களின் தொகுப்பே, பத்துப்பாட்டு.

இப்பாடல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி நூலாக மதிக்கப் பெறும் தகுதி உடையவை

அவை : திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை அழகுற அடக்கிக் கூறும் வெண்பா இது:

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.”

இவை அனைத்தும் வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப் பாக்களால் அமைந்தவை.

### 1. திருமுருகாற்றுப்படை :

முருகனது அருளைப் பெற்றானொருவன் அவ்வருள் வேண்டி நின்றான் ஒருவனை முருகன்பால் ஆற்றுப்படுத்துவதைக் கூறுதலின் இந்நூல் திருமுருகாற்றுப்படை எனப்பட்டது.

317 அடிகளைக் கொண்டது. நக்கீரரால் இயற்றப்பட்டது. குறிஞ்சி நிலத் தமிழ்க்கடவுளான முருகனது ஆறு படைவீடுகள் என்னும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன் குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, குன்றுதோறாடல் எனனும் ஆறு தலங்களையும் பற்றிப் பக்திச் சுவையுடன் விரித்துரைக்கின்றது.

முருக பக்தர்களின் தெய்வ வழிபாட்டு நூல் இது. புலவ ராற்றுப்படை எனவும் இது வழங்கப்படும்.

### 2. பொருநராற்றுப்படை ;

ஆற்றுப்படை நூல்களில் இரண்டாவது. கரிகால் வளவனிடம் பரிசில் பெற்று வந்தானொரு பொருநன் தன்முன் எதிர்ப்பட்ட பரிசிலனாகிய பொருநனை, அவ்வேந்தன்பால் ஆற்றுப்படுத் தியது.

கரிகாலனின் விருந்தோம்பல் சிறப்பு, கொடையாண்மை, படை யாண்மை,சோழநாட்டின் வளம் ஆகியவற்றை விரித்துரைப்பது. 248 அடிகளை உடையது.

பாடியவர் முடத்தாமக்கண்ணியார். பாலையாழின் சிறப்பும் பாடினியின் வருணனையும் இந்நூலின் சிறப்புப் பகுதிகள்.

### 3. சிறுபாணாற்றுப்படை :

பரிசில் பெற்ற பாணன் ஒருவன் ஆற்றெதிர்ப்பட்ட சீறியாழ்ப் பாணனை ஒய்மாநாட்டு நல்லியக்கோடன்பால் ஆற்றுப் படுத்திய செய்தியைக் கூறுவது. இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவரால் பாடப்பட்டது.

269 அடிகளைக் கொண்டது.

நல்லியக்கோடனது பண்புடைமை, மாவிலங்கை, எயிற்பட் டினம் போன்ற நகரங்களின் சிறப்பு, விறலியின் அழகு, சேர சோழ பாண்டியர்களின் தலைநகரச் சிறப்புகள் ஆகியவை கூறப்படுகின்றன.

## 4. பெரும்பாணாற்றுப்படை :

கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையன்மீது பாடப்பட்டது. பேரி யாழ்ப்பாணனை அவ்வள்ளல்பால் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. இளந்திரையனது வீரம், ஆட்சிச் சிறப்பு முதலிய வற்றை விரித்துரைப்பது. 500அடிகளை உடையது. காஞ்சிமா நகர், மாமல்லபுரம் ஆகியவற்றின் பண்டைப் பெருமைகளை இதில் காணலாம். வணிகர்கள் கழுதைமேல் மிளகுப்பொதி களை ஏற்றிச் செல்வது போன்ற அரிய செய்திகள் இதில் கூறப்படுகின்றன.

## 5. முல்லைப்பாட்டு :

தமிழில் முல்லை என்ற சொல்லுக்குக் 'கற்பு' என்ற பொருள் உண்டு.

மனைவி தன்னைப் பிரிந்து சென்ற கணவன் சொற்படி இல்லில் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்தும் கற்பொழுக்கமாகிய முல்லையைப்பற்றிக் கூறுவதால் 'முல்லைப்பாட்டு' எனப் பெயர் பெற்றது.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகரான 'நப்பூதனார்' என்பவரால் பாடப்பட்டது. 103 அடிகளை உடைய இப்பாடல் பத்துப்பாட்டினுள் மிகச்சிறியது.

## 6. மதுரைக்காஞ்சி :

காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும். மதுரையில் ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்த மாகப் பல்வேறு நிலையாமையை எடுத்துக் கூறுவது போல் அமைந்தமையால் இது இப்பெயர் பெற்றது.

இதனைப் பாடியவர் மாங்குடி மருதனார். இது 782 அடிகளை உடைய நெடும்பாடல். பத்துப்பாட்டில் இதுவே நீளமானது.

பாண்டியன் நெடுஞ்செழியனது போர்ச்செயல்கள், இருபெரு வேந்தரையும் ஐம்பெருவேந்தரையும் வென்றடிப்படுத்திய வீரம், மதுரையின் சிறப்பு போன்றவற்றை விரித்துரைக் கின்றது. ஒரு மன்னன் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துரைப்பது இந்நூலின் தனிச்சிறப்பு.

### 7. நெடுநல்வாடை :

போர்க்களப் பாசறையில் போர் மேற்கொண்டிருந்த நெடுஞ்செழியனுக்கு நல்வாடையாகவும் அவனைப் பிரிந்து வருந்தும் கோப்பெருந்தேவிக்கு நெடுவாடையாகவும் வாடை அமைந்திருந்ததால் இது 'நெடுநெல்வாடை' எனப்பட்டது.

188 அடிகளை உடைய இப்பாடலை இயற்றியவர் நக்கீரர்.

அரண்மனையின் அமைப்பு, அரசமாதேவியின் கட்டிலின் சிறப்பு, அரசன் பிரிவாற்றாமல் வருந்தும் அவள் துயர நிலை, அரசன் பாசறையில் வீரர்களுக்கு ஆறுதல் கூறுதல் ஆகியவை கூறப்படுகின்றன.

### 8. குறிஞ்சிப்பாட்டு :

261 அடிகளை உடைய இப்பாடல், தமிழரின் களவொழுக்க முறையை விரித்துக் கூறுகின்றது. பாடியவர், கபிலர்.

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்நெறி இன்னதென உணர்த்த இதனைப் பாடினார் என்பர்.

இப்பாடலுள் தலைவி தலைவனைச் சந்திக்கும் நிகழ்ச்சி, குறிஞ்சிநில வருணனை, 99 மலர்களின் பெயர்கள் ஆகியவை சிறப்புச் செய்திகள்.

'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' என்ற துறையை அடியொற்றி அமைந்தது இப்பாடல். கபிலரின் குறிஞ்சி பாடும் தனித் திறமைக்கு இப்பாடலே சான்று பகர்கின்றது.

### 9. பட்டினப்பாலை :

'பட்டினம்' என்பது அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கும்.

'பாலை' என்ற திணையின் ஒழுக்கமான பிரிவை அடிப்படையாக வைத்துப் பட்டினத்தின் பெருமைகளைக் கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

'பூம்புகாரின்' வரைபடத்தை வண்ண அழகை இந்நூலில் காணலாம். கரிகால் வளவனது சிறப்பைக் கூறும் இந்நூல் 301 அடிகளைக் கொண்டது. கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்டது. பூம்புகார்த் துறைவாயிலாக நடந்த தமிழ் வாணிகப் பெருக்கை,

"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்
கங்கை வாரியும், காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி" (187-192.)

எனக் கூறிக் கண்முன் நிறுத்துகின்றன இவ்வரிகள்.

**10. மலைபடுகடாம் :**

மலையை உவமிக்க யானையைக் கூறி அதனின்றும் பிறந்த ஓசையைக் 'கடாம்' எனக் குறித்தமையால் இப்பாடல் 'மலைபடுகடாம்' என வழங்கப்படுகிறது. இது கூத்தராற்றுப்படை எனவும் பெயர் பெறும்.

583 அடிகளால் அமைந்தது. நன்னன் சேய் நன்னனைப் புகழ்ந்து பெருங்கௌசிகனார் என்ற புலவரால் பாடப்பட்டது. அவ்வள்ளலிடம் கூத்தன் ஒருவனை ஆற்றுப்படுத்துவது போன்ற அமைப்புடையது.

மலையிடையே கேட்கும் பல்வகை ஒலிகள், வேடர் வாழ்க்கை, குறவரின் கனிவு போன்ற செய்திகள் இதில் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

## 3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

நூல்களை மேல்கணக்கு, கீழ்க்கணக்கு என இருவகையாகப் பகுக்கும் முறை தமிழில் உண்டு. கணக்கு—நூல்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும், ஐந்து அல்லது அதனினும் குறைந்த அடிகளை உடைய வெண்பா யாப்பில் விளம்புவது 'கீழ்க்கணக்கு' எனப் பன்னிரு பாட்டியல் இலக்கணம் வகுத்துரைக்கின்றது.

'அடிநிமிர் பில்லா செய்யுட் டொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி யவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும். —245

தமிழில் வெண்பா யாப்பில் எழுதப்பட்ட பதினெட்டு நூல்கள் ஒரு தொகுதியாக அமைந்துள்ளமையால் அவற்றைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்குகின்றனர்.

பதினெண்கீழ்க்கணக்கு என்ற தொடர், முதன் முதலாக, கி. பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டினது எனக் கருதப்படும் நன்னூல் மயிலைநாதர் உரையிலும், பேராசிரியர் உரையிலும் தான் காணப்படுகின்றது.

அவை :

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியொடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் வெண்பாவால் அறியப்படும்.

இதில் உள்ள 'முப்பால்' என்பதற்கு, கே. என். சிவராசப் பிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை போன்றோர் திருக்குறள் எனப் பொருள் கொள்ளாமல் அது ஒரு தனி நூல் எனக் கொள்வர். பெரும்பான்மையோர் 'முப்பால்' திருக்குறளே என்பர். இவற்றைப் பாடியோர் பதின்மூவர். இவற்றுள் அகப் பொருள் பற்றியன 6; புறம் பற்றியன 12. இவற்றைச் சங்க நூற்கள் என்பாரும் உளர் ; அது பொருந்தாது ; சங்கம் மருவிய நூல்கள் என்பதே பொருந்தும்.

### 1. நாலடியார் :

நான்கு அடிகளை உடைய 400 வெண்பாக்களான் அமைந்தது; நாலடி நானூறு, வேளாண் வேதம் எனவும் வழங்கப்படும்.

இவற்றைப் பாடியவர்கள் சமண முனிவர்கள் என்பர். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பால் களையும், 40 அதிகாரங்களையும் உடையது. தொகுத்தவர் பதுமனார். காலம். கி. பி. 7-ஆம் நூற்றாண்டு என்பர்.

### 2. நான்மணிக்கடிகை :

கடிகை—துண்டம். நான்கு மணிகளாலான துண்டங்கள் இணைந்த மாலை போன்று, ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு நீதி மணிகளைக் கொண்ட நூலாதலின் இப்பெயர் பெற்றது.

இது அறநூல் ; பாடல்கள் 104. பாடியவர் விளம்பி நாகனார்.

**3. இனியவை நாற்பது :**

இனியவை இன்னவை எனக் கூறும் 40 பாக்களை உடைய அறநூல்.

பாடியவர் பூதஞ்சேந்தனார். காலம் கி பி. 5-ஆம் நூற்றாண்டு. குறட்கருத்துகளும் சொல்லாட்சிகளும்; இதில் பயின்று வந்துள்ளன.

**4. இன்னா நாற்பது :**

இன்னா—துன்பம். துன்பம் தருவன எவை எனக் கூறும் 40 பாக்களை உடைய அறநூல். ஆசிரியர் கபிலர் என்றும் கபில தேவநாயனார் என்றும் கூறுவர். இதில் 164 இன்னாச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. பண்டைக்காலப் பழக்க வழக்கங்கள் சில இந்நூலால் அறியப்படுகின்றன.

**5. கார் நாற்பது :**

முல்லைத்திணைக்குரிய அகவொழுக்கத்தைக் கூறும் நூல் தலைவனைப் பிரிந்த தலைவி கார் காலம் வந்ததும் தலைவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த செய்தியையும், கார்கால வருணனையையும் விரித்துரைக்கின்றது.

இதனைப் பாடியவர் கண்ணன் கூத்தனார்.

**6. களவழி நாற்பது :**

ஆசிரியர், பொய்கையார். இவர் சங்ககாலப் பொய்கையார் அல்லர்.

கழுமலம் என்னுமிடத்தில் சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானுடன் போரிட்டுத் தோற்றான் சேரமான் அவனைக் குடவாயிற் கோட்டத்தில் சிறை வைத்தான். பொய்கையார் சோழனைப் புகழ்ந்து பாடித் தம் நண்பனைச் சிறைமீட்டார்.

போர்க்கள வருணனை இந்நூலின் தனிச்சிறப்பு.

**7. ஐந்திணை ஐம்பது :**

அகத்திணை ஐந்தினுக்கும், திணைக்குப் பத்துப்பாடல் வீதம் 50 பாடல்களைக் கொண்ட நூல். மாறன் பொறையனாரால் இயற்றப்பட்டது. அகப்பொருள் நுவலும் அரிய நூல் இது.

**8. ஐந்திணை எழுபது :**

திணைக்குப் பதினான்கு வீதம் 70 பாடல்களைக் கொண்ட அகப்பொருள் நூல். பாடியவர், மூவாதியார் ; சமண் சார்பினர்; கி. பி. 5-ஆம் நூற்றாண்டினர்.

**9. திணைமொழி ஐம்பது :**

ஐந்திணைக்கும் ஐம்பது பாக்களைக்கொண்ட அகப்பொருள் நூல். ஐந்திணை ஐம்பதைப் போல் இதுவும் சொல்நயம், பொருள் நயங்கள் நிறைந்தது.

பாடியவர் கண்ணன் சேந்தனார்.

**10. திணைமாலை நூற்றைம்பது :** ஐந்திணை ஒழுக்கம் பற்றி நுவலும் 153. வெண்பாக்களை உடையது.

ஆசிரியர். கணிமேதாவியார்.

**11. முப்பால் :**

திருக்குறள் எனவும், அன்று எனவும் இரு கருத்துகள் உண்டு.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பால்களையும், 1330 குறட்பாக்களையும் உடையது. இந் நூலை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் தமிழரின் தலைசிறந்த அறநூல் ; பொருள்நூல் ; இன்பநூல் ! உலகின் பல மொழிகளில், சற்றேறக்குறைய 33 மொழிகளில் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை ஒன்றே இதன் சிறப்பை உணர்த்தவல்லது. வாழ்க்கைக்கு வேண்டிய அத்துணை ஒழுக்க முறைகளும் அறக்கருத்துகளும் இதில் கூறப்படுகின்றன. எனவே, 'தமிழ்மறை' என இது வழங்கப்படுகின்றது.

> "எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்
> இல்லாத எப்பொருளும் இல்லையால்"

என இதனைப் புகழ்ந்து பாடுகின்றார், மதுரைத் தமிழ் நாகனார்.

உலகத்திற்கே பொதுவான பல கருத்துகள் இதில் கூறப்படுகின்றன. பல இனத்தவர்க்கும் பல மதத்தினர்க்கும் பொதுவான உயர்ந்த கருத்துகளைக் கூறுவதால் இதனைப் 'பொதுமறை' எனவும் வழங்குகின்றனர்.

**12. திரிகடுகம் :** சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றை யும் திரிகடுகம் என்பர் மருந்து நூலார். இம்மருந்து மாந்தரின் உடல் நோயை நீக்குவது போல, மக்களின் அறியாமை நோயைப் போக்கவல்ல மும்மூன்று கருத்துகளைக் கொண்ட வெண்பாக் களால் ஆன நூலாதலின், இது திரிகடுகம் எனப்பட்டது.

இது அறநூல். 100 வெண்பாக்களை உடையது. இயற்றி யவர், நல்லாதனார்.

**13. ஆசாரக் கோவை :**

மிகப்பழங்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய ஆசாரங்களைத் தொகுத்துரைப்பது. 100 வெண்பாக்களை உடையது. இயற்றியவர், பெருவாயின் முள்ளியார். இவர் வடமொழிப் பயிற்சி உடையவர். ஆசார வித்துகள் எட்டு என இவர் குறிக்கின்றார். வடமொழியில் இருடிகள் கூறிய ஆசாரங் களைத் தொகுத்து இவர் இந்நூலை இயற்றியதாக இந்நூலின் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது.

**14. பழமொழி :**

பண்டைக் காலத்தில் வழங்கிய பழமொழிகளை வெண்பாவுக்கு ஒன்று வீதம் அமைத்து, அதனை ஒட்டிய கருத்தை விளக்குவது. சிறந்த அறநூல். நானூறு வெண்பாக்களை உடைமையால் 'பழமொழி' நானூறு எனவும் வழங்கப்படுகிறது.

தமிழகத்தின் பண்டைச் செய்திகளை ஓரளவு அறிய உதவும் வரலாற்று நூலாகவும் இது ஆராய்ச்சியாளர்க்குப் பயன் படுகின்றது. பாடியவர், முன்றுறை அரையனார்.

**15. சிறுபஞ்சமூலம் :**

மூலம் என்பது வேர். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறு மல்லி, பெருமல்லி, நெருஞ்சி என்ற ஐந்தின் வேர்களாலான மருந்து உடல் நோய் போக்கவல்லது. அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலுமுள்ள ஐந்து கருத்துகள் மக்களின் மன நோயைப் போக்குதலின் இது இப்பெயர் பெற்றது.

இந்நூலாசிரியர், காரியாசான் ; சைனர். உயிர்க்கு உறுதி பயக்கும் கருத்துகளைக் கூறும் அறநூல் இது.

தோல் கன்றைக் காட்டிப் பசுவில் பால் கறக்கும் பழக்கம் உண்டென்பதை இவர் நூல் குறிக்கின்றது.

**16. இன்னிலை :**

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருளையும் கூறும் அறநூல். இயற்றியவர் பொய்கையார். இதன்கண் 45 வெண்பாக்கள் உள்ளன.

**17. முதுமொழிக்காஞ்சி :**

பத்துப் பத்துப் பகுதிகளைக் கொண்ட நூறு பாடல்களால் ஆன அறநூல். இதனை இயற்றியவர் கூடலூர் கிழார்.

**18. ஏலாதி :**

ஏலம், இலவங்கம், சிறுநாவல் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆறும் சேர்ந்த மருந்து ஏலாதிச் சூரணம் எனப்படும். அது உடற்பிணியைப் போக்குவதைப் போல, இந்நூற்பாடல் ஒவ்வொன்றிலும் உள்ள 6 கருத்துகள் அறியாமையைப் பிணியை அகற்ற வல்லன.

நூல் ஆசிரியர் கணிமேதாவியார். சிறந்த அறங்களை எளிய பாடல்களில் கூறுவது இந்நூலின் தனிச்சிறப்பு.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தமிழர்க்குக் கிடைத்துள்ள அறக்களஞ்சியம்.

## 4. காப்பிய இலக்கியங்கள்

தமிழில் கதை தழுவி வரும் தொடர்நிலைச்செய்யுள், காப்பியம் எனப்பட்டது. இவற்றைத் தொடக்கத்தில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப் பகுத்து அவ்வவற்றிற்குரிய இலக்கணங் களையும் வகுத்துள்ளனர்.

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள் எனப் படும்.

உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதரகாவியம், சூளாமணி, நீலகேசி என்னும் ஐந்தும் சிறுகாப்பியம் எனப் படும்.

**1. சிலப்பதிகாரம் :**

தமிழில் உள்ள காப்பியங்களுள் பழமையானது. சங்க காலத்தை ஒட்டி எழுந்தது. இளங்கோவடிகளால் இயற்றப் பட்டது.

கோவலன், கண்ணகி - இவர்தம் வரலாற்றை விரித்துரைப்பது.

மூந்நாடு, மூந்நகர் மூவேந்தர்களைப்பற்றி மூன்று காண்டங்களில் மூன்று உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட முத்தமிழ்க் காப்பியம் இது.

புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற முப்பெருங்காண்டங்களில் முப்பது காதைகள் அடங்கியுள்ள நூல்.

நாடகக் காப்பியம், இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் பெயர்கள் இதற்குண்டு.

பதிகம் நீங்கலாக 5001 ஆசிரிய அடிகளைக் கொண்டது. ஒவ்வொரு காதையின் இறுதியிலும் வெண்பாக்கள் உள்ளன.

இது சமணமதக் காப்பியம். உலகக் காப்பியங்களோடு உடன் வைத்து எண்ணத்தகும் நூல், சிலப்பதிகாரம். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தைய தமிழகத்தைக் காண வேண்டுமானால் சிலப்பதிகாரத்தைப் புரட்டினால் போதும்.

தமிழகத்தின் தலைநகர்கள், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, சமூகப் பழக்கவழக்கங்கள், மரபுகள், அரசியல் அமைப்பு, போர் முறை, நீதி, வாணிகப் பெருக்கம் போன்ற பலப்பல செய்திகளைக்கொண்ட காப்பியக் களஞ்சியம் இது.

1. 'ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்'
2. 'அறம் பிழைத்த மன்னர்களை அறக்கடவுளே ஒறுக்கும்'
3. 'கற்புடைய மகளிரைச் சான்றோரும் ஏத்துவர்.'

என்ற மூன்று கருத்துகளை மையமாக வைத்துப் பின்னப்பட்ட காவியம், சிலம்பு.

சிலம்பைப் பாடுபொருளாகக் கொண்ட நூலாதலின், சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம் எனப்பட்டது.

சிலப்பதிகாரத்தைக் கண்டுபிடித்துச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர். தொடக்க காலத்தில் இந்நூல் பிழைபடப் பதிக்கப்பட்டிருந்தது. 'சிறப்பதிகாரம்' என இதனைத் தவறாகக் குறிப்பிட்டு வந்த காலமும் உண்டு.

தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றைக் கண்டறிந்து ஆய்ந்து பதிப்பித்த ஐயரவர்கட்குத் தமிழகம் நன்றிக்கடன் பூண்டுள்ளது.

**2. மணிமேகலை :**

சிலப்பதிகாரத்தோடுஒருங்கு வைத்தெண்ணப்பட்டு, 'இரட்டைக் காப்பியங்கள்' என வழங்கப்படும் தகுதி பெற்றது, மணி மேகலைக்காப்பியம்.

கோவலன் - மாதவி மகள் மணிமேகலையின் வரலாறு கூறுதலின் இது மணிமேகலை எனப்பட்டது. இது பௌத்த மதக் காப்பியம்.

இதனை இயற்றியவர், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவர் இளங்கோவடிகளுக்குச் சமகாலப் புலவர்.

பெருங்காப்பிய வரிசையில் வைக்கப்பட்டிருப்பினும் பெருங் காப்பிய இலக்கணம் முழுவதையும் மணிமேகலை பெறவில்லை. சிலப்பதிகாரத்திலும் வீடுபேற்றுப் பகுதி இல்லை. எனவே, மணிமேகலையையும் சேர்த்து 'மணிமே கலைமேல் உரைப் பொருள் முற்றிய சிலப்பதி காரம்' என வழங்குகின்றனர்.

இந்நூலில் காண்டம் போன்ற பிரிவுகள் இல்லை. 30 காதைகள் மட்டுமே உள்ளன.

சங்க கால நூல்களுக்கும் அவற்றிற்குப் பின் வந்த நூல் களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாகச் சிலப்பதிகாரமும் மணி மேகலையும் அமைந்துள்ளன.

**3. சீவகசிந்தாமணி :**

சமணரின் சிறப்புப்பெற்ற பெருங்காப்பியம் இது. திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட இந்நூல் சீவகன் என்ற இளவரசன் வரலாற்றை விரித்துரைப்பது. 'சிந்தாமணி' எனச் சீவகன் புனைந்துரைக்கப்படுவதாலும் நூலின் சிறப்பினாலும் இப் பெயர் பெற்றது.

சீவகனைப்பற்றிய செய்திகள் அனைத்தும் மணவினைகளோடு தொடர்புபடுத்திக் கூறப்படுவதால் 'மணநூல்' எனவும் பெயர் பெறும்.

இந்நூல் நாமகள் இலம்பகம் முதல் முத்தி இலம்பகம் முடிய 13 இலம்பகங்களையும், 3145 செய்யுள்களையும் உடையது.

தமிழினிமையும் இலக்கியச் சுவை நலமும் கற்பனை வளமும் வாய்க்த இக்காப்பியம் பல உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**வளையாபதி**

இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. உரையாசிரியர்களின் உரை நூல்களிலும், புறத்திரட்டு போன்ற நூல்களிலும் காணப் படும் 72 பாக்களே கிடைத்துள்ளன. ஆசிரியர் பெயர் தெரிய வில்லை.

வைசிய புராணம் 35-ஆம் சருக்கத்தில் வளையாபதி கதை வருகிறது.

**குண்டலகேசி :**

காப்பியத்தின் தலைவி, குண்டலகேசி. எனவே, நூலும் அப் பெயர் பெற்றது. சுருண்ட கூந்தலை உடையவள் என்பது பொருள். சமண சமயத்தின் எதிர்ப்பு நூலாக கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் நாதகுத்தனார் என்னும் புலவரால் இயற்றப் பட்டது.

விருத்தப்பாவால் அமைந்த இந்நூல் காப்பியமாக மட்டுமன்றித் தருக்க நூலாகவும் அமைந்துள்ளது. நூல் முழுவதும் கிடைக்க வில்லை. 224 பாடல்களே கிடைத்துள்ளன.

வடநாட்டில் புத்தர் வாழ்ந்திருந்த காலத்துப் பெண்பால் துறவி குண்டலகேசி. இவள் வரலாறு தேரிகதை, தம்மபாதா, நீலகேசி உரை போன்றவற்றால் அறியப்படுகிறது.

இராசகிருக நாட்டு அமைச்சருக்கு மகள் பத்திரை, கள்வன் ஒருவனைக் காதலித்து, அவனைக் கொலைத் தண்டனையி லிருந்து மீட்டு மணக்கிறாள். ஆயினும், அவர்கள் வாழ்வு சிறக்கவில்லை. தன்னைக் கொலை செய்ய முயன்ற அவனையே தான் கொன்றுவிட்டு, உலக வாழ்வில் வெறுப்புற்றுச் சமணத் துறவியாகின்றாள். சமண் சமயக் கொள்கைப்படி கூந்தல் களையப்பட்டது. பின்னர் வளர்ந்து வளைந்து சுருண்டமையால் குண்டலகேசி எனப்பட்டாள்.

பலரிடமும் சமயவாதம் புரிந்து, இறுதியில் சாரி புத்தரிடம் தோற்றுப் பௌத்த மதத்தைத் தழுவுகின்றாள். இது குண்டல கேசியின் வரலாறு.

**அருங்கலச் செப்பு :**

அரிய நீதிகளைக் கூறும் அறநூல். பெறுதற்கரிய மணிக்கலம் பெய்த 'பணிப்பெட்டகம்' என அடியார்க்கு நல்லார் இதற்குப் பொருள் கூறுகின்றார். 180 குறட்பாக்களைக் கொண்ட இந் நூல் சமண சாவக நோன்பிகளின் ஒழுக்க நெறிகளை வரை யறுத்துணர்த்துகிறது.

தீபங்குடி அருங்கலான் வயத்தர் என்னும் சமணரால் இயற்றப் பட்டது. காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. வடமொழி இரத்தின காண்டகத்தின் மொழிபெயர்ப்பு எனக் கருதப்படு கிறது.

## ஐஞ்சிறுகாப்பியம்

**1. உதயணகுமார காவியம் :** வத்ச நாட்டை ஆண்ட உதயணன் வரலாற்றைக் கூறுவது. 6 காண்டங்களையும், 369 விருத்தப்பாக்களையும் உடையது. இயற்றியவர் கந்தியார் என்னும் சமணப் பெண்துறவி. இவர் காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு. 'காவியம்' என்னும் சொல்லுக்கு ஏற்ற தகுதி இந்நூலுக்கு இல்லை.

**2. நாககுமார காவியம் :** இதுவும் ஒரு கந்தியார் தந்த நூல். நாக பஞ்சமி கதையை அடியொற்றி முழுக்க முழுக்கப் போக இன்பத்தையே கூறும் நூல். காவியத்தலைவன் 519 பெண் களை மணக்கிறான். 5 சருக்கங்களும், 170 விருத்தங்களும் இதில் உள்ளன. காலம் : கி. பி. 16-ஆம் நூற்றாண்டு என்பர். 1978-இல் மு. சண்முகம் பிள்ளை இதனைப் பதிப்பித்தார்.

**3. யசோதர காவியம் :** கொலை தீயது; உயிர்ப்பலி கொடிது என்பதைப் பாடுபொருளாகக் கொண்ட நூல். 5. சருக்கங் களையும், 320 பாக்களையும் கொண்டது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டைய நூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. வட மொழி உத்தர புராண நூலின் தழுவல் எனினும், எளிய நடை, நயமான செய்யுள்கள்.

புட்ப தந்தர் இயற்றிய நூலின் தமிழாக்கம் என்றும், இயற்றி யவர் வெண்ணாவலுடையார் வேள் என்றும் கூறுவாரும் உளர்.

**4. சூளாமணி :** தமிழில் உள்ள சிறந்த காப்பியங்களுள் ஒன்று. இயற்றியவர், தோலாமொழித் தேவர். ஆருகத மாபுராணத்தைத் தழுவியது சூளாமணி நூல். இதன் கதை யமைப்பு பாகவத புராணத்தை அடியொற்றியுள்ளது. விசய திவிட்டர்கள் கண்ணனையும் பலதேவனையும் போல் செயல் படுகின்றனர். இவர்கள் வரலாற்றை விரித்துரைப்பது இந் நூலின் கதை. 'உலகின் முடிக்கோர் சூளாமணியாயினான்' எனக் காப்பியத் தலைவன் சிறப்பிக்கப்பட்டமையின் இது சூளாமணி எனப் பெயர் பெற்றது.

12 சருக்கங்களும், 2131 விருத்தங்களும் இந்நூலை அலங்கரிக் கின்றன.

**5. நீலகேசி :** ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 10 சருக்கங் களையும், 894 செய்யுள்களையும் கொண்ட இந்நூல், குண்டல கேசிக்கு எதிராக இயற்றப்பட்ட சமண நூல். இதன் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டென்பர்.

இக்காவியத்தின் தலைவி, நீலி. பழையனூரில் பேயுருவில் வாழ்ந்தவள். சமண முனிவர் ஒருவரின் அருளால் பேயுரு நீங்கிச் சமண மதத்தைப் பரப்பியவள்.

**பெருங்கதை :** உதயணன் வரலாறு கூறும் பெருநூல். 'கொங்குவேள் மாக்கதை' எனவும் வழங்கப்படும். இயற்றியவர் கொங்குவேளிர்.

இந்நூல் ஆசிரியப்பாவால் இயன்றது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆசிரியப்பாவில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையை இதில் காணலாம்.

பைசாச மொழில் குணாட்டியர் இயற்றிய பிருகத் கதையை வடமொழியில் துர்விநீதன் என்னும் மன்னன் மொழிபெயர்த் தான். அதனைத் தழுவிக் 'கொங்குவேளிர்' பெருங்கதையை இயற்றினார் என்ப. துர்விநீதன் காலம் கி. பி. 6-ஆம் நூற் றாண்டு. எனவே, பெருங்கதையின் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு எனலாம்.

இந்நூலின் முதலும் முடிவும் கிடைக்கவில்லை. சமணக் கருத்துகளும் தத்துவங்களும் இதில் மிகுதியாய் உள்ளன.

**முத்தொள்ளாயிரம் :** ஒவ்வொருவருக்கும் தொள்ளாயிரம் பாடல்கள் வீதம் சேர சோழ பாண்டியர்கள் ஒவ்வொருவரைப்

பற்றிப் பாடப்பட்ட வெண்பா நூல், முத்தொள்ளாயிரம்; கற்பனை வளமும் இலக்கியச் சுவையும் கொண்ட இனிமை மிகுந்த நூல். தமிழர் வாழ்வில் மேற்கொண்ட காதலையும் வீரத்தையும் பற்றிக் கூறுவது.

இதன் காலம், கி. பி. 9-ஆம் நூற்றாண்டென்பது எஸ். வையா புரிப்பிள்ளை அவர்களின் கருத்து.

**பாரத வெண்பா :** பாரதக்கதையை வெண்பா யாப்பில் கூறுவது இந்நூல். இதனைப் பாடியவர் பெருந்தேவனார். இவர் மூன்றாம் நந்திவர்மன் காலமான கி. பி. 9-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்தவர். இந்நூல் முழுமையாகக் கிடைக்க வில்லை.

**திருக்கைலாய ஞான உலா :** தமிழில் தோன்றிய உலா நூல் களுள் முதலில் தோன்றியது திருக்கைலாய ஞான உலா. இயற்றியவர், சேரமான் பெருமாள் நாயனார். இவரது காலம், கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதி என்பர். இது 'ஆதியுலா' எனவும் பெயர் பெறும்.

**நந்திக் கலம்பகம் :** கலம்பக நூல்களுள் முதன் முதல் எழுந்த நூல் இது. மூன்றாம் நந்திவர்மன்மீது பாடப்பட்டது. அவனது வென்றி, போர்த்திறம், வள்ளன்மை ஆகியவற்றைப் புனைந் துரைப்பது. ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இந்நூலை நந்திவர்மனே நேரில் கேட்டு மகிழ்ந்தான் எனவும், அதில் 'அறம்' வைத்துப் பாடப்பட்டிருத்தலால் அவன் உயிர் துறக்க நேர்ந்தது எனவும் கதை வழங்கப்படுகின்றது.

**கம்பராமாயணம் :** கம்பரால் இயற்றப்பட்ட தமிழ் இதிகாச நூல். வடமொழியில் வான்மீகியால் இயற்றப்பட்ட இராமாயணத்தைத் தழுவியது.

இவரது காலம் கி பி. 9-ஆம் நூற்றாண்டு எனவும், கி. பி. 12- ஆம் நூற்றாண்டு எனவும் கூறுவர்.

தமிழ் இலக்கியங்களின் காப்பிய வளர்ச்சி கம்பன் படைப் பாகிய இராமகாதையில் உச்சநிலையை அடைவதைக் காண லாம். காப்பியங்களின் முடிமணியாகத் திகழ்வது, கம்ப ராமாயணம்.

சொல்லடுக்கும், பொருள் நயமும், கற்பனை வளமும், காவிய இன்பமும் நிறைந்த கம்பராமாயணத்தை விஞ்சும் நூல் தமிழில் இல்லை.

வடமொழிக்குக் காளிதாசனின் சாகுந்தலம்-ஆங்கில மொழிக்கு ஷேக்ஸ்பியர் நூல்கள் ; தமிழுக்குக் கம்பராமாயணம்.

இந்நூல் 7 காண்டங்களையும் பன்னீராயிரம் பாடல்களையும் கொண்டது. படிக்கப்படிக்கத் திகட்டாத தேன்சுவைப் பெட்டகம்.

**வில்லிபாரதம் :** வடமொழி வியாச பாரதத்தைத் தமிழில் பாடியவர் சிலர். அவர்களுள் வில்லிபுத்தூரார் பாடிய பாரதம் மிகச்சிறப்புடையது. இவர் வடமொழி பாரதத்தின் பத்துப் பருவங்களைத் தமிழில் பாடினார்.

பலவகைச் சந்தங்களும், சொல்லணி பொருளணிகளும் பயிலும் காப்பியம் இது. வடசொற்கள் ஏராளமாக இதில் இடம் பெறுகின்றன.

இவரது காலம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு.

**நளவெண்பா :** நளனது கதையை விரித்துரைப்பது. வெண் பாக்களால் இயன்றது. சொற்சுவை பொருட்சுவை மிகுந்தது. புகழேந்திப்புலவரால் பாடப்பட்டது. காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டென்பர்.

**நைடதம் :** இது நளவெண்பாவிற்கு வழிநூல். அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்டது. நளனது காதையை விருத்தப் பாக்களால் விரிவாகக் கூறும் காப்பியம் இது. காலம், கி. பி. 16-ஆம் நூற்றாண்டு.

**கந்தபுராணம் :** தேவர்கள், முனிவர்கள் பற்றிய கதைகளைக் கூறும் புராண நூல்களுள் பெருங்காப்பியம் போன்ற அமைப்பை உடைய நூல், கந்தபுராணம். இது, 'சிவசங்கர சங்கிதை' என்னும் வடநூலைத் தழுவியது. ஆறுமுகனது பிறப்பு, சூரனை அழித்தமை, வள்ளி-தேவயானை திருமணம் ஆகியவற்றை விரித்துரைக்கின்றது. 10346 செய்யுள்களையும் ஆறு காண்டங்களையும் கொண்டது.

இயற்றியவர், கச்சியப்ப சிவாச்சாரியார். தமிழகத்தில் மட்டு மன்றி யாழ்ப்பாணத்திலும் உள்ள மக்களால் இது விரும்பிப் பயிலப்படுகின்றது.

**திருவிளையாடல் புராணம் :** சிவபெருமான் அடியார் பொருட்டு மதுரையில் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைக் கூறுவது. சோழப்பேரரசின் இறுதிக்காலத்தில் இயற்றப்பட்டது. திருவிளையாடற்புராணம் பாடியவர் இருவர். ஒருவர்,

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் பாடிய பெரும்பற்றப்புலியூர் நம்பி. மற்றவர், பரஞ்சோதி முனிவர்.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலே மிகச்சிறந்தது என மதிக்கப்படுகிறது. இது வடமொழி ஹாலாஸ்ய மகாத்மியத்தைத் தழுவியது.

**அரிச்சந்திர புராணம் :** அரிச்சந்திரனது வரலாற்றைக் காவிய நயம் பொருந்த 1225 பாக்களில் கூறும் நூல். எளிமையும் உணர்ச்சி ஓட்டமும் வாய்ந்தது.

பாண்டி நாட்டினரான வீர கவிராயரால் இயற்றப்பட்டது.

**தணிகைப் புராணம் :** கச்சியப்ப முனிவர் செய்தது. சைவர்களால் போற்றப்படுவது. திருத்தணிகையின் வரலாறு கூறுவது. சங்க நடை போன்று கடினமானது.

**அருணாசல புராணம் :** திருவண்ணாமலைத் தல வரலாறு, கார்த்திகை தீபச்சிறப்பு முதலியனபற்றி உரைப்பது ; சைவ எல்லப்ப நாவலர் பாடியது.

**காஞ்சிப் புராணம் :** கச்சியின் பெருமையைப் பேசுவது. வடமொழியினின்றும் தமிழாக்கம் செய்யப்பட்டது. முதல் காண்டம் சிவஞான முனிவராலும், இரண்டாம் காண்டம் கச்சியப்ப முனிவராலும் இயற்றப்பட்டுள்ளன.

**சீகாளத்திப் புராணம் :** கண்ணப்பர் வரலாற்றையும் காளத்தி மலைச் சிறப்பையும் கூறுவது. கருணைப்பிரகாசர், சிவப்பிரகாசர், வேலைய சுவாமிகள் மூவராலும் இயற்றப்பட்டது. காலம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு

**குற்றாலத் தலபுராணம் :** குற்றாலத் திரிகூட மலையின் சிறப்பையும் அருவியின் அழகையும் புனைந்துரைப்பது. திரிகூட ராசப்பக் கவிராயர் பாடியது. குற்றாலநாதரின் பெருமை பத்திச் சுவையுடன் இந்நூலில் கூறப்படுகிறது.

**சீறாப்புராணம் :** நபிகள் நாயகத்தின் வரலாறு கூறுவது. உமறுப்புலவரால் இயற்றப்பட்டது. இஸ்லாமியத் தமிழிலக்கியங்களுள் முதன்மையானது. காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

**தேம்பாவணி :** கிறித்துவம் தமிழுக்கு அளித்த அருங்காப்பியம் இது. ஏசுநாதர், அவர்தம் வளர்ப்புத்தந்தை சூசை

யப்பர், அவர்தம் வரலாறு கூறுவது. காவிய நலத்தில் கம்ப ராமாயணம் போன்றது. 3 காண்டங்கள், 36 படலங்கள், 3615 விருத்தப்பாக்கள் கொண்டது.

இத்தாலிய நாட்டு மதகுருவான கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி என்னும் வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது. இவரது காலம் 1680—1746. இவர் சதுரகராதி தொகுத்தவர்; குட்டித் தொல்காப்பியம் எனச் சிறப்பிக்கப்படும் தொன்னூல் விளக்கத்தை இயற்றியவர். அரிய தமிழ்ப்பணி ஆற்றியவர்.

**குசேலோபாக்கியானம்** : குசேலர் வரலாறு கூறும் பாரதத்தின் கிளைக்காவியம். வல்லூர் தேவராசப் பிள்ளையால் இயற்றப்பட்டது. பிற்கால நூல்களுள் புகழ்பெற்றது. காலம், கி.பி. 20-ஆம் நூற்றாண்டு.

**இராவண காவியம்** : இராமனுக்குக் கம்பன் காவியம் பாடியதைப் போலவே, இராவணனுக்கும் ஒரு காவியம் இருபதாம் நூற்றாண்டில் பாடப்பட்டது. இதனைப் பாடியவர், புலவர் குழந்தை.

தமிழகத்தின் மாட்சியும், தமிழினத்தின் பெருமையும் விரித்துரைக்கப்படும் பெருநூல் இது.

தமிழகக் காண்டம் முதலாக 5 காண்டங்களையும் 56 படலங்களையும், 2828 பாடல்களையும் கொண்டது இக்காவியம். தென்னகத்தின் பெருமையைத் தொன்முறை வழாமல் விரித்துரைப்பது.

## 5. பன்னிரு திருமுறை நூல்கள்

'திருமுறை' என்னும் சொல் உயரிய நூல் எனப் பொருள்படும். இச்சொல் முதன் முதலாக மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டுகளில்தான் காணப்படுகிறது.

'திருமுறை எழுதுவோர் வாசிப்போர்' (கணநாத நாயனார் புராணம்-8) எனச் சேக்கிழார் இச்சொல்லை ஆளுகின்றார். சைவ சமய நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 7 - ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 12 - ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை.

அவைபற்றிய விவரம் இங்கு தரப்படுகின்றது.

ஒன்று முதல் ஏழு வரை உள்ள திருமுறைகள், தேவார நூல்கள் எனப்படும்.

**முதல் மூன்று தேவாரத் திருமுறைகள் :**
*பாடியவர் — திருஞானசம்பந்தர்*
*காலம் — கி.பி. 7-ஆம் நூற்றாண்டு*
*பாடிய பதிகங்கள் : 384 ; பாடல்கள் 4157.*

**நான்கு, ஐந்து, ஆறு தேவாரத் திருமுறைகள் :**
*பாடியவர் — திருநாவுக்கரசர்*
*காலம் — கி.பி. 7ஆம் நூற்றாண்டு*
*பதிகங்கள் : 312 ; பாடல்கள் : 3066.*

**ஏழாம் தேவாரம் திருமுறை :**
*பாடியவர் — சுந்தரர்*
*காலம் — கி.பி. 8 - ஆம் நூற்றாண்டு*
*பதிகங்கள் : 100 ; பாடல்கள் : 1026*

**எட்டாம் திருமுறை *(திருவாசகம், திருக்கோவையார்)* :**
*பாடியவர் — மாணிக்கவாசகர்*
*காலம் — கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு*
*திருவாசகப் பாடல்கள் : 656 ; பதிகங்கள் : 51.*
*திருக்கோவையார் — 400 பாடல்கள்*

**ஒன்பதாம் திருமுறை (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு) :**
பாடியவர்கள் — திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதின்மர்.

திருவிசைப்பா+திருப்பல்லாண்டு பதிகங்கள் : 29. பாடல்கள்: 314.

காலம் — முதல் இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன், கண்டராதித்த சோழன் ஆகிய பிற்காலச் சோழ மன்னர்களின் காலம்.

**பத்தாம் திருமுறை *(திருமந்திரம்)* :**
*பாடியவர் — திருமூலர்*
*காலம் — கி.பி. 5 - ஆம் நூற்றாண்டு*
*பாடல்கள் : 3081*

**பதினோராம் திருமுறை *(40நூல்கள்)* :**
*அடங்கியுள்ள பாடல்கள் : 1388.*

அவை :

1. திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம்
   பாடியவர் — ஆலவாய் அவிர்சடைக் கடவுள்
2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
3. திருவிரட்டை மணிமாலை
4. அற்புதத் திருவந்தாதி
   பாடியவர் — காரைக்காலம்மையார்.
   காலம் — கி.பி. 5-ஆம் நூற்றாண்டு
5. க்ஷேத்திரத் திருவெண்பா :
   பாடியவர் — ஐயடிகள் காடவர் கோன்
   காலம் — கி.பி. 6-ஆம் நூற்றாண்டு
6. பொன்வண்ணத்தந்தாதி
7. திருவாரூர் மும்மணிக்கோவை
8. திருக்கயிலாய ஞான உலா.
   பாடியவர் — சேரமான் பெருமாள் நாயனார்
   காலம்—கி.பி. 8-ஆம் நூற்றாண்டு
9. கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி
10. திருவீங்கோய் மலை எழுபது.
11. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
12. திருவெழுகூற்றிருக்கை
13. பெருந்தேவபாணி
14. கோபப்பிரசாதம்
15. கார் எட்டு
16. போற்றித் திருக்கலிவெண்பா
17. திருமுருகாற்றுப்படை
18. திருக்கண்ணப்பதேவர் திருமறம்
   பாடியவர் — நக்கிரதேவ நாயனார்
   காலம் — கி.பி.6-ஆம் நூற்றாண்டு
19. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்
   பாடியவர் — கல்லாட தேவ நாயனார்
   காலம் — கி.பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டு
20. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை
21. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

22. சிவபெருமான் திருவந்தாதி
பாடியவர் — கபிலதேவ நாயனார்
காலம் — கி.பி. 8-ஆம் நூற்றாண்டு
23. சிவபெருமான் திருவந்தாதி
பாடியவர் — பரணதேவ நாயனார்
காலம் — கி.பி. 8-ஆம் நூற்றாண்டு
24. சிவபெருமான் திருமும்மணிக்கோவை
பாடியவர் — இளம்பெருமானடிகள்
காலம் — கி.பி. 8-ஆம் நூற்றாண்டு
25. மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை
பாடியவர் — அதிரா அடிகள்
காலம் — கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பின்
26. கோயில் நான்மணிமாலை
27. திருக்கழுமல மும்மணிக்கோவை
28. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
29. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
30. திருவொற்றியூர் ஒருபா ஒருபது
பாடியவர் — பட்டினத்துப் பிள்ளையார்
காலம் — கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

31. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
32. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
33. திருத்தொண்டர் திருவந்தாதி
34. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
35. திருச்சண்பை விருத்தம்
36. திருமும்மணிக்கோவை
37. திருவுலாமாலை
38. திருக்கலம்பகம்
39. திருத்தொகை
40. திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை
பாடியவர் — நம்பியாண்டார் நம்பி
காலம் — கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

**பன்னிரண்டாம் திருமுறை :**
பெரியபுராணம்
பாடியவர் — சேக்கிழார்

காலம் — கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
பாடல்கள் — 4286.

இவை சைவ சமயத்தவரின் துதி நூல்கள்.

## 6. சைவ சித்தாந்த நூல்கள்

சைவ சமய தத்துவங்களையும் கோட்பாடுகளையும் விளக்கும் நூல்கள், சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும். அவை பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை பற்றி விளக்குவன.

பசுவாகிய ஆன்மா, பதியாகிய இறைவனை அடைய விரும்பும் போது மாயையாகிய பாசம் சேர ஒட்டாமல் தடுக்கும் இயல்பு பற்றிக் கூறுவது இம்முப்பொருட் கோட்பாடு.

இக்கொள்கை விளக்கம் சைவ சித்தாந்தக் கோட்பாடு எனப் படும். இவை பற்றிக் கூறும் சாத்திரங்கள் 14. அவை 'மெய் கண்ட நூல்கள்' எனவும் வழங்கும்.

இவற்றை,

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தவருள்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று."

என்னும் வெண்பா உணர்த்தும்.

**1. திருவுந்தியார் :** திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் இயற்றியது. உந்தீ பறத்தல் மகளிர் விளையாடல்களுள் ஒன்று. ஒவ்வொரு பாடலிலும் 'உந்தீபற' என வருவதால் இப்பெயர் பெற்றது. ஆர் - சிறப்புப்பெயர் விகுதி.

இது சிவஞானபோதத்திற்கு முற்பட்டது. 45 தாழிசைகளை உடையது. பதி, பசு, பாசம் இவற்றின் இலக்கணம், பயனடையும் வழி ஆகியவற்றைக் கூறுவது. காலம், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

**2. திருக்களிற்றுப்படியார் :** தில்லை நடராசர் கோயிலில் உள்ள திருக்களிற்றுப்படியில் வைத்துப் பாடப்பட்டமையின் இப்பெயர் பெற்றது.

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் பாடியது. 100 வெண் பாக்கள். திருவுந்தியாரின் வழிநூல் என்பர். காலம், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

**3. சிவஞானபோதம் :** சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள்ளும் தலைமையும் பெருமையும் சான்ற உயரிய ஞான நூல். சைவ ஆகமத்தின் ஒரு பகுதியான ஞானபாதம் பற்றியது.

மெய்கண்டரால் இயற்றப்பட்டது. செய்யுட்பகுதி 12 நூற் பாக்களையும், இவற்றை விளக்கும் 81 வெண்பாக்களையும் உடையது. உரைநடைப்பகுதி மேற்கோள்களையும், ஏதுக் களையும் கொண்டது.

இது தமிழில் தோன்றிய முதல் நூல். முப்பொருள் உண்மை, வீடுபேற்றிற்குரிய ஞான நெறி, அதில் நின்றார் எய்தும் நன்மை ஆகிய கருத்துகளைத் தருக்க முறையில் ஆணித்தர மாக எடுத்துரைக்கின்றது.

காலம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. சிவஞான முனிவர் இதற்கு எழுதிய பேருரை 'மாபாடியம்' என வழங்கப்படுகின்றது.

**4. சிவஞானசித்தியார் :** சிவஞான போதத்தின் வழிநூல். பரபக்கம், சுபக்கம் என்ற இருபகுதிகள் கொண்டது. பரபக்கம் சிவஞான போதத்தின் அவையடக்கச் செய்யுளை அடியொற்றி யது. சுபக்கம் சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களின் பொருளை 12 அதிகாரங்களில் விரித்துரைப்பது.

இயற்றியவர், அருள்நந்தி சிவாச்சாரியார். இவர் மெய்கண்டா ருக்கு மாணவர். திருத்துறையூரில் வாழ்ந்த அந்தணப்பெரு மகனார்.

புறச்சமயங்களைக் கடிந்து மறுத்துரைக்கும் பகுதிகள் இந் நூலின் தனிச்சிறப்பு.

**5. இருபா இருபஃது :** அருள்நந்தி சிவாச்சாரியார் தம் ஆசிரி யர் மெய்கண்ட தேவரை முன்னிலைப்படுத்தி வினாவ, அதற்கு அவர் விடை கூறுவது போன்ற அமைப்பில், வெண்பா, அகவற்பா இரண்டும் மாறி மாறி வரும்படி இயற்றப்பட்டுள்ளது. ஆன்மா, ஆணவ மலம், இருவினை இயல்புகள், இறைவன் இயல்பு ஆகியவற்றைக் கூறுவது. காலம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

**6. உண்மை விளக்கம் :** மெய்கண்டாரின் மற்றொரு மாணவரான திருவதிகை மனவாசங் கடந்தார் என்பவரால் இயற்றப் பட்டது. வினாவிடையாக அமைந்தது.

**7. சிவப்பிரகாசம் :** சிவஞான போதத்தின் சார்பு நூல். இதனை ஓதுவார் அறிவினில் சிவம் பிரகாசித்தலால் இப்பெயர் பெற்றது. 100 விருத்தங்களை உடையது. ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார். காலம், கி.பி. 14-ஆம்' நூற்றாண்டு.

பல சமயங்களின் முத்தி பேதங்களைக் கூறி, அவற்றினும் மேம்பட்டது சித்தாந்த முத்தி என இந்நூல் நிலைநாட்டுகின்றது.

**8. திருவருட்பயன் :** பத்து அதிகாரங்களையும் 100 பாடல் களையும் கொண்டது. இறை இயல்பு - உயிர் - மும்மலம்-அருள் நிலைகளை விளக்குவது. இதுமுதல் சங்கற்ப நிராகரணம் வரை உள்ள அனைத்து நூல்களும் உமாபதி சிவாச்சாரியா ரால் இயற்றப்பட்டனவே ஆம்.

**9. வினா வெண்பா :** தம் ஆசிரியர் மறைஞானசம்பந்தரை விளித்து வினாவும் அமைப்பில் சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவது. 13 வெண்பாக்களை உடையது.

**10. போற்றிப் பஃறொடை வெண்பா :** கலி வெண்பாவினால் அமைந்த இந்நூல் இடை இடையே, 'போற்றி போற்றி' என வருதலின் இப்பெயர் பெற்றது.

பந்த பாசங்களும், வீடுபேறும் இறைவன் திருவருளால் நிகழ்வன என்பதை விளக்குவது.

**11. கொடிக்கவி :** தில்லைக்கோவிலில் கொடி ஏறுவதற் காகப் பாடப்பட்டது. 1 கட்டளைக்கலித்துறையும் 3 வெண் பாக்களும் கொண்ட சிறிய நூல் இது.

**12. நெஞ்சு விடுதூது :** தூது இலக்கியங்களுள் முதன் முதலில் தோன்றிய நூல் இதுவே என்பர். கலிவெண்பாவால் பாடப்பட்டது. தம் ஞானாசிரியரான மறைஞான சம்பந்தரிடம் தம் நெஞ்சைத் தூது விடுவதாக அமைந்தது. அவரைச் சிவ பெருமானாகவே வைத்துப் பாடப்பெற்றது. தசாங்க அமைப்பு, இறைவன் பெருமை, மல நீக்கம் ஆகியவற்றை விரித் துரைப்பது. பின் தோன்றிய தூது நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

**13. உண்மை நெறி விளக்கம் :** 6 பாடல்களைக் கொண்டது. தத்துவ ரூபம், தத்துவக் காட்சி, தத்துவ சுத்தி, ஆன்ம வடிவம்,

ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்னும் பத்தையும் உணர்வார்க்கு சிவானுபவம் கிட்டும் என இந் நூல் கூறுகின்றது.

**14. சங்கற்ப நிராகரணம் :** பிற மதக் கொள்கைகளை மறுத் துரைப்பது எனப் பொருள்படும். அகம்-அகப்புறச் சமயங்கள் போன்றவற்றை எடுத்துக் கூறி, தர்க்க முறையில் இந்நூல் மறுத்துரைக்கின்றது. இவை 14-ம் சைவ சித்தாந்தக் கருவூலங் கள்.

**வைணவ சமய நூல்கள் :**

1. **முதல் திருவந்தாதி :** பொய்கையாழ்வார்.
2. **இரண்டாம் திருவந்தாதி :** பூதத்தாழ்வார்.
3. **மூன்றாம் திருவந்தாதி :** பேயாழ்வார்.

அந்தாதி ஒவ்வொன்றும் 100 பாடல்கள். இவர்களின் காலம் கி.பி. 6, அல்லது 8-ஆம் நூற்றாண்டு.

4. **திருச்சந்த விருத்தம்,**
5. **நான்முகன் திருவந்தாதி.**

பாடியவர் - திருமழிசையாழ்வார்

6. **திருவாசிரியம்,**
7. **திருவாய்மொழி,**
8. **திருவிருத்தம்,**
9. **பெரிய திருவந்தாதி.**

பாடியவர், நம்மாழ்வார். இவற்றை வைணவர் சதுர்மறைகளாக மதிக்கின்றனர். சைவத்துக்கு மாணிக்கவாசகர் எப்படியோ அவ்வாறே வைணவர்கள் நம்மாழ்வாரைப் போற்றுவர்.
நம்மாழ்வார் பாடியன திருவாய்மொழி என வழங்கப்படும். மற்ற ஆழ்வார்களின் பாடல்கள் திருமொழி எனப்படும். திருவாய் மொழியை, 'திராவிட வேதம்' என்பர். இவர் காலம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

10. **பெருமாள் திருமொழி**

குலசேகர ஆழ்வார். காலம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

11. **திருப்பல்லாண்டு,**
12. **பெரியாழ்வார் திருமொழி.**

பெரியாழ்வார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

13. **திருப்பாவை,**

14. நாச்சியார் **திருமொழி.**

ஆண்டாள். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டது. பாவைநோன்பு பற்றியது. மார்கழித் திங்களில் வைகறையில் வைணவர்களால் பாடப்படுவது.

15. **திருப்பள்ளி எழுச்சி** : 10 பாடல்கள்

16. **திருமாலை** : 45 பாடல்கள்

தொண்டரடிப் பொடியாழ்வார்.

காலம் - கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

17. **பெரிய திருமொழி,**

18. **திருக்குறுந்தாண்டகம்,**

19. **திருநெடுந்தாண்டகம்,**

20. **திருவெழுகூற்றிருக்கை,**

21. **சிறிய திருமடல்,**

22. **பெரிய திருமடல்.**

இவற்றைப் பாடியவர் திருமங்கையாழ்வார். இவ்வாறினையும் நம்மாழ்வாரின் நான்மறைக்கு உரிய ஆறங்கமாய் அமைத்து மகிழ்வர், வைணவர்.

இவை சொல்லினிமை, பொருணயம், அகப்பொருள் நலம் சித்திரக்கவியழகு முதலியன வாய்ந்தவை. உள்ளம் உருக்கும் தன்மையவை.

இவ்விருபத்திரண்டு நூல்களுடன் திருப்பாணாழ்வார் பாடிய **'அமலனாதி பிரான்'** என்னும் பதிகம் மதுரகவியாழ்வார் பாடிய 4 பாடல்களைக் கொண்ட **'கண்ணி நுண்சிறுத்தாம்பு'** என்னும் இரண்டையும் கூட்டி ஆழ்வார்கள் பாடிய நூல்கள் 24 என்பர்.

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தத்தைத் தொகுத்தவர், நாதமுனிகள். வைணவ உரையாசிரியர்கள் பலர், ஆழ்வார் பாசுரங்கட்கு நயவுரைகள் எழுதிப் புகழ் பெற்றுள்ளனர்.

அவர்களுள் சிலர் : பின்பழகிய பெருமாள். சீயர், ஸ்ரீபட்டர், பிள்ளை லோகார்ய சீயர் முதலியோர்.

திருவரங்கத்தமுதனார், ஸ்ரீ வேதாந்த தேசிகர், பிள்ளை லோகாச்சாரியர், பிள்ளைப்பெருமாளையங்கார் போன்றவர்கள் இயற்றிய நூல்களும் வைணவம் வளர உதவின.

## 7. சிற்றிலக்கியங்கள் சில

கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப்பின் சில புதுவகை இலக்கியங்கள் தோன்றின. அவை 96 எனப் பாட்டியல் நூல்கள் கூறிய தோடு அவற்றிற்கு இலக்கணமும் வரையறுத்தன.

அவற்றுள் சில இங்கு சுட்டப்படுகின்றன.

**1. அகப்பொருள் கோவை :**
இருவகையான முதற்பொருள், பதினான்கு கருப்பொருள், பத்து உரிப்பொருள், பன்னிரண்டு அகப்பாட்டு உறுப்புகள் ஆகியவற்றை வைத்து, களவியல், கற்பியல், வரைவியல் முதலிய வற்றைக் காட்டி, கட்டளைக்கலித்துறை யாப்பினால் நானூறு பாடல்களைப் பாடுவது அகப்பொருட்கோவை எனப்படும்.

**2. அங்க மாலை :**
ஆண்மகன் அல்லது பெண்களின் பாதாதி கேசத்தை அல்லது கேசாதி பாதத்தை வருணனை செய்து, அவ்வமைப்பு முறையி னின்றும் வழுவாமல் வெண்பா அல்லது வெண்பா விருத்தத் தினால் 30 பாடல்களால் அமையப்பெறுவது, அங்கமாலை எனப்படும்.

**3. அட்டமங்கலம் :**
அட்டமங்கலம் என்பது, பரம்பொருளை ஆசிரிய விருத்தத்தால் அந்தாதியாக அமையும்படி பாடுவது ஆகும்.

**4. ஆற்றுப்படை :**
விறலி, பாணர், கூத்தர்—இவர்களுள் ஒருவர், தமக்குப் பரி சளித்த தலைவனின் பெருமையினையும் கொடைச் சிறப்பினை யும் ஆட்சித் திறத்தினையும் தம் வழியில் எதிர்ப்பட்டோரிடம் சொல்லுதல் ஆற்றுப்படை எனப்படும். இது அகவற்பாவினுல் அமைவது.

**5. இரட்டைமணிமாலை :**
வெண்பா, கலித்துறை ஆகியவற்றால் ஆகிய இருபது பாடல் களைக் கொண்டோ, நேரிசை வெண்பா, ஆசிரிய விருத்தம் ஆகியவற்றால் ஆகிய இருபது பாடல்களைக் கொண்டோ அந்தாதியாகப் பாடுவது இரட்டைமணிமாலையாகும்.

**6. இருபாவிருபது :**
அந்தாதி அமையப் பத்து வெண்பா, பத்து அகவலால் பாடுதல் இருபாவிருபது எனப்படும்.

**7. உலாமடல் :**
தலைவன் தான் கனவில் கண்டு இன்புற்ற மங்கையின் பொருட்டாக, 'மடல் ஊர்வேன்' என்பதை உருக்கமாகப் பேசுவது, உலா மடல் ஆகும். இஃது கலிவெண்பாவில் அமையும்.

**8. உலா :**
பாட்டுடைத் தலைவன் பவனி வரும் போது, அவனை ஏழு பருவத்து மாதர்களும் கண்டு மையல் கொள்வதாகப் பாடுவது. தலைவனுடைய புகழ், கொடை, வீரம் முதலியவற்றை விரித்துரைப்பது உலா நூலின் இலக்கணம்.

தமிழில் முதலில் தோன்றிய உலா நூல், 'திருக்கயிலாய ஞான உலா. காலம், கி. பி. 8-ஆம் நூற்றாண்டு.

**9. ஊர் வெண்பா :**
ஊரின் சிறப்பைப் பத்து வெண்பாக்களில் பாடுவது, ஊர் வெண்பா எனப்படும்.

**10. எழுகூற்றிருக்கை :**
ஏழு அறைகளைக் கீறி, அவற்றில் சிறுபிள்ளைகள் முன் புறமாக வளைந்தும், சுழன்றும் விளையாடும் அழகினைக் கூறுதல் எழுகூற்றிருக்கை ஆகும்.

**11. மும்மணிக்கோவை :**
மூன்று வகை மணிகளின் முறை பொருந்திய கோவை போன்று, அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறைச் செய்யுள்கள் முப்பதினால் அந்தாதித் தொடர்பு பெற அமைப்பது மும்மணிக் கோவையாகும்.

**12. நவமணிமாலை :**
வெண்பா முதலாக வேறுபடுகின்ற பாவாலும் பாவினங்களாலும் அந்தாதித்தொடை இணைவுடன் ஒன்பது பாடல்களால் இயற்றப்படுவது, நவமணிமாலை எனப்படும்.

**13. நான்மணிமாலை :**
வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் ஆகியவற்றால் நாற்பது பாடல்களைக்கொண்டு அந்தாதியாக அமையப் பாடுவது நான்மணி மாலை.

பன்னிரு பாட்டியல், அகவலும், அகவல் விருத்தமுமாக நாற்பது பாடல்களைப் பாடுவது எனக் கூறுகிறது.

**14. பல்சந்த மாலை :**
ஒரு சந்தத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்துச் சந்தங்களில் நூறு பாடல்கள் பாடப்படுவது பல்சந்த மாலையாகும்.

**15. மெய்க்கீர்த்தி மாலை :**

அரசர்களின் கீர்த்தியை அகவற்பா கலந்த சொற்சீரடியால் பாடி வாழ்த்துவதாகும். இவை கோவில் சுவர்களில் கல்வெட்டு களாகவும், செப்புப் பட்டயங்களில் சாசனங்களாகவும் வடிக்கப் பட்டன. பிற்காலத் தமிழ்வரலாற்றுக்கு நற்றுணை புரிவன, மெய்க்கீர்த்திகளே.

**16. தாரகை மாலை :**

பெண்களின் கற்பினை அருந்ததி கற்புக்கு இணையாகச் சிறப் பித்து மொழிதல், தாரகை மாலை எனப்படும்.

**17. செருக்கள வஞ்சி :**

போரில் மாண்ட வீரரின் உடல், மற்றும் யானை, குதிரை ஆகிய வற்றின் உடலைக் காகம், கழுகு, நாய், நரி, பேய் முதலியன தின்று அக்களத்தில் ஆடுகின்ற சிறப்பினைக் கூறுதல், செருக்கள வஞ்சி எனப்படும்.

**18. பதிற்றந்தாதி :**

பத்து வெண்பா அல்லது பத்துக் கலித்துறையினால் பொருளின் சிறப்பு விளங்கும்படி அந்தாதியாகப் பாடப்படுவது, பதிற்றந் தாதி எனப்படும்.

**19. நூற்றந்தாதி :**

அந்தாதித் தொடர்புடன் வெண்பா அல்லது கலித்துறையில் நூறு பாடல்களால் பாடப்படுவது, நூற்றந்தாதி ஆகும். அந்தாதி நூல்களுள் முதன் முதல் எழுந்தது, காரைக்காலம்மையார் பாடிய அற்புதத்திருவந்தாதி. காலம், கி. பி. 5-ஆம் நூற் றாண்டு.

**20. தசாங்கம் பத்து:**

மாலை அணிந்த அரசனின் பத்து அங்கங்களையும் பத்து வெண்பாக்களின் கூறுதல் தசாங்கம் பத்து ஆகும்.

**21. நயனப்பத்து :**

கண்கள் இரண்டினையும் பத்து வெண்பாக்களில் பாடுதல் நயனப்பத்து எனப்படும்.

**22. பயோதரப் பத்து :**

பாவையரின் தனத்தினைப் பத்துப் பாடல்களில் குறிப்பாய் உணர்த்திப் பாடுதல், பயோதரப் பத்து எனப்படும்.

**23. பாதாதி கேசம்:**

அடி முதல் முடிவரை கலிவெண்பாவால் வருணித்துப் பாடுதல், பாதாதி கேசம் ஆகும்.

**24. கேசாதி பாதம் :**

கலிவெண்பாவால் முடிமுதல் அடிவரை வருணித்துப் பாடுதல், கேசாதி பாதம் எனப்படும்.

**25. தூது :**

ஆண், பெண் யாவரேனும், தம் காதலைப் பாணன் முதலாகப் பாவையர் ஈறாக உயர்திணையோடும், கிள்ளை முதலான அஃறிணையோடும் கூறி, அவற்றைத் தம் அன்பிற்கு உரியவரிடம் தூது போகும்படி வேண்டுதல் தூது இலக்கணம் ஆகும். தமிழில் முதலில் தோன்றிய தூது நூல், உமாபதிசிவம் நெஞ்சு விடு தூது. காலம்: கி. பி. 14-ஆம் நூற்றாண்டு,

**26. பதிகம் :**

பல பொருள்களைப்பற்றிப் பத்துப் பாட்டுக்களால் பாடுதல் பதிகம் என்பது. மரபு மாறிய நிலையில் விளக்கம் தருகின்றது இச்சிற்றிலக்கியம்.

**27. சதகம் :**

அகப்பொருள் அல்லது புறப்பொருளினை நூறு பாடல்களில் பாடுதல் சதகம் ஆகும். தமிழில் முதன்முதலாகத் தோன்றிய சதகம் கார்மண்டல சதகம். காலம்: கி. பி. 11-ஆம் நூற்றாண்டு.

**28. குறவஞ்சி அல்லது குறத்திபாட்டு :**

தலைவன் உலா வந்த காலை தலைவி கண்டு காமுற்று விரக வேதனையால் திங்களையும், தென்றலையும் பழித்துத் தலைவன் பால் பாங்கியைத் தூது செல்லும்படி கூற, அதுபோது மலை வளம்பாடிவரும் குறத்தியின் திறம் தெளிந்து குறிகேட்க, அவளும் குறிதேர்ந்து நல்வரவு கூறிப் பரிசில் பெற்றுச் செல்கின்றாளாக, அது போது அவளைத் தேடிவரும் குறவன் புதிய ஆடை அணிகளோடு வரும் குறத்தியைக் கண்டு ஐயுற்று வினாவ, அலட்சியமாக அவள் பதில் பகர, பின் இருவரும் இதயம் ஒன்றி இறைவனை வழுத்திச் செல்வர். இதுவே குறவஞ்சியின் அமைப்பு. இந்நிகழ்ச்சிகளை விருத்தம், அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் ஆகியன கொண்டு, வசனம் விரவ, இடையிடையே சிந்து, கண்ணி முதலியவற்றால் நாடகத்தமிழால் கீர்த்தனை வடிவில் பாடப்படுவது குறத்திப்பாட்டு. தமிழில் புகழ்பெற்றது திருக்குற்றாலக் குறவஞ்சி.

**29. பிள்ளைத்தமிழ் :**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்தும் பருவங்களில் ஆசிரிய விருத்தத்தால் பத்துப்பாடல்களை ஆண்பால் பிள்ளைத் தமிழில் பாடுவர். மகளிருக்கு இறுதியில் உள்ள மூன்றினை ஒழித்து, கழங்கு, அம்மானை, ஊசல்-இவற்றை இணைத்துப் பாடுவது மரபு.

**30. கலம்பகம் :**

புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், மறம், குறம், பாண், களி, சிந்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புகள் அந் தாதித் துறையால் ஐந்துவகைப் பாவும், பாவினமும் விரவப் பாடுவது கலம்பகம் ஆகும். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எழுந்த நந்திக்கலம்பகம் தமிழில் முதலில் பாடப்பட்ட கலம்பகமாகும்.

**31. சீட்டுக்கவி:**

தெய்வ வணக்கம், குரு வணக்கம், புலவனின் பெரும்புகழ், தலைவனின் சிறப்பு-இவற்றை ஆசிரிய விருத்தத்தில் பாடுவது சீட்டுக்கவி எனப்படும்.

**32. பரணி :**

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளை அமரில் வென்ற வீரன் மீது பாடப்படும் வீர இலக்கியம், பரணி. தமிழில் முதலாக இயற்றப்பட்டது, கலிங்கத்துப்பரணி. காலம் : கி. பி. 12-ஆம் நூற்றாண்டு.

**33. பள்ளு :**

பள்ளர்களாகிய உழவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவைபட அமைத்துப் பாடுவது. சிந்து, கண்ணி, விருத்தம் முதலியவற் றால் அமைந்தது. பள்ளு நூல்களுள் சிறந்தது முக்கூடற்பள்ளு.

**கோவை :**

சிற்றிலக்கிய வகைகளுள் பெரியது. காப்பியம் போன்ற அமைப் புடையது. பாட்டுடைத்தலைவனது பெருமைகளைப் பல அகத் துறைகளில் அமைத்து 400 பாடல்களில் பாடப்படுவது.

ஒருதுறைபற்றிய கோவைகளும் உண்டு.

தமிழில் முதலில் தோன்றியது பாண்டிக்கோவை. காலம், கி.பி.8-ஆம் நூற்றாண்டு. சிறந்தது மணிவாசகர் பாடிய திருக் கோவையார்.

# மரகதம்

## புலவரும் புரவலரும்



# வண்டமிழ்ப் புலவர்கள்—புரவலர்கள்

1. சங்ககாலப் புலவர்கள்
2. சங்கம் மருவியகாலப் புலவர்கள்
3. பதினொன்றாம் திருமுறை பாடிய பன்னிருவர்
4. வைணவப் புலவர்கள்
5. காப்பியப் புலவர்கள்
6. பிற்காலச் சோழர் காலப் புலவர்கள்
7. இலக்கண நூலாசிரியர்கள்
8. நிகண்டு ஆசிரியர்கள்
9. புராணம் பாடியபுலவர்கள்
10. சித்தாந்த சாத்திரப் புலவர்கள்
11. பிற்காலப் புலவர்கள்
12. கிறித்தவப் புலவர்கள்
13. இஸ்லாமியப் புலவர்கள்
14. இந்நூற்றாண்டுப் புலவர்கள்
15. நாடக இலக்கியப் புலவர்கள்
16. செந்தமிழ்ப் புரவலர்கள்

# மரகதம்

உயர்ந்த வகை மணிகளுள் ஒன்று, மரகதம். பச்சை நிறமாய் உள்ள மணியை மரகதம் என்பர். சில வைர அணிகளில் மரகத மணி நடுநாயகமாய் அமைந்து அணி செய்வதைக் காணலாம். எனவே, நடுநாயகமாய் அமையும் தன்மை வாய்ந்த மரகதமணி, அவையின் நடுநாயகமாய் விளங்கும் புலவர்களுக்கு ஒப்பாக ஈண்டு அமைக்கப்படுவது மிகப்பொருத்தமுடைய ஒன்றாம்.

"மரகத மணியொடு வயிரம் குயிற்றி" எனப் பாடுகின்றது சிலம்பு. வைர மணிகளுக்கும் மரகத மணிகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு என அறியப்படுகின்றது. ஆகவே, தமிழ் இலக்கிய நூல்கள் வைரங்களாக வைக்கப்பட்டன போன்றே, அவற்றைப் படைத்த புலவர் பெருமக்களை மரகத மணிகளாய் அமைத்து இப்பேழையில் அறிமுகப்படுத்துகின்றோம்.

ஒளிரும் தன்மை படைத்த மரகதம் மிருதுவானது ஆகும்.

அறிவொளியுடன் மென்மைப் பண்பும் பெற்றுத் திகழ்பவர்கள், நல்லிசைப்புலவர்கள் என்பது அனைவரும் ஒப்பிய உண்மை அல்லவா !

## 1. சங்க காலப் புலவர்கள்

சங்க காலம் என்பது கிறித்துவுக்கும் பல நூற்றாண்டுகட்கு முன்பு தொட்டு, கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய உள்ள காலப்பகுதியாகும் என்பர்.

சங்க இலக்கியங்கள் என்பன எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் ஆகும். இப்பதினெட்டுமே காலக்கூற்றுவனின் கடும் பசிக்கு இரையாகாமல் தப்பிப் பிழைத்தவை. இவை தவிர எவ்வளவோ தமிழ் நூல்கள் காலக் கோட்பட்டொழிந்தன. அவை

போக எஞ்சியனவாக உள்ள சங்கப் பாடல்கள் 2381 என்பர். அவற்றைப் பாடிய சங்கப் புலவர்கள் 552 பேர்.

அவர்களின் பெயர்ப்பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது. இவர் களுள்,

| | | |
|---|---|---|
| நற்றிணை பாடிய புலவர்கள் தொகை | — | 187 |
| குறுந்தொகை பாடியவர்கள் | — | 203 |
| ஐங்குறுநூறு பாடியவர்கள் | — | 5 |
| பதிற்றுப்பத்து பாடியவர்கள் | — | 10 |
| பரிபாடல் பாடியவர்கள் | — | 13 |
| கலித்தொகை பாடியோர் | — | 5 |
| புறநானூற்றுப் புலவர்கள் | — | 180 |
| அகநானூறு பாடியவர்கள் | — | 153 |
| பத்துப்பாட்டுப் புலவர்கள் | — | 8 |

ஆக, எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பாடிய சங்கப் புல வரின் மொத்தத் தொகை 552.

அவர்கள் :

1. அகம்பன் மாலாதனார்
2. அஞ்சில் அஞ்சியார்
3. அஞ்சிலாந்தையார்
4. அஞ்சிலாந்தை மகள் நாகையார்
5. அடைநெடுங் கல்வியார்
6. அண்டர்மகன் குறுவழுதி
7. அணிலாடு முன்றிலார்
8. அதியன் விண்ணத்தனார்
9. அந்திஇளங்கீரனார்
10. அம்மள்ளனார்
11. அமமூவனார்
12. அம்மெய்யனாகனார்
13. அரிசில்கிழார்
14. அல்லங்கீரனார்
15. அள்ளூர் நன்முல்லையார்
16. அறிவுடை நம்பி
17. ஆசிரியர் நல்லந்துவனார்
18. ஆசிரியர் பெருங்கண்ணனார்
19. ஆடுதுறை மாசாத்தனார்
20. ஆதிமந்தியார்
21. ஆமூர்க் கவுதமன் சாதேவ னார்
22. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக்கண்ணத்தனார்
23. ஆரியவரசன் யாழ்ப்பிரம தத்தன்
24. ஆலங்குடி வங்கனார்
25. ஆலத்தூர் கிழார்
26. ஆலம்பேரி சாத்தனார்
27. ஆலியார்
28. ஆவூர்க்காவிதிகள் சாதே வனார்
29. ஆவூர்க்கிழார்
30. ஆவூர்கிழார் மகனரர் கண்ணனார்

31. ஆவூர் மூலங்கிழார்
32. ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்
33. இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
34. இடைக்காடனார்
35. இடைக்குன்றூர் கிழார்
36. இடையன் சேந்தங்கொற்றனார்
37. இடையன் நெடுங்கீரனார்
38. இம்மென்கீரனார்
39. இரணிய முட்டத்துப்பெருங் குன்றூர்ப் பெருங்கௌசிகனார்
40. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்
41. இருந்தையூர்க் கொற்றன் புலவன்
42. இரும்பிடதலையார்
43. இளங்கீரந்தையார்
44. இளங்கீரனார்
45. இளங்கோ (அடிகள்)
46. இளந்திரையனார்
47. இளந்தேவனார்
48. இளநாகனார்
49. இளம்புல்லூர்க்காவிதி
50. இளம்பூதனார்
51. இளம்பெருவழுதியார்
52. இளம்போதியார்
53. இளவெயினனார்
54. இளவேட்டனர்
55. இறங்குடிகுன்றநாடன்
56. இறையனார்
57. இனிசந்த நாகனார்
58. ஈழத்துப் பூதந்தேவனார்
59. உக்கிரப்பெருவழுதி
60. உகாய்க்குடி கிழார்
61. உம்பற்காட்டு இளங் கண்ணனார்
62. உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார்
63. உருத்திரன்
64. உரோடகத்துக் கந்தரத்தனார்
65. உரோடகத்துக்காரன்
66. உலோச்சனார்
67. உவர்க்கண்ணூர்ப் புல்லங் கீரனார்
68. உழுந்தினைப் புலவன்
69. உறையன்
70. உறையூர் இளம்பொன் வாணிகனார்
71. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
72. உறையூர்க் கதுவாய் சாத்தனார்
73. உறையூர்ச் சல்லியன் குமரன்
74. உறையூர்ச் சிறுகந்தன்
75. உறையூர்ப் பல்காயனார்
76. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
77. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
78. உறையூர் முதுகூத்தனார்
79. உறையூர் முதுகொற்றன்
80. ஊட்டியார்
81. ஊன்பித்தை
82. ஊன்பொதி பசுங்குடையார்
83. எயிற்றியனார்
84. எயினந்தை மகனார் இளங் கீரனார்
85. எயினந்தையார்

86. எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார்
87. எருமை வெளியனார்
88. எருமை வெளியனார் மகனார் கடலனார்
89. எழூஉப்பன்றி நாகன் குமரனார்
90. ஐயாதிச் சிறுவெண் தேரையார்
91. ஐயூர் முடவனார்
92. ஐயூர் மூலங்கிழார்
93. ஒக்கூர் மாசாத்தனார்
94. ஒக்கூர் மாசாத்தியார்
95. ஒருசிறைப் பெரியனார்
96. ஒரூ உத்தனார்
97. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்
98. ஓத ஞானி
99. ஓதல் ஆந்தையார்
100. ஓரம் போகியார்
101. ஓரில் பிச்சையார்
102. ஓரேருழவர்
103. ஓரோடோகத்துக் கந்தரத் தனார்
104. ஔவையார்
105. கங்குல் வெள்ளத்தார்
106. கச்சிப்பேட்டு இளந்தத்தனார்
107. கச்சிப்பேட்டு காஞ்சிக் கொற்றன்
108. கச்சிப்பேட்டு நன்னாகையார்
109. கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்
110. கடம்பனூர்ச் சாண்டிலியன்
111. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி
112. கடியலூர் உருத்திரங் கண்ணனார்
113. கடுகு பெருந்தேவனார்
114. கடுந்தொடைக் காவியனார்
115. கடுந்தோள் கரவீரன்
116. கடுவன் இளஎயினனார்
117. கடுவன் இளமள்ளனார்
118. கடுவன் மள்ளன்
119. கண்ணகனார்
120. கண்ணகாரன் கொற்றனார்
121. கண்ணங்கொற்றனார்
122. கண்ணம் புல்லனார்
123. கண்ணன்
124. கணக்காயன் தத்தன்
125. கணக்காயனார்
126. கணக்காயன் மகனார் நக்கீரன்
127. கணியன் பூங்குன்றன்
128. கதப்பிள்ளைச் சாத்தனார்
129. கதையங்கண்ணனார்
130. கந்தக்கண்ணன்
131. கந்தரத்தனார்
132. கபிலர்
133. கயமனார்
134. கருங்குழலாதனார்
135. கரும்பிள்ளைப் பூதனார்
136. கருவூர் ஓதஞானி
137. கருவூர்க் கண்ணம் பாளனார்
138. கருவூர்க் கண்ணம் புல்லனார்
139. கருவூர்க் கதப்பிள்ளை
140. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்
141. கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்
142. கருவூர்க் கலிங்கத்தனார்
143. கருவூர் கிழார்
144. கருவூர்க் கோசனார்
145. கருவூர்ச்சேரமான் சாத்தன்

146. கருவூர் நன்மார்பனார்
147. கருவூர்ப் பவுத்திரன்
148. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
149. கருவூர்ப் பெருஞ்சதுக் கத்துப் பூதநாதனார்
150. கல்பொருசிறு நுரையார்
151. கல்லாடனார்
152. கலை மகன்
153. கழாத்தலையார்
154. கழார்க்கீரன் எயிற்றியார்
155. கழைதின் யானையார்
156. கள்ளம் பாளனார்
157. கள்ளிக்குடிப் பூதம் புல்லனார்
158. கள்ளில் ஆத்திரையனார்
159. காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்
160. காசிபன் கீரனார்
161. காஞ்சிப் புலவனார்
162. காட்டூர்கிழார் மகனார் கண்ணனார்
163. காப்பியன் சேந்தனார்
164. காப்பியாற்றுக் காப்பிய னார்
165. காமக்கணிப் பசலையார்
166. காமஞ்சேர் குளத்தார்
167. காரிக்கண்ணனார்
168. காரி கிழார்
169. காலெறி கடிகையார்
170. காவட்டனார்
171. காவற்பெண்டு
172. காவன் முல்லைப் பூதரத் தனார்
173. காவன் முல்லைப் பூதனார்
174. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
175. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
176. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
177. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணார்
178. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்
179. கிடங்கில் காவிதி கீரங் கண்ணனார்
180. கிடங்கில் குலபதி நக்கண்ணன்
181. கிடங்கில் குலபதி பெருங் கொற்றனார்
182. கிள்ளி மங்கலங் கிழார் மகனார் சேர கோவனார்
183. கிள்ளி மங்கலங்கிழார்
184. கீரந்தையார்
185. கீரன் கீரனார்
186. குட்டுவன் கண்ணன்
187. குட்டுவன் கீரனார்
188. குட்டுவன் வியனார்
189. குடவாயில் கீரநக்கன்
190. குடவாயிற் கீரத்தனார்
191. குண்டுகட் பாலியாதன்
192. குதிரைத் தறியனார்
193. குப்பைக் கோழியார்
194. குமட்டூர்க் கண்ணனார்
195. குமுழி ஞாழலார் நப்பசலையார்
196. குழல் தத்தன்
197. குளம்பனார்
198. குளம்பாதாயனார்
199. குறமகள் இளவெயினி
200. குறமகள் குறிஎயினி
201. குறி இறையார்
202. குறுங்கீரன்
203. குறுங்குடி மருதனார்
204. குறுங்கோழியூர்க் கிழார்

205. குறுவழுதியார்
206. குன்றம் பூதனார்
207. குன்றியனார்
208. குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார்
209. கூகைக்கோழியார்
210. கூடலூர் கிழார்
211. கூடலூர் பல்கண்ணனார்
212. கூவன் மைந்தன்
213. கூழிக்கொற்றன்
214. கூற்றங்குமரனார்
215. கேசவனார்
216. கொட்டம்பலவனார்
217. கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்
218. கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார்
219. கொல்லன் அழிசி
220. கொல்லிக்கண்ணன்
221. கொள்ளம் பக்கனார்
222. கொற்றங்கொற்றனார்
223. கொற்றனார்
224. கோக்குளமுற்றனார்
225. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்
226. கோட்டியூர் நல்லந்தையார்
227. கோடைபாடிய பெரும்பூத னார்
228. கோண்மா நெடுங்கோட்ட னார்
229. கோதமனார்
230. கோப்பெருஞ்சோழன்
231. கோவத்தன்
232. கோவூர்கிழார்
233. கோவேங்கைப் பெருங் கதவன்
234. கோழியூர் கிழார் மகனார் செழியனார்
235. கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமர னார்
236. சங்கவருணரென்றும் நாகரியர்
237. சத்திநாதனார்
238. சல்லியங்குமரனார்
239. சாகலனார்
240. சாகலாசனார்
241. சாத்தந்தையார்
242. சாத்தன்
243. சிறுமோலிகனார்
244. சிறுவெண்தேரையார்
245. சிறைக்குடி ஆந்தையார்
246. சீத்தலைச் சாத்தனார்
247. செங்கண்ணனார்
248. செம்பியனார்
249. செம்புலப் பெயனீரார்
250. செய்திவள்ளுவன் பெருஞ் சாத்தன்
251. செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்
252. செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார்
253. செல்லூர்க்கொற்றன்
254. செல்லூர்க கோசிகன் [கண்ணனார்
255. சேகம்பூதர்
256. சேந்தம்பூதனார்
257. சேந்தன் கண்ணனார்
258. சேந்தன் கீரன்
259. சேரமான் இளங்குட்டுவன்
260. சேரமான் எந்தை
261. சேரமான் கணைக்காலிரும் பொறை
262. சேரமான் கோட்டம்பலத் துத் துஞ்சிய மாக்கோதை
263. சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார்

264. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
265. சோழன் நல்லுருத்திரன்
266. சோழன் நலங்கிள்ளி
267. தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்
268. தங்கால் பூட்கொல்லனார்
269. தங்கால்பொற்கொல்லனார்
270. தங்கால் பொற்கொல்ல னார் வெண்ணாகனார்
271. தங்கால் முடக்கொல்லனார்
272. தங்கால் முடக்கொற்றனார்
273. தனிமகனார்
274. தாமப்பல் கண்ணனார்
275. தாமோதரன்
276. தாயங்கண்ணனார்
277. தாயங்கண்ணியார்
278. திப்புத்தோளார்
279. திருத்தாமனார்
280. திருவள்ளுவர் (திருக் குறள்)
281. தின்மிதி நாகன்
282. தும்பி சொகினனார்
283. தும்பி சோகீரனார்
284. துறைக் குறுமாவிற் பாலங் கொற்றனார்
285. துறையூர் ஓடைகிழார்
286. தூங்கலோரியார்
287. தேய்புரிப் பழங்கயிற்றனார்
288. தேரதரன்
289. தேவகுலத்தார்
290. தேவனார்.
291. தொடித்தலை விழுத்தண்டி னார்
292. தொண்டிஆமூர்ச்சாத்தனார்
293. தொண்டைமான் இளந் திரையன்
294. தொல்கபிலர்
295. தொல்காப்பியர் (தொல் காப்பியம்)
296. நக்கண்ணையார்
297. நக்கீரர்
298. நக்கீரனார்
299. நப்பண்ணனார்
300. நப்பாலத்தனார்
301. நம்பிகுட்டுவன்
302. நரிவெரூஉத் தலையார்
303. நரைமுடி நெட்டையார்
304. நல்லச்சுதனார்
305. நல்லந்துவனார்
306. நல்லழுசியார்
307. நல்லாவூர்கிழார்
308. நல்லிறையனார்
309. நல்லூர்ச் சிறுமேதாவியார்
310. நல்லெழுநியார்
311. நல்வழுதியார்
312. நல்விளக்கனார்
313. நல்வெள்ளியார்
314. நல்வேட்டனார்
315. நற்சேந்தனார்
316. நற்றங்கொற்றனார்
317. நற்றமனார்
318. நன்பலூர்ச்சிறுமேதாவியார்
319. நன்னாகனார்
320. நன்னாகையார்
321. நாகம்போத்தன்
322. நாமலார் மகன் இளங் கண்ணன்
323. நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்
324. நெட்டிமையார்
325. நெடுங்கழுத்துப்பரணர்
326. நெடும்பல்லியத்தனார்
327. நெடும்பல்லியத்தை

328. நெடுவெண் நிலவினார்
329. நெய்தல் தத்தனார்
330. நெய்தற் காக்கியர்
331. நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர்கிழார்
332. நொச்சி நியமங்கிழார்
333. நோய்பாடியார்
334. பக்குடுக்கை நன்கணியார்
335. படுமரத்து மோசிகீரனார்
336. படுமரத்து மோசிகொற்றன்
337. பதடிவைகலார்
338. பதுமனார்
339. பரணர்
340. பராயனார்
341. பரூஉமோவாய்ப் பதுமன்
342. பறநாட்டுப் பெருங் கொற்றனார்
343. புனம்பாரனார்
344. பாண்டரங்கண்ணனார்
345. பாண்டியன் அறிவுடைநம்பி
346. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
347. பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன்
348. பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி
349. பாண்டியன் பன்னாடு தந்தான்
350. பாண்டியன் மாறன் வழுதி
351. பாண்டியன் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்
352. பாரகாபரன்
353. பாரதம் பாடிய பெருந் தேவனார்
354. பாரி மகளிர்
355. பாலைக் கௌதமனார்
356. பாலை பாடிய பெருங் கடுங்கோ
357. பாவைக் கொட்டிலார்
358. பிசிராந்தையார்
359. பிரமசாரி
360. பிரமனார்
361. பிரான் சாத்தனார்
362. புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்
363. புல்லாற்றூர் எயிற்றி யனார்
364. புறந்திணை நன்னாகனார்
365. பூங்கண் எத்திரையார்
366. பூங்கண்ணன்
367. பூதங்கண்ணனார்
368. பூதன் தேவனார்
369. பூதனார்
370. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு
371. பூதம் புல்லன்
372. பெருங்கண்ணனார்
373. பெருங்குன்றூர்க்கிழார்
374. பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்
375. பெருங்கௌசிகனார்
376. பெருஞ்சாத்தன்
377. பெருஞ்சித்திரனார்
378. பெருந்தலைச் சாத்தனார்
379. பெருந்தேவனார்
380. பெருந்தோட்குறுஞ்சாத்தன்
381. பெரும்பதுமனார்
382. பெரும்பாக்கன்
383. பெருவழுதி
384. பேய்மகள் இளவெயினி

385. பேயனார்
386. பேயார்
387. பேராலவாயர்
388. பேரிசாத்தனார்
389. பேரையில் குறுவலார்
390. பொத்தியார்
391. பொதுக்கயத்துக் கீரந்தை
392. பொதும்பில் கிழார்
393. பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார்
394. பொதும்பில் கிழார் வெண் கண்ணனார்
395. பொதும்பில் புல்லாளங் கண்ணியார்
396. பொய்கையார்
397. பொருந்தில் இளங்கீரனார்
398. பொன்மணியார்
399. பொன்முடியார்
400. பொன்னாகன்
401. போதனார்
402. போந்தைப் பசலையார்
403. மடல்பாடிய மாதங்கீரனார்
404. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
405. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்
406. மதுரை அறுவை' வாணிகன் இளவேட்டனார்
407. மதுரை ஆசிரியர் கோடன் கொற்றேவன்
408. மதுரை ஆசிரியர் நல்லந்து வனார்
409. மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்
410. மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்
411. மதுரை இளங்கௌசிகனார்
412. மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்
413. மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்
414. மதுரை எழுத்தாளன்
415. மதுரை எழுத்தாளன் சேந்தன்
416. மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்
417. மதுரை ஓலைக்கடை கண்ணம் புகுந்தாராயத்தனார்
418. மதுரைஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்
419. மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்
420. மதுரைக் கண்டரதத்தனார்
421. மதுரைக் 'கண்ணத்தனார்
422. மதுரைக் கண்ணனார்
423. மதுரைக் கணக்காயனார்
424. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
425. மதுரைக் கணியன் பூதத் தனார்
426. மதுரைக் கதக்கண்ணன்
427. மதுரைக் கள்ளில் கடை யத்தன் வெண்ணாகனார்
428. மதுரைக் காஞ்சிப்புலவன்
429. மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்
430. மதுரைக் காருலவியங் கூத் தனார்
431. மதுரைக் கூத்தனார்
432. மதுரை கூலவாணிகன் சாத்தனார் (மணிமேகலை)
433. மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
434. மதுரைக் கொல்லன்புலவன்

435. மதுரைக்கொல்லன் வெண்ணாகனார்
436. மதுரைச் சித்தலைச் சாத்தனார்
437. மதுரைச் சுள்ளம் போதனார்
438. மதுரைச் செங்கண்ணனார்
439. மதுரைத் தந்தங்கண்ணனார்
440. மதுரைத் தமிழ்க்கூத்தன் நாதன் தேவனார்
441. மதுரைத் தமிழ்க் கூத்தனார்
442. மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்
443. மதுரை நக்கீரர்
444. மதுரை நல்வெள்ளியார்
445. மதுரை படை மங்கமன்னியார்
446. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்
447. மதுரைப் பள்ளி மருதங் கிழார் மகனார் சோகுந்தனார்.
448. மதுரைப்பாலாசிரியர் நப்பாலனார்
449. மதுரைப்பாலாசிரியர் நற்றமனார்
450. மதுரைப் புல்லங்கண்ணனார்
451. மதுரைப் பூதன் இளநாகனார்
452. மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார்
453. மதுரைப் பெருங்கொல்லன்
454. மதுரைப் பெருமருதனார்
455. மதுரைப் பெருமருதிள நாகனார்
456. மதுரைப் பேராலவாயார்
457. மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்
458. மதுரைப் போத்தனார்
459. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்
460. மதுரை மருதங்கிழான் மகன் இளம்போத்தன்
461. மதுரை மருதனிளநாகனார்
462. மதுரை மள்ளனார்
463. மதுரை வேளாசான்
464. மதுரை வேளாதத்தன்
465. மருங்கூர் கிழார் பெருங் கண்ணனார்
466. மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்
467. மருங்கூர் பாகைச் சாத்தன் குமரனார்
468. மருதம் பாடிய இளங் கடுங்கோ
469. மருதன் இளநாகனார்
470. மலையனார்
471. மள்ளனார்
472. மாங்குடிகிழார்
473. மாங்குடி மருதனார்
474. மாடலூர்கிழார்
475. மாதி மாதிரத்தனார்
476. மாதிரத்தன்
477. மாமலாடன்
478. மாமூலனார்
479. மாயெண்டன்
480. மார்கண்டேயனார்
481. மாலை மாறன்
482. மாவளத்தான்
483. மாற்பித்தியார்
484. மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்
485. மாறன் வழுதி

486. மாறோக்கத்து நப்பசலை
487. மிளைக்கந்தன் [யார்
488. மிளைகிழான் நல்வேட்ட னார்
489. மிளைப்பெருங்கந்தன்
490. மிளைவேள் தித்தன்
491. மீளிப்பெரும்பதுமனார்
492. மீனெறி தூண்டிலார்
493. முக்கல் ஆசான் நல் வெள்ளையார்
494. முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன்
495. முடத்தாமக்கண்ணியார்
496. முடத்திருமாறன்
497. முதுகூற்றனார்
498. முப்பேர் நாகனார்
499. முள்ளியூர்ப் பூதியார்
500. முரஞ்சியூர் முடிநாகராயர்
501. முறுவெங் கண்ணனார்
502. மூலங்கீரனார்
503. மையோடக்கோவனார்
504. மோசி கண்ணத்தனார்
505. மோசிக் கரையனார்
506. மோசி கீரனார்
507. மோசி கொற்றனார்
508. மோசி சாத்தனார்
509. மோதரசனார்
510. வடமநெடுந்தத்தனார்
511. வடம வண்ணக்கன்
512. வடம வண்ணக்கன் சொரு மருங்குமரனார்
513. வடம வண்ணக்கன் தாமோதரனார்
514. வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்
515. வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்
516. வடமன் தாமோதரன்
517. வடமோதங்கிழார்
518. வண்ணப்புறக் கந்தரத்த னார்
519. வருமுலைப்பாரித்தி
520. வன்பரணர்
521. வாடாப் பிரமந்தன்
522. வாயில் இளங்கண்ணன்
523. வாயிலான் தேவன்
524. வாலம் பேரி சாத்தனார்
525. வான்மீகியார்
526. விட்டகுதிரையார்
527. விரிச்சியூர் நன்னாகனார்
528. விரியூர் நக்கனார்
529. வில்லக விரலினார்
530. விழிகட் பேதைப் பெருங் கண்ணனார்
531. விற்றூற்று மூதெயினனார்
532. விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்
533. வினைத்தொழில் சோகீர னார்
534. வீரைவெளியனார்
535. வீரைவெளியன் தித்தனார்
536. வெண்கண்ணனார்
537. வெண்கொற்றன்
538. வெண்ணிக்குயத்தியார்
539. வெண்பூதன்
540. வெண்பூதியார்
541. வெண்மணிப்பூதி
542. வெள்ளாடியனார்
543. வெள்ளியந்தின்னனார்
544. வெள்ளிவீதியார்
545. வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார்
546. வெள்ளெருக்கிலையார்
547. வெள்ளைக்குடி நாகனார்
548. வெள்ளை மாளர்
549. வெறிபாடிய காமக்கண்ணி யார்
550. வேட்டகண்ணன்
551. வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்
552. வேம்பற்றூர்க் குமரனார்.

## 2. சங்கம் மருவிய காலப் புலவர்கள்

**பதினெண்கீழ்க்கணக்குப் பாடியவர்கள் :**

1. மாறன் பொறையனார் : கி. பி. 4-ஆம் நூற்றாண்டினர். ஐந்திணை 50 பாடியவர்.

2 மூவாதியார் : கி. பி. 5-ஆம் நூற்றாண்டினர். ஐந்திணை 70 பாடியவர். சமணர்.

3. கண்ணன் சேந்தனார் : கி. பி. 5-ஆம் நூற்றாண்டு ; திணைமொழி 50.

4. கணிமேதாவியார் : திணைமாலை நூற்றைம்பது பாடியவர். காலம் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு என்பர்.

5. மதுரைக் கண்ணன் கூத்தனார் : கார் நாற்பது, கி.பி. 5-ஆம் நூற்றாண்டு.

6. புல்லங்காடனார் : கைந்நிலை.

7. பொய்கையார் : களவழி ; சங்கம் மருவிய காலம்.

8. கபிலர். இப்பெயருடன் சங்கப் புலவர் ஒருவர் இருந்தமை முன்னரே சுட்டப்பட்டது. 'இன்னா நாற்பது' பாடிய கபிலர் ஒருவரைப்பற்றி அறிகின்றோம். இவர் சங்கம் மருவிய காலத்தவர். கபிலதேவ நாயனார் எனவும் இவர் குறிக்கப் படுவார்.

9. பூதஞ்சேந்தனார் : இனியவை நாற்பது; கி. பி. 5-ஆம் நூற்றாண்டு.

10. நல்லாதனார் : திரிகடுகம் ; வைணவர் : அறநூல்பாடிய பெருமை உடையவர்.

11. பெருவாயின் முள்ளியார் : ஆசாரக்கோவை ; ஆரிடம் என்னும் வடமொழி நூல் ஆசாரங்களைத் தமிழ்ப்படுத்தியவர்.

12. விளம்பி நாகனார் : நான்மணிக்கடிகை ; சங்கம் மருவிய காலம்.

13. முன்றுறை அரையனார் : பழமொழி - சேரமரபினர் ; சமணர்.

14. திருவள்ளுவர்: திருக்குறள்; கடைச்சங்க காலம்; கிறித்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர் என்பாரும் உளர்.

15. இளங்கோவடிகள் : சிலப்பதிகாரம் ; சமணர் ; கி.பி. 3-ஆம் நூற்றாண்டு.

16. சீத்தலைச்சாத்தனார் : மணிமேகலை ; பௌத்தர்.

17. திருஞானசம்பந்தர் : தேவாரம் ; கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

18. திருநாவுக்கரசர் : தேவாரம் ; மகேந்திரவர்ம பல்லவன் காலமான கி.பி. 7-ஆம் நூற்றாண்டினர்.

19. சுந்தரர் ; தேவாரம். கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.

20. மாணிக்கவாசகர் : திருவாசகம், திருக்கோவை ; கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. மூன்றாம் நூற்றாண்டு எனவும் கூறுவர்.

21. திருமாளிகைத்தேவர் : திருவிசைப்பா 4, பதிகங்கள். திருவாவடுதுறையினர் ; போக முனிவருக்கு மாணவர். காலம் 10 அல்லது 11 - ஆம் நூற்றாண்டு. இவர் முதல் ஒன்பதின்மர் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடியவர்கள்.

22. கருவூர்த்தேவர் : கருவூரைச் சார்ந்தவர் ; இறைவி வழிபாட்டினர் ; 10 பதிகங்கள். இவரது சித்து காரணமாகத் தஞ்சாவூர் சிவலிங்கம் சரியாக நிறுத்தப்பட்டது.

23. சேந்தனார் : நாங்கூரில் பிறந்தவர் ; தில்லையில் வடமின்றித் தேர் ஓடப் பாடியவர். 4 பதிகங்கள்.

24. பூந்துருத்தி காடவ நம்பி : திருவாரூர் ; ஆதிசைவ மரபினர். 2 பதிகங்கள்.

25. கண்டராதித்தர் : சோழர் ; கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. முதல் பராந்தக சோழருக்கு மைந்தர். 10 பாடல்கள் ; தில்லையைப் பற்றியன.

26. வேணாட்டடிகள் : தென்திருவாங்கூரினர். சேரமரபினர் என்ப. தில்லைபற்றிய 1 பதிகம்.

27. திருவாலிய முதினார் : ஊர், சோழ நாட்டுத் திருவாலி ; மயிலையில் வாழ்ந்தவர். 10 - ஆம் நூற்றாண்டு. 4 பதிகங்கள்.

28. புருடோத்தம நம்பி : அந்தணர் ; 22 பாடல்கள் ; அகத்திணை மிக்கவை.

29. சேதிராயர் : திருக்கோவலூரைச் சார்ந்த சேதி நாட்டு மன்னர் மரபினர். 1 பதிகம் தில்லையைப் பற்றியது.

30. திருமூலர் : திருமந்திரம் ; கி.பி. 5 - ஆம் நூற்றாண் டென்பர்.

## 3. பதினொன்றாம் திருமுறை பாடிய பன்னிருவர்

1. திருவாலவாயுடையார் : 'திருமுகப்பாசுரம்' எழுதியவர் ; மதுரை சொக்கநாதர் எனக் கருதப்படுபவர். இது கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்.

2. காரைக்கால் அம்மையார் : புனிதவதி ; நாகை பரமதத்தனை மணந்தவர் ; பாடியன : (1) திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம், (2) திருவிரட்டை மணிமாலை, (3) அற்புதத் திரு வந்தாதி ; சிந்தாந்தக் கருத்துகள் நிறைந்தவை.

3. கல்லாட தேவநாயனார் : சங்க காலக் கல்லாடரினும் வேறானவர். திருக்கண்ணப்பர் திருமறம்.

4. நக்கீர தேவ நாயனார் : சங்க கால நக்கீரரினும் வேறு பட்டவர் ; இவர் இயற்றியன 10. பிற்காலத்தவர்.

5. கபில தேவ நாயனார் : சங்கச் சான்றோரல்லர். இயற்றியன : (1) மூத்த நாயனார் இரட்டை மணிமாலை, (2) சிவபெருமான் இரட்டை மணிமாலை, (3) சிவபெருமான் திருவந்தாதி. கி. பி. 11-ஆம் நூற்றாண்டு.

6. பரண தேவ நாயனார் : சங்க காலப் பரணரல்லர். 10-ம் நூற்றாண்டினர். சிவபெருமான் திருவந்தாதி.

7. அதிரா அடிகள் : துறவி. கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர். மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை.

8. இளம்பெருமானடிகள் : துறவி. நம்பியாண்டார் நம்பிக்கு முற்பட்டவர். சிவபெருமான் திருமும்மணிக்கோவை.

9. ஐயடிகள் காடவர் கோன் : நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் ; பல்லவ மன்னர் மரபினர் ; க்ஷேத்திரத் திருவெண்பா.

10. சேரமான் பெருமாள் நாயனார் : அறுபத்து மூவருள்

ஒருவர். சேரமன்னர். கொடுங்கோளூரினர். சுந்தரருக்கு நண்பர். தமிழில் உள்ள முதல் உலாவான 'திருக்கயிலாய ஞான உலா' பாடியவர். மற்றும் பாடியவை: பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை.

11. பட்டினத்தடிகள்: திருவெண்காடர்: காவிரிப்பூம் பட்டினத்து வணிகர். பாடியன: (1) கோயில் நான்மணி மாலை, (2) திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, (3) திருக் கழுமல மும்மணிக்கோவை, (4) திருவேகம்பமுடையார் திரு வந்தாதி, (5) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது. காலம்: கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

இவர் திருவேகம்பமாலை பாடிய பட்டினத்தாரின் வேறானவர். 'திருமுறைப்பட்டினத்தடிகள்' எனக் குறிக்கப்பெற்றவர்.

12. நம்பியாண்டார் நம்பி: திருநாரையூர்; ஆதி சைவ அந்தணர். தேவாரத் திருமுறைகளைத் தொகுத்தவர். இவர் இயற்றிய 9 நூல்கள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. காலம்: கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

13. சேக்கிழார்: பெரியபுராணம் பாடியவர். தொண்டை நாட்டுக் குன்றத்தூர். வேளாண் மரபு. அபநாயன் காலத்தவர். (2-ஆம் குலோத்துங்கன்)

## 4. வைணவப் புலவர்கள்

1. பொய்கையாழ்வார்: பொய்கையொன்றில் தாமரை மலரில் பாஞ்சசன்யம் என்னும் சங்கின் அமிசமாக ஐப்பசித் திரு வோணத்தில் பிறந்தவர். முதல் திருவந்தாதி.

2. பூதத்தாழ்வார்: திருமாலைப் பூதம் எனப் பாடியவர். ஐப்பசி அவிட்டத்தில் கதாயுதத்தின் அமிசமாய்ப் பிறந்தவர். இரண்டாம் திருவந்தாதி.

3. பேயாழ்வார்: ஐப்பசி, சதய விண்மீனில் 'நாந்தகம்' என்னும் வாளின் அமிசமாய்ப் பிறந்தவர். மூன்றாம் திரு வந்தாதி.

இம்மூவரும் சம காலத்தவர். முதலாழ்வார் எனப்படுவர்.

4. திருமழிசை ஆழ்வார் : பேயாழ்வாரிடம் ஞானோபதேசம் பெற்றவர். கி. பி. 7-ஆம் நூற்றாண்டு. இயற்றியன : திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி.

5. நம்மாழ்வார் : பாண்டி நாட்டுத் திருகுருகூர். சடகோபர், மாறன் எனப்படுபவர். சைவத்திற்கு மணிவாசகர் எப்படியோ அப்படியே வைணவத்துக்குச் சிறந்தவர். பாடியன : திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி. காலம் : கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

6. திருமழிசை ஆழ்வார் : தொண்டை நாட்டுத், திருமழிசையில் பிறந்தவர். கடுமையான வைணவர். பேயாழ்வாரிடம் ஞான உபதேசம் பெற்றவர். திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி. கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

7. மதுரகவி ஆழ்வார் : நம்மாழ்வாருக்குச் சீடர் ; அந்தணர். வடதிசை சென்றவர். இவர் திருமாலைப் பாடவில்லை ; நம்மாழ்வாரையே இறைவனாகக்கொண்டு பாடியவர். கண்ணி நுண்சிறுத்தாம்பு.

8. குலசேகர ஆழ்வார் : சேர மன்னர் மரபினர். திருவஞ்சைக் களம். தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்தமாலையும் பாடியவர். திருவரங்கத்தில் மூன்றாம் மதிலைக் கட்டியவர். கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

9. பெரியாழ்வார் : வில்லிபுத்தூரில், ஆனித்திங்கள் சுவாதியில், கருடாம்சமாக வேயர் குலத்தில் தோன்றியவர். பாடியன; திருப்பல்லாண்டு. திருமொழி. ஆண்டாளை எடுத்து வளர்த்தவர். கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

10. ஆண்டாள் : பெரியாழ்வாரால் நந்தவனத்தில் பயிரிட்ட துளசிப்பாத்தியில் கண்டெடுக்கப்பட்டவர். பூமகள் அமிசம். நாச்சியார் திருமொழி, திருப்பாவை. பெரியாழ்வார் காலமான கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

11. தொண்டரடிப்பொடி ஆழ்வார் : சோணாட்டுத் திருமண்டங்குடி. சோழிய அந்தணர் ; விப்ர நாராயணர். இயற்றிய நூல்கள் : திருப்பள்ளி எழுச்சி, 2. திருமாலை. இவர் பாடிய 'பச்சைமா மலைபோல் மேனி' புகழ் பெற்றது.

12. திருப்பாணாழ்வார் : பாணர் குடியினர். அமலனாதிப்பிரான். கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

13. திருமங்கையாழ்வார் : திருவாலியை அடுத்த திருக்குறையலூர்; கள்ளர் மரபு. பட்டப் பெயர்கள் : நீலன், பரகாலன். திருமங்கை நாட்டு மன்னராயிருந்தவர். எழுதிய நூல்கள்; பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடும் தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல். காலம் : கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

14. பின்பழகிய பெருமாள் சீயர் : வைணவம் தழைக்கப் பணியாற்றியவர். 'ஆறாயிரப்படி' உரை எழுதியவர். குரு பரம்பரைப் பிரபாவம். கி. பி. 10-ஆம் நூற்றாண்டு.

15. நாத முனிகள் : நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தை தொகுத்தவர். இயற்றியன: யோக ரகசியம், நியாய தத்துவம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

16. இராமானுசர் : உடையவர், எம்பெருமானார். ஸ்ரீபெரும்புதூர். வைணவ சமயத்துக்குத் தலைமையான பெரியார். காலம் ; கி. பி. 11-ஆம் நூற்றாண்டு.

17. திருவரங்கத்தமுதனார் : கூரத்தாழ்வார் மாணவர்; எழுதிய நூல் : இராமானுஜ நூற்றந்தாதி. காலம் : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

18. ஸ்ரீபட்டர் : வேதாந்தாச்சாரியார் ; பராசரபட்டர் என வழங்கப்பட்டவர். கூரத்தாழ்வார் திருமகனார். சகஸ்ரநாம பாடியம், பட்டர் பத்தார்த்த மைவண்ணனார் நறுங்குஞ்சியுரை, அட்ட சுலோகி வியாக்கியானம். காலம் : 'கி. பி. 13-ஆம் நூற்றாண்டு.

19. ஸ்ரீ வேதாந்த தேசிகர் : வடமொழி - தென்மொழியில் வல்லவர்; வடகலை வைணவர். இல்லற நெறியினர். திருவகீந்திர புரத்தில் நோன்பு நோற்றுக் கருடாழ்வாரிடம் அயக்கிரீவ மந்திர உபதேசம் பெற்றவர். நூறாண்டு வாழ்ந்தவர். நவரத்தின மாலை, திருச்சின்னமாலை போன்ற 15 நூல்களை இயற்றியவர். கி. பி. 13-ஆம் நூற்றாண்டு.

20. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் : அட்டப்பிரபந்தம் பாடியவர். சைவ எல்லப்ப நாவலர் காலத்தவர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

## 5. காப்பியப் புலவர்கள்

1. இளங்கோவடிகள் : மறக்கவியலாத காப்பியக் கவிஞர். சிலப்பதிகார ஆசிரியர். சேரன் செங்குட்டுவருக்கு இளவல். கி. பி. மூன்றாம் நூற்றாண்டினர். சமணர்.

2. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் : மணிமேகலை ஆசிரியர், பௌத்தர். இளங்கோவடிகள் காலத்தவர் என்பர்.

3. திருத்தக்க தேவர் : ஐம்பெருங்காப்பியங்களுள் முதற் கண்ணதாகிய சீவகசிந்தாமணியை இயற்றியவர்; சமணர். காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டென்பர். தீபங்குடியில் இருந்த திரமிள சங்கத்தைச் சார்ந்தவர்.

4. நாதகுத்தனார் : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியைப் பாடியவர்; பௌத்தர்.

5. கொங்கு வேளிர் : பெருங்கதை பாடியவர். கொங்கு நாட்டில் உள்ள விசயமங்கலத்தில் வேளாள மரபில் பிறந்தவர். சிற்றரசர் என்பர. கி. பி..ஏழாம் நூற்றாண்டு.

6 தோலாமொழித்தேவர் : அரிய காப்பியமான சூளா மணியைப் பாடியவர் ; சமணர்; கி. பி. 10-ஆம் நூற்றாண்டு.

## 6. பிற்காலச் சோழர் காலப் பெரும் புலவர்கள்

1. கம்பர் : கம்பராமாயணம், ஏரெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி முதலியன பாடியவர். கவிச்சக்கரவர்த்தி எனப் பாராட்டப்பட்டவர். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

2. ஒட்டக்கூத்தர் : குலோத்துங்கன் அவைக்களப்புலவர். தக்கயாகப்பரணி பாடியவர். கம்பர் காலத்தவர்.

3. சயங்கொண்டார் : அநபாயன் புகழைக் கலிங்கத்துப்பரணி யாகத் தொடுத்தவர். 'பரணிக்கோர் சயங்கொண்டான்' எனப் பாராட்டப்பட்டவர்.

4. பாரதம் பாடிய பெருந்தேவனார் : பாரதத்தை வெண்பா யாப்பில் பாடியவர். மூன்றாம் நந்திவர்மன் காலத்தவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

5. புகழேந்திப்புலவர் : பாண்டிய நாட்டுப் பைந்தமிழ்ப் புலவர். நளவெண்பா பாடியவர். கி.பி.13-ஆம் நூற்றாண்டினர். தொண்டை நாட்டுப் பொன்விளைந்த களத்தூர்.

6. வில்லிபுத்தூராழ்வார் : பாரதத்தைத் தமிழில் பாடியவர். வீர வைணவர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டினர்.

7. அதிவீரராம பாண்டியர் : நைடதம் பாடியவர். கி.பி.16-ஆம் நூற்றாண்டு.

## 7. இலக்கண நூலாசிரியர்கள்

1. அகத்தியர் : தலைச்சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் இருந்து தமிழ் ஆய்ந்தவர் என இறையனார் களவியல் கூறுகின்றது. இயற்றிய நூல் : அகத்தியம்.

2. தொல்காப்பியர் : தொல்காப்பியம் ; கி.மு. 5 - ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்.

3. ஐயனாரிதனார் : புறப்பொருள் வெண்பாமாலை ; கி. பி. எட்டாம் நூற்றாண்டு.

4. அவிநயனார்: அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர். அவிநயம், அவிநயப்புறனடை. கி.பி. 6-ஆம் நூற்றாண்டு.

5. பனம்பாரனார்: பன்னிருபடலம்: தொல்காப்பியரின் ஒருசாலை மாணாக்கர்.

6. அமிதசாகரர் : யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

7. குணவீரபண்டிதர் : வச்சணந்திமாலை ; நேமிநாதம். கி. பி. 13-ஆம் நூற்றாண்டு.

8. பவணந்தி முனிவர்: நன்னூல் ; கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. சமணர் ; சீயகங்கன் ஆதரவு பெற்றவர்.

9. நாற்கவிராச நம்பி: அகப்பொருள் விளக்கம்; தொண்டை நாட்டுப் புளியங்குடி. கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர். சமணர்.

10. புத்தமித்திரர்: பௌத்தர்; வீரசோழியம்.

11. குணசாகரர்: தண்டியலங்கார உரையாசிரியர். சமணர்.

## 8. நிகண்டு ஆசிரியர்கள்

1. திவாகரர்: ஆதி நிகண்டு எனப்படும் திவாகர நிகண்டைச் செய்தவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. சமணர்.

2. பிங்கலமுனிவர்: பிங்கலந்தை; சமணர். காலம், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. தமிழுக்கு 'இனிமையும் நீர்மையும் தமிழ்என லாகும்' என்ற விளக்கம் தந்தவர் இவரே.

3. காங்கேயர்: உரிச்சொல் நிகண்டு. செங்கற்பட்டு மாவட்ட வேளாளர் என்பர்.

4. மண்டல புருடர்: சூடாமணி நிகண்டு. 13 இடங்களில் மண்டலவன் எனக் குறித்துக்கொள்கிறார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டினர்.

5. நிகண்டனார்: கலைக்கோட்டுத்தண்டு.

## 9. புராணம் பாடிய புலவர்கள்

1. கச்சியப்ப சிவாச்சாரியார் : கந்தபுராணம். கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதி.

2. பரஞ்சோதி முனிவர்': திருவிளையாடற்புராண்ம். கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

3. பெரும்பற்றப்புலியூர் நம்பி : திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம். கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

4. வீரகவிராயர் : அரிச்சந்திர புராணம், பாண்டி நாட்டினர்.

5. சிவஞான முனிவர் : வடமொழி - தென்மொழி வல்லுநர். இலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு, சமயம், கண்டனம், புராணம், பிரபந்தம், தருக்கம் என எத்துணைத் துறைகள் உண்டோ அத்துணைத் துறைகளிலும் வெற்றி கண்டவர்.

காஞ்சிப் புராணம், சிவஞான போத மாபாடியம் போன்ற 25 நூல்கள்.

6. சீர்காழி அருணாசலக் கவிராயர் : சீர்காழித் தல புராணம், கோவை முதலியன.

7. கச்சியப்ப முனிவர் : தணிகைப் புராணம் பாடியவர்.

8. சைவ எல்லப்ப நாவலர் : அருணாசல புராணம், செவ்வந்திப்புராணம், திருவிரிஞ்சைப்புராணம், திருவெண்காட்டுப் புராணம் முதலியன.

9. அந்தகக்கவி வீரராகவ முதலியார்: திருக்கழுக்குன்ற புராணம்.

10. கருணைப் பிரகாசர், சிவப்பிரகாசர், வேலைய சுவாமிகள்: சீகாளத்திப் புராணம்.

11. திரிகூடராசப்பக் கவிராயர்: குற்றாலத் தலபுராணம்.

12. நிரம்பவழகியதேசிகர்: சேது புராணம்.

13. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை : 22 புராணங்கள். இவற்றுள் தல புராணங்கள் 16.

## 10. சித்தாந்த சாத்திரப் புலவர்கள்

1. மெய்கண்டார் : திருவெண்ணெய் நல்லூரினர்; சடையப்ப வள்ளல் மரபினர். சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள்ளும் தலையாயதான சிவஞான போதத்தை அருளியவர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

2. அருள்நந்தி சிவாச்சாரியார் : பாடிய நூல்கள் : சிவஞான சித்தியார் இருபா இருபஃது. மெய்கண்டாருக்கு மாணவர்.

3. திருவதிகை மனவாசகம் கடந்தார் : உண்மை விளக்கம். மெய்கண்டாருக்கு மற்றொரு மாணவர்.

4. உமாபதி சிவாச்சாரியார் : மறைஞானசம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டினர். சிவப்பிரகாசம் முதலான எட்டுச் சித்தாந்த சாத்திரங்களை இயற்றியவர்.

5. குருஞானசம்பந்த தேசிகர் : தருமபுர ஆதீனத்தை உருவாக்கியவர். சிவபோதசாரம் முதலிய நூல்களை இயற்றியவர்.

6. நமச்சிவாய மூர்த்திகள் : திருவாவடுதுறை ஆதீனம் நிறுவியவர். சைவ சமய நூல்கள் சிலவற்றிற்கு உரை கண்டவர். கி.பி.14-ஆம் நூற்றாண்டு.

## 11. பிற்காலப் புலவர்கள்

1. பொய்யாமொழிப் புலவர் : தஞ்சைவாணன் கோவை. கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

2. இரட்டைப்புலவர்கள் : இளஞ்சூரியர்-முதுசூரியர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டினர். குருடரும் முடவரும் என்பர். தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, திருவாமாத்தூர்க் கலம்பகம்.

3. சத்திமுற்றப்புலவர்: 'நாராய் நாராய்' என்னும் பாடல் மூலம் தமிழுலகில் புகழ் பெற்றவர்.

4. அருணகிரி நாதர் : திருப்புகழ் பாடியவர். கி.பி. 15-ஆம் நூற்றாண்டினர்.

5. காளமேகப்புலவர் : வசை பாடுவதில் வல்லவர். அந்தணர். சிலேடை பாடுவதில் வல்லவர். யமகண்டம் பாடியவர். திருவானைக்கா உலா, பரப்பிரம்ம விளக்கம், சித்திரமடல் போன்ற நூல்களும் 187 தனிப்பாடல்களும் பாடியவர். காலம்: கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

6. குமரகுருபரர்: ஸ்ரீவைகுண்டம். வேளாளர். நீதிநெறிவிளக்கம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற பல சிற்றிலக்கியங்கள். கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

7. படிக்காசுப்புலவர் : பொன்விளைந்த களத்தூர். செங்குந்த மரபினர். புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம், பாம்பலங்கார வருக்கக்கோவை முதலிய நூல்கள். கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

8. நல்லாப்பிள்ளை : பன்மொழிப்புலவர். வில்லிபுத்தூரர் பாரதத்தின் நடுநடுவே பத்தாயிரம் பாடல்களைப் பாடிச் சேர்த்தவர். தேவயானைப்புராணம் பாடியவர். கி.பி. 18-ஆம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு.

9. தாயுமானவர்: சோழநாட்டு வேதாரண்யம். இறைவன் மீது உள்ளம் உருக்கும் பாடல்கள் பல பாடியவர். சமதர்ம நோக்குடையவர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டினர்.

10. இராமலிங்க அடிகளார் : பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமயத்துறையில் ஓர் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தவர். சிதம்பரத்தை அடுத்த மருதூர். சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கையினர். இனிய 'அருட்பா' நூல் பாடியவர். தைப்பூசத்தில் வடலூர் சோதியில் கலந்தவர்.

11. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை : திருவிதாங்கூர்-ஆலப்புழை. தத்துவப் பேராசிரியர். மனோன்மணீயம் பாடியவர். கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

12. வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் : அந்தணர். தம் பெயரைத் தமிழ்ப்படுத்தி 'பரிதிமாற்கலைஞர்' என அமைத்துக் கொண்டவர். எழுதிய நூல்கள் : ரூபாவதி, கலாவதி, நாடக இயல், மானவிசயம். இவர் ஆற்றிய பத்துச் சொற்பொழிவுகள், தமிழ் வரலாறு என்னும் அரிய நூலாக வெளிவந்துள்ளன.

13. சி. வை. தாமோதரம் பிள்ளை : 1832-இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். பல அரிய நூல்களைப் பதிப்பித்துத் தமிழுக்கு அருந்தொண்டாற்றியவர். பதிப்பித்தவை : தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் களவியல், இலக்கண விளக்கவுரை, கலித்தொகை, தணிகைப்புராணம், சூளாமணி. தலைசிறந்த பதிப்பாசிரியர்.

14. டாக்டர். உ.வே. சாமிநாதையர்: 'தமிழ்த்தாத்தா' எனப் பாராட்டப்பெற்றவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு மாணவர். பல அரிய தமிழ் இலக்கிய நூல்களைத் தேடிக் கண்டறிந்து பதிப்பித்தவர். 'நினைவு மஞ்சரி' போன்ற சில உரைநடைநூல்கள் எழுதியவர். இவர் தொண்டினைப் பாராட்டிச் சென்னை மாநிலக் கல்லூரியில் இவரது உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பதிப்பாசிரியர்.

15. மறைமலை அடிகளார் : 'தமிழ் மலை', 'தமிழ்க்கடல்' எனப் போற்றப்பட்டவர். பிறப்பு : 1876. 'சுவாமி வேதாசலம்' என்னும் பெயரைத் தனித்தமிழில் 'மறைமலை அடிகள்' என மாற்றி அமைத்துக்கொண்டார். பிறமொழிச் சொற்கள் கலவாத தூய தமிழ்நடையை உருவாக்கியவர். தமிழும் சைவமும் வளர்த்தவர். முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, தமிழர் மதம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், மக்கள் நூறாண்டு வாழ்வது எப்படி? என்பன போன்ற பல அரிய நூல்களை எழுதியவர். சாகுந்தல நாடக ஆய்வு எழுதியவர். வடமொழி வல்ல தமிழர். இவர் தொகுத்து வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான நூல்களைக்கொண்டு 'மறைமலை அடிகள் நூல் நிலையம்' என்ற ஒன்று இவர் நினைவுச் சின்னமாக சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும்

இவர் பெயரால் 'மறைமலை நகர்' ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது.

16. திரு.வி. கலியாணசுந்தரனார்: திரு.வி.க. என்னும் எழுத்துகள் தமிழர் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருப் பவை. திரு.வி.க. என்பது 'திருவாரூர் விருத்தாசல முதலி யார் மகன் கலியாணசுந்தரனார்', என்பதன் சுருக்கப்பெய ராகும். நல்ல தமிழை உருவாக்கியவர். பேச்சாலும் எழுத் தாலும் தமிழ் வளர்த்தவர். 'தேசபக்தன்' நாளிதழ் நடத்தியவர். அரசியல் கருத்துகளைத் தமிழில் எழுதவும் பேசவும் முடியும் என முதன் முதலில் நிறுவியவர்.

'பெண்ணின் பெருமை' முதலிய பல நூல்களை எழுதியவர். 'தமிழ் உரைநடையின் தந்தை' எனப் பாராட்டப்பெற்றவர். 1953-இல் இவ்வுலக வாழ்வை நீத்தவர்.

17. பண்டிதமணி. மு. கதிரேசஞ்செட்டியார்: செட்டி நாட்டு மகிபாலன்பட்டி. நகரத்தார் மரபினர். வடமொழி வல்லுநர். தமிழ்ப்பேரறிஞர். பல உரைநடை நூல்கள் இயற்றியவர். இவர் திருவாசகத்திற்கு எழுதிய 'கதிர்மணி விளக்கம்' புகழ் பெற்றது. சுக்கர நீதி, மிருச்சகடிகம் என்னும் இரண்டும் வடமொழி மொழிபெயர்ப்புகள்.

'மகாமகோபாத்யாய' என்னும் பட்டம் பெற்ற தமிழ் முதறிஞர்.

18. எஸ். வையாபுரிப்பிளை: திருநெல்வேலி மாவட்டத்தினர். வழக்கறிஞர் பட்டம் பெற்றவராயினும் தமிழ் மீது உள்ள பற்றினால் தமிழ்ப்புலமை பெற்றவர். சிறந்த ஆராய்ச்சியாளர், தமிழில் வெளிவந்துள்ள பேரகராதிக் குழுத் தலைவராகப் பணி யாற்றியவர்.

தமிழ்ச்சுடர் மணிகள், இலக்கிய உதயம், காவியக்காலம், தமிழ் மொழி இலக்கிய வரலாறுபோன்ற பல நூல்களை இயற்றியவர். இவரது ஆராய்ச்சி முடிவுகளில் பலருக்கும் கருத்து வேறுபாடு உண்டு. காலம்: 1888—1956.

19. ந. மு. வேங்கடசாமி நாட்டார்: தஞ்சை மாவட்டம், நடுக்காவேரி. தமிழ்ப்பெரும்புலவர். சங்க இலக்கியங்களில் ஊற் றம் மிகுந்தவர், கபிலர், நக்கீரர் போன்ற உரைநடை நூல்களும், அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவிளையாடற்

புராணம் போன்ற நூல்களுக்கு உரையும் எழுதியவர். காலம் : 1884—1944.

20. ரா. வேங்கடாசலம் பிள்ளை : சேலம் மாவட்டம் மோகனூர். இலக்கண இலக்கியப் பெரும்புலவர். தஞ்சையில் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' தோன்றக் காரணமானவர். தவத்திரு ஞானியாரடிகளால் கரந்தைக் கவியரசு என்னும் பட்டம் பெற்றவர். எழுதியவை : ஆசான் ஆற்றுப்படை ; பல தமிழ்ப்பாடல்கள். காலம் : 1885—1953.

21. ரா.பி. சேதுப்பிள்ளை: நெல்லை மாவட்டம், இராசவல்லிபுரம். கார்காத்த வேளாளர். வழக்கறிஞர் பட்டம் பெற்றவராயினும் தமிழ் பயின்று புலமை பெற்றவர். சொல்லடுக்கிப் பேசும் நாவன்மை மிகுந்தவர். அழகிய தமிழ்நடை எழுதும் ஆற்றல் வாய்ந்தவர். தமிழுலகம் இவரைச் 'சொல்லின் செல்வர்' எனப் பாராட்டி மகிழ்ந்தது.

ஊரும் பேரும், சிலப்பதிகார நூல்நயம், தமிழ் இன்பம், கடற்கரையிலே போன்ற பல இனிய நூல்களை எழுதியவர். ஆராய்ச்சித்திறம் மிகுந்தவர். கம்பராமாயணத்தில் தனித்திறமை பெற்றவர். காலம் : 1896—1961.

22. கா. சுப்பிரமணியப் பிள்ளை : நெல்லை; சட்ட நிபுணர். ஆயினும் தமிழ்ப்பணி புரிந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர். சைவ சமயம் வளர எழுத்தாலும் பேச்சாலும் தொண்டாற்றியவர். மெய்கண்டாரும் சிவஞான போதமும், திருவாசகக் குறிப்புரை, தமிழ் இலக்கியவரலாறு போன்ற அரிய நூல்கள் எழுதியவர். காலம் : 1888—1945.

23. சதாசிவ பண்டாரத்தார் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித்துறையில் அரும்பணி ஆற்றியவர். கல்வெட்டு ஆராய்ச்சி வல்லுநர். முதற் குலோத்துங்கன், பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகியன படைத்தவர். காலம் : 1960.

24. நாவலர் சோமசுந்தர பாரதியார் : பசுமலை; வழக்கறிஞர் தொழிலை விட்டுத் தமிழ்ப்புலமை பெற்றவர். தமிழ்ப்பற்று மிகுந்தவர். தமிழ்ப்பேராசிரியர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், நற்றமிழ் போன்ற அரிய ஆய்வு நூல்களைப் படைத்தவர். இவர் இயற்றிய 'மாரிவாயில்' என்னும் கவிதை நூல் புகழ் பெற்றது.

இவர் நூல்கள், கவிதை பொங்கும் மிடுக்கு நடையில் அமைந்தன. மொழிப் போராட்டத்துக்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியைத் துறந்தவர். காலம் : 1878-1959.

25. வ. உ. சிதம்பரம் பிள்ளை : தலைசிறந்த தேசபக்தர்; அதற்காகவே தம் வாழ்நாளை ஈந்தவர். தொல்காப்பிய உரை, திருக்குறள் மணக்குடவர் உரை, இன்னிலை ஆகியவற்றைப் பதிபித்தவர். 'மனம் போல வாழ்வு' முதலிய சில தமிழ் நூல்களை இயற்றினார். காலம் : 1872-1936.

26. ரா. இராகவையங்கார் : இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அரசவைப்புலவர். சிறந்த ஆராய்ச்சித்திறன் மிகுந்த தமிழறிஞர். எழுதியன: வஞ்சிமாநகர், சேதுநாடும் தமிழும், நல்லிசைப்புலமை மெல்லியலார் போன்ற உரைநடை நூல்கள், குறுந்தொகை விளக்கம்: பெரும்பாணாற்றுப்படை விளக்கம். காலம் : 1870-1948.

27. மு. இராகவையங்கார்: ஆராய்ச்சி வல்லவர்; சேது சமத்தான அட்டாவதானி முத்துசாமி ஐயங்கார் புதல்வர். கம்பராமாயண வல்லுநர். வேளிர் வரலாறு, ஆழ்வார்கள் காலநிலை, சேரன் செங்குட்டுவன், சாசனத் தமிழ்க்கவி சரிதம், பெருந்தொகை முதலியன எழுதியுள்ளார். காலம்: 1878—1960.

28. மா. இராசமாணிக்கனார்: தஞ்சை தந்த தமிழ்ச்செல்வர். உழைப்பால் உயர்ந்தவர். பள்ளி ஆசிரியராக இருந்து படிப் படியாக உயர்ந்து, பண்டாரகர் ஆனவர்.

கல்வெட்டு, இலக்கியம், வரலாறு, சைவம் என்ற நான்குதுறை களிலும் பணிபுரிந்தவர். எழுதிய நூல்களுள் சில : பெரியபுராண ஆராய்ச்சி, பல்லவர் வரலாறு, தமிழ்மொழி இலக்கிய வரலாறு, இல்வாழ்க்கை, தமிழமுதம் போன்றவை. விவேகானந்தர், மதுரை தியாகராசர் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய வற்றில் பணி புரிந்தவர். காலம்: 1907-1967.

29. டாக்டர் சி. இலக்குவனார் : தஞ்சை மாவட்டம், வாய் மேடு. மாநிலக் கல்லூரி, உசுமானியாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர். அஞ்சா நெஞ்சினர். சங்க இலக்கியப் புலமை வாய்ந்தவர். தொல்காப்பிய ஆராய்ச்சி, பழந்தமிழ் போன்ற நூல்களைப் படைத்தவர். தந்தை பெரியாருடன் பழகிப் பகுத்தறிவுப் பணியாற்றியவர். 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றவர்.

30. திரு.ஐயன்பெருமாள் கோனார்: திருச்சிராப்பள்ளி. வளவர் கல்லூரியில் தமிழ்ப்பணி. வகுப்பில் பாடம் நடத்துவதில் தந்நிகர் அற்றவர். இவர் வகுப்பு எப்போது நிகழும்; தமிழ்த் தேன் உண்ணலாம் என மாணவர் காத்துக்கிடப்பர். கோனார் தமிழ்க் கையகராதி, பண்டைத் தமிழர் பண்பாடு, திருவிளை யாடற்புராண உரை, பிற நாட்டுச் சான்றோர் போன்றவை படைத்தவர்.

இவர் உரை எல்லா வகுப்புத் தமிழ் நூல்களுக்கும் உள்ளது. 'நூல் வரும் பின்னே ; கோனார் உரைவரும் முன்னே" என்பது புதுமொழி.

31. ஆ. கார்மேகக் கோனார் : மதுரை ; அமெரிக்கன் கல்லூரி. இந்திய மொழித்துறைத் தலைமைப்பணி ; தமிழ்ப்பற்று ; ஆசிரியர்க்குரிய இலக்கணம் அத்தனையும் பெற்று அஞ்சாமல் பீடுநடை போட்டு முழங்கியவர். தமிழையே மூச்சாகக் கொண் டவர். 'சங்க கால நல்லிசைப் புலவர்கள்' எழுதியவர்.

32. டாக்டர். அ. சிதம்பநாதன் செட்டியார் : கும்பகோணம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையைச் சீராட்டி வளர்த்த பேராசிரியர். தமிழாசிரியர்களுள்ளே அழகு மிகுந்த, சிவந்த, நெடிய உருவினர். ஒருமுறை பார்த்தவர் மனத்தில் நிற்கக்கூடிய தோற்றப் பொலிவினர். தமிழாசிரியர்களின் தலைவர்.

சில நாள் அ. ப. கழகத் துணைவேந்தர் பதவி வகித்தவர். ஆங்கில-தமிழகராதிக்குத் தலைமை பூண்டவர். முன்பனிக்காலம், மன்னுயிர்க்கின்பம், தமிழோசை, சிலப்பதிகாரக் கட்டுரைகள் முதலிய நூல்களை எழுதியவர். இங்கிலாந்து போன்ற நாடு களுக்குச் சென்று இன்தமிழ் பரப்பிய பேரறிஞர். அறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் இடம் பெற்றவர். காலம் : 1907.

33. டாக்டர். மு. வரதராசனார்: வடாற்காடு மாவட்டத் திருப் பத்தூர். மாநிலத்தில் வித்துவான் வகுப்பில் முதல்வராகத் தேறித் திருப்பனந்தாள் பரிசாக 1000 வெண்பொற்காசுகளைப் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற முதல்வர் இவரே. பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராகவும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும், மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும் பதவி வகித்தவர். காலம் 1912 - 1974

திரு. வி. க. வின் மாணவர்; கடமை வீரர்; இடைவிடாது எழுதிக் குவித்தவர்.

இவரது படைப்புகள்: நாவல்கள் 13; சிறுகதைத் தொகுதி 2; சிந்தனைக்கதை 2, நாடகம் 6, கட்டுரை இலக்கியம் 11, இலக்கிய நூல்கள் 24, சிறுவர் இலக்கியம் 4, கடித இலக்கியம் 4, பயண நூல் 1, இலக்கிய வரலாறு -1, மொழி இயல் நூல்கள் 6, வாழ்க்கை வரலாறு 4, ஆங்கில நூல் 2 ஆகிய 80-க்கும் மேற்பட்டன.

இத்தனை நூல்களை எழுதி மக்கள் ஆதரவைப் பெற்றவர் எவரும் இலர்.

## 12. கிறித்தவப் புலவர்கள்

கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலை நாட்டவர் பலர் வாணிகத்தின்பொருட்டுத் தமிழகம் வந்தனர். அவர்களோடு கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் பாதிரிமார் சிலரும் வந்தனர். பன்மொழித்துறை அறிவும், பரந்த நோக்கமும் கொண்ட அப்பெருமக்கள் தமிழை நன்கு பயின்று தமிழ்ப்பணியும் சமயப்பணியும் ஆற்றினர். தமிழ் வளர்ச்சியே தம் சமய வளர்ச்சி எனக் கருதினர். அதன் விளைவாகத் தமிழில் பல மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டன. அப்புலவர் பெருமக்களை இப்பகுதியில் காணலாம்.

அவர்தம் பணிகள் சில:

உறங்கிக்கிடந்த தமிழர்களை உணர்ச்சி பெறச் செய்து, அவர்தம இலக்கிய இலக்கணப் பெருமைகளைப் பாட்டாலும் உரையாலும் அறியச்செய்தனர்.

தாங்கள் தமிழை நன்கு பயின்றதோடு தமிழ் மக்களையும் பயிலச் செய்தனர்; தமிழில் பேரார்வத்தை மூட்டினர்.

அச்சுப் பொறிகளை அமைத்துத் தமிழ் ஏட்டுச் சுவடிகள் பல நூல் வடிவில் வெளிவர உதவினர்.

தமிழ் உரைநடை இலக்கியத்தைத் தோற்றுவித்து வளர்த்தனர்.

தமிழ் எழுத்துகளில் சில மாற்றங்களைச் செய்து, சிக்கல்களையும் சிரமங்களையும் நீக்கினர்.

தமிழ் இலக்கியங்களை மேனாட்டவரும் படித்து அவற்றின் பெருமைகளை அறியும்வண்ணம் பல மொழிகளில் மொழி பெயர்த்தனர்.

சிறந்த இலக்கண இலக்கிய நூல்களை இயற்றித் தமிழ் அன்னைக்கு அணிகலன்களாகச் சூட்டினர்.

தமிழ்த்துறையில் விஞ்ஞானக் கருத்துகளைப் புகுத்தித் தமிழ் வளத்தைப் பெருக்கினர்.

பழைய குறுகிய போக்குகளை மாற்றித் திறனாய்வு முறையில் தமிழ் நூல்களை அணுகும் முறையைப் புகுத்தினர்.

நாவல், சிறுகதை, நாடகம் போன்ற மேனாட்டு முறைகளைத் தமிழில் பரப்பினர். இதனால் பெரும் அளவுக்குத் தமிழ் மொழி வளர்ந்தது. செய்தித்தாள்கள் தமிழில் பல்கின. இத்தகைய பணியினைச் செய்தவர்களுள் வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி. யு. போப் ஆகிய மூவரும் முதன்மை பெற்றோராவர்.

1. வீரமாமுனிவர் (1680-1746): இத்தாலிய நாட்டு மதகுரு. கத்தோலிக்க மதத்தைப் பரப்பத் தமிழகம் வந்தவர். இயற் பெயர், கான்ஸ்டாண்டியஸ் ஜோசப் பெஸ்கி. பிரஞ்சு, இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு, இத்தாலி, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழி களில் புலமை பெற்றவர். சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் பயின்றவர்.

தமிழ் எழுத்துகளைத் திருத்தியமைத்தார்; 'எ'கர 'ஒ'கரங்கட்கு நீண்ட புள்ளிகளையும் மெய்யெழுத்துகளுக்குச் சுழித்த புள்ளி களையும் அமைத்தார். இதன் பயனாக இப்போதுள்ள 'ஏ' 'ஓ' வடிவங்கள் எழலாயின. இவ்வாறு பல எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர் இவரே. நீட்டல், சுழித்தல், குறில் மெய்க்கிருபுள்ளி எனத் தம்முடைய தொன்னூல் விளக்கத்தில் விதியும் வகுத் தமைத்தார். நிறுத்தற்குறிகளான காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளிகளையும் அமைத்தவர் இவரே. இவர் இயற்றியன: வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பரமார்த்த குரு கதை, (முதன் முதலில் எழுதப்பட்ட தமிழ் உரைநடை நூல் இது.) தொன்னூல் விளக்கம், சதுரகராதி, திருக்குறள்—ஆங்கில மொழி பெயர்ப்பு. சிறந்த கிறித்தவக் காப்பியமான தேம்பாவணி.

2. டாக்டர் ஜி. யு. போப் (1820-1907) : இங்கிலாந்து வெஸ்லியன் மிஷன் சார்பில் தமிழகம் வந்தார். மகாவித்துவான் இராமானுசக் கவிராயரிடம் முறையாகத் தமிழ் பயின்றார்.

திருநெல்வேலி சாயர்புரம், நீலகிரி ஆகிய இடங்களில் தங்கிச் சமயப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்தார்.

திருக்குறள், நாலடியார்—இரண்டையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மாணவர் பயிலும் வண்ணம் 'Elementary Tamil Grammar' என்னும் பெயருடன் தமிழ் இலக்கணத்தை மூன்று பாகங்களாக எழுதினார்.

'சிவஞான போதம்' என்னும் சித்தாந்த நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மொழிபெயர்ப்புத்துறைக்கு வழி காட்டியவர் இவரே எனலாம்.

தமிழின் பெருமையை உலகறியச்செய்த பெருமை இவருக் குரியது. தமிழ்மீது கொண்ட அளவற்ற காதலால் தம் கல்லறை மீது' 'ஒரு தமிழ் மாணவன்' என எழுதச்செய்தவர் இவ்வறிஞர்.

3. டாக்டர் கால்டுவெல் (1815-1891) : அயர்லாந்து நாட்டினர். 23 ஆவது வயதில் சமயப்பணி புரியத் தமிழகத்திற்கு வந்தார். திருநெல்வேலி மாவட்ட இடையன்குடியைத் தம் வாழிடமாகக் கொண்டார். இவர் மேனாட்டு மொழிகளிலும், தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற தென்னாட்டு மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால் அவற்றை ஆராய்ந்து, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative Grammar of the Dravidian Languages) என்னும் அரிய நூலை எழுதினார். இந்நூல், ஆரிய மொழிகள் வேறு; திராவிட மொழிகள் வேறு; தமிழுக்கும் வடமொழிக்கும் எவ்வித உறவும் இல்லை; தமிழ் பிற மொழிகளின் உதவியின்றித் தனித்தியங்க வல்லது என்பதை அறுதியிட்டு உரைக்கின்றது.

தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள் கொண்டு, பிற மொழிகளில் பயின்று வரும் சொற்களை இவர் எடுத்துக்காட்டியுள்ளமை, ஓர் அரிய பணி என்னலாம்.

நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம் போன்ற உரைநடை நூல்கள் இவரால் எழுதப்பட்டன. அகழ்வாராய்ச்சி செய்து இவர் எழுதிய 'நெல்லை மாவட்ட வரலாறு'க்கு அரசினர் நன்கொடையாக 1000 வெண்பொற்காசுகள் அளித்தனர்.

4. தத்துவபோதகர் (1577-1656): இத்தாலி நாட்டவர். இயேசு சபை குரு. தமிழகம் போந்து தமிழ்ப்பணி செய்தவர். இயற்றி

யன: தமிழ்—போர்ச்சுக்கிசிய அகராதி, மந்திரமாலை, ஞானோபதேசம், தத்துவக் கண்ணாடி முதலியன.

5. சீகன் பால்கு (1683-1719) : செர்மன் நாட்டவர். நான்காம் ஃபிரெடிரிக் மன்னன் விருப்பப்படி சமயப்பணி புரியத் தமிழகம் வந்தவர்.

தரங்கம்பாடியில் ஓர் அச்சகம் நிறுவி, கிறித்தவ சமயக் கருத்துகளை அச்சடித்து வெளியிட்டார். பண்டிதரிடையே முடங்கிக் கிடந்த தமிழைப் பாமரரிடையே பரப்பினார்.

தமிழ்-இலத்தீன் ஒப் பிலக்கணமும், தமிழ்-இலத்தீன் அகராதியும் இவரால் எழுதப்பட்டன.

6. எல்லிஸ் (1819) : ஆங்கில நாட்டினின்றும் சென்னை வந்து நிலவரி மன்றச் செயலாளராய் இருந்தவர். தமிழ் பயின்றவர். அரிய தமிழ்ச்சுவடிகளைப் பாதுகாத்தவர். சென்னை அரசாங்கக் கல்விச் சங்கத்தை நிறுவியவர்.

இவர், வீரமாமுனிவர் வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார்; பெஸ்கியின் 'தேம்பாவணி' ஏட்டுப்பிரதியை ஆவூர் என்னும் சிற்றூரில் கண்டெடுத்தவர் இவரே. திருக்குறளின் முதல் 13 அதிகாரங்கட்குப் பண்டைத் தமிழ் இலக்கிய மேற்கோள்களுடன் அரிய உரை ஒன்று எழுதியுள்ளார். இவர் எண்ணற்ற ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து வைத்திருந்தார். இவர் இறந்தபின், அவற்றின் அருமை அறியாத கலெக்டர் பெட்ரே என்பவரின் சமையல்காரன், பல மாதங்கள் அவற்றை அடுப்பெரிக்கப் பயன்படுத்தினான் என்பர்.

7. ரேனியஸ் (1790-1838) : செருமன் நாட்டவர். லூத்தரன் மிஷன் சார்பாகத் தமிழகம் வந்து, பாளையங்கோட்டையில் தங்கிப் பணியாற்றியவர்.

புதிய ஏற்பாட்டைத் தமிழில் எழுதினார். வேத உதாரணத் திரட்டு, தமிழ் ஞான நூல், தமிழ் இலக்கண நூல் என்பன இவர் எழுதியவை.

8. வேதநாயகம் பிள்ளை (1826-1889) : தமிழர்; கிறித்தவத் தொண்டர். குளத்தூர். மாயவரத்தில் முன்சீப் பதவி வகித்தவர். தமிழில் முதல் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் நூலை எழுதியவர். சர்வ சமய சமரசக் கீர்த்தனை, நீதிநூல். பெண்மதிமாலை, சுகுண சுந்தரி சரித்திரம், முதலிய 16 நூல்களை இவர் எழுதினர்.

தமிழ் நாவலுக்கு வித்திட்டவர் இவர். 'தமிழ் நாவலின் தந்தை' என இவரை வழங்குவர்.

9. H. A. கிருஷ்ணபிள்ளை *(1827-1900)* : 'கிறித்தவக் கம்பன்' எனப் புகழ் பெற்றவர். 'ஜான் பன்யன்' எழுதிய 'Pilgrims Progress' என்னும் நூலை 'இரட்சண்ய யாத்ரீகம்' என்னும் பெயரில் தமிழ்ப்படுத்தியவர். இது செய்யுள் நடையில் அமைந்த தமிழ்க் காப்பியம். இரட்சண்ய மனோகரம், இரட்சிண்ய சமய நிர்ணயம், இரட்சண்ய குறள் என்பவை மற்ற நூல்கள்.

10. வேதநாயக சாஸ்திரியார் *(1774-1864)* : தஞ்சையில் சமயப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்தவர். ஏசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, பெத்லகேம் குறவஞ்சியை 'இயற்றியவர்

ஞானதச்சன் நாடகம், ஞானக்கும்மி, சென்னை பட்டணப் பிரவேசம் போன்ற சில நூல்களையும் எழுதியுள்ளார்.

இவர்களையன்றித் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், நல்லூர் ஞானப்பிரகாசர், கனகசபைப் புலவர், மலேயா பல்கலைக் கழக இந்திய மொழித்துறைத் தலைவர் டாக்டர் தனிநாயக அடிகள், ரம்போலா மஸ்கர்னாஸ், வ. மீ. ஞானப்பிரகாச அடிகள், அடைக்கலசாமி, அருளானந்தம், பொன்னரசு, கிரேஸ் செல்வராஜ், சாமுவேல் தாசன், அபிரகாம் அருளப்பன், மோசஸ் பொன்னையா, டேவிட் அதிசியநாதன், ஜான் சாமுவேல், பால்சாமுவேல், பால்பாண்டியன், டாக்டர் இஸ்ரேல், ஏசுதாசன் போன்ற பல கித்தவ அன்பர்கள் தமிழ்ப்பணி ஆற்றிவருகின்றனர்.

## 13. இஸ்லாமியப் புலவர்கள்

ஏனைய மதத்தினர் இன்றமிழுக்குத் தொண்டு செய்ததைப் போலவே இஸ்லாம் மதத்தினரும் அரிய பணிகளை ஆற்றியுள்ளனர்.

கிறித்தவர்கள் தமது மத வளர்ச்சியைக் குறிக்கோளாய்க் கொண்டு தமிழ்ப்பணி செய்தனர்; சிலரை மதமாற்றமும் செய்தனர். மகம்மதியப் புலவர்கள் அவ்வாறன்றித் தம் சமயக் கருத்துகளை விளக்குவது ஒன்றை மட்டுமே குறிக்கோளாய்க் கொண்டு தமது நூல்களை இயற்றினர்.

1. உமறுப்புலவர்: சீறாப்புராணம்; கி. பி. 17-ஆம் நூற்றாண்டு. கீழக்கரை. சீதக்காதியின் வேண்டுகோளால் இந்நூலை இயற்றினார்.

2. கவிக்களஞ்சியப்புலவர் : நபி அவதார அம்மானையை இயற்றியுள்ளார், உமறுப்புலவருக்கு மகனான இவர்.

3. பிச்சை இபுறாகிம் புலவர் : திரு மதீனத்தந்தாதி.

4. குலாம் காதிறு நாவலர் : திரு மக்காத் திரிபந்தாதி, மதுரைச் சங்கத்துப் புலவராற்றுப்படை.

5. நயினா முகம்மது : நவனீத ரத்னாலங்காரச் சிந்து.

6 முகைதீன் நாவலர் : மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சீவிய சரித்திரக் கும்மி.

7. குணங்குடி மஸ்தான் சாகிபு : மஸ்தான் சாகிபு பாடல்.

8. செய்குத்தம்பிப் பாவலர் : சதாவதானி, சீறாப்புராண உரையாசிரியர். நாஞ்சில் நாட்டவர். தலைசிறந்த இஸ்லாமியக் கவிஞர். ஞானக்கோவை, திருநாகூர் திரிபந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் முதலியன.

9. சவ்வாதுப்புலவர் : நபிகள்மீது பிள்ளைத்தமிழ் பாடியவர். பாக்கள் புனைந்தே பெரும்பொருள் ஈட்டியவர்.

10. வண்ணக்களஞ்சியப்புலவர் : ஆத்மஞானி. நகைச்சுவையாகப் பாடுபவர். இவர் பாடியன 'பாடல் திரட்டு' என்னும் பெயரில் உள்ளன. தீன் விளக்கம், அலிபாதுஷா நாடகம்— இவர் படைப்புகள்.

11. சர்க்கரை - சவ்வாதுப் புலவர்கள் : இரு முஸ்லிம் புலவர்களும் மைத்துனர்கள். நகையாடுவதில் வல்லவர்கள். ஒரு முறை சவ்வாதுப்புலவர் ஒரு பள்ளி வாசலில் நுழைந்தார். உள்ளே தொழுதுகொண்டிருந்த சர்க்கரைப்புலவர், 'பள்ளி வாசலில் இருக்கக்கூடாத சவ்வாது எப்படி உள்ளே வந்தது ?' என்றார்.

உடனே சவ்வாதுப்புலவர், 'சர்க்கரை தொண்டை மட்டும் : சவ்வாது சுண்ட மட்டும்' என்று கூறி அனைவரையும் நகைப்பில் ஆழ்த்தினார். சர்க்கரைப்புலவரின் படைப்பு: "மெதீனா அந்தாதி ; சவ்வாதின் படைப்பு : மொகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ்.

# 14. இந்நூற்றாண்டுப் புலவர்கள்

**1. பாரதியார் (1882 - 1921) :**
சுப்பிரமணிய பாரதி ; எட்டையபுரத்தில் பிறந்த இவர், வடமொழி, இந்தி போன்ற பன்மொழிப்புலமை வாய்ந்தவர். தமிழகத்தின் ஈடும் எடுப்புமற்ற தேசிய கவிஞர். குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவை இவரது அமர நூல்கள். நாட்டு விடுதலைக்குப் பாடிய முதல் தமிழ்க்கவிஞர் இவர்.

**2. பாரதிதாசன் (1891 - 1964) :**
பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர். ஆனால், நிமிர்ந்த பகுத்தறிவுக் கண்ணோட்டமுள்ள புரட்சிப் பாடல்களை இயற்றியவர். இயற்பெயர், கனக-சுப்புரத்தினம். புதுவைக் கல்லூரித் தமிழாசிரியர் ; புரட்சிக் கவிஞர்.

கவிதை வாயிலாகத் தமிழகத்தில் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்.

> ''எங்கெங்கு காணினும் சக்தியடா —தம்பி
> ஏழு கடல் அவள் வண்ணமடா!''

என்னும் இரண்டடிகள் மூலம் பாரதியின் அன்புக்குப் பாத்திரமானவர். இவர் கவிதை நூல்களுக்குத் தமிழகமெங்கும் வரவேற்பு உண்டு.
படைப்புகளுள் சில : குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு, எதிரபாராத முத்தம், தமிழியக்கம், அழகின் சிரிப்பு முதலியன.

புரட்சிப் பொறி பறக்கும் கவிதைகளைப் பாடப் பாரதிதாசனுக்கு அடுத்து இன்னும் எவரும் பிறக்கவில்லை.

**3. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை (1876 - 1954)**
தமிழகத்தின் முதல் குழந்தைக்கவிஞர். கரும்பினும் இனிய சொற்களில் கவிதை பல பாடியவர். கவிமணி, தேவி என வழங்கப்படுபவர். இவர் நாகர்கோவிலை அடுத்த தேரூரில் தோன்றினார். எழுதிய நூல்கள் : மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்.

**4. நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை :**
சேலத்தை அடுத்த நாமக்கல். அரசவைக்கவிஞராகப் பணியாற்றியவர். சுதந்தியக் கவிஞர். இராஜாஜியால் பாராட்டப்

பட்டவர். படைப்புகள் : தமிழன் இதயம், சங்கொலி, அவனும் அவளும், மலைக்கள்ளன் முதலியன. இவர் பாடல்கள் பெரும் பாலும் தேசியம் பற்றியவை.

**5. ந. பிச்சமூர்த்தி (1900) :**

கும்பகோணம். புனைபெயர், ரேவதி. தமிழில் புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். யாப்பிலக்கண விதிகட்கு அடங்காத கவிதையை—வசன கவிதையை — வடித்த முதல்வர். படைப்புகள் : காட்டுவாத்து ; வழித்துணை.

**6. புலவர் குழந்தை (1906 - 78) :**

பவானி, பண்டைக் காவிய மரபை அடியொற்றி 'இராவண காவியம்' பாடியவர். அரசால் தடைவிதிக்கப்பட்ட காவியம் இது. மற்றையவை : அரசியலரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி, திருநணாச் சிலேடை வெண்பா. குழந்தைப் பாடல்கள்.

**7. கொத்தமங்கலம் சுப்பு (1910 - 74) :**

இராமநாதபுரம் - சுன்னாரியேந்தல். நாட்டுப்புறப் பாடல்கள் பல பாடியவர். கம்பராமாயணச்சிந்து, மஞ்சுவிரட்டு, நாட்டுப் பாடல்கள், காந்தி மகான் கதை, கவிபாரதியின் கதை. கிராமியப் பாடல்களை முதன் முதலாகத் தற்காலத்துக்கேற்ற படி கவிதையாக மாற்றியவர்.

**8. வாணிதாசன் (1915 - 74):**

புதுவையைச் சார்ந்த வில்லியனூர். மரபுக்கவிஞர்; தமிழாசிரியர். பாரதிதாசன் பரம்பரையுள் மூத்தவர் இவர். படைப்புகள் : தமிழச்சி, கொடிமுல்லை. எழிலோவியம், வாணிதாசன் கவிதை கள், பாட்டரங்கப்பாடல்கள், தொடுவானம், பாட்டுப் பிறக்குமடா போன்ற 14 படைப்புகள். இவை சமதர்ம நோக்கும் சீர்திருத்த போக்கும் மிகுந்தவை.

**9. கம்பதாசன் (1916 - 64) :**

இயற்பெயர், சி. சு. ராசப்பா. சோசலிசக் கொள்கையைத் தமிழ்ப்பாக்களில் வடித்தவர். இயற்றியவை : கம்பதாசன் கவிதைகள், புதிய பாதை.

**10. எஸ். டி. சுந்தரம் (1922 -79) :**

சேலம் மாவட்டம் ஆத்தூர். விடுதலைப் போராட்டக் கஞவிர். பாரதியிடம் பித்துக்கொண்டவர். உணர்ச்சி கொப்புளிக்கும்

உயிரோட்டம் மிகுந்த கவிஞர். படைப்புகள் : வருகின்றார் நேதாஜி, வானமுதம், கவியின் குரல், காந்தி யுகம்.

**11. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் (1930 - 59) :** தஞ்சை மாவட்டம். பொதுவுடைமைத் தத்துவத்தில் பூத்த பாட்டாளிக் கவிஞர். நாட்டுப்பாடல் மெட்டில் நாட்டம் கொண்டவர். திரைப்படப் பாடல்கள் பல இயற்றியவர்.

## 15. நாடக இலக்கியப் புலவர்கள்

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவினைக் கொண்டது. இத்தகைய பிரிவுகள் வேறு எம்மொழியிலும் இல்லை.

இவற்றுள் இயலையும் இசையையும் தன்னுள்ளே கொண்டது, நாடகம்.

நாடகத்தமிழ் பண்டைக் காலத்தில் வளர்ச்சி பெறவில்லை. கி. பி. 17-19-ஆம் நூற்றாண்டுகளில்தான் தமிழ் நாடகங்கள் புத்துயிர் பெற்று வளர்ந்தன.

தெருக்கூத்தாய் இருந்து வந்த இக்கலை, நாடகம் என்னும் நிலைக்கு உயர்ந்தது இந்த நூற்றாண்டுகளில்தான். தமிழில் படிக்கவும் நடிக்கவும் ஏற்ற வகையில் நாடக நூல்கள் பல எழுதப் பட்டன. அத்தகைய நாடகங்களை எழுதிய கலைஞர்களுள் குறிப்பிடத்தக்க சிலரை இங்கு அறிமுகம் செய்கின்றோம்.

1. **இராசேந்திர ஆசிரியன் (கி. பி. 986 - 1017) :** இராசராச நாடகம்.
2. **கமலாலயபட்டர் (கி. பி.1118) :** பூம்புலியூர் நாடகம்.
3. **திரிகூட ராசப்பக் கவிராயர் :** குற்றாலக் குறவஞ்சி நாடகம்.
4. **கோவிந்த கவிராயர் :** ஒட்ட நாடகம்.
5. **கிருஷ்ணசாமி செட்டியார் :** காராளர் கார் காத்த நாடகம்.

6. **பரசுராம கவி:** சித்திராங்கத விலாசம்.
7. **அழகிய சுந்தரம் பிள்ளை:** மதுரை வீரன் விலாசம்.
8. **மீனாட்சிசுந்தர தாசர் :** ஆரவல்லி சூரவல்லி நாடகம்.
9. **தியாகராச பிள்ளை :** பவளக்கொடி நாடகம்.
10. **வையாபுரிப் பிள்ளை:** நல்லதங்காள் நாடகம்.
11. **சீர்காழி அருணாசலக் கவிராயர் :** இராம நாடகம்.
12. **கோபாலகிருஷ்ண பாரதியார் :** நந்தனார் சரித்திரம்.
13. **மகம்மது இப்ராகிம் :** அப்பாசு நாடகம்.
14. **சரசலோசன செட்டியார்:** சரசாங்கி.
15. **பரிதிமாற்கலைஞர் :** ரூபாவதி, கலாவதி, மானவிசயம்.
16. **கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் :** சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
17. **காசி விசுவநாத முதலியார் :** டம்பாச்சாரி நாடகம், தடபுட தாசில்தார்.
18. **அப்பாவுப் பிள்ளை :** அரிச்சந்திர விலாசம்.
19. **பம்மல் சம்பந்த முதலியார் :** சுகுண விலாச சபை என்னும் அமெச்சூர் நாடக மன்றம் நிறுவியவர். 80 தமிழ் நாடகங்கள் எழுதி நாடகத் தமிழுக்கு இணையற்ற தொண்டாற்றியவர். இவரால் தமிழ்நாடகம் புத்துயிர் பெற்றது நடிப்பவர்கள் 'கூத்தாடிகள்' எனப்பட்ட இழிநிலை மாறியது. இவரது மனோகரா அமரத்துவம் பெற்ற நாடகம்.
20. **சங்கரதாஸ் சுவாமிகள்:** 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' எனப் புகழ் பெற்றவர். அபிமன்யு, பவளக்கொடி, சதி அனசூயா போன்ற 40-க்கு மேற்பட்ட தமிழ் நாடகங்களை எழுதி அரங் கேற்றியவர். வடமொழி மிருக்ககடிகா, ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட், சிம்பலின், ஒத்தெல்லோ நாடகங்களைத் தமிழ்ப் படுத்தியவர். மணிமேகலை, பிரபுலிங்க லீலை ஆகியவற்றை நாடகமாக்கியவர்.
21. **ஏகை சண்முகம் பிள்ளை :** இராமாயணம், கண்டிராசா நாடகம்.
22. **அறிஞர் அண்ணா:** இவரது சமூக நாடகங்கள் தமிழகத்தில் பகுத்தறிவு பரவ உதவின. சந்திரோதயம், ஓர் இரவு, வேலைக் காரி, சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் முதலியன.

# 16. செந்தமிழ்ப் புரவலர்கள்

## சங்க கால மன்னர்கள்:

### 1. கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி :

இவன் கடைச்சங்கம் நிறுவித் தண்டமிழ் புரந்த பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவன் ; தமிழ் வளர்த்த பெருமைக் குரியவன். அகநானூற்றைத் தொகுப்பித்தோன். திருக்குறள் இவன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதென்பர்.

### 2. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் :

கடைச்சங்க காலப் பாண்டியருள் சிறந்தவன். பெரும் வீரன்; புலவரைப் போற்றும் பண்பினன். மாங்குடி மருதனார் போன்ற பல புலவர்களை ஆதரித்தவன். ஏழு மன்னர்களை ஒருசேர வென்று வீரப்புகழ் பெற்றவன். மதுரைக் காஞ்சியின் தலைவன் இவனே.

### 3. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் :

தமிழ் நாட்டரசர் மூவரினும் மேம்பட்டு விளங்கினோன். மதுரை மருதனிளநாகனார், நக்கீரர், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், ஆவூர் மூலங்கிழார் போன்ற பெரும்புலவர்களைப் போற்றியவன்.

### 4. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி :

பழங்காலப் பாண்டிய மன்னர்களுள் வேள்வியால் புகழ் பெற்றவன். தமிழ்ப்புலவர்களையும் ஆரிய முனிவரையும் ஆதரித்தவன். பல வேள்விகளைச் செய்தவன். பெரும் வள்ளல். காரி கிழார், நெட்டிமையார் போன்ற புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.

### 5. வேள் எவ்வி :

பெருங்கொடை வள்ளல். மிழலைக்கூற்றத்துத் தலைவன். உழுவித்துண்ணும் வேளாண் பெருமகன். கபிலர் போன்ற பெரும்புலவரால் பாடப்பட்டவன். 'ஓம்பா ஈகை மாவேள் எவ்வி' எனப் போற்றப்பட்டவன்.

### 6. சோழன் நலங்கிள்ளி :

இவன் கவி பாடுவதில் வல்லவன். பாண்டி நாட்டிலிருந்த ஏழரண்களை அழித்தவன். பெருவீரன். புலவர் பாடும் புகழுடை

யோன். புலவர் சொல்லை மதிப்பவன். கோவூர் கிழார், ஆலந்தூர் கிழார் போன்றோர் இவனைப் பாடியுள்ளனர்.

**7. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் :**

உறையூரை ஆண்டவன். மிகுந்த கொடையாண்மையும் படையாண்மையும் உடையோன். செய்யுள் இயற்றும் புலமை வாய்ந்தவன். புலவனாகவும் புரவலனாகவும் வாழ்ந்தவன். ஆவூர் மூலங்கிழார், மாறோக்கத்து நப்பசலையார், கோவூர் கிழார் போன்ற எண்ணற்ற புலவரால் பாடப்பட்டவன்.

**8. சோழன் கரிகால் பெருவளத்தான் :**

சங்ககாலச் சோழ வேந்தர்களுள் தலைசிறந்தவன். தமிழகத்தை வளப்படுத்திய வீரப்பெருவேந்தன். தண்டமிழ் வளர்த்தவன் ; தமிழ்ப்புலவர் பலரைப் பெருங்கொடையால் ஆதரித்தவன். மாபெரும் வீரன். பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தவன். பொருநராற்றுப்படையும் இவன்மீது பாடப்பட்டதே ஆகும்.

**கடையெழு வள்ளல்கள் :**

சங்க காலத்தில் தமிழகத்தில் குறுநில மன்னர்களாய் வாழ்ந்து தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தமது பெருங்கொடையால் போற்றியவர்கள் பலர். அவர்களுள் எழுவர் கடையெழுவள்ளல்கள் எனச் சிறப்பிக்கப்பட்டனர். அவர்களால் தமிழ் தழைத்தது. தமிழ்ப்புலவர்கள் போற்றப்பட்டனர். பல தமிழ் இலக்கியங்கள் தோன்றின.

**9. பறம்பிற்கோமான் பாரி :**

'பாரி' என்னும் வள்ளல் கபிலரையும், பல தமிழ்ப்புலவர்களையும் போற்றியவன். பெருங்கொடை வள்ளல். இவனது பறம்பு நாட்டில் உள்ள முந்நூறு ஊர்களையும் தன்னைப் பாடிய பாணர், புலவர் முதலானவர்களுக்கு ஈந்தான் எனப் புறநானூறு கூறுகின்றது. இவன் முல்லைக்குத் தேரீந்த வள்ளன்மை இலக்கியங்களால் பாராட்டப்படுகின்றது.

> "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
> பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
> பறம்பிற் கோமான் பாரி" —*89-91*

எனச் சிறுபாணாற்றுப்படை இவனைச் சிறப்பிக்கின்றது.

**10. மலையமான் திருமுடிக்காரி :**

இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். பெண்ணையாற்றங் கரையில் உள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவன். புலவர் போற்றிய புரவலன். பெருவீரன். பாடி வரும் பரிசிலர்க்குக் குதிரைகளை வழங்கியவன்.

"வாலுளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீந்த
அழல்திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கை காரி" —92—95

என்பது சிறுபாணாற்றுப்படை.

**11. ஆய் அண்டிரன் :**

பொதியமலைத் தலைவன். சிறந்த வீரன். ஆய்குடி என்பது இவன் ஊர். வேளாண்குடிப் பெருமகன். புலவர் பலரைப் போற்றிய பெருவள்ளல். இவனது வள்ளன்மை கண்டு மன முருகிப் பாடிய புலவர் பலர். இவன் நாகம் ஒன்றிடமிருந்து பெற்ற நீலக்கலிங்கத்தை ஆலமர் செல்வனுக்கு அளித்த சிறப் புடைமை அனைவராலும் போற்றப்படுகின்றது.

"நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்" —சிறுபாண் : 96—99.

**12. அதியமான் நெடுமான் அஞ்சி :**

போர் செய்வதில் நிகரற்ற பெருவீரன். வீர மழவருக்குத் தலைவன். நெடுங்காலம் நரைதிரையின்றி வாழக்கூடிய அமிழ்துவிளை நெல்லித்தீங்கனி ஒன்றை ஔவையாருக்கு ஈந்து மகிழ்ந்தவன். புலவர் பலரால் பாடப்பட்டவன். தமிழகத் தில் முதன் முதலில் கரும்பைக் கொண்டுவந்து பயிரிட்டவன்.

"கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கீந்த....
அதிகன். —சிறுபாண் : 100—103.

**13. நள்ளி :**

தோட்டிமலைக்குத் தலைவன். கண்டீரக்கோப் பெருநள்ளி எனவும் இவனை வழங்குவர். புலவரைப் போற்றிய வள்ளல்.

"கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கை
நளிமலை நாடன் நள்ளி"

—சிறுபாண் : 103—107

எனப் பாராட்டப்பட்டவன்.

**14. வல்வில் ஓரி :**

கொல்லிமலையை ஆண்டவன். குறி தவறாமல் அம்பு எய்ய வல்ல பேராற்றலன்.

"காரிக் குதிரை காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரி"

—சிறுபாண் : 110—11

எனப் புகழ் பெற்றவன்.

**15. பேகன்**

வையாவிக்கோப் பெரும்பேகன் எனப்பட்டவன். பெருவள்ளல். புலவர் பலருடைய அன்புக்குப் பாத்திரமானவன். இவன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து பரத்தை ஒருத்தியோடு வாழ்ந்த போது, புலவர் பலர் வந்து வற்புறுத்தி, மீண்டும் கண்ணகியோடு கூடி வாழச்செய்தனர்.

குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை தந்த வள்ளல் இவன்.

"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன்"

— சிறுபாண் : 85—87.

**16. குமணன் :**

தமிழுக்குத் தலை கொடுத்த பெருந்தகை. வள்ளல்கள் எழுவருக்குப்பின் வண்டமிழ் புரந்தவன். பெருஞ்சித்திரனாரால் பாடப்பட்டவன். முதிரமலையை ஆண்டவன்.

**17. சிறுகுடிகிழான் பண்ணன் :**

'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன் பண்ணன்' எனப் பைந்தமிழ்ப் புலவரால் பாராட்டப்பட்ட கொடைவள்ளல். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் புகழ்ந்து பாடப்பெற்றவன். 'சிறுகுடி' இவனது ஊர்.

**18. ஓய்மான் நல்லியக்கோடன் :**

ஓய்மானாட்டை ஆண்டவன். இவன் காலத்தில் இவனைக் காட்டிலும் சிறந்த கொடையாளர் எவரும் இலர் என்று கூறப் படுகிறது. சிறுபாணாற்றுப்படை கொண்டவன்.

**19. தொண்டைமான் இளந்திரையன் :**

கடியலூர் உருத்திரங்கண்ணனாரைப் போற்றிப் பெரும் பாணாற்றுப்படை கொண்டவன்.

"அல்லது கடிந்து அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன்"

எனப் பாடப்பெற்றவன்.

**20. நன்னன் :**

பெருவள்ளல் ; இவன் செங்கண் மாவேள் சேய் நன்னன் நன்னன் என வழங்கப்படுவான். தமிழ் வரலாற்றில் வரும் பெண் கொலை புரிந்த நன்னன் இவனல்லன்.

'மலைபடுகடாம்' என்னும் பாட்டினால் புகழப்பெற்றவன்.

**21. சீயகங்கன் :**

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் கன்னடப்பகுதியை ஆண்ட குறு நில மன்னன். பவணந்தி முனிவரை ஆதரித்தவன். நன்னூல் எழுதக் காரணமாயிருந்தவன்.

**22. மூன்றாம் நந்திவர்மன்:-**

தமிழுக்காகவே உயிர் தந்த வள்ளல். நந்திக்கலம்பகம் கொண்டவன்.

**23. சந்திரன் சுவர்க்கி :**

புகழேந்திப்புலவரை ஆதரித்தவன். முரணை நகர் மன்னன். நளவெண்பா பாடுவித்தவன்.

**24. சடையப்ப வள்ளல் :**

திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த பெருவள்ளல். கம்பரை ஆதரித்தவர். இராமாயணம் பாடக் காரணமாயிருந்தவர்.

"அடையா நெடுங்கதவும்
'அஞ்சல்'என்ற சொல்லும்
உடையான் சடையன்"

எனச் சிறப்பிக்கப்பட்டவர். கம்பர் இவரைத் தமது நூலில் 10 இடங்களில் வைத்துப் பாடியிருக்கின்றார்.

**25. ஏகம்பவாணர் :**

கம்பரை ஆதரித்தவர். உழுவித்துண்ணும் வேளாளப் பெருங் குடி வள்ளல்.

**26. வரபதி ஆட்கொண்டான் :**

கொங்கு நாட்டை ஆண்ட கோமகன், வில்லிபுத்தூராரை ஆதரித் துப் பாரதம் பாடுவித்தவன். வக்கபாகை இவன் தலைநகர்.

**27. அனபாயன் :**

பிற்காலச் சோழருள் பெரிதும் தமிழ்ப்புலவரைப் போற்றியவன். சேக்கிழார் இவனால் ஆதரிக்கப்பட்டுப் பெரியபுராணம் பாடினார். கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

**28. முத்து வடுகநாத துரை :**

பிற்கால வள்ளல்களுள் குறிப்பிடத்தக்கவர். சிவகங்கை பெரு நிலக்கிழார். திருப்பூவணம் கந்தசாமிப் புலவரை ஆதரித்தவர்.

**29. வள்ளல் சீதக்காதி :**

முகம்மதிய வள்ளல். உமறுப்புலவரை ஆதரித்தவர். சீறாப் புராணம் பாடுவித்தவர்.

**30. திருமலை நாயக்கர் :**

துரையை ஆண்ட நாயக்க மன்னர். தமிழ்ப்புலவர்களையும் தெலுங்கு மொழிப்புலவர்களையும் ஆதரித்தவர். குமரகுருபரர் இவர் காலத்தில் வாழ்ந்தவர்.

**31. வெங்களப்ப நாயக்கர் :**

**32. தளவாய் சேதுபதி (கி. பி. 1647) :**

சிற்றிலக்கியங்கள் பல பாடுவித்தவர்கள். அழகிய சிற்றம்பலக் கவிராயர் போன்றவர்களை ஆதரித்தவர்கள்.

**33. காவை வடமலையப்பப் பிள்ளையன் :**

வென்றிமலைக் கவிராயர், நாராயண திட்சிதர், திருமேனிக் கவிராயர் போன்றவர்களை ஆதரித்தவர். இலக்கியங்கள் பல எழுதுவித்தவர்.

**34. அண்ணாமலை ரெட்டியார் :**

புரவலரும் புலவருமாகத் திகழ்ந்தவர். இலிங்கா ரெட்டியாருக்குப் புதல்வர். வெள்ளாற்றுக்கு வடகரையில் உள்ள முப்பது வட்டங்

களுக்குப் பொறுப்பாளர். தமிழ்ப்பற்று மிகுந்தவர். காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் வேறு; இவர் வேறு. சிவப்பிரகாச சுவாமிகளைத் துறைமங்கலத்தில் தங்கச்செய்து பலதமிழ் நூல்கள் பாடச் செய்தவர்.

**35. எட்டப்பர் (1665) :**

எட்டையபுர மன்னர். அமரகவி பாரதியாரை ஆதரித்தவர். தமிழ்ப்பற்று மிகுந்தவர். புலவர் பலரைப் போற்றியவர்.

**36. பாஸ்கர சேதுபதி :**

இராமநாதபுர மன்னர். தமிழ்ப்பற்று உள்ளவர். தமிழ் வளர்த்தவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலியவற்றைப் பொருட்கொடையால் வளர்த்தவர்.

**37. வள்ளல் அழகப்பர் :**

நகரத்தார் வணிக குல வள்ளல். காரைக்குடியில் பொறியியல் கல்லூரி முதலிய பலவகைக் கல்வி நிறுவனங்களை அமைத்துக் கல்வி வளரப் பெருங்கொடை நல்கியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு ஐந்து நூறாயிரம் வெண்பொற்காசுகள் தந்து பொறி இயல் துறையை வளர்த்தவர். பலநூல்கள் தோன்றுதற்குத் தோன்றாத்துணையாய் இருந்துதவியவர். அறிஞரைப் போற்றிய பெருங்கொடை வள்ளல்.

**38. அண்ணாமலை அரசர் :**

இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் என்னும் பெயரைத் தமிழகத்தில் அறியாதவர் இலர். சிதம்பரத்திற்கருகிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அமைத்த பெருமகனார் இவர்.

பெரும்பொருளைக் கல்விப்பணிக்காக அளித்த நகர வணிகர் குலப் பெருவள்ளல். இத்தகைய வள்ளன்மைக்காகச் 'செட்டி நாட்டு இராஜா' என்னும் பரம்பரைப் பட்டத்தைப் பிரிட்டிஷ் பேரரசு இவருக்கு நல்கியது.

இவர் கானாடுகாத்தானில் முத்தையச் செட்டியாருக்கு மைந்ராய் 30-9-1881-இல் பிறந்தார். வணிகத்துறையில் தாம் ஈட்டிய பெரும்பொருளைக்கொண்டு கானாடுகாத்தானில் லேடி பென்ட் லண்டு மருத்துவச்சாலையையும், சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியையும் நிறுவினார். 1927-இல் சிதம்பரத்தில் தமிழ்க் கல்லூரியையும், வடமொழிக் கல்லூரியையும், ஆசிரியர்பயிற்சிக் கல்லூரியையும் நிறுவி அருந்தமிழ் வளரத் தொண்டாற்றினார். 1928 - இல் இசைக்கல்லூரி கண்டார். அதே ஆண்டில் மேலும்

28 நூறாயிரம் வெண்பொற்காசுகள் தந்து, அக்கல்லூரிகளை எல்லாம் இணைத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக உருவாக்கினார்.

இவர் மிகுந்த தமிழ்ப்பற்றுக் கொண்டவர். தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவர். தமிழுக்குப் பெருங்கொடை நல்கியவர். பலதமிழ் நூல்கள் வெளிவர உதவியவர். தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்து அதைப் பல அறிஞர் பெருமக்களின் துணையால் வளர்த்தவர். இன்று மேடைகளிலும், இன்னிசை அரங்குகளிலும் தமிழ்ப்பாடல்கள் முழங்குவதற்குக் காரணமாய் அமைந்தவர்.

இவர் அமைத்த நிறுவனங்களையும், தொடங்கி வைத்த பணிகளையும் வாழையடி வாழையாக இவர் மைந்தர் முத்தையச் செட்டியார் அவர்கள் முழுப் பொறுப்போடு நடத்தி வருகின்றார்கள்.

தந்தையைப் போலவே மைந்தரும் தமிழ்ப்பற்று மிகுந்தவர். தமிழ்ப் புலவர்களையும் பல்துறைப் பேரறிஞர்களையும் போற்றி ஆதரவு நல்கும் பாங்கினர். வள்ளன்மை மிகுந்தவர். கடவுட் பற்றும், கனிதமிழ்ப் பற்றும் மிகுந்த முத்தைய வள்ளலின் ஆதரவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பலதுறைகளிலும் விரிவு பெற்று முன்னேறி வருகின்றது.

# நீலம்

## தமிழகம் ஊரும் பேரும்



# நானிலத் தமிழகம்

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்

# நீலம்

தமிழ் இலக்கியங்களுள் 'மணி' என வரும் இடங்கள் முத்தைக் குறிக்கும் அல்லது மாணிக்கத்தைக் குறிக்கும். 'நீலமணி' என வரும் இடங்கள் 'ஒன்பது வகை மணிகளுள் ஒன்றான 'நீலத்தைக்' குறிக்கும்.

மாணிக்க வகைகளுள் ஒன்றான நீலகந்தி வேறு; இந்த நீலமணி வேறு.

நீலமணிகளுக்கும் தமிழகச் சிறப்பிடங்களுக்கும் உள்ள பெரும் ஒற்றுமை ஒன்று உண்டு.

நீலமணிகள் நால்வகைப்படும் என சிலப்பதிகார உரை கூறுகின்றது.

"வெள்ளை சிவப்பு பச்சை கருமைஎன்று
எண்ணிய நாற்குலத்து இலங்கிய நிறமே"

என்பது, அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.

"நீலத் தியல்பு நிறுக்குங் காலை
நால்வகை வருணமும்"

எனப்பழம் பாடல் ஒன்று பகர்கின்றது.

தமிழகத்தின் நிலப்பகுதிகளும் நான்கு. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இக்காரணம் பற்றியே தமிழ் நிலத்தை 'நானிலம்' என வழங்கினர்.

நால்வகைப் பிரிவான நீலமணிகளாக வைத்துத் தமிழகத்தின் நானிலச் சிறப்பிடங்களும் இப்பகுதியில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

## நானிலத் தமிழகம்

பாரத நாட்டின் தென்பால் விளங்குவது, பழம்பெருமை சான்ற தண்டமிழ் நாடு. இது மூவேந்தரால் ஆளப்பெற்றது ஆதலின் "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனக் குறிக்கப்

பெற்றுள்ளது. பழந்தமிழகத்தில் தென்னாடு பாண்டியனுக்கும், கீழ்நாடு சோழனுக்கும், மேல்நாடு சேரனுக்கும் உரியதாக இருந்தது.

சிறுபாணாற்றுப்படை சேர சோழ பாண்டி நாடுகளை முறையே குடபுலம், குணபுலம், தென்புலம் எனக் குறிக்கின்றது.

பண்டைத் தமிழர் நால்வகை நிலங்களில் வாழ்ந்தனர்.

மலையும் மலைசார்ந்த இடமும், குறிஞ்சி
காடும் காடுசார்ந்த இடமும், முல்லை
வயலும் வயல்சார்ந்த இடமும், மருதம்
கடலும் கடல்சார்ந்த இடமும், நெய்தல்

என வழங்கப்பெற்றன.

இதனை,

"மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்,
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,
வருணன் மேய பெருமணல் உலகமும்,
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

எனப் பண்டைத் தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் பகுத்துரைக்கின்றது.

## 1. குறிஞ்சி

குறிஞ்சியை 'மலை' எனக் குறித்தல் பண்டை வழக்கு. தொல்காப்பியர் காலத்தில் வேங்கடமலை வட எல்லையாக இருந்தது. தமிழகத்தின் வட எல்லையாகத் திகழ்ந்ததால் 'வடமலை' என்றும், தெய்வமணம் நிறைந்தமையால் திருமலை என்றும், அது குறிக்கப்பட்டது.

பாண்டி நாட்டுத் தலைநகரமான மதுரைக்குப் பக்கத்தில் ஆனை மலையும், சிறுமலையும், பசுமலையும் அமைந்துள்ளன. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது, பொன்மலை; முருகன் எழுந்தருளியுள்ளவை, பழனிமலையும் சுவாமிமலையும் தொண்டை நாட்டுத் தணிகை மலையும்.

அகத்தியன் உறைந்து அருந்தமிழ் ஆய்ந்தது, பொதியமலை. சென்னைக்கு அருகே சிறப்புப் பெற்றிருப்பது, பரங்கிமலை. கார்த்திகையன்று கண்கொள்ளாக் காட்சியுடன் பொலிவது, திருவண்ணாமலை. புதுக்கோட்டையை அடுத்துள்ளது, குடுமியான் மலை.

**குன்றம்** என்னும் சொல் சிறுமலைகளைக் குறித்து வழங்கியது. அம்மலைச்சாரலில் அமைந்த ஊர்களும் குன்றம் எனவே குறிக்கப்பட்டன.

வேகவதியாற்றங்கரையிலுள்ள திருப்பருத்திக்குன்றம் காஞ்சியில் சமணர்களின் தவப்பள்ளியாக இருந்தது. மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் சிங்கார வடிவேலன் கோயில் கொண்டுள்ள சிறப்பைப் பரிபாடல் எடுத்துரைக்கின்றது. தொண்டை நாட்டில் திருக்கழுக்குன்றமும், நெற்குன்றம், பூங்குன்றம் என்னும் ஊர்களும் புகழ் பெற்றவை. முத்தாறு வந்து அடிதொழும் முதுகுன்றம் ஒரு சிவத்தலம்.

**'கோடு'** என்ற சொல் மலைவாழ் சிற்றூர்களைக் குறித்தது.

> சீர்கெழு செந்திலும் செங்கோடும்
> வெண்குன்றும் "

எனத் திருச்செங்கோட்டின் பெருமையைச் சிலப்பதிகாரம் பாடுகின்றது.

**கல், பாறை** என்பனவும் மலையைக் குறிப்பன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு வழங்கிய ஊர்கள் பல உண்டு.

பாண்டி நாட்டுப் பதிகளுள் ஒன்று, திண்டுக்கல், தமிழக அரசவைக் கவிஞராயிருந்த இராமலிங்கம் பிள்ளை பிறந்த ஊர், நாமக்கல். 'கல்லகம்' என்பது ஒரு புகைவண்டி நிலையம்.

பாறை என்னும் பெயரால் பழந்தமிழ் ஊர்கள் பல உண்டு. வைணவர்களின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று, திருவெள்ளறை. பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் அதனைப் பாடியுள்ளனர்.

'மணப்பாறை' என்னும் பெயரை பாண்டி நாட்டில் அறியாதார் யார்? பூம்பாறை, தட்டைப்பாறை, சிப்பிப்பாறை, குட்டைப் பாறை என்ற ஊர்களும் தமிழ்நாட்டில் உள்ளன.

**கிரி, அசலம், அத்திரி** போன்ற வடமொழிச் சொற்கள் மலையைக் குறிப்பன. இப்பெயர்களைக் கொண்ட ஊர்களும் எண்ணற்றன.

இரத்தினகிரி, சிவகிரி, புவனகிரி, தவளகிரி, வேதாசலம், விருத்தாசலம், சோணாசலம், சேஷாத்திரி, தோத்தாத்திரி என்பன அவற்றுள் சில.

'குறிச்சி' என வருவன குறிஞ்சி நிலத்தூர்களே. ஆழ்வார் குறிச்சி, கள்ளக்குறிச்சி, மங்கலக்குறிச்சி முதலியன குறிப்பிடத்தக்கவை.

## 2. முல்லை

பண்டைத் தமிழகம் மரஞ்செறிந்த காடுகளால் சூழப்பட்டிருந்தது. காடு கொன்று நாடாக்கி, குளந்தொட்டு வளம் பெருக்கிய தமிழ் மக்கள், காடுகளைக் குறிக்கும் பலவகைச் சொற்களால் ஆன பெயர்களையே பல முல்லைநிலச் சிற்றூர்களுக்கு இட்டு வழங்கினர்.

**வனம்** என்னும் சொல் காட்டைக் குறிக்கும். சிதம்பரம், முன்னாளில் 'தில்லைவனம்' எனப் பெயர் பெற்றிருந்தது. மதுரை, 'கடம்பவனம்' எனப்பட்டது. திருநெல்வேலியை வேணு வனம் என வழங்கினர். திண்டிவனமும் புன்னைவனமும் இலக்கியப் புகழ் பெற்றவை.

'**காடு**' என்னும் சொல் முல்லைநிலத்தூர்களைக் குறிக்க வழங்கியது.

தமிழ்நாட்டில் ஆர்க்காடும் ஆலங்காடும் வேற்காடும் களக்காடும் புகழ் பெற்று விளங்கின. ஆத்திமரம் நிறைந்திருந்த பகுதி, ஆர்க்காடு எனப்பட்டது. தொண்டை மண்டலத்தில் பழையனூருக்குப் பக்கத்தில் உள்ளது, திருவாலங்காடு. தேவாரத்தில் பழையனூர் ஆலங்காடு என இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது.

பொன்னேரிக்கு அருகே உள்ளது, பழவேற்காடு. வேலமரங்கள் நிறைந்திருந்தமையால் இது வேற்காடு எனப்பட்டது. ஐரோப்பியர் இவ்வூரைப் 'புலிக்காடு' என வழங்கினர்.

சேலத்தினருகே அமைந்துள்ள ஏர்க்காட்டின் அழகு அயல் நாட்டவரையும் கவரவல்லது. ஏர் என்பது அழகு. இன்றும்

அது பயணிகளின் அழகிய சுற்றுலாத்தலமாக விளங்கு கின்றது.

பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் ஏனைய இரு தமிழ் வேந்தருக்கும் இடையே போர் நடந்த இடம் திருவாலங்காடு (தலையாலங்கானம்) எனப் பெயர் பெற்றது.

பாண்டி நாட்டிற்கும் மலையாள நாட்டிற்கும் நடுவிலுள்ள நெடுஞ்சாலையில், பச்சையாற்றங்கரையில் பசுமையுடன் காட்சி தருவது, களக்காடு. இது மலை வளமும் ஆற்றுவளமும் அமைந்தது.

திருச்சாய்க்காடு, பனங்காடு, அரவங்காடு, தலைச்செங்காடு, தலைக்காடு, மாங்காடு, திருமறைக்காடு, திருவெண்காடு போன்ற பல ஊர்கள் உண்டு.

**கா, காவு** என்னும் சொற்கள் முல்லைநிலச் சோலையைக் குறிப்பன. மேற்குத்தொடர்ச்சி மலையில் செங்கோட்டைக்கு அருகே 'ஆரியன் காவு' என்னும் ஊர் உள்ளது: ஆரியங்காவில் ஐயப்பன் வழிபாடு புகழ் பெற்றது.

மலையாள நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் பாம்புக்காவுகள் உண்டு.

தொண்டை நாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று, திருத் தண்கா.

காவிரிக்கரையில் தழைத்திருந்த சோலையொன்றில் அமர்ந் திருந்த ஈசனை, ஒரு வெள்ளானை நாள்தோறும் நன்னீராட்டி வழிபட்டு வந்தது என்பர். அவ்விடம், 'திருவானைக்கா' எனப் பட்டது.

சீர்காழிக்கு அருகே உள்ள தலம் 'திருக்கோலக்கா' என்னும் சோலை சூழ்ந்த வளம்பதி உள்ளது. அங்கு இறைவனிடம் பொற்றாளம் பெற்றார் திருஞானசம்பந்தர். நெல்லிவன மொன்றில் சிவபெருமான் காட்சி தந்த இடம் 'நெல்லிக்கா' எனப் பட்டது.

'திருக்கோடிகா' என்னும் சோலைசூழ் கோயில் திருவிடை மருதூரின் அருகே அமைந்துள்ளது. மந்திகள் கனி கொடுத்துக் கொஞ்சும் 'குரங்குக்கா' ஒன்று புள்ளிருக்குவேளூருக்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

**பொழில்** என்பது சோலையை உணர்த்தும். இப்பெயரால் வழங்கிய ஊர்களும் உண்டு.

ஆலமரங்கள் அடர்ந்துள்ள, சோலை சூழ்ந்த அழகிய நகரைத் 'திருஆலம் பொழில்' எனத் தேவாரம் பாடியது.

திருக்குற்றால மலையின் அடிவாரத்தில் அமைந்த சிற்றூர் ஒன்று 'பைம்பொழில்' என வழங்கப்படுகிறது. அதனைப் 'பம்புளி' எனச் சிதைத்துவிட்டனர் இக்காலத்தினர்.

**சோலை** என்னும் பெயரால் அமைந்த ஊர்களும் பல உண்டு.

தென்மதுரைக்கு அருகில் உள்ள அழகர்கோயில் அந்நாளில் 'திருமாலிருஞ்சோலை' என வழங்கப்பட்டது. இம்மலையைப் 'பழமுதிர்சோலை' எனத் திருமுருகாற்றுப்படை பாடுகின்றது.

சேலம் மாவட்டத்தில் 'தலைச்சோலை'யும், திருச்சிராப்பள்ளியில் திருவளர் சோலையும் உள்ளன.

**'தோப்பு'** என்னும் சொல்லால் வழங்கப்படும் ஊர்களை இன்றும் காணலாம். சென்னையில் கொண்டித்தோப்பு உள்ளது. 'மான் தோப்பு' என்னும் ஊர் இராமநாதபுரத்தில் உள்ளது. நெல்லித்தோப்பு தஞ்சை மாவட்டத்திலும், சேத்தியாத்தோப்பு, வெளவால் தோப்பு, சாலியத் தோப்பு முதலியவை தென்னார்க்காட்டிலும் உள்ளன.

**தண்டலை** என்பதும் சோலையைக் குறிக்கும். அது தண்டரை என்றும், தண்டலம் எனவும் வழங்கப்படும்.

காவிரிக்கரையில் செழுமையான சோலைகளின் நடுவே அமைந்த ஊர் ஒன்று 'குழித்தண்டலை' என வழங்கப்பட்டது. தொண்டை நாட்டில் பூந்தண்டலம், பழந்தண்டலம், பெருந் தண்டலம் என்னும் ஊர்கள் இன்றும் உள்ளன. இவை அக்காலத்தில் சோலை சூழ்ந்த சிற்றூர்களாக இருந்தன போலும்.

முல்லை நிலத்து ஊர்கள் **பாடி, பட்டி** என்ற பெயர்களால் அன்றும் வழங்கின; இன்றும் வழங்கப்படுகின்றன.

சண்டேச நாயனார் பசுக்களை மேய்த்து ஈசனுக்குப் பாலால் பூசித்த இடம், 'திருஆப்பாடி' எனப்பட்டது. இது திருப்பனந்தாளுக்கு அருகில் உள்ளது.

கண்ணன் பிறந்து வளர்ந்த கோகுலம் 'ஆயர்பாடி' என அழகு தமிழில் குறிக்கப்பட்டது. வட ஆர்க்காட்டில் வேலமரங்கள் நிறைந்த இடம் 'வேலப்பாடி' என்னும் பெயரால் வழங்கப்

பட்டது. வேலப்பாடியின் அருகே வேலூர் தோன்றியது. வேலூரின் அங்கமாய் வேலப்பாடி அமைந்துவிட்டது.

'காட்பாடி', ஒரு பெயர்பெற்ற புகைவண்டிச் சந்திப்பு நிலையம். 'குறிஞ்சிப்பாடி' தென்னார்க்காட்டில் உள்ளது.

கடல் அலைகளின் இனிய பாடல் ஒலிக்கும் துறைமுகச் சிறுநகர் ஒன்று 'தரங்கம்பாடி' எனப்பட்டது. அதனை 'ட்ரங்பார்' எனச் சிதைத்து வழங்குகின்றனர்.

'கங்க பாடியும் கடிகை பாடியும்
நுளம்ப பாடியும்'

வென்று மேம்பட்டான் இராசராசன் என அவனது மெய்க்கீர்த்தி புகழ்கின்றது.

'பட்டி' என்னும் பெயர் முல்லைச் சிற்றூர்களைக் குறிக்கும். இராமநாதபுர மாவட்டத்திலும் கொங்குநாட்டிலும் பட்டிகள் அதிகம்.

கோவிற்பட்டி, மிதிலைப்பட்டி, கீழைச் சிவல்பட்டி, உலகம் பட்டி போன்ற ஆயிரக்கணக்கான பட்டிகள் பாண்டி நாட்டில் உண்டு.

**'மந்தை'** என்னும் பெயரும் முல்லைநிலக் குடியிருப்புகட்கு உண்டு.

வடார்க்காட்டில் வெண்மந்தை, புன்செய் மந்தை முதலியன உண்டு. நீலகிரியில் மாடு மேய்த்தலையே தொழிலாகக் கொண்ட தோடர் உண்டாக்கிய ஊர் 'ஒத்தக்க மந்து' என்பது.

**'குடி'** என வழங்கப்படும் ஊர்களுக்கும் தமிழ்நாட்டில் குறைவே இல்லை. குடி என்பது குடி இருப்பை உணர்த்தும்.

தஞ்சை நாட்டில் பேரளத்துக்கருகில் சிறுகுடி உள்ளது. சங்க கால வள்ளல்களுள் ஒருவனான பண்ணனது ஊர் 'சிறுகுடி' எனப் புறநானூறு பேசுகின்றது. 'இளையான்குடி' மாற நாயனாரைப்பற்றிப் பெரியபுராணத்தால் அறிகின்றோம். சிறுத்தொண்டரின் ஊர் செங்காட்டங்குடி. கல்லக்குடி, விற்குடி, வேள்விக்குடி போன்ற ஆயிரக்கணக்கான குடிகள் தமிழ்நாட்டில் உண்டு.

## 3. மருதம்

வரலாற்றுக்கும் எட்டாத காலம் தொட்டுத் தமிழகத்தில் மருதம் தோன்றியுள்ளது. வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் அல்லவா? வற்றாத நீர் பெருகும் ஆறுகள் பல பாய்ந்து வளம் பெருக்கிய காரணத்தால் 'விவசாயம்' நல்ல முறையில் நடந்து வருகிறது.

தமிழகத்தில் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, தாமிரவருணி, பவானி, அமராவதி, நொய்யல், மணிமுத்தாறு, வெள்ளாறு போன்ற பல ஆறுகள் பாய்கின்றன.

ஆற்றங்கரையில்தான் நகரங்கள் தோன்றின; நகரங்களில் தோன்றியதே நாகரிகம். நாகரிகம் மருதநிலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும்.

கங்கை, கோதாவரி போன்ற பேராறுகள் தமிழகத்தில் இல்லை. எனினும், பாய்ந்தோடுகின்ற சிற்றாறுகளின் பெயர்கள் தமிழரின் இலக்கியச்சுவை உணர்வை எதிரொலிக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

தொண்டை நாட்டில் பாய்ந்தோடும் ஓர் ஆற்றுக்குப் பாலாறு எனப்பெயரிடப்பட்டுள்ளது.

பாலாறு மட்டுமல்ல, தேனாறும் தமிழகத்தில் ஓடுகிறது. நீர் வளம் குறைந்த சேது நாட்டின் (இராமநாதபுரம் மாவட்டம்) வழியே பாய்ந்தோடும் ஆறுதான், தேனாறு.

தேனும் பாலும் மட்டுமல்ல; நெய்யாறும் தமிழகத்தில் உண்டு.

பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது, பாலூர்; தேனாற்றங்கரையில் உள்ளது, தேனூர். ஆனால், பெண்ணையாற்றங்கரையில் உள்ளது பெண்ணை நல்லூர் அன்று; வெண்ணெய் நல்லூர்! வெண்ணெய் நல்லூர் என ஊர்ப்பெயர் இருப்பதால் ஆறும் வெண்ணெயாறாகத்தான் இருக்க வேண்டும் என்பது பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் கருத்து.

சேரநாட்டில் 'நெய்யாறு' என்ற பெயரில் ஓர் ஆறு உள்ளது. அதன் கரையில் அமைந்துள்ள ஊர் 'நெய்யாற்றங்கரை' என அழைக்கப்படுகின்றது.

நெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றாறு 'கருணை ஆறு' என வழங்கப்படுகிறது.

தொண்டை நாட்டில் சேயாறு பாய்கின்றது. அதன் கரையில் உள்ள ஊரும் 'சேயாறு'தான். சென்னை நகரில் சென்று கடலொடு கலக்கும் ஆறு 'அடையாறு' எனப்படுகிறது. அதன் கரையில் அமைந்த நகரும் 'அடையாறு'தான்.

நாட்டின் தலைநகரங்கள், முதன்மைப் பேரூர்கள் அனைத்தும் ஆற்றங்கரைகளிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

'ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்' என்ற தமிழர் கொள்கையைப் பழைய பட்டினங்கள் எடுத்துரைத்தன.

சோழ நாட்டின் தலைநகரான உறையூர், காவிரியின் கரையில் அமைந்துள்ளது; பட்டினம் என்ற சிறப்புப்பெயர் பெற்ற சோழநாட்டுத் துறைமுகம் காவிரி புகும் சங்கமத்துறையில் அமைந்துள்ளது. அதனால் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் உண்டாயிற்று.

பாண்டி நாட்டு வையையின் கரையில் மதுரை என்னும் தலை நகரம் அமைந்துள்ளது. பாண்டி நாட்டின் மற்றொரு பெரு நதியாகிய பொருநையாறு கடலொடு கலக்குமிடத்தில், 'கொற்கை' என்னும் துறைமுகம் சிறப்புற்றிருந்தது.

வடநாட்டில் சீலம், சினாப், ராவி, பீயாஸ், சட்லெஜ் என்னும் ஐந்து ஆறுகள் பாயுமிடம் 'பஞ்சாப்' எனப்பட்டது போலத் தமிழகத்தில் வெண்ணாறு, வெட்டாறு முதலிய ஐந்தாறுகள் பாயுமிடத்தில் உள்ள ஊர் 'திரு ஐயாறு' எனப்பட்டது.

**'ஆறு'** என்ற பெயரை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஊர்கள் பல தமிழகத்தில் உண்டு.

அப்பரடிகளது வாக்கில், ஆண்டவன் எழுந்தருளிய ஆற்றுப்பதிகள் பல இடம் பெறுவதை,

> "நள்ளாறும் பழையாறும் கோட்டாற் றோடு
> நலந்திகழும் நாலாறும் திருவையாறும் தெள்ளாறும்"

என்ற பாடலால் அறியலாம்.

காரைக்காலை அடுத்துள்ளது திருநள்ளாறு. சனிபகவான் வழிபாடு இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. இங்கு நடை

பெறும் சனிப்பெயர்ச்சிக்குத் தமிழகம் முழுவதிலுமுள்ள மக்கள் திரளுவர். தமிழகம் முழுவதிலும் சனிபகவானுக்குக் கோயில் உள்ள ஒரே தலம் இதுதான்.

சோழ மன்னர்களின் தலைநகரங்களுள் ஒன்று, பழையாறு. அரசுரிமை ஏற்கும் மன்னர் இங்குதான் மகுடாபிஷேகம் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது. இது முடிகொண்டான் ஆற்றின் கரையில் கும்பகோணத்திற்கு அருகே அமைந்துள்ளது.

வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் 'தெள்ளாறு' உள்ளது. தெள்ளாறு எறிந்த நந்திவர்மனது புகழை நந்திக் கலம்பகம் பாடுகிறது.

திருநள்ளாற்றை அடுத்து அமைந்துள்ளது கோட்டாறு. செழுமை மிக்க வளம்பதி இது.

மருத நிலத்து ஊர்கள் '**குளம்**' என்ற பெயராலும் குறிக்கப்படுகின்றன.

கடிக்குளம், வளைகுளம், தளிக்குளம், இடைக்குளம் என்பன சிவப்பதிகளாய்ச் சிறந்திருந்தன எனத் தேவாரப் பாடல்களால் அறிகின்றோம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 'திருவரங்குளம்' என்னும் தலம் ஒன்றுண்டு. தென்பாண்டி நாட்டில் 'பெருங்குளம்' அமைந்துள்ளது. மதுரையில் 'பெருங்குளமும்' நெல்லையில், கருங்குளமும் உள்ளன. தலைக்குளம், வேலன்குளம், செங்குளம், செட்டிகுளம் போன்ற ஊர்கள் தமிழகத்தில் நிறைய உள்ளன.

மருதநிலத்துக் குடியிருப்புகள் '**துறை**' என்ற பெயரால் அமைதலும் உண்டு. ஆற்றின் நீர்த்துறைகளில் அமைந்தமையின் அவ்வாறு பெயர் பெற்றன போலும்.

காவிரியாற்றின் இருமருங்கிலும் அமைந்த செழுமையான சோலைகளுக்கிடையே பலதுறைகள் உண்டு. அவை ஊர்ப் பெயரைக் குறித்தன.

மயில்கள் தோகை விரித்தாடும் துறை, மயிலாடுதுறை எனப்பட்டது. குரங்குகள் குதித்தாடும் துறை 'குரங்காடு துறை' என வழங்கப்பட்டது. வடகரையில் உள்ளது வட குரங்காடுதுறை. தென்கரையில் உள்ளது தென் குரங்காடு துறை.

ஆயிற்று. இது இப்போது 'ஆடு துறை' என வழங்குகிறது.

இன்னும் திருப்பராய்த்துறை, கடம்பந்துறை, பலாந்துறை, மாந்துறை போன்ற பல துறைகள் காவிரியாற்றங்கரையில் உண்டு.

பொருநையாற்றில் சிந்துபூந்துறை உண்டு. திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறை, அன்பிலாலந்துறை, திருநெல்வாயில் அறத்துறை, செந்துறை, திருவாவடுதுறை, திருப்பாற்றுறை, குறுக்குத்துறை, சாலைத்துறை முதலிய பல ஊர்கள் தமிழ் நாட்டில் உள்ளன.

**கூடல், கால், ஓடை, அணை** என்னும் பெயர்களும் ஊர்களுக்கு வழங்குவதைக் காணலாம்.

மூன்று ஆறுகள் கூடுமிடங்களைப் புனிதத் துறைகளாகக் கருதுவது தமிழர் மரபு. தொண்டை நாட்டில் சேயாறும் பாலாறும் கம்பையாறும் ஒன்றுகூடுமிடம் திருமுக்கூடல் எனப் பட்டது.

நெல்லை மாவட்டத்தில் சித்திரா நதியும் கயத்தாறும் பொருநை யாற்றுடன் கலக்குமிடம் திருமுக்கூடல் எனச் சிறப்புப் பெற்றது. 'முக்கூடல் பள்ளு' என்ற பிரபந்தம் இவ்வூரைக் குறித்துப் பாடப்பட்டது.

சோழநாட்டில் கெடில நதியும் உப்பனாறும் கூடுமிடம் 'கூடலூர்' எனப்பட்டது. இது தென்னார்க்காடு மாவட்டத்தின் தலை நகரம்.

ஆற்று அணைகளின் அருகே எழுந்த ஊர்கள் அணை என்றே வழங்கப்பட்ட இடங்களும் உண்டு.

திருச்சிராப்பள்ளியில் வெள்ளியணை என்னும் ஊர் உள்ளது. தென்னார்க்காட்டில் கரடியணையும், இராமநாதபுரத்தில் கண்ணணையும் உள்ளன. கும்பகோணத்துக்கு அருகில் அணைக்கரை உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் வெள்ளக்கால், பள்ளக்கால் என்ற ஊர்களும், இராமநாதபுரத்தில் தலைக்கால் முதலியனவும் உண்டு. மணக்கால், குவளைக்கால், ஊற்றங்கால், மாங்கால் போன்ற ஊர்ப் பெயர்கள் அளவற்றவை. சிதம்பரத்திற்கு அருகில் ஊற்றங்கால் உள்ளது.

இயற்கை நீரோட்டத்தை ஓடை என்பர். இதனை அடியொற்றி மயிலோடை, பாலோடை செம்போடை முதலிய ஊர்ப்பெயர்கள் அமைந்தன.

கால்வாய்களில் அமைந்துள்ள மதகுகளை **'மடை'** என வழங்குவர். புனல் கொழிக்கும் தமிழகத்தில் 'மடை' என்ற பெயரால் வழங்கும் ஊர்களுக்கும் குறைவில்லை.

நெல்லை மாவட்டத்தில் 'பத்தமடை' என்னும் ஊர் பாய் நெசவுக்குப் பெற்றது. மதுரையிலுள்ள மேலமடையும், பாலாமடையும் சிற்றூர்கள்.

**ஏரி, சமுத்திரம், மடு, ஊற்று** என்ற நீர் நிலைகளின் அடிப்படையில் எழுந்தனவும் மருத நிலத்து ஊர்களே ஆம்.

சித்தூர் நாட்டில் 'பல்லவனேரி' என்பது ஓர் ஊரின் பெயர். பாண்டி நாட்டில் மாறனேரி என வழங்கும் ஊர்கள் பல உண்டு. தொண்டை நாட்டில் திரையனேரி என்பது திரிந்து தென்னேரி என வழங்குகிறது.

கொங்கு நாட்டில் வீரபாண்டியப் பேர் ஏரி உள்ளது. திருச்செந்தூரில் ஆறுமுகனேரி. நாங்குனேரி என்பது ஒரு வட்டத்தின் தலைநகர். திருநெல்வேலியில் சீவலப்பேரி. இவ்வாறு பல ஏரிகள். இவை ஏரிகள் அல்ல ; ஊர்கள்!

'அம்பாசமுத்திரம்' ஒரு சிறு நகர். வடார்க்காட்டில் ஆலந்தாங்கலும், செங்கற்பட்டில் வளவன் தாங்கலும், வேடன் தாங்கலும் உள்ளன.

ஊற்று என்பதும் ஊர்ப்பெயரைக் குறித்தது. நெல்லை நாட்டில் தாழையூற்றும், இராமநாதபுரத்தில் அத்தியூற்றும், திருச்சி மாவட்டத்தில் கண்ணூற்றும், சேலம் மாவட்டத்தில் மாவூற்றும் குறிப்பிடத்தக்கவை. ஆனைமடு, முதலைமடு போன்ற மடுக்களும் எண்ணற்றவை.

மருதநிலம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமும் என்பர். **'வயல்'** என முடியும் ஊர்ப்பெயர்கள் தமிழகத்தில் ஏராளம்.

புதுவயல், நெடுவயல், நல்வயல், பொன் வயல், வயலூர் முதலாயின பலப்பல.

செறு, ஊருணி, இலஞ்சி, வாவி, பண்ணை, கழனி, வேலி, கேணி, பழனம், தோட்டம், ஊர் என்ற சொற்களின் அடிப்படையில் தோன்றியுள்ள பல்லாயிரக்கணக்கான

ஊர்கள் அனைத்தும் மருதநிலச் சால்புடையனவே என்பது அறியத்தக்கது.

பொதுவாகக் கூறினால் 'ஊர்' என வரும் பெயர்கள் மருதநிலக் குடியிருப்புகளையே குறிக்கும். 'ஊரன்' என்பது மருதநிலத் தலைவனைக் குறிக்கும் பெயராக இலக்கியங்களில் வழங்குகிறது.

## 3. நெய்தல்

'நெய்தல்' செடிகள் நிறைந்திருந்தமையால் கடற்கரைப் பகுதி நெய்தல் எனவே குறிக்கப்பட்டது.

தமிழகம் நீண்ட கடற்கரையினை உடையது. மேலை நாட்டார் குறிப்புகளில் இக்கடற்கரைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

சோழமண்டலக் கரையை அவர்கள் 'கோரமண்டலக் கரை' என்று குறித்தனர். பாண்டிநாட்டுக் கடலில் பன்னெடுங்காலமாக முத்து குளிக்கப்பட்டு வந்ததால் அது 'முத்துக்கரை' என்றே குறிக்கப்பட்டது. சேர நாட்டுக் கடற்கரை 'மேல்கரை' எனப் பெயர் பெற்றது.

**'கரை'** என்ற பெயரமைந்த ஊர்கள் நெய்தல்நிலக் கடற்கரை ஊர்களைக் குறித்தன. பான்டி நாட்டில் 'கீழக்கரை' என்னும் ஊர் உள்ளது. அங்கே முத்துச் சலாபம் சிறப்பாக நடைபெற்றது. மகம்மதியப் பெருவள்ளலான சீதக்காதி அங்குதான் சிறப்புற வாழ்ந்து வந்தார்.

இராமேசுவரத்துக்கு அருகில் கோடிக்கரை என்னும் ஊர் அமைந்துள்ளது. இதனைத் தாலமி போன்ற யவனாசிரியர்கள் தமது நூலில் குறித்துள்ளனர்.

வையையாறு கடலொடு கலக்கும் சங்கமத்துறையில் ஆற்றங்கரை என்னும் சிற்றூர் அமைந்துள்ளது.

ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஊர்கள் 'துறை' எனக் குறிக்கப்படுவதைப் போலவே, கடற்கரைகளில் அமைந்த துறைமுகப் பகுதிகள் **'துறை'** என்ற பெயரால் குறிக்கப்பட்டன.

கடல் வாணிகத்துக்கு ஏற்ற கடற்கரைப்பகுதியைத் துறைமுகம் என்பர். சென்னை, பம்பாய், விசாகப்பட்டினம், கல்கத்தா

போன்றவை பாரத நாட்டில் பெரும் துறைமுகங்களாக அமைந்துள்ளதைப் போன்று அக்காலத்தில் தமிழகத்திலும் பல பெருந்துறைமுகங்கள் இருந்தன.

துறைமுகங்கள் பெரும்பாலும் ஆறுகளின் சங்கமத்துறையிலேயே அமைந்திருந்தன.

குமரியாறு கடலொடு கலக்கும் சங்கமத்துறை, குமரித்துறை எனப்பட்டதாக இலக்கியங்கள் குறிக்கின்றன. அத்துறை கடலால் கொள்ளப்பட்டுவிட்டது.

பாண்டி நாட்டுக் கொற்கைத்துறை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தென்னாட்டுப் பெருந்துறையாகத் திகழ்ந்தது. கொற்கையம்பெருந்துறை முத்துகள் உலக நாடுகளில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த செய்தியை மேனாட்டார் குறிப்புகள் கூறுகின்றன. இம்முத்தின் செழுமை காரணமாகப் பாண்டியன் 'கொற்கைத் துறைவன்' எனப் போற்றப்பட்டான்.

தாமிரபரணி எனப்படும் பொருநையாறு கடலொடு கலக்குமிடத்தில் அமைந்திருந்த கொற்கை, இப்போது தூர்ந்து போயிற்று. அதற்கு அருகில் உள்ள 'காயல்' சிறந்த துறைமுகமாகத் திகழ்ந்தது. இதனை மார்க்கோ போலோ, இடையறாது ஏற்றுமதி, இறக்குமதி நடந்த துறைமுகம் எனக் குறித்துள்ளார். இது இப்போது புன்னைக் காயல் என்ற பெயருடன் சின்னஞ் சிறிய சிற்றூராக கடற்கரையிலிருந்து 5 கிலோ மீட்டர் உள்ளடங்கி இருக்கிறது.

'பட்டினம்' என்ற பெயர் நெய்தல்நிலத் துறைமுக நகர்களைக் குறித்து வழங்கின என அறிகிறோம். இரண்டாயிரம் ஆண்டு கட்குமுன்பு சோழநாட்டுக் கடற்றுறையில் காவிரிப்பூம்பட்டினம் கவின் பெற்றுத் திகழ்ந்தது. பட்டினம் என்றாலே அந்நாளில் காவிரிப்பூம்பட்டினத்தைத்தான் குறிக்கும்.

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்" என்பது பட்டினப் பாலை.

'காவிரி புகும் பட்டினம்' என்பது காவிரிப்பூம்பட்டினம் என ஆயிற்று என்பர்.

இக்காலத்தில் 'நாகூர்' என்ற ஊருக்கு அருகில் சிறப்புப் பெற்றிருப்பது நாகப்பட்டினம். 'கடுவாய்' என்ற ஆற்றின் சங்கமத்துறையில் அமைந்திருந்த அந்நகரைக் 'கடல் நாகை'

எனத் தேவாரப் பாடல்கள் சுட்டுகின்றன. நாகையில் சைவம், வைணவம், பௌத்தம் போன்ற மதங்கள் தழைத்திருந்தன. நாகையில் ஸ்ரீவிசய மன்னர்களால் அமைக்கப்பட்டிருந்த 'சூடா மணி விகாரம்' பற்றி வரலாறு புகழ்ந்துரைக்கின்றது.

சேரநாட்டுத் துறைமுகமான முசிரியின் ஒரு பகுதி மகோதைப் பட்டினம் என வழங்கப்பட்டு வந்தது.

பாண்டி நாட்டிலும் பட்டினங்கள் பல இருந்தன. குலசேகரன் பட்டினம், காயல் பட்டினம் என்பன குறிப்பிடத்தக்கவை. காயல் பட்டினம் இக்காலத்தில் சோனகர் பட்டினம் என வழங்கப்படு கிறது. காரணம், அங்கு முகம்மதியர் மிகுதி. உப்பு வாணிகம் இங்கு சிறப்புப் பெற்றது.

சோழ நாட்டில் பாலாறு கடலொடு கலக்குமிடத்தில் சதுரங்கப் பட்டினம் என்னும் சிறிய துறைமுகம் ஒன்றுண்டு. ஐரோப்பியர் அதனைச் 'சதுராஸ்' எனக் குறித்தனர்.

'சென்னைப் பட்டினம்' தமிழகத்தின் தலைநகராகவும், சிறந்த துறைமுகமாகவும் அமைந்துள்ளது.

சீரங்கப்பட்டினம், அதிராம்பட்டினம், செயங்கொண்ட பட்டினம், இராசேந்திரபட்டினம் போன்ற உள்நாட்டுப் பட்டினங்களும் தமிழ்நாட்டில் உண்டு.

**'பாக்கம்'** என்ற பெயர் கடற்கரைச் சிற்றூர்களையே குறித்து வழங்கி வந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரு பிரிவுகளாய் அமைந்திருந்த செய்தியைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது.

சென்னையில் கடற்கரையைச் சார்ந்துள்ள ஊர்கள் கோடம் பாக்கம், மீனம்பாக்கம், சேப்பாக்கம், கீழ்ப்பாக்கம், நுங்கம் பாக்கம், வில்லிவாக்கம், புரசைபாக்கம் முதலிய பெயர்களால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**'குப்பம்'** என்ற சொல்லும் நெய்தல்நில ஊர்களையே குறிக்கும். நெய்தல்நில மக்களான பரதவர் வாழும் பகுதிகள் 'குப்பம்' என்ற பெயரால் குறிக்கப்பட்டன. சென்னைக் கடற்கரைப் பகுதியில் நொச்சிக் குப்பம், சோலைக் குப்பம், காட்டுக் குப்பம், கருங்குடிக் குப்பம் போன்ற பல குப்பங்கள் உண்டு.

சேரா குப்பம், மும்முடிக் குப்பம், ஆற்றுக் குப்பம் போன்ற அளவற்ற குப்பங்கள் தமிழ்நாட்டில் உண்டு.

இன்று பழைய வரலாறு, மரபு முதலியவைகளைப் பின்பற்றி ஊர்ப்பெயர்கள் சூட்டப்படுகின்றன என்று கூறிடமுடியாது. முல்லை நிலத்தில் குறிஞ்சிப்பெயர்களும், மருதநிலத்தில் நெய்தல் நிலப்பெயர்களும் வைக்கப்படுகின்றன.

புகழ் பூத்த அரசியல் தலைவர்களின் பெயர்கள், புரவலர்கள், திரைப்பட நடிகர்களின் பெயர்கள் புதிதாக உருவாகும் நகரங்களுக்குச் சூட்டப்படுகின்றன.

# புட்பராகம்

## உயிரினங்கள்



## 1. தாவரங்கள்

1. குறிஞ்சி
2. மருதம்
3. முல்லை
4. நெய்தல்
5. பாலை
6. காந்தள்
7. நரந்தம்
8. முருக்கு
9. கவிர்
10. இலவு
11. கொன்றை
12. பாதிரி
13. புன்னை
14. முசுண்டை
15. அடும்பு
16. இலுப்பை
17. தாழை
18. குருக்கத்தி
19. குருந்தமரம்
20. நெல்லிமரம்
21. கருவிளம் கூவிள
22. வேங்கைமரம்
23. உகாமரம்
24. குமிழமரம்
25. பிரம்புக்கொடி.

## 2. விலங்கினங்கள்

1. யானை
2. புலி
3. எண்டு
4. மான்
5. செந்நாய்
6. கேழல்
7. நரி
8. வெருகு
9. வருடை
10. ஆமா
11. கவரிமா
12. குரங்கினம்
13. முளவுமா

## 3. பறவைகள்

1. நாரை
2. அன்னம்
3. மயில்
4. குயில்
5. வானம்பாடி
6. கிளி
7. புறா
8. அன்றில்
9. காக்கை
10. பல்வேறு பறவைகள்

# புட்பராகம்

புட்பராக மணி பொன் போன்ற நிறமுள்ளது.

"பூச உருவில் பொலந்தெளித் தனையது"

என இதன் இயல்பைக் கூறுகின்றது சிலப்பதிகாரம்.

புட்பராகம், பொன்னைத் தெளியவைத்தது போன்ற நிறம் உள்ளது. பூச நட்சத்திரம் போல் விளங்குவது. மிருதுவாகவும், சற்றுக் கனமாகவும் அமைந்துள்ளது. புருடராகம் எனவும் பெயர் பெறும்.

வட்ட வடிவமானது; நெருப்புத்துண்டு போல் ஒளி உள்ளது. கண்டோர் உள்ளங்களைக் கவரும் தன்மையது. இத்தகைய புட்பராகமணிகளே உயர்ந்த இரத்தின வகையைச் சார்ந்தவை என ஆங்கீரச முனிவர் கூறுகின்றார்.

உயிர்கள் ஒவ்வொன்றும் பொன் போன்றவை. பொன்னினும் உயர்ந்த மணி போன்றவை. எனவே, அவ்வுயிர்களைப் பொன்மணியான புட்பராகத்தோடு ஒருங்கு வைத்து எண்ணப் பட்டு இங்கு அறிமுகம் செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள கோடிக்கணக்கான உயிரினங்கள் அனைத்தையும் தொகுத்துக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. இலக்கியங்களில் எடுத்தாளப்பெறும் தனிச்சிறப்புப் பெற்றுள்ளவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவே ஈண்டு அறிமுகம் பெறுகின்றன.

தாவரங்கள், விலங்குகள், பறவைகள்—இம்மூவகை உயிரினங்கள் இலக்கியங்களோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதை விளக்குவதே இப்பகுதியின் குறிக்கோள்.

சங்க காலத்தில் குறிக்கப்பட்ட தாவர வகைகளுள் சில இக்காலத்தில் காணப்பட்டில. விலங்குகளிலும் பறவைகளிலும் பல மறைந்தொழிந்தன. சில வேறு பெயரால் குறிக்கப்படு

கின்றன. அவை பற்றிய விளக்கங்களை இப்பகுதியில் காணலாம்.

சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழகத்தில் வாழும் உயிரின வகைகள் மட்டுமே இங்கு குறிக்கப்படுகின்றன. அவை தமிழகத்தின் செல்வங்கள். அவற்றால் தமிழகம் பெருமை பெற்றுள்ளது. பிறநாட்டாரும் வியந்து பாராட்டும் தகுதி பெற்றுள்ளன.

## 1. தாவரங்கள்

தமிழகத்தில் காணப்படும் தாவர வகைகளைச் சங்க நூல்களின் துணைகொண்டு விளக்குவது இப்பகுதி. சங்க நூல்களில் இருநூறுக்கு மேற்பட்ட செடிகொடிகள் கூறப்பட்டுள்ளன.

சங்குப்புலவர்கள், இயல்பு நவிற்சியாக, உள்ளதை உள்ளவாறே கூறும் இயல்பினர். செடிகொடிகளின் இயற்கையை உள்ள வாறு உணர அவர்தம் குறிப்புகள் பெரிதும் பயன்படுகின்றன.

சங்க நூல்களில் வழங்கப்பட்ட மரஞ்செடி கொடிப் பெயர்கள் பல மறைந்துவிட்டன; சில மாறிவிட்டன. சில செடிகள் பற்றிய செய்திகளையே அறிய இயலவில்லை. பாலை என்பது மரமா கொடியா என்னும் ஐயம் பல நாள்களாக இருந்து வந்தது. சங்க இலக்கியத்தில் ஒரு பாடலில் பாலையின் தனித்த உருவம் பெற்றுள்ள காயைப்பற்றிய செய்தி காணப்படுகிறது. இச்செய்தியே பாலை மரம் என அறியப் பயன்படுகின்.றது.

சங்கப்புலவர்களின் நுண்மாண் நுழைபுலன் இத்தகைய இடங்களால் சிறப்புப்பெறுகின்றது. அவை இக்காலச் செடி நூல் அறிஞர் கூறும் கருத்தோடு ஒத்துவருகின்றன.

### 1. குறிஞ்சி :

மலைநிலத்துச் செடிகளுள் முதன்மை பெற்றது, குறிஞ்சி. குறிஞ்சி என்னும் செடி மிகுதியாக வளர்வதால் மலை நிலம் 'குறிஞ்சி' எனப்பட்டது.

கடல் மட்டத்திற்கு 6000 அடிக்கு மேல் வளரும் இயல்புள்ளது. இவ்வுயரமுள்ள பகுதி மலையாகத்தானே இருக்க

முடியும். இச்செடியின் பூ தனித்தன்மை வாய்ந்தது. இது ஒன்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து காணப்படுகின்றது.

செடி நூலார் இதனை 'ஸ்ட்ரொபிளான்த்தெஸ்' (Strobilanthes) என்னும் இனத்தைச் சேர்ந்ததாகக் குறிக்கின்றனர்.

பன்னிரண்டாண்டுகட்கு ஒருமுறை பூக்கும் இப்பூ, மலைச் சாரல் முழுவதையும் போர்வை போல் மூடிவிடுவதால், பழைய நூற்புலவர்கள் 'கருங்கோல் குறிஞ்சி யடுக்கம்' (புறம் : 374) எனப் பாடி வைத்தனர்.

அவ்வாறு பூக்கும் போது, தேனீக்கள் குடம் குடமாக இவற்றின் தேனைச் சேகரித்துக்கொள்கின்றன. இதனை,

"கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"
—குறுந்-3

என்னும் பாடலால் அறியலாம்.

இதன் காம்புகள் கரியவை ; வலிமையற்றவை.

"கருங்கோல் குறிஞ்சி மதனில் வான்பூ"

என்னும் நற்றிணைப்பாடல் இதனை உணர்த்தும்.

இதன் தேனைத் 'தனிப்பூத் தேன்' என வழங்குவர்.

**2. மருதம் :**

குறிஞ்சியைப் போலவே சங்க நூல்களில் பல இடங்களிலும் பயின்று வருவது, மருத மரம். இம்மரத்தின் பெயரால் வயல் சூழ்ந்த நீர்வளப்பகுதி 'மருதநிலம்' என்றே வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் கருமருது, வெள்ளைமருது, கலிமருது, பூ மருது எனப் பல மருத மரங்கள் உண்டு.

இவற்றுள் 'பூமருது' என வழங்கப்படும் மருதமே சங்க நூல் களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. பூமருதின் பூக்கள் சிறந்தவை ; சிறிது ஊதா நிறம் கலந்த இளஞ்சிவப்பான பேரிதழ்கள் உடையவை.

"செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்"

என வரும் குறுந்தொகை அடி இதனை அறிவிக்கின்றது. நூல்கள் பலவற்றிலும் இம்மருதமரம் ஆற்றோரங்களிலும், நீர் நிலைகளிலும் உயர்ந்து வளர்ந்துள்ளதாகக் கூறப்

பட்டுள்ளது, மதுரை வையையாற்றின் ஒருதுறை "திருமருத முன்றுறை" எனப் பெயர் பெற்றிருந்தது.

"அறலவிர் வார்மணல் அகலியாற் றடைகரைத்
துறையணி மருது தொகல்கொள வோங்கி"
—அகம் 97.

"மருதுயர்ங் தோங்கிய விரிபூந்துறை"
—ஐங்குறு 33.

"வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை"
சிலம்பு 7=2.

3. முல்லை :

முல்லை என்னும் செடி சிறந்திருப்பதால் காடும், காடு சார்ந்த இடமும் 'முல்லை நிலம்' என்றே பெயர் பெற்றன. சங்க நூல்களில் ஏராளமான இடங்களில் முல்லையைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறென முகைக்கும் நாடற்கு"
—குறுங்-186

இதன் மலர் சிறியது ; மிக வெண்மையானது ; நறுமணம் மிக்கது.

"இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை
வெருகு சிரித்தன்ன பசுவீ"
— குறுங் - 220

"சிறுவீ முல்லை கொம்பில் தாஅய்"
—குறுங்-348

முல்லை மொக்கு காட்டுப்பூனையின் பற்களுக்கு உவமை கூறப்பட்டுள்ளது.

முல்லை மலரை, அதன் தூய்மையும் நறுமணமும் கருதி கற்புக்கு அறிகுறியாகக் கொண்டனர்.

"குல்லையம் புறவில் குவிமுகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"

என்பது சிறுபாணாற்றுப்படை-(29-30)

ஐரோப்பிய இலக்கியங்களிலும் தூய-வெள்ளிய-'லில்லி' (Lily) மலர் மகளிரின் கற்புக்கு ஒப்பிடப்பட்டிருப்பது ஈண்டு கருதத் தக்கது.

முல்லைச்செடி கார் காலத்தில் பூக்கும் எனச் சங்க நூல்கள் கூறுகின்றன.

**4. நெய்தல் :**

நெய்தல் செடி சிறத்தலால் கடலும் கடல்சார்ந்த நிலமும் 'நெய்தல்' எனப்பட்டன. கடலோரங்களில் உப்பங்கழிகளில் நெய்தல் செடி வளர்வதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன.

"இருங்கழி நெய்தல்"

—குறுந் : 336

நெய்தற்செடியின் இலை 'பாசடை' எனப்படுகின்றது நெய்தல் மலர் மகளிர் கண் போன்ற உருவம் உள்ளது.

"இருங்கழி மலர்ந்தன கண்போல் நெய்தல்"

—அகம் : 170

நெய்தல் இலை சிறிய யானைக்குட்டியின் காது போன்றது எனக் கூறப்பட்டுள்ளது. நீலமணி போல் நிறமுடையதாதலின் நெய்தல் பூ 'மணிப்பூ' எனக் கூறப்படுகிறது. செடி நூலில் இதனை Nymphac Stellata என வழங்குகின்றனர்.

**5. பாலை :**

வரட்சியான நிலத்தைப் 'பாலை' என்பர். பாலை மரங்கள் வளர்ந்திருப்பதால் இந்நிலம் பாலை எனப் பெயர் பெற்றது.

"பாலை நின்ற பாலை நெடுவழி"

—சிறுபாண் : 11

பாலையின் அடிமரம் வெண்மையாகத் தோன்றும். ஆதலால், இது 'தந்தப் பாலை' எனவும் வழங்கப்படும். ஆங்கிலத்தில் 'ivory wood' என வழங்குகின்றனர். பாலை மரம் இதுவே என்பதை,

"கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலை"

என்னும் அடியால் உணரலாம். பாலை மரத்தின் காய், பற்றுக் குறடு போலிருக்கும். பாலை மலர் கொத்தாகவும் வெண்மை யாகவும் இருக்கும். வெப்பாலை, நிலப்பாலை எனப் பல

பாலைகள் உண்டு. மற்றொரு பாலை மாத்தைக் 'குடசம்' எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

மலையாளத்திலும் தெலுங்கிலும் இதனைப் 'பாலா' என வழங்குவர். குடசத்தை இந்தியில் 'காலகுடா' என வழங்குகின்றனர்.

**6. காந்தள் :**

தமிழ் நூல்களுள் பெரும்புகழ் பெற்றுள்ள மலர், காந்தள். காந்தள் பூ இல்லாத காதல் இலக்கியங்கள் இல்லை. இது தெய்வ மலர். காந்தள், தமிழ்க்கடவுளான முருகனுக்கு உரியது. இதன் அழகுக்காகவே தமிழர்கள், தம் இலக்கியங்களில் இதனை எடுத்தாண்டுள்ளனர்.

இது குருதி போன்ற செந்நிறம் உள்ளது.

"குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"

—குறுந் : *1*

"காந்தள் குருதி ஒண்பூ"

—நற்றிணை : *34*

"குருதி ஒப்பின் கமழ்பூங் காந்தள்"

—நற் : *399*

இதன் செந்நிற மலரைச் சேவலின் கொண்டைக்கு உவமை கூறினர் பண்டைப் புலவர்.

"குவிஇணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்"

—குறுந் : *107*

காந்தள், தோன்றி, கோடல் என்பன ஒரு பொருள் சொற்கள்.

காந்தள்பூ பூப்பது நாகப்பாம்பு படமெடுத்தாற்போலவும், மகளிர் கைகூப்பித் தொழுவது போலவும் தோன்றுவதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

"வெஞ்சின அரவின் பையணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழ"

—அகம் : *154*

"கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலைலயங் காந்தள்"

—கலித்தொகை : *121*

காந்தள் பூ மணமுள்ளதெனச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. ஆனால், அது உண்மையில் மணமுடையதாகத் தோன்றவில்லை. காந்தளில் இருவகை உண்டு. ஒன்று, செங்காந்தள். மற்றது, கோடல். இது வெண்காந்தள் எனவும் வழங்கப்படும்.1

கார்காலத்தில் திடீரெனக் கிளம்பி, மேலே அழகிய பூவோடு தோன்றுவதால் இது 'தோன்றி' எனப் பெயர் பெற்றது.

**7. நரந்தம் :**

நரந்தம் என்பது ஒருவகை மணப்புல். கி. பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க ரோமாபுரி போன்ற நாடுகளுக்கு நறுமணப் பொருளான நரந்தம்புல் ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்புல்லிலிருந்து ஒருவகை நறுமண எண்ணெய் எடுக்கப்பட்டது. இந்தப்புல் செடி நூலில், (Cymbopogon Nardus) எனக் குறிக்கப்படுகிறது. அதியமான் அஞ்சியை,

> "நரந்தம் நாறும்தன் கையால்
> புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே"

என ஔவையார் பாடுகின்றார்.

பண்டை கிரேக்க ஆசிரியரான 'இப்போ கிரேட்டஸ்' என்பவர், இந்தியாவில் கிடைக்கும் மருந்துச்செடிகளான மிளகு, இஞ்சி, நரந்தம் ஆகியவைபற்றிக் கி. மு. 460-இல் எழுதியிருக்கின்றார். நரந்தத்தை இவர் 'கங்கை நரந்தம்' என வழங்குகின்றார். காரணம், கங்கையாறு நரந்தம்புல் விளையும் சமவெளி வழியாகப் பாய்ந்து வருவதேயாம்.

சிந்து நதிக்கரையில் இந்தியர் கிரேக்கரிடையே நடந்த பண்டமாற்றுகளில் கோட்டமும் நரந்தமும் இருந்தன என பெரிப்புளூஸ் கூறுகிறார். இந்தியாவில் விளையும் செடிகளுள் 'நரந்தம்புல்லை'க் கொண்டுபோய்த் தங்கள் நாட்டில் செலுசிடுகள் பயிரிட முயன்றதாகப் 'பிளினி' என்பவர் குறித்துள்ளார்.

தமிழர் வடநாட்டுக்கு ஏற்றுமதி செய்த நரந்த நறுமண எண்ணெய் அங்கிருந்து கிரேக்கத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பது உணரத்தக்கது.

### 8. முருக்கு :

முருங்கைக்காய் காய்க்கும் மரம் ஒன்று தமிழ்நாட்டில் வீட்டுக்கு வீடு உண்டு. இங்கு குறிக்கப்படுவது அந்த முருங்கை மரம் அன்று. "கவிர்முள் முருக்கு" எனவும் 'கலியாண முருங்கை' எனவும் கூறப்படும் முருக்கே இலக்கியங்களில் சிறப்பிக்கப் படுகின்றது.

வேனிற்காலத்தில் இம்மரம் பூக்கிறது. செந்நிறமான கிளி மூக்குப் போல் வளைந்த பூக்களைப் பூக்கிறது. வேனிலில் இம்மரங்கள் கூட்டமாகப் பூத்து நிற்கும் காட்சி, காடு தீப்பற்றி எரிவது போல் தோன்றும். இக்காரணம் பற்றியே இம்மரம் ஆங்கிலத்தில் காட்டுத்தீ (Flame of the Forest) என வழங்கப் படுகின்றது.

"வாள்வரி வயமான் கோளுகிர் அன்ன
செம்முகை அவிழ்ந்த முண்முதிர் முருக்கின்"

—அகம் : 91

"பொங்கழல் முருக்கின் ஒண்குரல் மாந்தி"

—அகம் : 277

இதன் காய்கள் முற்றிய நிலையில் நீண்டு வளைந்து காணப் படும். பேயின் கை விரல்களுக்கு இக்காய் உவமை கூறப் பட்டுள்ளது.

"வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மானா விரல வல்வாய்ப் பேஎய்"

—நற்றிணை : 73

### 9. கவிர் :

முருங்கை மரத்தோடு மிகவும் ஒப்புமை உடையது 'கவிர்' என்னும் மரம். முருக்கும் கவிரும் ஏறக்குறைய ஒரே வடிவான இலைகளையும், ஒரே நிறமான பூக்களையும் பெற்றிருப்பதால் இரண்டும் ஒன்றே என மயங்கி உரை எழுதியுள்ளனர். சங்க நூல்களில் அவை தனித்தனியே சுட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கவிர் என்பது முருங்கை போன்ற ஒரு வகைச் செம்மலர் மரம். இதன் செந்நிற இதழ்கள் மகளிர் உதட்டிற்கு உவமை கூறப் பட்டன.

"கவிர் இதழ் அன்ன காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை"

—அகம் : 4

கவிர் என்பது இக்காலத்தில் வழங்கும் 'புரசமரமாய்' இருக்கலாம்.

மயிலின் கழுத்துப் போல் அமைப்புள்ளது இதன் பூங்கொத்து.

"செறிமயில் எருத்தின்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன"

—அகம் : 367

சங்க இலக்கியங்களில் கூறப்படும் 'கவிர்' முள் முருங்கை மலராகக் கருத இடம் தரவில்லை புரசமலராகவே கருதப்பட வேண்டிய ஒற்றுமைகளைப் பெற்றுள்ளது.

'கவிரே கிஞ்சுகம்' எனத் திவாகரம் கூறுவதும், பிற்கால நிகண்டுகளில் 'புரசு' எனப் பெயர் சுட்டப்பெறுவதும் இதனை வலியுறுத்தும். செடி நூலார் இதனை, 'Erythihina Indica' எனக் குறிக்கின்றனர்.

**10. இலவு :**

'இலவு காத்த கிளி' என்பது பழமொழி. பஞ்சுக்காகவே பயன் படுவதால் இப்பழமொழி எழுந்தது. இலவ மலர் சங்க இலக்கியங்களில் பல பாடல்களில் கூறப்படுகிறது.

இம்மரத்திற்குச் சிவந்த அழகிய மலர்கள் உண்டு. தற்காலத்தில் 'இலவமரம்' என வழங்கும் மரத்துக்கும் சங்ககால இலவுக்கும் பெரும் வேற்றுமை உண்டு.

வேனிற்காலத்தில் இலைகளை உதிர்த்துவிட்டு இது பூக்கும். வெறுங்கிளையில் சிவந்த பூக்கள் தோன்றுவது இலவமரத்தின் இயல்பு.

"இலைஇல மலர்ந்த ஓங்குநிலை இலவம்"

—ஐங்குறு : 338

இலவ மரத்தின் கிளைகள் பல கிடைமட்டமாகக் கைகளை விரித்தாற்போலச் சுற்றிலும் நீட்டிக்கொண்டு தோற்றமளிக்கும். அதில் பூக்கள் பூத்திருப்பது கார்த்திகை விளக்கு வைத்தாற் போலிருப்பதாக அகநானூறு கூறுகின்றது.

"அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலைஇல மலர்ந்த இலவமொடு"

—அகம் : 135

இலவ மரத்தின் ஒருவகை 'கோங்கிலவு' எனப்படும். இலவ மரத்தைப் போலவே இதுவும் வறண்ட வேனில் காலத்தில் இலை இல்லாத வேனில் காலத்தில் பூத்து நிற்பது கோங்கின் சிறப்பியல்பு.

கோங்கின்பூ தட்டையான கிண்ணம் போல் பொன்தட்டுப்போல் அகன்று காணப்படும். கொங்கு என்பது பொன். கொங்கு போலிருப்பதால் இது கோங்கு எனப்பட்டது போலும்.

கோங்கின் மொட்டு, மங்கையரின் நகிலுக்கு உவமை கூறப்பட்டுள்ளது.

> "யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்
> பூணகத் தோங்கிய வெம்முலை"
>
> —சிறுபாண் : 25-26

கோங்கு மரத்தைத் தற்காலத்தில் மஞ்சள் இலவு, மலைப் பருத்தி, காட்டிலவு, மஞ்சள் தணக்கு என்னும் பெயர்களால் வழங்குகின்றனர்.

**11. கொன்றை :**

தமிழகத்தில் வளர்ந்துள்ள அழகிய மலர் மரங்களுள் ஒன்று, கொன்றை. கொன்றை மரம் மலர் விரிந்து நிற்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சி. இதன் பூக்கள் உருண்டை உருண்டையான மாலையில் தொடுக்கப்பட்ட மொட்டுகளுடன் தோன்றும். அரும்பும் மொக்கும் பூவும் கலந்து சரஞ்சரமாகப் பூத்துத் தொங்குவதால் இது சரக்கொன்றை எனப் பெயர் பெற்றது.

பொன்னிழைக்கும் பொன்மாலைக்கும் இது உவமை கூறப்பட்டுள்ளது.

கொன்றை மரம் பொன் மாலைகள் அணிந்த மகளிரைப் போல நீண்ட சரம் சரமான பூங்கொத்துகளுடன் காண்பதாகக் குறுந்தொகைப்பாடல் ஒன்று கூறுகின்றது.

> " வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடைஇடுபு
> பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
> கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றை"
>
> —21

கொன்றை கார் காலத்தில் மலர்வது ஆதலின்,

> "கார்நறுங் கொன்றை"

எனப்பட்டது.

**12. பாதிரி:**

பாதிரி என்பது ஒருவகை மணமலர். பாதிரியின் மலர் மஞ்சள் நிறமானது. பொன்னிறம் போன்றது எனச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

" பைங்காற் பாதிரிப் போது பிரிந்தன்ன
அங்கோ சிகமும் வங்கச் சாதரும்."

—பெருங்கதை : 142 : 204

கோசிக ஆடை என்பது காசியில் நெய்யப்படும் பட்டாடை. இது பொன்னிறமானது.

பாதிரி மலரைப் பிளந்தால் அதன் இதழ்கள் நிறமூட்டப்பெற்ற யாழின் போர்வையை ஒத்திருக்குமெனப் பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது.

பாதிரி வேனிற்காலத்தில் பூக்கும். ஆதலால், 'வேனிற் பாதிரி' என்றே சங்கநூற்கள் வழங்குகின்றன. பாதிரிப்பூவின் தலைப்பகுதி பஞ்சுபோல் இருக்கும். இதனைச் சங்கப் பாடல்கள் 'துய்த்தலை' எனக் குறிக்கின்றன.

" அத்தப் பாதிரித் துய்த்தலைப் புதுவீ."

—அகம். 191

பாதிரி மலர் சிறந்த நறுமணம் உடையதென்பதை

" பாதிரி கமழும் ஓதி ஒண்ணுதல்"

—புறம். 70

என்பதால் அறியலாம். பாதிரியைப் 'பாடலி' என வடநூல்கள் குறிக்கும். வடநாட்டில் பாடலிபுத்திரம் உண்டு. தென்னாட்டில் பாதிரிப்புலியூர் உண்டு. பாடலிபுத்திரம் என்பதன் தமிழ்ப்பெயர்தான் 'பாதிரிப்புலியூர்' என்பது.

தற்காலத்தில் 'பூம்பாதிரி' என இப்பாதிரி வழங்கப்படுகின்றது.

**13. புன்னை :**

சங்க காலம் தொட்டு இன்றுவரை ஒரே தன்மைத்தாக வழங்கி வருவது, புன்னை மரம். புன்னை மரத்தின் அழகான காட்சி ஒன்றைப் பின்வரும் நற்றிணைப்பாடல் கூறுகின்றது :

" இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத் தன்ன பாசிலை யகந்தொறும்
வெள்ளி யன்ன விளங்கிணர் நாப்பண்
பொன்னி னன்ன நறுந்தா துதிர"

—249

இரும்பு போன்ற கரிய கிளைகளை உடைய புன்னை மரத்தினது நீலம் போன்ற பசுமையான இலைப்பரப்பில் வெள்ளியைப் போலப் பூங்கொத்துகள் பூத்துள்ளன. அவற்றிலிருந்து பொன்னைப் போலப் பூந்துகள் (மகரந்தப்பொடி) உதிர்கின்றன. எவ்வளவு அழகான வருணனை இது!

புன்னை நெய்தல் நிலத்து மரம். 'புன்னையங் கானல்' என்னும் சொல்லை இலக்கியங்களில் காணலாம். புன்னை மரக்கிளை கரியது. இதன் பூ மிக வெண்மையானது, கொத்துக்கொத்தாகப் பூக்கக்கூடியது.

" இணரவிழ் புன்னை எக்கர் நீழல்"

—குறுந். 299

"வெள்ளி யன்ன விளங்கிணர் நாப்பண்"

—நற்றி. 249

புன்னையின் வெள்ளிய மொக்கு உடைவதை நற்றிணைப் பாடல் ஒன்று அழகான உவமையோடு கூறுகின்றது.

" உள்ளூர்க் குரீஇக் கருவுடைந் தன்ன
பெரும்போது அவிழ்ந்த கருந்தாள் புன்னை"

—நற். 201

புன்னை அரும்பு அவிழ்ந்து மலர்வது ஊர்க்குருவியின் முட்டை உடைவது போன்று உள்ளதாம்.
புன்னைப் பூவின் நடுவில் மகரந்தத்தூள்கள் குவிந்து மஞ்சள் நிறமாய்க் காணப்படும். கிளைதோறும் புன்னையின் பசுங்காய் தொங்குவதைப் பல பாடல்கள் வருணிக்கின்றன. இக்காய் எண்ணெய் எடுக்கப் பயன்பட்டதை "நெய்கனி பசுங்காய்" என்ற சொற்றொடர் உணர்த்துகின்றது.

**14. முசுண்டை :**

இரவில் பூக்கும் பூக்களை உடைய அழகிய கொடி, முசுண்டை. இது அழகான பூக்களோடு செழித்து வளரும் கொடி ஆதலால் முன்றிலில் பந்தராகப் படரும்படி வளர்க்கப்பட்டு வந்தது என அறிகின்றோம். பந்தரில் ஆலமரம் போல் தழைத்து நீழல் தருவது முசுண்டை.

" அகலிரு விசும்பின் ஆஅல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை"

—மலைபடுகடாம் : 100-101

" முன்றின முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழல்"

—புறம் : 320

இதன் பூ வெண்மையானது; இரவில் பூப்பது. இதன் காரண மாக 'மேகமில்லாத வானத்தில் விண்மீன்கள் தோன்றுவதைப் போல்' என்னும் உவமை இம்மலருக்குக் கூறப்பட்டுள்ளது.

இதன் கனி, கொட்டை போன்று இருக்கும். தானாக உடைவ தில்லை. காய்ந்த கனி இது.

" கொடுங்கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்"

எனச் சிறுபாணாற்றுப்படை அடி இதனை உணர்த்தும். 'கொட்டை கொள்ளவும்' எனப் பாடம் கூறுவர். இப்பாடமே செடி நூல் அறிவோடு பொருந்துகின்றது. செடி நூலார் இதனை (Rivea Ornata) என்பர்.

## 15. அடும்பு :

கடற்கரை ஓரங்களில் படரும் கொடிகளுள் ஒன்று, அடும்பு. அடம்பங்கொடி எனவும் இது குறிக்கப்படும். இதனைக் 'கான அடம்பு', 'பாசடும்பு' என இலக்கியங்கள் சிறப்பிக் கின்றன.

அடும்பங்கொடியில் சிறிது செந்நிறம் காணப்படுவதால் இதனைச் 'செங்கேழ் மென்கொடி' என அகப்பாடல் ஒன்று (80) குறிக்கின்றது.

அடும்பின் இலைகள் பிளவுபட்டு மானின் குளம்பு போல் தோன்றும். இதனை,

" மான் அடி யன்ன கவட்டிலை அடும்பின்"

—குறுந் : 243

எனவும்,

" கான அடம்பின் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கும் நன்னாடன்"

—நளவெண்பா

எனவும் வரும் பாடற்பகுதிகளால் அறியலாம். இதனை கீரையாக உண்பர்.

அடும்பின் பூ அழகானது; இளஞ்சிவப்பு நிறம் உடையது. ஒலியெழுப்பும் மணி போன்ற உருவம் உடையது. குறுந் தொகைப்பாடல் ஒன்று இதனை மாட்டின் கழுத்தில் கட்டப் பட்டிருக்கும் மணிக்கு ஒப்பிட்டுக் கூறுகிறது.

“ தார்மணி அன்ன ஒண்பூக் கொழுதி”

அடும்பின் பூ தனித்துக் காணப்படும். இதனை மங்கையர் பறித்துச் சூடுவதுண்டு; மாலையாகவும் தொடுத்து அணிவதுண்டு.

“ அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்தி நீர்வார் கூந்தல்”

—குறுந். 401

இது செடி நூலில் (Ipomla Biloba) எனக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

**16. இலுப்பை :**

இலுப்பை மரம் பொதுவாக எங்கும் காணப்படுவது. இதன் விதைகளினின்றும் எடுக்கப்படும் எண்ணெய் கோயில்களில் விளக்கெரிக்கப் பயன்படுகிறது.

இலுப்பை மரத்தை ‘இருப்பை’ என்றே சங்க நூல்கள் குறிக்கின்றன. இது கிளை செழித்துத் தழைத்து வளர்வது; வானுற உயர்வது. இதன் அடிமரம் பருத்திருப்பதால் ‘பராரை’ எனப்படும்.

“ .... .... .... பொரிகாய்
பொகுட்டரை இருப்பைக் குவிகுலைக் கழன்ற”

—அகம் : 95

“ திரள்அரை இருப்பைக் கொள்ளை வான்பூ”

—அகம் : 215

இரும்பு போன்று கடுமையானது இம்மரம்.

“ கருங்கோட் டிருப்பை வெண்பூ”

—அகம் : 247

இலுப்பைப்பூ, பெயர் பெற்றது; இலக்கியப்புகழ் பெற்றது. இது வெண்மையாய் இருக்கும். இதன் இதழ்கள் தடித்தும் உருண்டையாகவும் இருக்கும்.

யானையின் தந்தத்தைக் கடைந்தமைத்தாற்போன்றது என ஒரு பாடல் கூறுகின்றது.

“ கோடுகடைந் தன்ன கொள்ளை வான்பூ”

என்பது அகநானூறு. காற்றடிக்கும் போது இலுப்பைப் பூக்கள் ‘பொல பொல’வென்று உதிரும்.

வரட்சியான செந்நிலப் பாலை வழியில் இலுப்பைப் பூக்கள் ஆலங் கட்டி போல் உதிர்ந்து கிடப்பதுண்டு. அக்காட்சி சிவந்த இரத்த வெள்ளத்தில் மிதக்கும் வெண்கொழுப்புப் போல் தோன்றியதென வருணிக்கின்றார், புலவர் ஒருவர்.

"பாலி வானில் காலொடு பாறித்
துப்பின் அன்ன செங்கோட் டியவின்
நெய்த்தோர் மீமிசை நிணத்தில் பரிக்கும்
அத்தம்"

—அகம் : 9

இலுப்பைப்பூ இனிய சுவை கொண்டது. வடநாட்டில் இதனைச் சமைத்து உண்கின்றனர். பழந்தமிழ் நாட்டில் இதனைச் சர்க்கரை போலப் பயன்படுத்தினர். 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை' என்பது பழமொழி. செடி நூலில் இதன் பெயர் Longi Folia என்பது.

## 17. தாழை

நெய்தல் நிலத்தில் உப்பங்கழிப்பகுதிகளில் வளர்ந்துள்ள தாவரங்களுள் தலைமை பெற்றிருப்பது, தாழை. தாழையின் அடிமரம் நேராய் இராது. வளைந்தே காணப்படும். இதனால்

"பிணர்அரைத் தாழை"
"தடந்தாழ் தாழை"

என இலக்கியங்கள் குறித்தன. இதன் அடிப்பக்கம் சருச்சரை வகையைச் சார்ந்தது. சொரசொரப்பானது. இறால் மீனின் முதுகு போன்றது. இதனை,

"இறவுப் புறத்தன்ன பிணர்படு தடவுமுதல்"

என நற்றிணை குறிக்கின்றது. — 19

தாழையின் இலையை 'மடல்' என்பர். 'மடல் பெரிது தாழை' என்பது ஔவையார் வாக்கு. இது முள்ளுடன் கூடிய ஓரங் களைப் பெற்றிருப்பதால்

"சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை'

—நற் : 19

எனவும்,

"அரவுவாள் வாய முள்ளிலை தாழை"

— நற் : 235

எனவும் கூறப்பட்டுள்ளது.

தாழையின் பூ அனைவரும் விரும்பத்தக்க மணம் உடையது. நெடுந்தொலைவிலும் மணம் வீசக்கூடியது. வெண்மை யானது. அதன் தோற்றம் குருகு போன்றது எனச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

"வீழ்தாட் டாழை பூக்கமழ் கானல்"

— நற் : 78

"தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை"

— குறுந் : 226

தாழைப்பூவின் வெள்ளிய தோற்றம் சிறகுகளை மடக்கி அமர்ந்திருக்கும் அன்னம் போல் இருப்பதாக ஒரு புலவர் கூறுகின்றார்.

"அலைநீர்த் தாழை அன்னம் பூக்கவும்"

— சிறுபாண் : 146

கோவலனும் மாதவியும் பூம்புகார்க் கடற்கரையில் அமர்ந்து கானல் வரி பாடிய இடம் தாழை மரங்கள் சூழ்ந்துள்ள புன்னை மரத்தின் நீழல்! எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. தாழை கடற்புலால் நாற்றத்தைக் கடியவல்லது. எனவே, காதலர்கள் தாழை சூழ்ந்த தண்மணற்பரப்பைத் தமது சந்திக்குமிடமாகத் தேர்ந்தெடுத்தனர் என அறிகின்றோம்.

"முண்டகங் கெழீஇய மோட்டுமணல் அடைகரை
பேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன்
வயிறுடைப் போது வாலிதின் விரீஇப்
புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பின்"

— அகநா - 130

வீட்டின் முன்றிலில் நறுமணத்தின் பொருட்டுத் தாழையை வளர்க்கும் பழக்கம் அந்நாளில் இருந்தது.

தாவர நூலார் இதனை Pandanus odovatissimus என்பர்.

## 18. குருக்கத்தி

நறுமண மலர்கள் பூக்கும் கொடி வகைகளுள் சிறந்தது, குருக்கத்தி. இது 'குருகு' எனச் சங்க நூல்களில் குறிக்கப் பட்டுள்ளது. மாதவி எனவும் வழங்கும்.

குருக்கத்திக் கொடி மிக நீளமான கொடி. இதனைப் பந்தலாக அமைத்து இல்லங்களில் வளர்த்தனர்.

காட்டில் மணக்கும் கொடிகளுள் குருக்கத்தியே சிறந்தது. இதன் மணத்தைப் பாடாத சங்க இலக்கியங்களே இல்லை என்னலாம்.

"வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்
குறுங்கால் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ"

— பெரும்பாணா : 376 - 6.

"கோதை மாதவி கொழுங்கொடி எடுப்பக்
காவும் கானமும் கடிமலர் ஏந்த"

— சிலப்-ஊர்காண் : 113 - 14

இதனைத் தாவர நூலார் (Hiptage Madablata) என்பர்.

குருக்கத்திப்பூ தமிழ்க்கடவுளான முருகனுக்கு உரியது என்பர். கத்திகை என்பது குருக்கத்தி. கத்திகைக் கண்ணிக் கடவுள் எனச் சிந்தாமணி (971) கூறுகின்றது.

குருக்கத்தி மலரை குரா முதலிய மணமலர்களுடன் சேர்த்துத் தொடுத்தணிவது சங்ககாலத் தமிழ் மக்களின் வழக்கம் என அறிகின்றோம். இதனை ஆடவரும் சூடி வந்தனர்.

"குறுங்கால் குரவின் குவியிணர் வான்பூ
ஆடுடை இடைமகன் சூடப் பூக்கும்"

— நற்றிணை : 266.

## 19. குருந்த மரம் :

நறுமணமலர் பூக்கும் மரங்களுள் குருந்தமும் ஒன்று. கண்ணன் ஆயர்பாடியில் குருந்த மரத்தை முரித்தான் என பாகவதம் கூறுகிறது.

"கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்"

என்பது சிலப்பதிகாரம்.

குருந்த மலரை மக்கள் விரும்பிச் சூடினர்.

"குல்லையும் குருந்தும் கோடலும் பாங்கரும்
கல்லவும் கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தனர்.

— கலித் : 103

குருந்த மரம் கற்பாங்கான பகுதிகளிலும் வளரும் இயல்பினது. முல்லை நிலத்தில் இது மிகுதியாக வளர்ந்ததென அறிகின்றோம்.

இது நிழல் தரும் மரவகையைச் சார்ந்ததன்று. வலிமையற்ற கிளைகளைக் கொண்டது. இதன் இலை தடிப்பானது. எனவே, வல்லிலைக் குருந்து எனக் கூறப்பட்டது.

"அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய"

— அகம் : 304.

"கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த
வல்லிலைக் குருந்தின் வாங்குசினை இருந்து"

— அகம் : 194

குருந்தின் தாவர நூற்பெயர் 'Atalantis Missionis' என்பது.

## 20. நெல்லிமரம்

இக்கால நெல்லி மரத்தில் இரு வகைகள் உண்டு. ஒன்று, அரி நெல்லி; மற்றது, தோப்பு நெல்லி. அரி நெல்லி நம் நாட்டிற்குரியதன்று. மலேயாவிலிருந்து கொண்டுவரப்பட்டதென்பர். எனவே, சங்க இலக்கியங்களில் கூறப்படுவன 'தோப்பு நெல்லி' எனப்படும் பெருநெல்லியே என்பது அறியத்தக்கது.

நெல்லியைத் தோட்டங்களிலும் வீட்டு முற்றங்களிலும் வைத்து வளர்த்தனர்.

நெல்லிமரம் சிறிய இலைகளைக் கொண்டது. இனிய சுவைக் கனியைக் கொண்டது. ஆதலால்,

"சிறியிலை நெல்லித் தீங்கனி"

என இதனை இலக்கியங்கள் குறித்தன. நெல்லிக்காயைத் தின்னத் தொடங்கியவுடன் துவர்க்கும்; தின்ற பின்பு தண்ணீர் குடித்தால் இனிக்கும். இதனை நன்ருகச் சுவைத்துணர்ந்து பாடி வைத்தனர் பண்டைத் தமிழர்.

"பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி"

— அகம் : 54

இதன் பழம் பளிங்குபோல் தெளிவானது. உள்ளே உள்ள நரம்புகள் நடுத்தண்டுவரை கண்ணாடிக் குண்டு போல் தெரியக் கூடியது. இதனை உள்ளங்கையில் வைத்துப் பார்த்தால் இன்னும் தெளிவாகத் தெரியும். இதுபற்றியே 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்னும் பழமொழி ஏற்பட்டது. இக்கருத்தைப் பின்வரும் பாடலடியால் உணரலாம்

"பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி" — அகம் : 5

செடிநூலில் நெல்லி மரம், 'Phyllanthus Acidus' எனக் குறிக்கப்படுகிறது.

**21. கருவிளம், கூவிளம் :**

யாப்பிலக்கணம் படிப்பவர் கருவிளம், கூவிளம் என்பன வற்றைப் படிக்காமல் இருக்க முடியாது.

இக்காலத்தில் வழங்கப்படும் விளாமரம்தான் சங்க காலத்தில் கருவிளம் எனப்பட்டது. இது 'வெள்ளில்' என இலக்கியங் களில் குறிக்கப்படுகிறது. பொது அம்பலங்களிலும் மன்றங் களிலும் விளாமரம் இருந்தது.

"மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்'

— புறம் : 181

கூவிளம்' என்பது வில்வம். கூவிளம் பூவை மாலையாகக் கட்டி அணிவர்.

"கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்".

— புறம் : 158

கருவிளமும் கூவிளமும் ஒரே இனத்தைச் சார்ந்தவை.

**22 வேங்கை மரம் :**

இது குறிஞ்சி நிலத்திற்குரியது. இதன் மலர்களில் வண்டுகள் மொய்ப்பதில்லை என்பர். இதன் மலர் பொன்னிறமானது. புலியின் உடலில் உள்ள புள்ளிகளைப் போன்றது.

"ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப்பொறி கடுப்பத் தோன்றலின் "

— அகம் : 228.

**23 உகாமரம்**

இது பாலைநிலத் தாவரங்களுள் ஒன்று. உருண்டையான பொற்காசு போன்ற காய்களை உடையது.

"புறவுப் புறத்தன்ன புன்கால் உகாய்
காசினை அன்ன நளிகனி உதிர"

— குறுந் : 247.

**24. குமிழ மரம்**

இது மருதநிலத் தாவரங்களுள் ஒன்று. இதன் பூ, மூக்குக்கு உவமை கூறப்படுவது. பாலையிலும் இது வளரும் தன்மையது.

"அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி"

— நற்றிணை : 6

**25. பிரம்புக்கொடி**

பிரப்பங்கொடி இந்நாளில் பலவகைகளில் பயன்படுகிறது. இதற்குப் 'பழம்' உண்டென்று இலக்கியங்கள் கூறுகின்றன.

"அரிற்பவர்ப் பிரம்பின் வரப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்"

— குறுந் : 91

இன்னும் வேலமரம், வாழை மரம், நாவல், பனை, தெங்கு, பலா, மா, பலா, பாகல், கள்ளி, எருக்கு, கவடி, உழுத்தஞ்செடி போன்ற பலவகைத் தாவரங்களைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம்.

## 2. விலங்கினங்கள்

ஒவ்வொரு நாட்டின் நிலவளத்திற்கும், தட்பவெப்பச் சூழ்நிலைகளுக்கேற்பவும் ஆங்காங்கு வாழும் உயிரினங்கள் வேறுபடுகின்றன. ஒரே உயிர்ப்பொருள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. யானை இந்தியாவில் உள்ளதுபோல ஆப்பிரிக்காவில் இருப்பதில்லை. காது, தந்தம் போன்ற உறுப்புகளில் வேற்றுமை காணப்படுகின்றது.

தமிழகத்தில் காணப்படும் விலங்குகளுள் இலக்கியங்களில் சுட்டப்படும் சில விலங்குகள் இங்கு கூறப்படுகின்றன.

**1. யானை :**

தமிழக விலங்குகளுள் மிகப்பெரியது, யானை. இது பருமனான உடல் வாய்ந்ததெனினும் அவ்வளவிற்கு உள்ள வலிமை அற்றது.

"பரியது : கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்"

என்பர் வள்ளுவர்.

புலியும் யானையும் தம்முள் அடிக்கடி போர் செய்வது பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. புலி வெல்வதும் உண்டு ; யானை வெற்றி பெறுவதும் உண்டு.

"மாசில வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய வருங்கேழ் வயப்புலி
மாநிலம் நெளியக் குத்தி"

—அகம் : 251

"கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய
பொருமுரண் உழுவை தொலைச்சி"

—அகம் : 332

மலைக்காடுகளில் மேய்ந்த யானைக்கூட்டம் அருவியில் நீர் குடிக்க வரும் போது, நீர்த்துறையின் புதரில் பதுங்கியிருந்த புலியை ஆண் யானையானது கொன்று கிழித்து, அதன் இரத்தத்தால் சிவந்த தன் வெண்கோடுகளைக் கழுவிக்கொண்டு செல்லும் என்பதை அகப்பாடல்கள் கூறுகின்றன.

ஆழ்ந்த நீர் நிலைகளில் உள்ள முதலைகள், நீர் பருக வரும் யானையைப் பிடித்து இழுத்து அழுத்திக் கொல்வதுண்டு என்பதை அறிகின்றோம்.

**2 புலி :**

யானைக்கு அடுத்த நிலையில் குறிப்பிடத்தக்க விலங்கு, புலி. எண்ணற்ற சங்கப்பாடல்களில் புலி பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன.

அக்காலத்தில் காடுகளில் புலிகள் ஏராளமாக வசித்தன என்பதை இது காட்டுகின்றது.

மூங்கில் காடுகளிலும், பலா மரங்கள் நெருங்கிய மலைச்சாரல்களிலும், மழை ஏராளமாகப் பெய்யும் குறிஞ்சிநிலக் காடுகளிலும் வழையும் வாழையும் செழித்து வளர்ந்துள்ள இயற்கைச் சூழல்களிலும் புலி வாழும் எனக் கூறப்பட்டுள்ளது.

புலிகள் தம் குட்டிகளுடன் வதியுமிடம், கொடிய முள்ளை யுடைய ஈந்தும் சூரலும் நிறைந்த பாறைக்காடாகும் என நற்றிணை கூறுகின்றது.

"ஒலிவல் ஈந்தின் உலவையங் காட்டு
ஆறுசெல் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறித் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை
மரல்நோக்கும் இண்டிவர் ஈங்கைய சுரனே"

—நற்றிணை : 2

புலி தங்குமிடம், பதுங்குமிடம், வேட்டையாடுமிடம், உருவ அமைப்பு, இயல்புகள் போன்ற அனைத்தும் சங்கப்பாடல்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. வரிப்புலி, பொறிப்புலி, சிறுத்தைப்புலி போன்ற பல புலிவகைகள் உண்டு.

**3. எண்கு :**

கரடி என்பதுதான், எண்கு. கரடி என்னும் பெயர் சங்க இலக்கியங்களில் பயிலவில்லை. எண்கு, உளியம் என்னும் பெயர்களே பயின்று வந்துள்ளன.

கரடிகள் காடுகளிலும், கற்பாறை முழைகளிலும் வாழ்வதாக விலங்கு நூலார் கூறுகின்றனர். "வரைசேர் சிறுநெறி" (நற்-336), "குன்றத்துக் கவான்" (அகம் 201), "மலைச்சுர நீளிடை" (நற்- 92) ஆகிய இடங்களில் கரடி வாழ்வதாகச் சங்க நூல்கள் கூறும்.

"............குடாவடி உளியம்
பெருங்கல் விடரளைச் செறிய"

—திருமுரு : 313-14

கரடியின் முன்னங்கால்களைக் 'கை' எனச் சங்கப்பாடல்கள் குறிக்கின்றன.

"வண்கை எண்கு" —அகம் : 15
"பெருங்கை எண்கு" —அகம் : 144

கரடி, இரவில் உணவு தேடும். புற்றைத் தோண்டிக் கறையான் சோற்றை உண்ணும். பெரும்பாலும் பழங்களும் பூச்சிகளுமே இதன் உணவு.

"நாளுலா எழுந்த கோள்வல் உளியம்
ஓங்குசினை இருப்பைத் தீம்பழம் முனையின்
புல்லளைப் புற்றின் பல்கிளைச் சிதலை
ஒருங்குமுயன் றெடுத்த நனைவாய் நெடுங்கோடு
இரும்பூது குருகின் இடந்திரை தேரும்"

—அகம் : 81

கரடியைப் 'பாம்பு கண்ட சித்தன்' எனபர். இரைக்காக அது கறையான் புற்றைத் தோண்டும் போது அதிலுள்ள பாம்பை வெளியில் இழுத்துப் போடும்.

கறையான்களுக்குப் பாதுகாப்பாகப் பாம்பும், பாம்புக்கு வாழிடமாகக் கறையான் புற்றும் இருப்பதாகக் கருதப்படும் கருத்திற்கு அகநானூற்றில் ஆதாரம் உண்டு.

"ஈயல் புற்றத்து ஈர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதைய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்"

—அகம் : 8.

4. மான் :

மான் என்னும் சொல் பொதுவாக விலங்குகளைக் குறிப்பதும் உண்டு. 'அரிமான்' என்பது சிங்கத்தையும், 'முளவுமான்' என்பது முள்ளம்பன்றியையும் குறிப்பது காண்க. ஆனால், விலங்கு நூலார் இவ்வாறு குறிப்பதில்லை.

மான் என்னும் தனி விலங்கு உண்டு. அது இலக்கியங்களில் ஏராளமான இடங்களில் கூறப்பட்டுள்ளது.

சங்க நூல்கள் ஐவகை மான்களைப்பற்றிக் கூறுகின்றன.

அவை இரலை, நவ்வி, மரையான், உழை, கடமா என்பன.

இரலை, நவ்வி, மரையான் என்னும் மூன்றும் இரலை இனத்தைச் சார்ந்தவை. மற்றவை, கலைமான் இனத்தைச் சார்ந்தவை.

ஆண் இரலைமான் எல்லா மான் வகைகளிலும் அழகுள்ளது.

"தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப்பு இரலை"

—அகம் : 139

என இது புகழப்பட்டுள்ளது.

கார் காலத்தில் மழை நீரை அருந்தி இரலைமான்கள் பிடவமர நீழலில் துணையொடு உறங்கும் காட்சியைச் சங்க நூல்கள் கூறுகின்றன.

இரலையின் கொம்பு முறுக்கியிருக்கும். அது எந்தத் திசையில் முறுக்கியுள்ளது என்பதைக்கூடச் சங்கப்புலவர்கள் கவனித்துப் பாடியிருக்கிறார்கள்.

> "சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
> வலந்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு
> அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய"
>
> —அகம் : 304.

இரலை மான்பற்றிய நுணுக்கமான செய்தி ஒன்றைப் புறநானூறு கூறுகின்றது.

இரலையின் கண்களின்கீழ் கீற்றுப் போல ஒரு வெடிப்புக் காணப்படும். இந்த வெடிப்பில் ஒரு சுரப்பி உண்டு. இது சிறிது ஆழமாகவும், மயிர் அடர்ந்தும் இருக்கும். பாலுணர்ச்சி ஏற்படும் போது இந்தச் சுரப்பி நன்றாகத் திறந்து ஒரு வகை மதநீரைச் சுரக்கும் என விலங்கு நூலார் கூறுவர். இதே செய்தியை,

> "கானல் மேய்ந்து வியன்புலந் தங்கும்
> புல்வாய் இரலை நெற்றி யன்ன
> பொலமிலங்கு சென்னிய பாறுமயிர் அவியத்
> தண்பனி உறைக்கும் புலரா ஞாங்கர்."
>
> —புறம் : 374

எனப் புறப்பாடல் பகர்வது வியக்கத்தக்கதொன்றாம். இரலைமானின் நெற்றியிலிருந்து மதநீர் சுரக்கின்றது. அதனால் கண்மயிர் நனைந்து குவிந்து காணப்படுகின்றது. அது போலச் சிறுவர்களின் பரட்டை மயிர் அடங்கிக் குவியும் படிப் பனி பெய்கின்றது என்னும் கருத்து ஈண்டு விளக்கப் படுகிறது.

தமிழரின் கூரிய இயற்கைப் புலனாய்விற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

இரலைக்கு அடுத்து சிறப்புடையது 'நவ்வி'.

> "சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை"

என்பது புறம்.

'நவ்வி வீழ்ந்தென', 'நாடக மயில் துயின்றென்ன' எனக் கைகேயிக்கு நவ்வியை உவமை கூறுகின்றார் கம்பர்.

'மரையான்' என்னும் மான்வகை, பார்ப்பதற்கு அழகற்றது.

"புரிமட மரையான் கருநரை நல்லேறு"

என இதனைக் குறுந்தொகை (317) குறிக்கின்றது. மரையான் குதிரை போல வேகமாக ஓடவல்லது.

கலைமான் இனத்துள் ஒன்றான 'உழை'மான் தற்போது 'புள்ளிமான்' என வழங்கப்படுகிறது.

"கள்ளியங் காட்ட புள்ளியம், பொறிக்கலை"
—அகம் : 97

"செந்நாய் வெரீஇய புகர் உழை ஒருத்தல்"
—அகம் : 219

"அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை" —நற் : 265

புகர் உழை, புள்ளியம்பிணை, புள்ளிவரிகலை என்னும் சொற்றொடர்கள் உழைமானின் புள்ளியின் அழகையே சிறப்பிக்கின்றன.

கலைமான் இனத்தில் மிகப் பெரியது கடமா என்பதாகும். இது காடுகளிலும், மலைச்சாரல்களிலும் வாழும்.

"வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு" —புறம் : 202.

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை"
—நாலடியார் ; 300.

**5. செந்நாய் :**

செந்நாய் பற்றி விலங்கு நூலார் கூறும் செய்திகள் பலவும் சங்க நூல் பாடல் கருத்துகளுடன் ஒத்துள்ளன.

செந்நாய், உருவத்தில் வீட்டு நாயைப் போல் இருக்கும். இதன் பற்கள் கூர்மையானவை. தோல், செந்நிறம் வாய்ந்தது.

"அரத்தின் ஊசித் திரள்நுதி யன்ன
திண்ணிலை எயிற்ற செந்நாய்" —அகம் : 199

செந்நாய், காடுகளில்தான் காணப்படும். இக்காலத்தில் இது மைசூர்க் காடுகளில் வாழ்கின்றது. பசியுடன் வேட்டையாடக் கிளம்பும் செந்நாய்க் கூட்டத்தை எந்த வன்மையான விலங்கும் எதிர்க்க முடியாது. வலிமை வாய்ந்த புலி, கரடி, சிறுத்தை

களைக்கூடச் செந்நாய்க் கூட்டம் வளைத்துக் கொன்று தின்று விடும்.

இச்செய்தியை,

"யானை தாக்கினும் அரவுமேற் செலினும்
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
செந்நாய் அன்ன கருவிற் சுற்றமொடு"

—பெரும்பாணா : *134-39.*

**6. கேழல் :**

கேழல் என்பது காட்டுப்பன்றியைக் குறிக்கும். இது நாட்டுப் பன்றியைப் போன்று பெரிய உருவத்தைப் பெற்றிருக்கும். காட்டுப்பன்றியின் முதுகிலும் கழுத்திலும் மயிர்க்கற்றை அடர்ந்து நீட்டிக்கொண்டிருக்கும். பனைமரத்தின் செறாம்பும் காட்டுப்பன்றியின் கழுத்து மயிரும் ஒன்றாய்த் தெரியும்.

"வெதிர்வேர் அன்ன பரூஉ மயிர்ப்பன்றி"

—அகம் : *178.*

மூங்கிலின் வேர் போன்று தடித்த மயிர் என்று இப்பாடல் கூறுகின்றது.

சங்க இலக்கியத்தில் காட்டுப்பன்றியின் கடைவாய்ப்பற்கள் கோடு என்றும், கொம்பு என்றும், மருப்பு என்று வழங்கப் படுகின்றன.

"வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை."

—நற் : *336.*

"வயிரத்து அன்ன வையேந்து மருப்பின்"

—அகம் : *178.*

காட்டுப்பன்றியின் முகம், வீழ்முகம் என்றும், தலை, உரல் போன்றது எனவும் கூறப்பட்டுள்ளன.

"வீழ்முகக் கேழல் அட்ட பூசல்"

—மதுரைக் : *295*

"உரல்தலை கேழல் பன்றிவீழ" —புறம் : *152*

காட்டுப்பன்றி விளைச்சலை உண்டு அழிக்கும். அதனை வேட்டையாடிப் பிடிப்பர். இது மிகுந்த கொடூரம் வாய்ந்தது.

## 7. நரி :

சங்க காலத்தில் நரி இனத்தைக் கணநரி என்றே வழங்கினர். இவை கூட்டமாய் உணவைத் தேடி உண்ணும்; நாயினத்தைச் சார்ந்தவை. காடுகளிலும், பாலைவனங்களிலும் வாழும்.

"கல்லா இளையர் கலித்த கவலைக்
கணநரி இனனொடு குழீஇ"

— அகம் : 375

இவை பிணத்தைத் தின்று வாழும். புலி முதலியன தின்று போட்டுவிட்டுச் சென்ற தசையோ எலும்போ கிடந்தால் அவற்றைத் தின்று வாழும். இதற்காகவே இந்நரிகள் காட்டில் வேட்டையாடும் புலி, சிறுத்தை முதலிய விலங்குகளின் பின்னால் திரியும்.

"அருங்கவட்டு உயர்சினைப் பிள்ளை ஊட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ஊன்தடி
கொல்பசி முதுநரி வல்சி ஆகும்"

—அகம் : 193

நரி, கோநாய், தீநாய், குள்ளநரி போன்றவை ஓரினத்தவை ; ஓரி என்பது ஆண் நரியைக் குறிக்கும்.

## 8. வெருகு :

சங்க காலத்தில் 'வெருகு' என்பது காட்டுப்பூனையைக் குறித்தது.

மாலைக்காலத்து மங்கிய ஒளியில் காட்டைச் சார்ந்து உள்ள ஊர்களில், வேலி ஓரத்தில், பதுங்கி வீட்டுக் கோழிகளை வேட்டையாடுவது இதன் இயல்பு.

"மிகுபதம் நிறைந்ததொகு கூட்டு ஒருசிறைக்
குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊன்நசைப் பிணவின் உயங்குபசி களைஇயர்
தளிர்புரை கொடிற்றில் செறிமயிர் எருத்தில்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலை"

—அகம் : 367

இதன் நடை, பதுங்கிய புலியின் நடை போன்றது. இரவிலும் இதன் கண்கள் கூரிய பார்வை உடையவை.

"பார்வல் வெருகு" எனவும், "பார்நடை வெருகு" எனவும் இலக்கியங்கள் கூறுகின்றன.

**9. வருடை :**

வருடை என்பது, மலையாடு ; செங்குத்தான மலைச்சாரலில் வாழும் இயல்பினது.

"வரைவாழ் வருடை" —(அகம் : 373)

"சிலம்புபாய் வருடை" — (சிந்தாமணி)

என இலக்கியங்கள் கூறுகின்றன.

நீலகிரி மலையிலும், ஆனைமலை போன்ற பகுதிகளிலும் இதனைக் காணலாம். வேட்டையாளர்கள் இதனைப் பிடிப்பது எளிதன்று. பாறைக்குப் பாறை எளிதில் பாய்ந்து சென்று மறைந்துவிடும். பாயும் போது இதன் கால்கள் பாறையைப் பற்றிக்கொள்ளும்.

"செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழல் உகளும் நாடன்"

—குறுந் : 187

**10. ஆமா :**

ஆமா என்னும் விலங்கு ஒருவகைக் காட்டுப்பசு என்பர். பேராசிரியர் 'ஆ போலும் ஆமா' எனக் குறிக்கின்றார்.

விலங்கு நூலார் இது மாட்டினத்தைச் சார்ந்த காட்டில் வாழும் மாடு (Wild oxen) என்பர்.

"கொடுங்கோட்டு ஆமான் நடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறாஅர் கன்றெனப் பூட்டும்

—புறம் : 319

"மனைத்தலை மகவை ஈன்ற அமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்புல் ஆர"

—புறம் : 117

**11. கவரிமா :**

வடநாட்டு விலங்குகளுள் ஒன்று, கவரிமா. இது இமய மலையில் வாழ்ந்ததாகப் பதிற்றுப்பத்தும் புறநானூறும் கூறுகின்றன.

"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி அயல
தகரத் தண்ணிழல் பிணையொடு'வதியும்
வடதிசை யதுவே வான்தோய் இமையம்"

—புறம் : 132

தன்னுடலினின்றும் ஒரு மயிர் நீங்கினாலும் இவ்விலங்கு உயிரை விட்டுவிடும் எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

—969

என்பது குறள்.

விலங்கு நூலார் இக்கருத்தை ஒப்பவிலலை. இது ஆய்விற் குரியது.

**12. குரங்கினம் :**

செம்முக மந்தி, மாமுக முசு, நரைமுக ஊகம் என்னும் மூவகைக் குரங்கினங்களைப்பற்றி இலக்கியங்கள் பேசுகின்றன.

மந்தி என்பது, பெண் குரங்கு; கடுவன் என்பது, ஆண் குரங்கு.

"மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின"

என்பர் கம்பர்.

"அதவத் தீங்கனி யன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்க

—நற்றி : 95

எனச் செம்முகமந்தியும்,

"மைபட் டன்ன மாமுக முசுக்கலை"

—குறுந் : 124

என முசுவும் கூறப்பட்டுள்ளன.

'கணக்கலை' என்னும் சொல் ஆண் முசுக்களின் கூட்டத்தைக் குறிக்கும்.

"கணக்கலை இருக்கும் கறிஇவர் சிலம்பு"

—அகம் : 112

கருவிரல் ஊகத்தை,

"இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிரல் ஊகம் பார்ப்போடு இரிய"

—மலைபடுகடாம் : 207-8

குரங்கின் குட்டி பார்ப்பு, பறழ் என்னும் சொற்களால் குறிக்கப் பட்டமை காண்க. பறவைக் குஞ்சுகளையும் 'பார்ப்பு' என்னும் சொல் குறிக்கும்.

குரங்குக்கூட்டத்திற்கு ஆண் குரங்கு தலைமை தாங்கும்.

> ''குரங்கின் தலைவன் குறுமயிர்க் கடுவன்''
>
> —ஐங்குறு : 275

எல்லா விலங்குகளையும்விடக் குரங்குகளே இலக்கியத்தில் அதிக இடத்தைப் பெற்றுள்ளன.

**13. முளவுமா :**

முளவுமா என்பது, முள்ளம் பன்றி. இது எய் எனவும், எய்மா எனவும் சங்கநூல்களில் வழங்கப்படுகின்றது. முள்ளம் பன்றியின் மேல்புறத்தில் கழுத்திலிருந்து தொடங்கி நீண்ட முட்கள் உள்ளன. இதனால் இது முளவுமா, அல்லது 'முள்ளம் பன்றி' என வழங்கப்படுகிறது.

முள்ளம்பன்றியின் முள், பிற விலங்குகளின் உடலில் குத்தினால் அதை எடுப்பது எளிதன்று. முள்ளம்பன்றியின் முள்ளால் தாக்கப்பட்ட கானவனைப்பற்றி மலைபடுகடாம் பேசுகின்றது.

> "சேயளைப் பள்ளி எஃகுறு முள்ளின்
> எய்தெற விழுக்கிய கானவர் அழுகை"
>
> —மலைபடு : 300-301.

போர்க்களத்தில் உடல் முழுவதும் பகைவர் அம்புகள் தைப்பக் கிடந்த வீரனுக்கு முள்ளம்பன்றியை உவமை கூறினார், ஐயனாரிதனார்.

> ''கைபோய்க் கணைஉதைப்பக் காவலன்மேலோடி
> எய்போல் கிடந்தான்என் ஏறு''
>
> —புற. வெ. மாலை—வாகை : 22

இன்னும் நீர்நாய், எருமை, இல்லெலி, அணில், முயல், மகண் மா எனப்படும் தேவாங்கு, பன்மயிர்ப் பேரெலி, வாவல் முதலிய பல்வகை உயிரினங்களைப்பற்றிய எண்ணற்ற செய்திகளைச் சங்கநூல்கள் கூறுகின்றன. இவை படிக்கப் படிக்கச் சுவை தர வல்லவை.

## 3. பறவைகள்

விலங்குகளைப்பற்றி விளக்கமுறப்' பாடியிருப்பதைப் போலவே பறவைகளைப்பற்றியும் பைந்தமிழ்ப் புலவர்கள் பல சுவையான செய்திகளை உய்த்துணர்ந்து கூறியுள்ளனர். அவற்றுள் சிறப்பான சிலவற்றை இங்கு காணலாம்.

புலவர்கள் கள்ளமற்ற வாழ்வினர்; பெற்றது கொண்டு சுற்றம் அருத்தித் தாமும் உண்டு மகிழும் தூய நெஞ்சம் உடையவர்கள். வள்ளல்களை நாடிச் சென்று பரிசில் பெற்று வாழும் இயல்பினர்.

இதனை,

"பழுமரம் உள்ளிய பறவை போல"

— புறம் : 370

**1. நாரை :**

மருதநிலத்துப் பறவைகளுள் சிறப்பிடம் பெறுவது, நாரை. கொக்கு, குருகு, வங்கா போன்ற பலவும் நாரை இனங்களே.

நாரையின் கால்கள் செம்மையானவை; அலகு, கூர்மையானது; உடல், வெண்மையானது.

"நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !"

என அழைக்கின்றார் சத்திமுத்தப் புலவர்.

"பைங்கால் கொக்கும் செங்கால் அன்னமும்"

எனச் சங்கநூல் பாடுகின்றது.

இவை மருதநிலக் கழனிகளிலும் நீர் நிலைகளிலும தங்கி மீன் தேர்ந்துண்ணும் வாழ்க்கை உடையவை.

"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு"

— ஔவையார்

"கொக்கொக்க கூம்பும் பருவத்து"

— வள்ளுவர்

என வரும் பாடல்கள் சிறந்த கருத்துகளை உள்ளடக்கியவை. நாரைகள் கூட்டம் கூட்டமாக வசிக்கும்.

பெருநாரை, சிறுநாரை, கருநாரை, வெண்ணாரை, கூழைக் கடா என, நாரையில் பலவகை உண்டு.

நெய்தல் நிலத்து வெண்மணல் மேட்டில் நாரையின் கூட்ட மொன்று நெய்தலைக் கொழுமீன் உண்பதற்காக வந்து கூடி யிருந்த தோற்றம் அரசனுடைய காலாட்படை போர் செய்யக் காத்திருந்ததைப் போல் உள்ளது என நற்றிணை கூறு கின்றது.

நாரைகள் பெடையொடும் கூடிக் கடலில் இரை தேரும் காட்சியை,

"புன்னை பூத்த இன்னிழல் உயர்கரைப்
பாடிமிழ் பனிக்கடல் துழைஇப் பெடையொடு
உடங்கிரை தேரும் தடந்தாள் நாரை"

— நற்றி : 91

என்னும் பாடல் அழகுற எடுத்துரைக்கின்றது.

**2. அன்னம் :**

பறவைகளுள் அழகுள்ளது, அன்னம். அன்னத்தின் அணி நடையை மங்கையரின் மணிநடைக்கு உவமை கூறுவர் கவிஞர்.

"அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் — விஞ்சியது
காணப் பிடித்தது காண்"

— நளவெண்பா

என அன்னத்திற்கு நளன் ஆறுதல் கூறியதாகப் புகழேந்தி புகல்கின்றார்.

'பாலையும் நீரையும் தனியே பிரிக்க வல்லது அன்னம்' என்று கூறப்படுகின்றது. இது ஆய்வுக்குரியது. தமிழ்நாட்டில் அன் னங்கள் இல்லை. வெளிநாடுகளில் உள்ளன எனக் கூறுவர். இது நீர்வாழ் பறவை இனத்தைச் சார்ந்தது.

**3. மயில் :**

பாரதநாட்டின் தேசியப் பறவை, மயில். மிக மிக அழகான பறவை. தோகை விரித்தாடும் இயல்பினது. தோகையில் நீலக் கண்களும், தலையில் குஞ்சம் போன்ற பட்டுக் கொண்டையும் இதன் சிறப்பு உறுப்புகள்.

கோலக் கலாபம் விரித்தாடும் நீல மயிலின் தோற்றத்தை நடமாடும் விறலியர்க்கு உவமையாகக் கூறுவர் பண்டைப் புலவர்.

"கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்"

— அகம் : 82

மயில்கண் டன்ன மடநடை மகளிர்"

— முருகு : 205

"அணிகிளர் கலாவம் ஐதுவிரித் தியலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞை போலநின்
வீபெய் கூந்தல் வீசுவளி ஊர"

— நற்றி : 264

**4. குயில் :**

இன்னிசை பாடும் இன்றமிழ்ப் பறவை, குயில். இது மாமரத்தில் கூடு கட்டி வாழும் ; வேனிற்காலத்தில் வெளிவந்து பாடும். இவ்வியல்புகள் பற்றி இதனை 'மாங்குயில்', 'வேனிற் குயில்' என அடை கொடுத்து வழங்கினர் பண்டைப்புலவர். குயிலின் குரல் மிக மிக இனியது. சிறிய உருவமும் கரிய நிறமும் கொண்ட இப்பறவை, இலக்கியப் புகழ் பெற்றுள்ளது.

இளவேனிலில் இப்பறவை மாம்பூவின் தாதினை அளைந்து மகிழும் காட்சியை,

"மின்னின் தூவி இருங்குயில்
பொன்னின் உரைதிகழ் கட்டளை கடுப்ப
மாச்சினை நறுந்தாது கொழுதும்"

என நற்றிணை கூறுகின்றது.

குயில் அடைகாக்கத் தெரியாததால் தான் இட்ட முட்டையைக் காக்கையின் கூட்டில் வைத்துவிடும் என இக்காலத்தில் கூறுகின்றனர். இதற்குச் சங்க நூல்களில் ஆதாரமில்லை. குயிலை வைத்துப் பாரதியார் பாடியுள்ள 'குயில் பாட்டு' சிறந்த இலக்கியமாக மதிக்கப்படுகிறது.

**5. வானம்பாடி :**

வானத்தில் பறந்து இனிய இசை பாடும் பறவை, வானம்பாடி. இது மழை நீரை உணவாக உட்கொள்ளும் எனக் கூறுவர்.

இது சிட்டுக்குருவியைப் போல் சிறிய உருவினது. வான் முகட்டைக் கிழித்துச் சென்று பாடும் ஆற்றல் வாய்ந்தது.

கண்ணில் காண்பதற்கு அரிய புள் ஆதலால் இதைப்பற்றிய செய்திகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை.

"தற்பாடிய தளிஉணவின்
புள்"

எனப் பட்டினப்பாலையும்,

"துளிநசை வேட்கையால் இசைபாடும் புள்"

எனக் கல்லாடமும்,

"நீர்இடும்பை புள்ளினுள் ஓங்கல்
அறியும்"

என நான்மணிக்கடிகையும் கூறுகின்றன.

**6. கிளி :**

சங்க காலத்திலிருந்து தற்காலம் வரை கவிஞர்களால் பாடப் படும் புகழ் பெற்றது, கிளி. காதலரிடையே தூது செல்லும் பறவை இது. தமிழிலும் பிற மொழிகளிலும் கிள்ளை விடு தூதுகள் நிறைய உண்டு.

கிளி, குறிஞ்சிநிலப் பறவை என்பர். ஆனால், முல்லை, மருதம் ஆகிய நிலங்களில் உள்ள சோலைகளில் இது வாழ் கிறது.

சிவந்த மூக்கும், பச்சைப் பசேலென்ற உடலும், பேசும் திறனும் கிளியின் சிறப்பியல்புகளாகும்.

பச்சைக்கிளியைத் தவிர வெள்ளைக்கிளியும், பஞ்சவர்ணக் கிளிகளும் உண்டு. கிளிகள் கீச்சுக்கீச்செனக் கத்தித் திரிந்து தினைக்கதிர்களைக் கவரும். இவற்றை ஓட்டும் தட்டைக்குக் 'கிளிகடி கருவி' என்று பெயர் வைத்துள்ளனர்.

கிளிகளிடமிருந்து தினைப்புனத்தைக் காக்கச் சென்ற வள்ளியைத் தெய்வக்குமரன் களவில் கவர்ந்து சென்ற நிகழ்ச்சியைத் தமிழ் இலக்கியங்கள் சுவைபடக் கூறுகின்றன.

" பாலுக்குச் சீனியைப் போல் — பசுந்தமிழ்ப்
பாடலுக் கின்னிசை போல்,
சோலைக்குப் பைங்கிளி யே! — உனது
துணையும் இனிதே அம்மா!"

எனப் பாடி மகிழ்கின்றார், கவிமணி தேசிகவிநாயகர்.

**7. புறா:**

பறவைகளுள் காதல் மிகுந்தது, புறா. காதல் பறவை எனினும் கடமையிலும் கற்பிலும் சிறந்தது. மற்ற பறவை களைப் போல் ஒரு பெண்புறா பல ஆண் புறாக்களுடன் கூடி வாழ்வதில்லை. தான் கூடிவாழும் ஆண் இறந்தால்தான் மற்ற ஆண்புறாவை நாடும். பறவை இனத்தில் இத்தகைய கற்பை வேறு எங்கும் காண முடியாது.

இக்கற்பு மாண்பினை,

"ஒருபெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன்பட டாதாம் ;
ஒருபெட்டை மத்தாப் பைப்போல்
ஒளிபுரிந் திடநின் றாலும்
திரும்பியும் பார்ப்ப தில்லை
வேறொரு சேவல் ! தம்மில்
ஒருபுறா இறந்திட் டால்தான்
ஒன்றுமற் றொன்றை நாடும்."

— அழகின் சிரிப்பு

என அருமையாகப் பாடுகின்றார், புரட்சிக்கவிஞர் பாரதி தாசன்.

புறாக்களுள் மணிப்புறா, மாடப்புறா, பச்சைப்புறா, தவிட்டுப் புறா, தூதுணம் புறவு எனப் பலவகைகள் உண்டு.

புறாவின் அளவற்ற அன்புள்ளத்தை,

"அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவு"

எனக் கலித்தொகை விளக்குகின்றது.

**8. அன்றில் :**

அன்றில், நெய்தல்நிலப் பறவை. இது மகன்றில் எனவும் வழங்கப்படுகிறது. இது பனைமரத்தில் கூடுகட்டி வாழ்வதால் 'பனைவாழ் அன்றில் என குறிக்கப்பட்டுள்ளது. இது பெரும் வாயையும் செந்நிறமான தலையையும் கொண்டது.

"ஏங்குவயிர் இசைய பெருவாய் அன்றில்"

—குறிஞ்சிப்பாட்டு

"எலிதகைந் தன்ன செந்தலை அன்றில்"

—குறுந்தொகை.

என வரும் பாடல் அடிகள் இதனை உணர்த்தும்.

ஆண் அன்றிலும் பெண் அன்றிலும் ஒன்றைவிட்டு ஒன்று வாழா. பிரிந்தால் உடனே கூவி அழைக்கும் இயல்புள்ளவை. உறக்கத்தில்கூட ஒன்றன்மீது ஒன்று ஒரு கண்ணை வைத்தே உறங்கும் என்பர்.

"ஒருகண் துயின்று ஒருகண் ஆர்வத்தால்—அன்றில்
இன்றுணை மேல் வைத்துறங்கும்"

என நளவெண்பா பாடுகின்றது.

'அன்றில்' என்னும் சொல்லிலே இப்பொருள் அமைந் துள்ளதைக் காணலாம். அன்றி+இல்—ஒன்றையன்றி மற் றொன்று இல்லாதது என, இயல்பு நோக்கித் தமிழர் பெயர் சூட்டினர் போலும்.

**9. காக்கை :**

காக்கை கருமையான அழகற்ற பறவை எனினும் இலக்கியங்களால் பாராட்டப்படும் சிறந்த பண்புகளைப் பெற்றுள்ளது. எப்பொருளைக் கண்டாலும் அதைத் தனியே கவர்ந்து சென்று உண்ணும் இயல்பு வாய்ந்தது, கொக்கு.

தன் இனத்தாரையும் கூவி அழைத்துக் கூடி உண்ணும் இயல் பினது, காக்கை.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள"

என இதனைப் பாராட்டுகின்றார் வள்ளுவர்.

காக்கையினிடம் மனிதன் கற்க வேண்டிய பண்புகள் இன்னின்ன என்பதைத் தமிழ்ப்பாடல் ஒன்று பட்டியலிட்டுக் காட்டுகின்றது.

"காலை எழுதல் ; காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல் — சாலவே
உற்றாரோ டுண்ணல், உறவாடல் இவ்வைந்தும்
கற்றாயோ காக்கைக் குணம்."

எவ்வளவு அருமையான கருத்துகள் இவை !

விருந்து வரக் கரைந்த காக்கையைப் பாடிய காரணத்தினால் ஒரு புலவர் 'காக்கை பாடினியார் நச்செள்ளையார்' எனப் பெயர் பெற்றார்.

**பல்வேறு பறவைகள் :**

தமிழகத்தில் காணப்படும் பறவைகளை மட்டுமன்றி ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாடுகளிலிருந்து வரும் பறவைகளையும் 'வேடன் தாங்கல்' என்னுமிடத்தில் காணலாம். இவ்விடம் பறவைகளின் சரணாலயமாக ஆக்கப்பட்டுவிட்டது. சென்னையிலிருந்து செங்கற்பட்டின் வழியாகச் செல்லும் பாதையில் சென்றால் வேடன்தாங்கலை அடையலாம். பறவைகள் பற்றிய ஆராய்வு இப்போது நம் நாட்டிலும் உலக நாடுகளிலும் அதிக ஈடுபாட்டுடன் நடந்து வருகிறது. பலர் இத்துறையில் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இந்த ஆர்வம் வளர்வதற்கு அடிகோலியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் விஸ்லர், சலீம் அலி போன்றவர்கள். இத்துறையில் பயன்படக்கூடியவை விஸ்லரின் 'இந்தியாவின் சாதாரணப் பறவைகள்'; சலீம் அலியின் 'இந்தியாவின் பறவைகள்' என்னும் இரு நூல்கள்.

இங்கு குறித்தன போக, அவற்றுள் காணப்படும் சில பறவைகளின் பெயர்களையும் அவற்றிற்குரிய ஆங்கிலப் பெயர்களையும், இங்கு தருகின்றோம்.

| | தமிழ்ப் பெயர் | ஆங்கிலப் பெயர் |
|---|---|---|
| 1. | முக்குளிப்பான் | Little Grabe or Dabchick |
| 2. | சாம்பல் கூழைக்கடா | Gray Pelican |
| 3. | வழுவாங்கி | Darter or Snake bird |
| 4. | நீர்க்காகம் | Little cormorant |
| 5. | கருந்தலை அரிவாள் மூக்கன் | Black Ibis |
| 6. | துடுப்பு வாயன் | Spoonbill |
| 7. | வரித்தலை வாத்து | Barheaded goose |
| 8. | புள்ளி மூக்குத் தாரா | Spotbill or Grey Duck |
| 9. | சிறு சிறகி | Lesser whistling Teal |
| 10. | குள்ளத் தாரா | Cotron Teal |
| 11. | கள்ளப் பருந்து | Pariah kite |
| 12. | கருடன் | Brahminy kite |
| 13. | வில்லேந்திரன் குருவி | Shikra |
| 14. | வங்காளக் கழுகு | White backed or Bengal Vulture |
| 15. | திருக்கழுக்குன்றக் கழுகு | White or Scavenger Vulture |
| 16. | வைரி | Shaheen Falcon |

| தமிழ்ப்பெயர் | ஆங்கிலப் பெயர் |
|---|---|
| 17. செந்தலை வல்லூறு | Rebheaded Merlin |
| 18. கருங்கௌதாரி | Black Partridge |
| 19. சாதா கௌதாரி | Grey Partridge |
| 20. கருநெஞ்சுக் காடை | Blodk breasted or Rain Quail |
| 21. புதர்க் காடை | Jungle bush Quail |
| 22. வெள்ளைக் கானாங்கோழி | Grey Jungle Fowl |
| 23. சாரஸ் நாரை | Saras Crane |
| 24. வெள்ளை நெஞ்சு நீர்க்கோழி | White breasted Waterhen |
| 25. மயில்கால் கோழி | Purple Moor hen |
| 26. இந்தியப் பெரும் ஒட்டகப் பறவை | Great Indian Bustard |
| 27. தாமிர இறக்கை இலைக் கோழி | Broze winged Jacana |
| 28. ஆள்காட்டிக் குருவி | Redwattled Lapwing |
| 29. சாதாக் உள்ளான் | Common Sandpiper |
| 30. சிறு ஆள்காட்டிக் குருவி | Little Ringed Plover |
| 31. நத்தைக் குத்தி | Stone Curleu |
| 32. தவிட்டுத் தலைக் கடற்புறா | Brownheaded Gull |
| 33. ஆலா | Indian whiskered Tern |
| 34. மணல் கோழி | Common Sandgrouse |
| 35. சிவப்பு ஆரக்கிளி | Rose Ringed Parakeet |
| 36. செம்பகம் | Crow Pheasant |
| 37. புள்ளி ஆந்தை | Spotted Owlet |
| 38. கொம்பு ஆந்தை | Great horned Owl |
| 39. சாவுக் குருவி | Indian Nightjar |
| 40. முன்னி வெளவால் | House swift |
| 41. நீல மீன்கொத்தி | Small blue kingfisher |
| 42. கரும்புள்ளி மீன்கொத்தி | Pied kingfisher |
| 43. பஞ்சிட்டான் | Small Green Bee-eater |
| 44. பனங்காடை | Indian Rollar or Blue Jay |
| 45. கொண்டஞ்சிறாவடி | Hoopoe |
| 46. மலபார் மரத்தலையன் | Malabar pied Hornbill |
| 47. கன்னான் பறவை | Coppersmith |
| 48. மராட்டிய மரங்கொத்தி | Mahratta woodpecker |
| 49. மொட்டைவால் குருவி | Indian Pitta |

| | தமிழ்ப்பெயர் | ஆங்கிலப் பெயர் |
|---|---|---|
| 50. | கொண்டை வானம்பாடி | Crested Lark |
| 51. | சப்பட்டைக் குருவி | Blackbellied Finch Lark |
| 52. | செம்பிட்டத் தில்லான் | Redrumped Swallow |
| 53. | சாம்பல் பருந்துக்குருவி | Grey Shrike |
| 54. | மாம்பழக்குருவி | Blackheaded Oriole |
| 55. | கரிக்குருவி | Black Drongo |
| 56. | சாதாமைனா | Common Myna |
| 57. | கறுப்பு வெள்ளை மைனா | Pied Myna |
| 58. | செஞ்சிட்டு | Scarlet Minivet |
| 59. | அயோரா குருவி | Common Iora |
| 60. | பச்சைக்குருவி | Jerdon's Chloropsis |
| 61. | சிவப்பு மீசைக்கொண்டைக் குலாத்தி | Red whiskered Bulbul |
| 62. | கொண்டைக் குலாத்தி | Redvented Bulbul |
| 63. | விசிறிவால் குருவி | Fantailed Flycatcher |
| 64. | வால் முளைத்தான் குருவி | Paradise Flycatcher |
| 65. | மஞ்சள் கண்ணீ | Yellow-eyed Babbler |
| 66. | காட்டுப் பூணியல் | Jungle Babbler |
| 67. | சிறு பூணியல் | Common Babbler |
| 68. | வாலாட்டிச் சிட்டு | Ashy wren-Warbler |
| 69. | தையல் பாக்குச்சிட்டு | Tailor Bird |
| 70. | குண்டுக் கரிச்சான் | Magic Robin |
| 71. | சாமா | Shama |
| 72. | புதர்ச்சிட்டு | Pied Bushchat |
| 73. | இந்திய ராபின் | Indian Robin |
| 74. | மலபார் விசிலடிச்சான் குருவி | Malabar Whistling Thrush |
| 75. | வெள்ளைச் சிட்டு | Grey Tit |
| 76. | பாக்குச் சிட்டு | Cheatnut bellied Nutthatch |
| 77. | சிறு வாலாட்டிக் குருவி | Grey Wagtail |
| 78. | கறுப்பு வெள்ளை வாலாட்டிக்குருவி | Large died Wagtail |
| 79. | தவிட்டுக் குருவி | Tree pipit |
| 80. | பூக்கொத்திக் குருவி | Tickell's Flowerpecker |
| 81. | ஊதாச் சிட்டு | Purple sun-bird |
| 82. | வெள்ளைக் கண்ணீ | White-eye |

| | தமிழ்ப்பெயர் | ஆங்கிலப் பெயர் |
|---|---|---|
| 83. | அடைக்கலங்குருவி | House Sparrow |
| 84. | தூக்கணாங்குருவி | Baya Weaver Bird |
| 85. | செஞ்சில்லை | Red Munia |
| 86. | புள்ளியுடைச் சில்லை | Sported Munia |
| 87. | ரோஜாச் சிட்டு | Hodgson's Rose Finch |
| 88. | கருந்தலைக் காட்டுச்சில்லை | Black headed Bunting |
| 89. | செந்தலைக் காட்டுச்சில்லை | Red headed Bunting |

# வைடூரியம்

## கலைகள்
## விழாக்கள்



## கலைகள்

1. ஓவியக்கலை
2. சிற்பக்கலை
3. இசைக்கலை
4. நடனக்கலை
5. நாடகக்கலை
6. கட்டடக்கலை
7. மருத்துவக்கலை

## விழாக்கள்

1. பொங்கல்
2. தீபாவளி
3. கார்த்திகைத்தீபம்
4. நவராத்திரி
5. கந்த சஷ்டி
6. ஆடிப்பெருக்கு
7. ஆவணி மூலம்
8. பாவை விழா
9. தைப்பூசம்
10. மாசிமக விழா
11. பங்குனி உத்திர விழா
12. சித்திரைத் திருவிழா

# வைடூரியம்

நவமணிகளுள் ஏழாவது இடத்தைப் பெற்றிருப்பது, வைடூரியம்.

இது, வெண்மையும் பழுப்பு நிறமும் வாய்ந்தது.

"தீதறு கதிர்ஒளி; தெண்மட்டு உருவவும்." இதனைச் சிலப்பதிகாரம் குறிக்கின்றது. குற்றமற்ற கதிரவனுடைய ஒளி போலவும், தெளிந்த தேன்துளி போலவும் உருவம் உடையவை வைடூரிய மணிகள் என்பது இதன் பொருள்.

வைடூரியத்தை உரைகல்லில் உரைத்துப் பார்த்தால் அதன் ஒளி அதிகரிக்கும் என்பர். அதுதான் உயர்ந்த வைடூரியம்.

உரைக்க உரைக்க ஒளியேறுவது வைடூரியத்தின் இயல்பு; கற்கக் கற்க மெருகு ஏறுவது கலைகளின் இயல்பு.

இப்பொதுத் தன்மை காரணமாகத் தமிழகக் கலைகள் வைடூரியமாக இங்கு உருவகிக்கப்படுகின்றன.

தேன் போன்ற நிறமுடையவை வைடூரியங்களுள் ஒருவகை மணிகள்.

தேன்போல் இனிப்பவை தமிழகப் பெருவிழாக்கள். நாவில் மட்டுமல்ல, கண்ணிலும் கருத்திலும் இனிக்கும் அவ்விழாக்களை இங்கு அறிமுகம் செய்கிறோம்.

## கலைகள்

கற்கப்படுவன 'கலை' எனப்படும். 'கல்' என்னும் வேர்ச் சொல்லினின்றும் பிறந்தது 'கலை' என்னும் சொல். கலை நிறைந்த உள்ளத்தில் கவலைகள் சேர்வதில்லை. அறியாமை இருள் அண்டுவதில்லை. கவலைகளையும் அறியாமையையும் உள்ளத்திலிருந்து கல்ல வல்லது ஆதலின் இவ்வறிவுப் பகுதியைக் 'கலை' என முன்னோர் குறித்தனர்.

கலைகள் அறுபத்து நான்கு என்பர்.

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை"

எனக் குறிக்கின்றார் கம்பர்.

அறுபத்துநான்கு என்ற கணக்கில் வராத கலைகளும் பல உண்டு. ஆடவர் கலைகள் 72; மகளிர் கலைகள் 64 எனச் சமணர் நூல்கள் கூறுகின்றன.

இக்கலைகளால் விளைந்த நன்மைகள் கணக்கற்றவை.

மக்களின் உள்ளத்தைத் தன்வயமாக்கி, எங்கும் நிறைந்து, வெளிப்படும் ஆற்றலே கலை என்பர். இக்கலையாற்றல் கண்ணைக் கவரும் ஓவியமாகவோ, கருத்திற்கு இன்பமூட்டும் காவியமாகவோ வெளிப்படலாம். கண்ணையும் கருத்தையும் ஒருங்கு கவரும் கட்டடமாகவும் வெளிப்படலாம்.

இக்கலைதான் உலகத்தார் வியந்து போற்றும் அஜாந்தா ஓவியங்களைப் படைத்தது; சித்தன்ன வாசல் சித்திரங்களைத் தீட்டியது. இயற்கை அன்னையின் மடியில் தவழும் எழில் மலர் போன்ற எல்லோராக் குகைச்சிற்பங்களைத் தீட்டியது கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொள்ளும் காஞ்சி, அமராவதி, மாமல்லபுரச் சிற்பங்களைச் செதுக்கியது. நிலவில் பேரொளி காலும் தாஜ்மகாலைப் படைத்தது; தரணி புகழும் தஞ்சைப் பெருங்கோயிலைப் படைத்தது. காதுக்கு இனிமை பொழியும் கர்நாடக இசையை உருவாக்கியது. இன்னும் எண்ணற்ற சாதனைகளைப் புரிந்துள்ளது.

வடமொழியில் காமசூத்திரத்தை எழுதிய வாத்சாயனர் கலைகள் அறுபத்து நான்கு எனக் கூறி அவற்றின் பெயர்களையும் குறித்துச் சென்றுள்ளார்.

போதிசத்துவரான புத்தர் பெருமானது வரலாற்றைக் கூறும் நூலான 'லலித விஸ்தரம்' என்ற நூலிலும் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

கலைகளை 'நுண்கலை' என்றும், பொருள் தேடுவதற்கு வழி காட்டும் 'பொருள் ஈட்டக்கலை' என்றும் இருபிரிவாகப் பகுக்கலாம். ஓவியம், சிற்பம், இசை, நடனம் போன்றவை நுண் கலைகள்.

மற்றவை இரண்டாம் வகையைச் சார்ந்தவை. காமசூத்திரத்தில் கூறப்பட்ட 64 கலைகளின் பெயர்கள் தமிழ்ப்படுத்தி இங்கு தரப்படுகின்றன.

1. ஆடல்
2. பாடல்
3. இசைக்கருவிகள்
4. வீணை
5. ஓவியம்
6. கவிதை
7. நிகண்டு
8. யாப்பு
9. அணி இலக்கணம்
10. நாடகம் ஆடுதல்
11. செய்யுளின் ஓரடியைக்கொண்டு மற்ற அடிகளை நிரப்பிப் புதிய செய்யுள் செய்தல்
12. போட்டியில் ஒருவர் சொல்லும் செய்யுளின் இறுதி எழுத்தில் தொடங்கும் வேறொரு செய்யுளைச் சொல்லுதல்
13. புதிர் போல் அமைந்த பாக்களைச் செய்தல்
14. எளிதில் ஒலிக்க முடியாத கடினமான பாக்களைப் படித்தல்
15. மறைபொருளாகச் செய்யுளில் பொருள்களை அமைக்கும் புதிர் வகை
16. பிறரை ஏமாற்றுவதற்கான செய்யுள் செய்தல்
17. பல நாட்டு மொழிகளைக் கற்றல்
18. கீழோர் மொழிகளை அறிதல்
19. நூல்களை அழகாகவும் தெளிவாகவும் படித்தல்
20. முன்பு படிக்காத நூலை ஒருவருடன் கூடிப் படிக்கும் திறமை
21. மனத்தில் ஒரு செய்யுளை வைத்துக்|கொண்டு, சில குறிப்புகளை மட்டும் ஒருவர் தர, மற்றவர் அச்செய்யுளைச் சொல்லுதல்
22. மனப்பாடம் செய்தற்குரிய முறைகள்
23. மனையடி சாத்திரம்
24. தச்சுக்கலை
25. பருவங்களின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்பத் தரையை மாற்றி அமைத்துக்கொள்வது

26. தோட்டக்கலை
27. அரிசி, பூ முதலியவற்றால் ஆன கோலங்கள்
28. பலவகைத் தின்பண்டங்களைத் தயாரிப்பது
29. பலவகைக் குடிநீர்களைத் தயாரிப்பது
30. நூல் நெசவும் தையலும்
31. பிரம்பு பின்னல்
32. பூ வேலைகள்
33. மாலை கட்டுதல்
34. தலைக்கொண்டை முடிச்சு அலங்காரங்கள்.
35. உடை அலங்காரம்
36. காதணிகள்
37. வாசனைப் பொருள்கள்
38. நகைகள்
39. உடம்பு பிடிப்பது, தலைமயிரைக் கோதிவிடுவது
40. உதட்டிற்கு வண்ணம் தீட்டுவது, முகம் முதலிய உறுப்புகளுக்கு ஏற்ப மணநிறப் பொடிகளைப் பயன்படுத்துதல்
41. இலைகளில் தன் எண்ணத்தைத் தெரிவிக்கும் ஓவியங்களை வெட்டி, அவற்றைக் காதற்செய்தி அனுப்பப் பயன்படுத்துதல்
42-43. ஆண்களும் பெண்களும் சேர்ந்து நீராடும் பொழுது, விளையாட்டாக நீரில் மிருதங்கம் போல் ஒலிகளைக் கிளப்பும் கலைகள் இரண்டு.
44-47. படுக்கை தயாரிப்பு முதல், இன்புற்றிருப்பதற்குப் பயன்படும் கலைகள்
48. உலோகம், நாணயம், இரத்தினங்கள்—இவற்றை மதிப்பிடுவது
49. இந்திர ஜாலம்
50. பொருள்களைக் கையில் மறைப்பது
51. பொருள்களைத் துணியைக்கொண்டு மறைப்பது
52. இரசவாதம்
53. உலோகம், மணிகள் இருக்கும் நிலத்தைக் கண்டறிவது
54. சகுன அறிவு
55. எந்திரங்களைச் செய்வது

56. வீட்டில் கிளி, மைனா முதலியவற்றைப் பேசப்பழக்குவது
57. சூதாட்டம்
58. சொக்கட்டான்
59. ஆடு, கோழி முதலியவற்றைச் சண்டையிடச் செய்வது
60. பொம்மைகளைக்கொண்டு குழந்தைகளுக்கு உரிய விளையாட்டுகளைச் செய்து காட்டுவது
61. கயிற்றைக்கொண்டு விளையாடுவது
62. நல்ல நடத்தைக்குரிய பயிற்சிகள்
63. யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியன
64. படைப்பயிற்சியும் வேட்டைப் பயிற்சியும்

இவற்றுள் குறிப்பிட்ட சில கலைகள் பற்றிய செய்திகள் இங்கு தரப்படுகின்றன.

## 1. ஓவியக்கலை

'ஓவியம்' வல்லுநர் பண்டைத் தமிழகத்தில் கண்ணுள் வினைஞர் எனப்பட்டனர். பார்ப்பவர் கண் எதிரே தம் தொழிலை நிறுத்துவோர் என்பது இதன் பொருள்.

"எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர்"

— 516-518

என இவர்களைப்பற்றி மதுரைக்காஞ்சி கூறுகிறது.

மணிமேகலை உவவனத்திற்கு மலர் கொய்யச் சென்றபோது வழியில் மாளிகைகளின் சுவர்களில் எண்ணற்ற ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன எனச் சாத்தனார் கூறுகின்றார். 2500 ஆண்டுகட்கு முன்பே தமிழர்கள் ஓவியக்கலையில் மிகச்சிறந் திருந்தனர் என்பதைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

நடுகல்லில் வீரனது சிற்பம் செதுக்கப்படும் முன்பே அதை ஓவியமாகத் தீட்டும் வழக்கம் இருந்தது. ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் தமிழில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை"

பல்லவர் காலத்தில் தமிழகத்தின் குடைவரைக் கோயில்களில் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. புதுக்கோட்டைக்கு மேற்கே 15 கி. மீட்டர் தொலைவில் உள்ள சித்தன்ன வாசல் குடைவரைக் கோயில் ஓவியங்கள் தமிழரின் ஓவியக்கலைத் திறனை உலகுக்குக் காட்டி நிற்கின்றன.

சோழர் கால ஓவியங்களில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் பொற்றாமரைக் குளத்திற்கு எதிரில் உள்ள சுவர்களில் சிவபெருமான் புரிந்த 64 திருவிளையாடல்களும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

திருக்குற்றாலத்தில் சித்திரசபையின்மேல் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை.

இவற்றின் மூலம் அக்காலத்திலுள்ள நடன வகைகள், நடன மங்கையரின் ஒப்பனைகள், ஆடை அணி வகைகள் போன்ற பல செய்திகள் அறியப்படுகின்றன. மக்களின் நாகரிக உணர்வும், கலையழகும் புலப்படுகின்றன.

## 2. சிற்பக்கலை

மண், செங்கல், கருங்கல், மெழுகு, அரக்கு மரம், உலோகம் முதலியவற்றைக்கொண்டு உருவங்களை அமைப்பது சிற்பக் கலை எனப்படும்.

தமிழகத்தில் முதல் முதல் சிற்பக்கலைக்கு நிலைக்களனாக விளங்கியவை நடுகற்கள். போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரனுக்குக் கல் நடுவது பண்டைத் தமிழர் வழக்கம்.

அவ்வீரனது உருவத்தைக் கல்லில் செதுக்குவர். இதுவே சிற்பக்கலையின் தோற்றம் எனலாம். தொல்காப்பியர் காலத்தில் பழமைகள் இருந்தன என அறிகிறோம்.

இக்கலை படிப்படியாக வளர்ந்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் கண்ணகிக்குச் செங்குட்டுவன் சிலை அமைத்த செய்தி கூறப் படுகிறது.

கொல்லி மலையில் பெண் தெய்வத்தின் வடிவாக ஒரு பாவை அமைக்கப்பட்டிருந்ததெனச் சங்க நூல்கள் கூறுகின்றன. அது கோவிலிலோ, தனிக்கல்லிலோ, தூணிலோ, சிற்பமுறைப்படி அமைக்கப்பட்டிருந்தது எனத் தெரிகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில் உலக அறவியில் 'கந்திற்பாவை' ஒன்று இருந்ததாக மணிமேகலை கூறுகின்றது. இவை தெய்வ உருவங்கள் எனக் கருதப்பட்டன.

"மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க"

எனச் சிற்பக்கலை பற்றி மணிமேகலை கூறும் செய்தி கருதத் தக்கது.

புராணங்கள் செல்வாக்குப்பெற்ற பின்னர்ச் சிவன், திருமால், முருகன், பலதேவன், கொற்றவை போன்ற தெய்வங்கட்குக் கோயில்கள் கட்டி, அவற்றில் அவர்கள் உருவச் சிலைகளை வைத்து வழிபடும்' வழக்கம் ஏற்பட்டது.

இவ்வுருவச்சிலைகள் முதன்முதலில் சுதையால் ஆக்கப்பட்டன. பின்னர்க் காலப்போக்கில் கல்லிலும் உலோகத்திலும் வடிக்கப் பட்டன.

மாமல்லபுரச்சிற்பங்கள், மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிற்பங்கள், காஞ்சி கயிலாசநாதர் கோயில் சிற்பங்கள் முதலி யவை குறிப்பிடத்தக்க வேலைப்பாடு கொண்டவை.

நாயக்கர் காலமாகிய கி.பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுச் சிற்பங்களில் விசயநகரச் சிற்பமுறை கையாளப்பட்டது. மதுரை மீனாட்சியம்மை கோயில், புதுமண்டபத்தூண் சிற்பங்கள், இராமேசுவரம் பெரிய கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோயில், பேரூர்ச் சிவன் கோயில் முதலியவற்றிலுள்ள சிற்பங்கள் பெரும் சிறப்புப் பெற்றவை.

மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள குறவன் சிலை ஒன்று குறிப்பிடத்தக்கது. குறவன் உடல், கட்டமைப்பு வாய்ந்தது. அவன் மார்பு, அகன்றது. கண்களில் கடுமை பொங்குகிறது.

உழைத்து உரம் பெற்ற உடம்பு என்பதைச் சிற்பம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அவன் அணிந்துள்ள அணிகள் அக்கால நிலையை உணர்த்துகின்றன.

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பாதையில் உள்ளது கிருஷ்ணாபுரம் என்ற சிற்றூர். அதில் கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட திருமண மண்டபம் ஒன்றுண்டு. அதன் ஒவ்வொரு தூணிலும் கண்ணைக் கவரும் வண்ணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சியை விளக்குவன.

இரண்டாம் தூணில் பல சிலைகள் உள்ளன. இவை ஒரு சுவை யான நிகழ்ச்சியை விளக்குகின்றன. அவற்றுள் குறிப்பிடத் தக்கது குறத்தியின் சிலை. அவள் அரசகுமாரன் ஒருவனைத் தோளில் சுமந்துகொண்டு ஓடுகிறாள். அடிப்புறம் அரசியின் சிற்பம். குறத்தி தன் கையில் உள்ள கிலுகிலுப்பையைக் காட்டி அரசகுமாரன் கவனத்தை இழுக்க முயன்று அவனுடன் ஓடி விடுகிறா .

மற்றொரு பக்கம், அரசி குறி கேட்பது போலவும், 'உன் மகன் கிடைக்க மாட்டான்' எனக் குறத்தி கூறுவது போலவும் சிற்பங் கள் உள்ளன.

மன்னன் குதிரைமீதமர்ந்து தன் மகனைத் தேடி வருகிறான். வழியில் ஒருவன் குதிரையை வழி மறிக்கின்றான். குதிரை தன் முன்கால்களைத் தூக்கி அவனை நசுக்குகிறது. அவன் தன் இரு கைகளையும் தரையில் ஊன்றி, மூச்சடக்கிக் குதிரையின் அழுத்தலைச் சமாளிப்பது அருமையாகச் செதுக்கப் பட்டுள்ளது.

இப்போது பெண் குழந்தை ஒன்று குறவனிடம் அகப்பட்டிருக்க வேண்டும். ஐந்தாம் தூணில் குறவன் அரசகுமாரத்தியைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறான். அவனுக்கு இடப்புறம் அரச குமாரன் ஒருவன் குதிரைமீது வந்து, குறவனது விலாவில் ஈட்டியால் குத்துகிறான். விலாவிலிருந்து பெருகிய இரத்தம் கொப்பூழ்வரை வருவதைச் சிற்பி அற்புதமாகச் செதுக்கி அமைத்திருப்பது வியப்பூட்டுகிறது. ஈட்டியால் குத்தப்பட்ட குறவன் வலிதாங்காமல் துடிக்கிறான். விலா எலும்புகளும், கழுத்து நரம்பும் புடைக்கும்படி நெளிகிறான். வீரன் ஒருவன் மறு பக்கத்தில் வாளோடு குறவன்மீது பாய்கிறான். இப்போது

அரச குமாரத்தியின் முகம் மலர்கிறது. தனக்கு உதவி வந்து விட்டது என்ற தைரியத்தோடு அவள் குறவன் குடுமியைப் பற்றி இழுக்கிறாள். இவ்வளவு உணர்ச்சிகளையும் வடித்துக் காட்டுகின்றன இச்சிற்பங்கள்.

திருவரங்கம் கோயில் மண்டபக் குதிரை வீரர் சிலைகள் அருமையான சிற்ப வேலைப்பாடு கொண்டவை. தமிழகத்தில் இவை போன்ற இடங்கள் இன்னும் நிறைய உள்ளன.

## 3. இசைக்கலை

கலைகள் எல்லாவற்றிலும் சிறந்தது இசைக்கலை. இது நுண் கலைகளுள் ஒன்று. எல்லோருமே இசைக்கலையில் தேர்ச்சி பெற இயலாது. பெற்றவருள்ளும் மிகச்சிலர்தான் மக்கள் உள்ளங்களைக் கவரும் இன்னிசை பாட வல்லவராக முடியும். எனவே, இசைக்கலை ஒரு தெய்விகக் கலையாக மதிக்கப்படுகிறது.

மிகப்பழங்காலந்தொட்டே தமிழர் இசையறிவு பெற்றிருந்தனர். தினைப்புனத்தில் கதிர்களை மேய்வதற்காக வந்த யானைக் கன்று ஒன்று, அங்கே குறமகள் பாடிய குறிஞ்சிப்பண்ணின் இசை கேட்டு மயங்கி நின்றதாக அகப்பாடல் ஒன்று கூறுகிறது. தமிழை இயல் இசை நாடகம் என முத்தமிழாகப் பாகுபாடு செய்தமையே அவர்களின் இசையறிவைப் புலப்படுத்தப் போதிய சான்றாகும்.

சங்க காலத்தில் தமிழ்ப்பண்கள் ஏழு என வழங்கின. அவை : குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவற்றினின்றும் திறங்கள் பிறந்தன. இவ்வாறு பிறக்கும் திறங்களும் பண்களும் பல கிளைகளாக இயங்கிய வகையில் எண்ணற்ற இசை வகைகள் தோன்றின.

தமிழில் உள்ள பெரும் பண்கள் 5. அவை குறிஞ்சிப்பண், பாலைப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண் என்பன. இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல. இவற்றுள் பகற்பண், இரவுப்பண், காலைப்பண், மாலைப்பண் என்ற வகைகளும் இருந்தன.

குறிஞ்சிநிலத்துக் கானவர் குன்றக் குரவை ஆடினர். கொற்றவை வழிபாடாகப் பாலை நிலத்து வேட்டுவர் வேட்டுவ வரி பாடினர்.

முல்லை நில ஆயரும் ஆய்ச்சியரும் ஆய்ச்சியர் குரவை நிகழ்த்தினர். இவற்றைச் சிலப்பதிகாரம் விரித்துரைக்கின்றது.

சீறியாழ், பேரியாழ், சகோடயாழ், வில்யாழ், மகரயாழ் போன்ற யாழ் வகைகளும் குழல், கின்னரி, கொக்கரி, தடாரி, சச்சரி, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், தமருகம், துந்துபி, குடமுழா, முரசம், உடுக்கை, தத்தலகம், தாளம், துடி, வீணை போன்ற எண்ணற்ற இசைக்கருவிகள் அக்காலத்தில் வழங்கப்பட்டன.

தேவார காலத்தில் தமிழிசை வளர்ந்தது. திருக்கோயில்கள் சமயப்பணியுடன் தமிழ் இசையும் வளர்த்தன.

பிற்காலச் சோழர் ஆட்சியின் இறுதியில் நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. தெலுங்கிசை தமிழ் அரங்குகளைக் கைப்பற்றியது. தமிழ்நாடு முழுவதும் இன்னிசை அரங்குகளில் தெலுங்கிசையே சிறப்பிடம் பெற்று வந்தது.

தமிழிசை தாழ்த்தப்படுவது கண்டு நெஞ்சம் துடித்தார், ஒரு தமிழ்ப்பெருமகனார். அவரே தமிழ்ப் பல்கலைக் கழகம் கண்ட அண்ணாமலை அரசர்.

அரசர் தமது பெருமுயற்சியால் 1943-இல் தமிழிசை இயக்கம் ஒன்றை அமைத்தார். இன்னிசை அரங்குகளில் தமிழ்ப் பாடல்களே பாடப்பட வேண்டும் என்பதைத் தக்க அறிஞர்கள் வாயிலாகப் பிரச்சாரம் செய்தார். சென்னையில் இந்த நோக்கத்துடன் ராஜா அண்ணாமலை மன்றத்தை நிறுவித் தமிழிசையை வளர்த்தார். அப்பெருமகனாரது அரிய பணியால் மீண்டும் தமிழகத்தில் தமிழிசை புத்துயிர் பெற்றுத் தலை நிமிர்ந்தது. இவரது முயற்சியால் தமிழகத்துப் பேரூர்களில் பல தமிழிசைச் சங்கங்கள் தோன்றின. ஆர். கே. சண்முகம் செட்டியார், சர். எம். ஏ. முத்தையாச் செட்டியார் போன்றவர்கள் தமிழிசை வளரப் பெரிதும் ஒத்துழைத்தனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பல தமிழ் இசைப் பாடல் நூல் தொகுதிகள் வெளிவந்தன. தமிழ்ப்பண் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

## 4. நடனக்கலை

வேதகாலத்துக்கு முற்பட்ட காலத்திலேயே சிந்துவெளியில் வாழ்ந்த தமிழ் மக்கள் நடனக்கலையறிவு பெற்றிருந்தனர்

என்பதை மொகெஞ்சதாரோ அகழ்வாராய்ச்சிகள் உணர்த்து கின்றன.

அங்கே தோண்டி எடுக்கப்பட்ட சிற்பங்களுள் நடனமாதின் சிலைகள் கிடைத்துள்ளன.

சங்க காலத்தில் நடனக்கலை, கூத்து என்ற பெயரால் வழங் கப்பட்டது.

வேலன் ஆடும் வெறிக்கூத்து, வீரர் வெற்றி பெற்ற அடை யாளப்பூவைச் சூடி ஆடும் கருங்கூத்து, பெண்கள் ஆடும் வள்ளிக் கூத்து,காலில் வீரக்கழல் கட்டி இருபாலாரும் ஆடும் கழனிலைக் கூத்து, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை, வேட்டுவ வரி முதலிய பலவகைக் கூத்துகள் சங்க நூல்களில் கூறப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில்தான் முதன்முதல் கூத்து என்பது 'நாடகம்' என வழங்கப்பட்டது.

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த"
"நாடகம் உருப்பசி நல்கா ளாகி"

என்பன போல் வரும் இடங்கள் பல. நாடகம் ஆடும் அழகி 'விறலி' எனப்பட்டாள். ஆடுகளம் 'நாடக அரங்கு' எனப் பட்டது. சிலப்பதிகார அரங்கேற்று காதையில் அக்கால நாடகம், நாட்டியம், இசைக்கருவிகள் போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் நடனம் பெருவளர்ச்சியுற்று நடன நாட்டியமாகவே நிகழ்த்தப்பட்டு வருகிறது.

## 5. நாடகக்கலை

நாடகம் என்பது நடனக்கலையின் 'பரிமாண வளர்ச்சி' எனக் கூறலாம். இதனைக் 'கதை தழுவி வரும் கூத்து' என்பர் அடியார்க்கு நல்லார்.

'நாடகக் காப்பிய நன்னூல்' என்னும் தொடர் சிலப்பதிகாரத்தில் வருகின்றது. இது கொண்டு கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் நாடகம் பற்றிய இலக்கண இலக்கிய நூல்கள் தமிழில் இருந்தன என அறிகிறோம்.

திருக்குறள் எழுந்த காலத்தில் 'கூத்தாட்டவை' இருந்தது. சங்க காலத்துக்கு முந்தைய தொல்காப்பியர் காலத்திலேயே 'வேத்தியல், பொதுவியல்' என்ற இருவகைக் கூத்துகள் ஆடப் பட்டு வந்தன என அறிகிறோம். ஆனால், பழைய நாடக நூல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலில் 'இராசராச நாடகம்' நடிக்கப்பட்டது; முதற்குலோத்துங்கன் காலத்தில் 'பூம்புலியூர் நாடகம்' நடிக்கப்பட்டது. இவையே பழங்கால நாடகங்கள். பிற்காலத்தில் ஏராளமான தமிழ் நாடகங்கள் எழுதி நடிக்கப்பட்டன.

நாடக நூல்களை எழுதியும் நடித்தும் அரும்பணி ஆற்றிய பெருமக்களுள் குறிக்கத்தக்கவர்கள் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோர்.

நாடகக்கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களுள் டி. கே. எஸ். சகோதரர்கள், என். எஸ். கிருஷ்ணன் குழுவினர், எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர், சிவாஜி கணேசன் குழு வினர், இ. ஆர். சகாதேவன் குழுவினர், சகஸ்ரநாமம் குழுவினர், எம். கே. இராதா குழுவினர், எஸ். எஸ். இராசேந்திரன் குழு வினர் முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவராவர்.

## 6. கட்டடக்கலை

கட்டடக் கலையில் தமிழ் மக்கள் வல்லவர்களாய் விளங்கினர். தமிழரும் மற்ற நாட்டுக் கலைஞர்களும் கூடி, அரிய பெரிய கட்டடங்கள் பலவற்றைத் தமிழகத்தில் உருவாக்கினர்.

சோழ மன்னனது அரண்மனைத் தோட்டத்தில் பல நாட்டுத் தொழில் வினைஞர்கள் தமிழ்நாட்டுக் கட்டட வல்லுநர்களுடன் கூடி அமைத்த வேலைப்பாடு நிறைந்த ஒரு மாளிகை மண்டபம் இருந்ததாக மணிமேகலை கூறுகிறது:

''மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்,
அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடுங் கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்கால் பன்மணிப் போதிகை ..........

தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபம் "

— மணிமே : 19 : 107 - 115

பெரிய நகரங்களில் உயரமான மாடி வீடுகள் கட்டப்பட்டிருந்தன.

'சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனை'

என அவற்றை மணிமேகலை கூறுகின்றது.

கோவலன் கண்ணகியுடன் எழுநிலை மாடத்தின் நடுநிலை மாடமாகிய அரமிய முற்றத்தில் கூடி மகிழ்ந்தான் எனச் சிலப்பதிகாரம் பேசுகின்றது.

பெரிய நகரங்கள், உயர்ந்த மதில், அகழிவாயில் ஆகியவற்றைப் பெற்றிருந்தன. தலைநகரங்களில் உள்நின்று போர் செய்யவும், வெளியே நின்று காவல் காக்கவும் ஏற்ற அரண் அமைக்கப்பட்டிருந்தது. மதில்மேல் பகைவர் நெருங்காதபடி ஆயுதங்களை வீசவல்ல பெரும் பொறிகள் அமைக்கப்பட்டிருந்தன.

நகர அமைப்பிலும், இல்லங்களை எழில்பெறக் கட்டுவதிலும், வாளோங்கிய மதில் கோட்டைகளைக் கட்டுவதிலும் தமிழர் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை மதுரைக்காஞ்சி போன்ற நூல்கள் அறிவிக்கின்றன.

## 7. மருத்துவக்கலை

இக்காலத்தில் மேல்நாட்டு ஆங்கில மருத்துவ முறை செல்வாக்குப் பெற்றுவிட்டது. ஊசி, அறுவை போன்ற முறைகளால் அது மக்களின் நம்பிக்கையைப் பெற்றுப் பெரும் பயன் விளைவித்து வருகிறது. ஊசி மருந்துகளும், அறுவை முறைகளும் கண்டுபிடிக்காத பண்டைக்காலத்தில் தமிழ் சித்த வைத்திய முறை சிறந்திருந்தது. மூலிகைகளாலும், பாடாண பஸ்மங்களாலும் தமிழ் மருத்துவர்கள் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி மருத்துவம் செய்து வந்தனர்.

நாடி பிடித்து நோய்களைக் கண்டறியும் முறை சித்த மருத்துவத்தின் சிறப்பமிசமாக இருந்தது.

திருக்குறளில் 'மருந்து' என ஒரு தனி அதிகாரம் கூறப்பட்டிருக்கிறது. நோயாளி, மருத்துவன், மருந்து, மருந்தைப் பிழைஇன்றி

உட்கொள்ளும் முறை என்ற நான்கும் மருத்துவக்கலையின் பிரிவுகள் என்பது வள்ளுவர் கருத்து.

பழங்காலத்தில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் என்ற நூல்கள் மருந்தால் பெயர் பெற்றவை. பதினெண் சித்தர்கள் கண்ட முறை, சித்த வைத்தியம் எனப்பட்டது. இது வேர்களையும் பச்சிலைகளையும் பயன்படுத்தும் முறையாகும்.

வடமொழியாளர் தமிழகம் வந்ததும் கையாண்ட முறை 'ஆயுர் வேத மருத்துவ முறை' எனப்பட்டது.

பிற்காலத்தில் நாவிதரும் அறுவை வேலையில் ஈடுபட்டமையால் அவரும் 'மருத்துவர்' எனப்பட்டனர். மகப்பேற்று மருத்துவம் செய்து வந்த அவர்கள் குலப்பெண்கள் 'மருத்துவச்சிகள்' என வழங்கப்பட்டனர்.

வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற மூன்று பிரிவை அடிப்படையாகக் கொண்டது பண்டைய மருத்துவக்கலை.

மொகலாயர் செல்வாக்குப் பரவிய காலத்தில் அவர்கள் நாட்டிற்குரிய 'யூனானி மருத்துவ முறை' இந்தியாவில் புகுந்தது. எல்லா மருந்துகளிலும் இனிப்பு கலந்திருப்பதே யூனானி மருத்துவத்தின் தனிச்சிறப்பு. இம்முறை அதிகமாகப் பரவவில்லை.

ஐரோப்பியர் தமிழ்நாட்டிற்கு வந்தபொழுது அல்லோபதி முறை பரவியது. இம்முறையைப் பரப்புவதற்காகவே ஆங்கிலேயர் ஆட்சியில் பல மருத்துவக் கல்லூரிகள் ஏற்பட்டன. இம்முறையே இப்போது பெருஞ்செல்வாக்குப் பெற்றுள்ளது.

ஜெர்மானிய மருத்துவ முறையான ஹோமியோபதி முறையும் நம் நாட்டில் உண்டு. இன்ன நோய்க்கு இன்ன மருந்து எனக் கண்டறிந்து கொடுப்பதே இம்முறையில் வெற்றிதரக்கூடியது.

ஆயுர்வேதம், யூனானி, சித்த மருத்துவம் ஆகிய இந்திய மருத்துவ முறைகளை ஆங்கில முறையோடு கற்பிக்க ஒரு கல்லூரி சென்னையில் உண்டு. எனினும், சித்த வைத்தியத்துக்கெனத் தனிக் கல்லூரி இருந்தால்தான் தமிழ் மருத்துவ முறை வளர்ச்சி அடைய முடியும்.

மற்றும் வானக்கலை, சோதிடக்கலை, தத்துவக்கலை, இலக்கியக் கலை போன்ற பல கலைகள் பண்டைத் தமிழிலக்கியத்தில்

தழைத்திருந்தன. இக்காலத்திலும் தமிழர் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்று,

"சென்றிடு வீர்எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

என்ற பாரதியின் வாக்கை மெய்யாக்கி வருகின்றனர்.

## விழாக்கள்

மக்களின் மனநிறைவு காரணமாகவும், மகிழ்ச்சிப் பெருக்கு காரண மாகவும் கொண்டாடப் பெறுவன விழாக்கள்.

பண்டைக்காலத் தமிழகம் விழவறா நெடுவீதி உடையதாய் விளங்கியது. சங்க காலத்திற்கு முற்காலம் தொட்டே தமிழகத்தில் பல விழாக்களும், பண்டிகைத் திருநாள்களும் கொண்டாடப் பட்டு வந்தன. அவை பற்றிய சிறு குறிப்புகள் இங்கு இடம் பெறுகின்றன.

### 1. பொங்கல்

தமிழ் உழவர்களின் பெருநாள் பொங்கல். தமிழகத்துக்கே உரிய தனிப்பெரும் விழா இது. தை மாதம் முதல் நாள் தமிழர் இல்லந்தோறும் கொண்டாடப்படுவது இத்தமிழர் திருநாள்.

ஆண்டுதோறும் உழைத்த உழைப்பின் பயனை அறுவடை செய்த மகிழ்ச்சியில் இல்லம் நிறைய நெல்லும் கரும்பும் குவிந்து கிடக்கும் மகிழ்ச்சியில் பூத்துப் பொலியும் பொன்னான திருநாள், தைப்பொங்கல்!

இது நான்கு நாள்களில் கொண்டாடப்படுகிறது. தை மாதம் முதல் நாள், பெரும்பொங்கல். அதற்கு முன் நாள் போகிப் பண்டிகை.

போகி - இந்திரன். மழைக்குத் தலைவன் இந்திரன். எனவே, பயிர்கள் விளைவதற்கு மழை நல்கிய இந்திரனைக் குறித்து இப்போகித் திருநாள் படையலிட்டுக் கொண்டாடப்படுகிறது.

அன்று இல்லந்தோறும் பழையன கழித்து, புதியன அமைத்துச் சுண்ணம் முதலியனவற்றால் வீடுகளைத் தூய்மை செய்வர்.

ஏழை உழவனும், ஏழடுக்கு மாளிகை வாசியும் இன்பத்தால் ஒன்றுபடும் இன்பப் பொங்கலன்று, ஆடவரும் மகளிரும் புத்துடை அணிந்து, புதுப்பானையை அடுப்பில் ஏற்றிப் புத்தரிசியை உலையில் இட்டுப் பொங்கிய புத்துருக்கு நெய்வடியும் சர்க்கரைப் பொங்கலை உற்றார் உறவினருடன் கூடிக் கதிரவனுக்குப் படைத்து உண்ணும் காட்சி கண்கொள்ளாக் காட்சி !

தமிழகத்தின் மழலைச்செல்வங்கள் ஒவ்வொன்றின் வாயிலும் கரும்பின் தேன் வழியும் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் உவகை தர வல்லது. கன்னலும் வாழைப்பழமும் அன்று கொள்ளை கொள்ளையாக விற்பனை ஆகும்.

மறுநாள் மாட்டுப்பொங்கல். உழவனுக்கு வேளாண்மைத்துறையில் பல்வகையிலும் உழைத்து ஊதியம் தேடித்தந்த மாடுகளுக்கு அன்று பொங்கலிட்டுப் படைத்து மகிழ்வர். மாடுகளைக் குளிப்பாட்டி மஞ்சள் தடவிக் குங்குமப் பொட்டிட்டு அலங்கரித்துக் கழுத்து மாலைகள் அணிவிப்பர். பூசையிட்டுப் படைப்பர். மாலையில் அவற்றை மகிழ்ச்சியாக ஓடவிட்டு விரட்டி மகிழ்வர். சிறுவர்களின் உள்ளக் களிப்பு அன்று கட்டுப் படுத்த முடியாமல் கரை கடந்து பொங்கி வழியும்.

நான்காம் நாள் கரிநாள். அதைக் கன்னிப் பொங்கல் அல்லது காணும் பொங்கல் என வழங்குகின்றனர். ஆடவரும் மகளிரும் பல்வகை விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்வர். சிறியவர்கள் பெரியவர்களைக் கண்டு வணங்கி ஆசியும் வாசியும் பெறுவர்.

பொங்கல் மற்ற மாநிலங்களைக்காட்டிலும் தமிழகத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஜல்லிக்கட்டு :**

மாட்டுப்பொங்கலன்று பிற்பகலில் தமிழகத்தில் நடைபெறும் வீர விளையாட்டு விழா இது. தமிழரின் வீரம் உலகப் புகழ் பெற்றது. அதில் வெறும் முரட்டுத்தனத்தை மட்டும் காண முடியாது. அறிவின் கூர்மையும் உடலின் திண்மையும கலந்தது தான் தமிழ் வீரம். இவ்விரண்டும் இணைந்து செயலாற்றும் தமிழ் வீரத்தை எடுத்துக் காட்டும் வீரர் விழா, ஜல்லிக்கட்டு.

இதனை 'மஞ்சு விரட்டு' எனவும் கூறுவர்.

மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் தொன்றுதொட்டு இவ்விழா நடந்து வருகிறது. காளைமாடு

களின் கழுத்தில் மஞ்சள் துணியில் பணத்தை முடிந்து கட்டி விடுவார்கள். தொழுவத்திலிருந்து ஒவ்வொன்றாக அவற்றைத் திறந்துவிடுவர்.

அவற்றை அடக்கி மடக்கிப் பிடிக்க ஒரு கூட்டம் வெளியில் காத்திருக்கும். எவன் காளையை மடக்கி அடக்குகிறானோ அவனுக்குப் பணமுடிப்பும், பாராட்டும் கிடைக்கும்.

சங்க காலத்தில் இவ்விழா ஏறு தழுவுதல் என்ற பெயரில் நடைபெற்றது. அன்றைய வீரன் அடையும் பரிசு, மணப்பெண்; இன்றைய சூரர்கள் அடைவது, பணமுடிப்பு !

## 2. தீபாவளி

பொங்கலுக்கு அடுத்ததாகத் தமிழக விழாக்களில் சிறப்புப் பெறுவது, தீபாவளி. வைகறை விடியலில் எண்ணெய் தேய்த்து, நீராடிப் புத்தாடை உடுத்தி, வயிறாரத் தின்பண்டங்களை உண்டு, பட்டாசு சுடுவது இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சி.

பொங்கல் விழாவன்று உழவர்கள் கையில் பணம் இருக்கும்; வீட்டில் நெல் இருக்கும். ஆனால், தீபாவளி சமயத்தில் பணம் அதிகம் இராது. கடன் வாங்கிப் பலகாரமும் துணிமணிகளும் வாங்குவோர் பலர். பலருக்கும் துன்பம் விளைவித்து வந்த நரகாசுரனைக் கொன்ற மகிழ்ச்சியில் கொண்டாடப்படுவது இப் பண்டிகை என்பர்.

## 3. கார்த்திகைத் தீபம்

தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்தில் இருந்தே கொண்டாடப் பெறும் தீப விழா, கார்த்திகைத் தீபம்.

சங்க நூல்களில் கார்த்திகை விழா கொண்டாடப்பெற்ற குறிப்புகள் காணப்படுகின்றன. வீடுதோறும் கார்த்திகையன்று வரிசை வரிசையாக விளக்குகளைக் கொளுத்தி வைப்பர்; வீடுகளைத் தூய்மைசெய்து அலங்கரிப்பர். பரணி, கார்த்திகை-இரு நாள்களிலும் விளக்கு ஏற்றி வைப்பர்.

இவ்விழாவில் வைணவர்கள் தங்கள் இல்லங்களில் விளக்கேற்றுவதற்குத் தாங்களே விளக்குகளைத் தயாரிப்பார்கள்.

குழந்தைகள் பனம்பூவைச் சுட்ட கரியைக்கொண்டு கார்த்திகைப் பொறி சுற்றுவர்.

திருவண்ணாமலைத் தீபமும், வைத்தீசுவரன் கோயில் கார்த்திகையும் தமிழகப் புகழ் பெற்றவை.

## 4. நவராத்திரி

புரட்டாசி மாதம் பிறந்துவிட்டால் சிறுபெண்களுக்குக் கொண் டாட்டம். கிருஷ்ணன் வேடம் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வீடு கொலுப்பாட்டு பாடக் கிளம்பிவிடுவார்கள்.

நவராத்திரி ஒன்பது நாள்கள் கொண்டாடப்படும் கொலு பொம்மைப் பண்டிகை. மதுரை நாயக்க மன்னர்களால் தமிழ கத்தில் பரப்பப்பட்டது. தேவி ஒன்பது நாள்கள் கொலு வீற்றிருந்து மகிடாசுரனைக் கொன்றதாக ஐதிகம்.

மைசூரில் இது 'தசரா' என்ற பெயருடன் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

## 5. கந்த சஷ்டி

தமிழ்க் கடவுளான முருகனுககு உபவாசம் இருந்து கொண்டாடப் படும் நோன்பு விழா இது. மாதம் இருமுறை சஷ்டி திதி வரும். ஆனால், ஐப்பசி மாதம் வரும் கந்தர் சஷ்டிதான் பெருவிழாவாகத் திருசெந்தூரிலும் பழனியிலும் கொண்டாடப்படுகிறது.

சின்னக் குமாரக்கடவுள் பழனி மலையினின்றும் இறங்கி எட்டுத் திக்கிலும் வந்து சூழும் அசுரர்களைக் கொன்று வெற்றி மாலை சூடி மலை ஏறும்காட்சி, கண் கொள்ளாக்காட்சியாகும். இதனைச் சூரசம்மாரம் என வழங்குகின்றனர்.

சூர சம்மார விழா திருச்செந்தூரில் மிகச்சிறப்பாக இந்நாளிலும் நடைபெற்று வருகின்றது.

## 6. ஆடிப்பெருக்கு

ஆடித்திங்கள் 18 - ஆம் நாள் காவிரி கரைபுரண்டு வருவது போல் தமிழகமெங்கும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இதனைப் பதினெட்டாம் பெருக்கு என்பர்.

காவிரிக்குக் கரை எடுத்து வளம் பெருக்கிய கரிகாலன் காலத்தி லிருந்து இவ்விழா கொண்டாடப்படுகின்றது எனச் சங்க நூல்கள் கூறுகின்றன.

"விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
தண்பதம் கொள்ளும் தலைநாள் போல"

என்பது சிலப்பதிகாரம்.

இந்துக்கள் பலரும் நீர்த்துறைகளுக்குச் சென்று, அவரவர் வழக்கப்படி காவிரியம்மனுக்குப் படைக்கின்றனர். படையல் பொருள்களில் வெல்லங்கலந்த அரிசி, காதோலை கருகுமணி, எலுமிச்சம்பழம மூன்றும் சிறப்பிடம் வகிக்கும். சிலர் தங்கள் திருமணத்தன்று அணிந்துகொண்ட மணமாலையைப் பத்திரமாக வைத்திருந்து பதினெட்டாம் பெருக்கன்று காவிரியில் விடுகிறார் கள். பண்டைய ஓலைச் சுவடிகள் பல இவ்வாறு விடப்பட்டன என அறிகிறோம்.

## 7. ஆவணி மூலம்

ஆவணி மூல நாளன்று இவ்விழா சிறப்பாக மதுரையில் கொண்டாடப்படுகிறது. சிவபெருமானது பல்வேறு திருவிளை யாடல் நிகழ்ச்சிகளை விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

பிட்டுக்கு மண்சுமந்து இறைவன் பிரம்படிபட்ட விழா சிறப் பானது. பக்தர்கள் அனைவரும் இவ்விழாவில் பிட்டு வாங்கி உண்பதால் இது 'பிட்டுவிழா' எனவும் வழங்கப்படுகிறது. இவ் விழாவின் பெயரால் மதுரையில் ஆவணி மூல வீதி அமைந் துள்ளது.

## 8. பாவை விழா

"போற்றியாம் மார்கழிநீர்
ஆடேலோ ரெம்பாவாய் !"

எனப் பாவைமார்கள் மார்கழி நீராடிப் பாவை நோன்பு நோற் பதற்காக ஒருவரை ஒருவர் எழுப்பும் விழாதான், பாவை விழா.

மார்கழிமாதப் பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல், மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி விடிவதற்குமுன் கோயி

லுக்குச் சென்று இறைவனை வழிபடுகின்றனர். தெருக்களில் பஜனை பாடும் குழுவினர் இன்னிசை பாடிச் செல்வர். காலை 4-30 மணிக்கே கோயிலில் திருப்பாவை-திருவெம்பாவைப் பாடல்கள் முழங்கத் தொடங்கிவிடும்.

வைணவர்களுக்குத் திருப்பாவையும், சைவர்களுக்குத் திருவெம்பாவையும் சிறந்தன.

## 9. தைப்பூசம்

தை மாதத்தில் பூச நாளன்று நிகழும் திருவிழா இது. இதற்கு உரிய கடவுள், முருகன். பழனி, திருச்செந்தூர், திருத்தணிகை போன்ற இடங்களில் தைப்பூச விழா நாளன்று பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் கூடுகின்றனர். முருகனுக்குப் பல வகை பூசைகளும் செய்து வழிபடுகின்றனர். பன்னீராலும், சந்தனத்தாலும், பாலினாலும், இளநீர் முதலியவற்றாலும் திருமுழுக்காட்டி மகிழ்கின்றனர்.

வடலூரில் நடைபெறும் வள்ளலார் தைப்பூச விழா மிகச் சிறப்பு வாய்ந்தது.

## 10. மாசி மகவிழா

மாசி மகநாளன்று இறை உருவங்களை ஆறு, கடல் போன்ற நீர்த் துறைகளுக்கு எடுத்துச் சென்று, நீராட்டிப் பூசை செய்து, வழிபடுவது இவ்விழாவின் சிறப்பு.

மகவிழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ஆனால், 12 ஆண்டுகட்கு ஒருமுறை நிகழும் மகாமக விழா அகில இந்தியப் புகழ் பெற்றது. கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத்துக்குக் காசி முதல் கன்னியாகுமரி வரை உள்ள பல நூறாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடுவர். அன்றைய தினம் மகாமகக் குளம் நீர் பொங்கும் என நம்புகின்றனர். இந்தியாவிலுள்ள எல்லா ஆறுகளும் அன்று மகாமகக் குளத்தில் ஒன்று கூடுவதாக ஐதீகம்.

## 11. பங்குனி உத்தர விழா

பங்குனி உத்தரத் திருநாளன்று தமிழ்நாட்டுக் கோயில்கள் அனைத்திலும் இறைவன் - இறைவி திருமணம் நடைபெறும். முருகர் கோயில்களில் 10 நாள் உத்தர விழா நடைபெறுவதுண்டு. தமிழ்நாட்டு மக்களுக்கு இந்தக் காலத்தில் ஒய்வு மிகுதி. எனவே, மிகுந்த ஈடுபாட்டோடு கோயில்களுக்குக் காணிக்கைப் பொருள் தந்து மகிழ்ச்சியோடு விழாவில் கலந்துகொள்ளு கின்றனர்.

விழாவின் இறுதி நாளன்று முருகனது வேல் ஊர்வலமாக ஆற்றங்கரைக்கு எடுத்துச் செல்லப்படும். பங்குனி உத்தரத் திற்கு மறு நாள் இடும்பன் விழாவாக நடைபெறுகிறது.

## 12. சித்திரை விழா

தமிழ் மக்களின் ஆண்டுப் பிறப்பும், சித்திரை மாதப் பிறப்பும் ஒன்று.

சித்திரை மாதம் சித்திரை மீன் சேர்ந்த நன்னாள் தமிழருக்கு ஒரு பொன்னாள். சித்திரையின் நிறைமதி நாள் தமிழக மெங்கும் 'சித்திரா பௌர்ணமி' எனக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாதத்து நிறைமதி நாள்கள் எல்லாம் தமிழர்க்கு விழா நாள்கள்தாம். ஆனால், சித்திரை நிறைமதி நாளுக்கு ஒரு தனிச் சிறப்பு. ஒவ்வொரு திங்களிலும் சந்திரன் ஒவ்வொரு விண்மீனில் நிறைமதியாகத் தோன்றுகின்றான். அந்த விண் மீனின் பெயரை ஒட்டித்தான் அந்தந்த மாதங்களும் பெயர் பெறு கின்றன. எனவே, சந்திரன் தன் நிறைமதி நாளைச் சித்திரை விண்மீனோடு சேர்த்த நாள் சித்திரை எனப் பெயர்பெற்றது. தமிழகத்தின் மாபெரும் பண்டை விழாவான இந்திர விழா பூம்பு காரில் சித்திரை நிறைமதி நாளில் நிகழ்ந்து முடிந்ததாகச் சிலப் பதிகாரம் கூறுகிறது.

இன்றும் இவ்விழா தமிழ்நாட்டு ஊர்களில் நடைபெறுகிறது. இறைவர் கோயில்களில் அன்று சிறப்பான பூசைகள் நடக் கின்றன. இவ்விளவேனில் விழாவன்று மைந்தரும் மகளிரும் இன்பக் களிப்புடன் கட்டமுதுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஆற்றங்கரை கடற்கரைகளில் அமர்ந்து, சிற்றுண்டி அருந்தி

மகிழ்வர். நீர்விளையாடியும் பூம்பொழில் ஆடியும் இன்புறுவர். பரிபாடலில் வையை பற்றிய பாடல்களில் இவ்விழா நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

இவ்வாறு குறிப்பிட்ட விழாக்களேயன்றிக் கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, மகா சிவராத்திரி, திருவாதிரை விழா, வைகாசி விசாக விழா, கருடோற்சவம், கள்ளழகர் விழா போன்ற எண்ணற்ற விழாக்கள் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன.

சராசரியாகப் பார்க்கும்போது தினம் ஒரு விழா தமிழகத்தில் நடந்தவண்ணம் இருப்பதைக் காணலாம்.

# கோமேதகம்

## பண்பாடும் மரபுகளும்



## பண்பாடும் மரபுகளும்

1. அருங்குணங்கள்
2. தமிழினத்தின் பொதுமை நோக்கு
3. அருளுடைமை
4. விருந்தோம்பல்
5. நன்றிமறவாமை
6. போர்க்களப்பண்பு
7. பிறர்க்கென வாழும் பெற்றிமை
8. ஒழுக்கமுடைமை
9. உறவு
10. கருவுற்ற மகளிர்
11. திருமணம்
12. இயற்கை எய்துதல்
13. பச்சை குத்துதல்
14. சகுனம்
15. கண்ணேறு

# கோமேதகம்

கோமேதகம் என்பது விலை உயர்ந்த ஒருவகை இரத்தினக்கல். 'ஒருவயின் பல் பிறப்பு' எனச் சிலப்பதிகார உரையிற் குறிப் பிடப்பட்ட மணிகளுள் இதுவும் ஒன்று.

கோமேதகங்களுள் நிர்மலமான வகைகள் விலை உயர்ந்தவை எனக் குறிக்கப்பட்டுள்ளன. எனினும், இவை நீலம், பச்சை, மஞ்சள், பழுப்பு எனப் பல நிறங்களில் காணப்படுகின்றன.

தேன் சொட்டின் நிறமாகவோ, பசுவின் சிறுநீர்த் தாரை நிற மாகவோ உள்ள இரத்தினக் கற்கள் கோமேதகம் எனக் குறிக்கப் படும் என்று 'ஸ்மிருதி ஸாரோத்தாரம்' என்ற நூல் வரையறுக் கின்றது.

இம்மணி மஞ்சளும் சிவப்பும் கலந்தது போன்ற நிறமுடையது ஆதலின் இதனை, 'இருவேறுவ' என இளங்கோவடிகள் குறிக் கின்றார். கோமேதகம் உருக்கிய நெய், தேன், பசுநீர்—இவற்றின் நிறம் பெற்றுப் பொன்னிறம் போன்று தூயதாய், திண்மை உடையதாய் விளங்கும் எனப் பரஞ்சோதியார் திருவிளையாடல் பகர்கின்றது.

சூடேற்ற சூடேற்ற ஒளிவீசும் தன்மை கோமேதகத்துக்கு உண்டு. கல்லின் பளபளப்பு அதிகரிக்கும். தணலில் காட்டினால் அவை ஆரஞ்சு போல் ஒளிநிறம் பெறுகின்றன.

துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வருத்த வருத்த வளையாமல் நிமிர்ந்து நின்று உயர்நிலை பெற்றுத் திகழ்வது தமிழ்ப் பண்பு.

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

என்ற குறள் தமிழ்ப் பண்பாட்டின் பிரதிபலிப்பு.

'ஆபத்துக் காலத்தில்தான் அறிஞன் வெளிப்படுகிறான்' என்பது பழமொழி. துன்பக் காலத்தில்தான் தமிழ்ப்பண்பாடு வெளிப்படுவதைக் காணலாம்.

நட்டார் கொடுப்பின் நஞ்சும் உண்ணும் நனி நாகரிகம் பெற்றவர் தமிழர். எனவே, நெருப்பில் சூடேற்ற சூடேற்ற ஒளிவீசும் கோமேதகங்களை இவ்வொப்புமைபற்றித் தமிழ்ப் பண்பாடாக உருவகப்படுத்தி இப்பகுதியில் அமைத்துள் ளோம்.

கோமேதகங்கள் இக்காலத்தில் மறைந்து வருகின்றன.

தமிழ்ப்பண்பாடு ........ ?

எது மறைந்தாலும் தமிழ்ப்பண்பாடு மறையாது.

"தமிழன் என்றொரு இனமுண்டு ;
தனியே அவற்கொரு குணமுண்டு !"

என்றார் தமிழகக் கவிஞர்.

தமிழ்நாட்டின் நில அமைப்பு, வரலாறு, இம்மண்ணில் தோன்றிய அறிஞர்கள், அவர்கள் ஆக்கித் தந்த அறிவு நூல்கள், நிலவிய சமயங்கள், பிற நாட்டறிஞரின் தொடர்புகள், பரம்பரைப் பழக்கங்கள் ஆகியவை காரணமாகத் தமிழ்நாட்டு மக்கள் தனிப் பட்ட பண்பினைப் பெற்றுள்ளனர். மற்ற நாடுகளினும் பிரித்துணரத் தக்க ஒருவிதத் தனித்தன்மை பெற்றுள்ளது தமிழ்ப் பண்பாடு.

தமிழ்நாட்டின் தற்காலக் கல்வி முறை நடை, உடை, பாவனை போன்றவை எல்லாம் வெளிநாட்டார் தொடர்பு காரணமாக மேற்கத்திய நாகரிகத்தின் சாயல்கள் படர்ந்துள்ளன எனினும் அவற்றினிடையே அடித்தளத்தில் பழந்தமிழ்ப் பண்பாடு மாறாமல் இன்றளவும் நின்று நிலைத்து வருவதைக் காணலாம்.

இந்திய நாட்டின் ஏனைய பகுதிகள் வெளிநாட்டார் படையெடுப்பு களாலும், பலப்பல காலங்களில் நிகழ்ந்த போர்களாலும் பலப் பல தொல்லைகட்கு ஆளான போதிலும் தமிழகம் மட்டும் தனித்து நின்று பெரும்பாலும் அமைதியான சூழ்நிலையிலேயே இருந்து வந்ததென்பதையே வரலாறு காட்டுகின்றது.

அரசியல் கொந்தளிப்புகள் ஏற்பட்ட காலங்களிலும், கட்சிப்பூசல் களால் ஏற்படும் தொல்லைகள் சூழ்ந்துள்ள நேரங்களிலும் தொன்றுதொட்டு வரும் தமிழ்ப்பண்பு சிதையாமல் காப்பாற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எவ்வளவு ஆங்கில நாகரிகத்தில் மூழ்கியிருந்தாலும் தமிழ் நாட்டுப் பெண்கள் சேலைதானே உடுத்துகின்றனர். தமிழ்

நாட்டு இட்டலியையும் சாம்பாரையும் எந்த நாகரிகத்தாலும் மாற்ற முடியுமா? இதயம் நெக்குருகி இறைவனை வழிபடும் சிந்தையை எந்த மேனாட்டுக் கல்வியும் திசை திருப்ப முடியுமா?

நடை, உடை, பாவனைகளிலும், சிந்தனைகளிலும் மேற் போர்வைதான் மாற்றப்பட்டுள்ளதே தவிர, அடிப்படை நிலை யில் மாற்றம் எதுவும் இல்லை; அது எந்த நாளிலும் மாறாது; தமிழரின் குருதியோடு கலந்துவிட்ட ஒன்று அது!

அத்தகைய பண்பாடுகளில் சிலவற்றை இப்பகுதி கூறு கின்றது.

## 1. அருங்குணங்கள்

ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு பண்பு உண்டு. பாலுக்கு உரிய பண்பு, இனிமை; தேனுக்கு உரிய பண்பு, தீஞ்சுவை; தீயின் பண்பு, வெம்மை; நீரின் பண்பு, தண்மை. இவ்வாறு இயற்கையிலேயே ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்பைப் பெற்றிருக்கின்றன. அன்றேல் மக்கட்பண்பு யாது?

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

—குறள் 997

என்கின்றார் தமிழ்மறை முனிவர்.

அவர் குறிக்கும் மக்கட்பண்புதான் என்ன? பண்புடைமை பற்றி அவர் தனிப்பட்ட ஓர் அதிகாரத்தில் கூறும் கருத்துகள் உயிரோட்டம் உடையவை.

மக்கட்பண்பு 'அன்புடைமை' என்பதையும், அது உயர்குடிப் பிறந்தாரிடத்துக் காணப்படும் சிறந்த இயல்பு என்பதையும் தெளிவாக அவர் ஓரிடத்தில் குறிக்கின்றார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

—குறள்-992

'அன்புதான் மக்கட்பண்பு' என்பது தெளிவாக இக்குறளில் கூறப்பட்டுள்ளது.

அன்பில்லாத உயிர் உலகத்தில் வாழ்வது, பாலைவனத்தில் பட்ட மரம் தளிர்த்ததற்கு ஒப்பானது என வள்ளுவர் கூறும் கருத்து சிந்தனைக்கு உரியது. அன்பற்ற மனிதன் உயிரற்ற பிணம் போன்றவன் என்பதை, மரம் போல்வர் மக்கட்பண்பில்லா தவர் என அவர் கூறும் சொற்கள் உணர்த்துகின்றன.

உலகம் நிலை பெற்றிருப்பதற்குக் காரணம், பண்புடைய சான்றோர்கள் வாழ்வதுதான். அவர்கள் இல்லாவிடில் உலகம் எப்போதோ அழிந்து போயிருக்கும் என்பது வள்ளுவர் பண்புடைமைக் கொள்கை.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற குறள் இக்கருத்தைத் தெளிவாக்குகின்றது. சான்றோர்கள் பால் அமைந்துள்ள பண்புடைமையின் தன்மைகள் என்ன என்பதற்குப் புறநானூற்றுப் பாடல் ஒன்று விரிவுரையாக அமைந்துள்ளது.

இந்திரர் உண்பதற்குரிய அமுதமே கிடைத்த போதிலும் தாம் மட்டும் அதனைத் தனித்துண்ணாமை, பிறர்மாட்டு வெறுப்புக் கொள்ளாமை, பிறர் செய்வதற்கு அஞ்சும் பழி பாவங்கட்குத் தானும் அஞ்சும் நாணமுடைமை, புகழ் வருமாயின் உயிரையும் கொடுக்கத் தயங்காத துணிவுடைமை, பழி வருவதாயின் உலகு உடன் தரினும் கொள்ளாமை, அயர்வின்மை, தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழும் பெருந்தகைமை—இவையே அப்பண் பாடுகள் !

இதோ அப்பாடல்,

" உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் ; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

— புறம். 182

பகைவனுக்கும் அருளும் பண்பு தமிழர்பால் கண்ட ஒரு தனி நாகரிகம்.

பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே '

எனப் பாடினான் தமிழகத்துப் பெருங்கவிஞன் பாரதி.

நண்பராக இருந்து உயிருக்குயிராகப் பழகியவர்கள் நஞ்சைக் கலந்து கொண்டுவந்து கொடுத்தால் அதை மறுக்காமல் வாங்கிக் குடிப்பது தமிழ்ப்பண்பாட்டின் உயர்நிலை. வேறு எந்த நாட்டிலும் காண்பதற்கரிய பண்பாட்டின் சிகரம் இது !

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்பது வள்ளுவன் வகுத்துரைத்த நாகரிகப் பண்பாடு.

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்பது சங்க இலக்கியக் கொள்கை.

"நஞ்சை வாயி லேகொணர்ந்து
நண்ப ரூட்டு போதினும்
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே"

என்பது பாரதியின் முழக்கம்.

அன்புடைமை மட்டுமன்று : நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தையும் சால்புடைமையின் தூண்களாகக் கண்டதும் தமிழ்ப்பண்பாடுதான் !

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என நன்றியுடைமையே உயிரோட்டமாகக் கொண்டதும் தமிழ்ப் பண்பாடுதான் !

இப்பண்பாடுகள் இன்னும் தமிழகத்தில் சிலர்மாட்டு நிலவி வருவதைக் காணலாம். 'பண்பாடு' என்று பேசுகின்றார்கள். ஆனால் அதன் பொருளை அறிவது அருமை. கரடுமுரடான நிலத்தை உழும் வயலாகச் சரிசெய்வதைப் பண்படுத்துதல் என்று கூறுகின்றோம். எனவே, பண்பாடு என்பது பண்பட்ட மனத்தைத்தான் குறிக்கும்.

ஒரு தனிமனிதன் சிறப்பைப் பண்பாடு என்று கூறுவதில்லை ; ஒரு நாட்டின் பண்பாடு, ஓர் இனத்தின் பண்பாடு என்றுதான் கூறுவது மரபு.

## 2. தமிழினத்தின் பொதுமை நோக்கு

தமிழன் தனக்காக வாழக் கற்றானல்லன். தான் வாழ்வதை விட உலகத்து உயிர்கள் இன்பமாக வாழ எண்ணுவதே தமிழ்ப் பண்பாடாக இருந்தது. 'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன் பண்ணன்' என்ற தொடர் புறநானூற்றில் வருகின்றது. பண்ணன் மட்டுமல்லன்; தமிழ்நாட்டில் பிறந்த அனைவருடைய பிரதிநிதிதான் பண்ணன் என வைத்துக் கூறப்பட்டுள்ளது.

உலகில் உள்ள ஒவ்வொருவரையும் தன் உடன்பிறந்தவராகவே தமிழ் உள்ளம் எண்ணியது. எந்த ஒரு நாடும் தனது சொந்த நாடாகவே அவனுக்குத் தோன்றியது ; எந்த ஊரும் அவன் சொந்த ஊர்தான் ; எல்லோரும் அவன் உறவினரே.

"யாதும் ஊரே ; யாவரும் கேளிர் !"

என்ற தொடர் இதனை வலியுறுத்த வல்லது. தன் நாடு, தன் மொழி, தன் இனம் என எண்ணாமல் உலகம் அனைத்தையும் ஓர் இனம் என எண்ணிய பொதுமை உள்ளம் தமிழனை இன்றும் வாழ்வித்து வருகிறது.

தமிழ் மக்கள் உலகத்தினின்றும் தம்மை வேறுபடுத்திக்கொள்ள விரும்பவில்லை. அந்நோக்கத்தினின்றும் மாறியதுமில்லை.

'யாதானும் நாடாமால் ஊராமால்'

என்ற நம்பிக்கையோடு உலகில் எப்பகுதியிலும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

இதனால் தமிழ் ஒருமைப்பாடு தழைத்தது ; இந்திய ஒருமைப் பாடு சிறந்தது. உலக ஒற்றுமை செழித்தது.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடிய தமிழர் உலக நாடுகளில் சென்று தங்கிய இடமெல்லாம் இத்தொடர்பை வலியுறுத்தி வாழ்ந்தனர். தமிழ்ப் பண்பாட்டை உலகப் பண்பாகவே வளர்த் தனர்.

இக்கருத்தை வலியுறுத்தவே சேக்கிழார் பெருமான் தமது நூலின் முதலிலும் இடையிலும் முடிவிலும் 'உலகெலாம்' எனப் பாடியுள்ளமை உளங்கொளத்தக்கது.

தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து நோக்குங்கால் இப்பண்பாட்டின் அடிப்படையைக் காணலாம்.

'உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறும்
மேவிய பெருமாளே'

எனப் பாடிய அருணகிரிநாதர் இறைவனிடத்திலும் இவ்வொருமைப்பாட்டைக் காண்கின்றார். எத்துறையிலும் பொதுமை காண விரும்பிய தமிழ் உள்ளத்தின் எதிரொலி இது என்னலாம்.

## 3. அருளுடைமை

அன்பின் கனிந்த நிலை அருள்.

'அருள் என்னும் அன்பீன் குழவி' என்பர் வள்ளுவர். தமிழ்ச் சான்றோர் அனைவரும் அருள் உள்ளம் உடையராய்த் திகழ்ந் தனர். தொடர்புடையார் மாட்டு நிகழ்வது அன்பு. எல்லாரிடத் தும் தோன்றும் இரக்கமுடைமையே அருள் எனப்பட்டது. துறந்தாரிடத்தும், துவ்வாதாரிடத்தும், இறந்தாரிடத்தும் அருள் பூண்டு ஒழுகிய இல்லற வாழ்வைத் தமிழர் மேற்கொண்டு வாழ்ந்தனர். துறவற வாழ்வில் மட்டுமன்று; இல்லறவாழ்விலும் அன்பும் அருளும் தமிழகத்தில் நிறைந்திருந்தன.

இறைவன்பால் சென்று வேண்டும் அடியவர்கள் பொன்னையும் பொருளையும் போகத்தையும் கேட்கவில்லையாம். அன்பையும் அருளையும் அறத்தையும் கேட்கின்றார்களாம். இதைப் பின் வரும் பரிபாடல் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

''பொருளும் பொன்னும் போகமும் அல்ல ; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே''

—பரிபாடல் : 5.

## 4. விருந்தோம்பல்

தமிழ்நாட்டு மக்களின் குருதியோடு கலந்துள்ள பாரம்பரைப் பண்பு விருந்தோம்பல். தன் இல்லம் நாடி வரும் விருந்தினரை உபசரித்து விருந்தளிப்பதைத் தம் பிறவிப் பண்பாக ஒவ்வொரு தமிழனும்

கருதினான். விருந்தினர்கள் தம் இல்லத்தில் வந்து விருந்துண்டு செல்வதை ஒரு பேறாகவே எண்ணினான்.

இல்லறமும் விருந்தோம்புதலும் ஒன்றோடொன்று இணைந்து பிணைந்து வாழ்வின் இன்பத்தை மிகுவித்தன.

இல்லறம் நடத்துவதே விருந்தோம்புவதற்காகத்தான் என்பது தமிழர் கொள்கை.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்னும் குறள் இதனைத் தெளிவுற உணர்த்துகின்றது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் விருந்தோம்புவதே தமது வாழ்வில் சிறந்த அறம் எனக் கருதி வாழ்ந்தனர். கண்ணகி, கோவலனைப் பிரிந்து வாழ்ந்ததற்குக்கூட வருந்தவில்லையாம்.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை"

என விருந்தினரைத் தான் உபசரிக்க முடியாமற்போனதற்காக வருந்துகின்றாள்.

இதிலிருந்து, இப்பண்பு தமிழரின் குருதியோடு கலந்துள்ள ஒன்று என்பது புலனாகின்றதன்றோ !

விருந்தோம்புதலிலும் சில நெறி முறைகள் கையாளப்பட்டன.

விருந்தினர்களை முகமும் அகமும் மலர்ந்துதான் வரவேற்க வேண்டும் என்னும் விதி இருந்தது.

விருந்தினர் அனிச்சப்பூவைக்காட்டிலும் மென்மையானவர் எனக் குறள் கூறுகின்றது. அனிச்சம் முகந்தாலல்லது வாடுவதில்லை. விருந்தினரோ, சிறிது முகம் கடுத்துநோக்கினாலும் வாடி நீங்குவர்.

'மோப்பக் குழையும் அனிச்சம் ; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'

என இம்மென்மை திருவள்ளுவரால் சுட்டப்படுகிறது.

தொலைவில் விருந்தினரைக் கண்ட வழி இனிய பார்வையும், அண்மையில் நெருங்கிய வழி முகமலர்ச்சியும், விருந்துண்ணுமாறு வேண்டுங்கால் இனிய சொல்லும் உடையராய்த் தமிழர் வாழ்ந்தனர் என்பதை அவர்தம் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்க்கும் வாழ்வினர் தமிழர். இப்பண்பாட்டை இக்காலத்திலும் தமிழ் இல்லங்களில் காண லாம்.

## 5. நன்றி மறவாமை

நன்றி மறவாப் பண்பு உலகத்தில் பெரும்பான்மையும் மறைந்து கொண்டே வருகின்றது. நன்றியின் தாயகமாகப் பண்டைக் காலத் தமிழகம் விளங்கியதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

உலகில் எவ்வளவோ அறங்கள் உள்ளன. அந்த அறங்களைச் சிதைத்தவர்க்கும், பாவங்களைச் செய்தவர்க்கும் அவற்றி னின்றும் உய்யக் கழுவாய் உண்டு. ஆனால், ஒருவன் செய்த நன்றியை மறந்தவனுக்கு அதினின்றும் உய்வதற்கு வழியே இல்லை எனத் தமிழ் அறம் வகுத்துரைக்கின்றது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்றை மகற்கு" —குறள்-110

இக்குறளில் அறம் கொல்லும் பாவம் இன்னவை என விரித் துரைக்கப்படவில்லை. இதன் விரிவுரை போன்று அமைந் துள்ளது பின்வரும் புறப்பாடல்.

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவே;
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ!" —புறம் : 34.

இப்பாடல் அறம்பாடு என்பது திருக்குறளைக் குறித்தது.

நன்றி மறவாப் பண்பிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவன், தென்னகப் பெருவேந்தனான இராவணன் தம்பியான கும்ப கர்ணன்.

விபீடணன் எவ்வளவோ வற்புறுத்தியும்கூட அவன் இராவ ணனைப் பிரிய மறுத்தான். "என்னை ஆளாக்கி வளர்த்த அண்ணனை ஆபத்துக் காலத்தில் கைவிட்டுவிட்டு எதிரியைக்

கும்பிட்டு வாழும் வாழ்க்கை எனக்குத் தேவை இல்லை; செய்ந் நன்றி மறவேன்; செஞ்சோற்றுக்கடன் கழிப்பேன்'' எனக் கூறி மறுத்த தமிழ்ப்பெருந்தகை கும்பகர்ணன்.

உயிர் விட்டாலும் விடுவேன், செய்ந்நன்றி மறந்து அண்ணனை விட்டு அகலேன்'' என அறத்தின்வழி நின்ற அண்ணல், கும்பர் கர்ணன்.

''செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வம் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி,
அம்பிட்டுத் துன்னங் கொண்ட
புண்ணுடை நெஞ்சோடைய
கும்பிட்டு வாழ்கி லேன்யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன் !''

''கும்பிட்டு வாழும் வாழ்க்கை எனக்குத் தேவையில்லை'' எனக் கூறும் கும்பகர்ணனது சொற்கள் தமிழர் நெஞ்சங்களை நிமிர்த்த வல்லன.

## 6. போர்க்களப் பண்பு

போர்க்காலங்களில்கூடத் தமிழர் அறம் திறம்புவதில்லை என்பது குறிப்பிடத்தக்க தனிச்சிறப்பு.

இக்காலங்களில் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டின்மீது போர் தொடுக்குங்கால் வீரர்கள்மீது மட்டுமன்றி, ஒரு பாவமும் அறியாத பாமர மக்கள்மீதும் குண்டுகளை வீசி அழிக்கின்றனர். குழந்தைகளையும் பெண்டிரையும் கொல்லுகின்றனர்.

தமிழர்கள் போர் முறை இதற்கு மாறானது. கொலையும் கொடுமையும் தாண்டவமாடும் போர்க்களங்களிலும்கூடத் தமிழரின் தலைசிறந்த அறப்பண்பு மேலோங்கி நின்றமையைக் காணலாம்.

ஒரு மன்னன் மற்ற நாட்டின்மீது போர் தொடுக்க எண்ணினால் முதன்முறையாக மாற்றார் நாட்டில் சென்று, தான் படை எடுத்து வரும் செய்தியைப் பறையறைந்து அறிவிப்பான்.

'எமது அம்புகள் உங்களை விரைந்து வந்து தாக்கும். பசுக்களும் பசுவின் இயல்புடைய பார்ப்பனர்களும், பெண்களும், குழந்தைகளும், பிணியாளர்களும், திருமணமாகியும் பொன் போல் குழந்தை பெறாதவர்களும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விடுங்கள்' என அறிவிப்பர்.

''ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை'' —புறம்-9.

என்ற பாடல் மறத்துறையினும் அறப்பண்பு விளைக்கும் தமிழர் கொள்கைக்குச் சான்று கூறுகின்றது.

போரில் புறமுதுகிட்டோரைத் தமிழ்வீரர் தாக்குவதில்லை. படை இழந்தோரையும், புண்பட்டு வீழ்ந்தோரையும், ஆடைநெகிழ்ந்தோரையும், கூந்தல் குலைந்தோரையும் தாக்குவதில்லை.

யானை ஒரே கையை உடையது; வீரன் இருகை உடையவன். இக்காரணம் பற்றி அந்த யானையைத் தாக்கி வீழ்த்துவது தன் வீரத்துக்குக் குறைவென எண்ணுகின்றான் ஒரு தமிழ் வீரன்.

'ஒருகை உடையது எறிவலோ யானும்
இருகை சுமந்து வாழ்வேன்'

எனத் தருக்குகின்றான் அவன். ஆம்; தமிழரின் வீரம் அத்தகைய அறப்பண்பில் வேர் வீழ்த்தது!

## 7. பிறர்க்கென வாழும் பெற்றிமை

தான் மட்டும் வாழ்வது குறுகிய பண்பு. பிறர்க்கென வாழ்வது தெய்விகப் பண்பு. பிறரை அழித்து வாழ்வது அரக்கப் பண்பு. ஒன்றன் அழிவில் தமது ஆக்கத்தைத் தமிழர் தேடிக்கொண்டதில்லை.

சான்றோர் இயல்பைக் கூறும் இளம்வழுதி என்னும் மன்னன்
''தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

என இப்பண்பைக் குறிக்கின்றான்.

தாம் வாழ்வதைவிடப் பிறர் வாழ்வதையே விரும்பியவர் தமிழர்.

## 8. ஒழுக்கமுடைமை

நாகரிகம் பெற்ற சமூகத்தின் உயர்பண்புகளுள் ஒன்று, ஒழுக்கம். விலங்குகளும் பறவைகளும் ஒழுக்கத்தை எண்ணிப் பார்ப்பதில்லை; மக்கள் மட்டுமே எண்ணுகின்றனர். ஆறறிவுடையவர்களே மக்கள். மனிதராகப் பிறந்தும் ஐயறிவுடையவர்கள் மாக்கள் என்பது தொல்காப்பியர் கருத்து.

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"
"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

என்பது அவர் நூற்பா.

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பது தமிழ்ப் பண்பாட்டின் உயிர்நாடிக் கொள்கை.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது வள்ளுவன் ஆணை.

வானுயர் தோற்றம் உடையராயினும், நெஞ்சம் தானறி குற்றப்பட்டவர் தாழ்ந்தவரே எனக் கொண்டது தமிழினம். இத்தகைய உயிர்க்கொள்கைகளால், உயர் பண்பாடுகளால் தமிழினம் இன்றும் தனித் தன்மையோடு வாழ்ந்து வருகிறது.

# தமிழ்நாட்டு மரபுகள்

## 9. உறவு

தமிழர்களின் உறவுமுறை மிகவும் சிறப்பானது; ஆழ்ந்தது; வலிமையானது; சாதி அடிப்படையில் வேரூன்றியது.
பண்டைத் தமிழகத்தில் சாதிகள் இல்லை; இக்காலத் தமிழகத்தில் சாதி இல்லாத மக்களே இல்லை.

தாய் தந்தை மக்கள் என்னும் உறவு வலுவானது. அடுத்தது திருமணத்தின் வழியாக வரும் மனைவி வழி உறவு. இது மிகவும் நெருக்கமானது; ஆழக் கால்கொண்டது. பாசம் மிகுந்தது. மாமனார் மாமியார்க்கும், மனைவி வழி உறவினர்க்கும் ஒரு குடும்பத்தில் இருக்கும் செல்வாக்கு அளவு கடந்தது. அவர்களைக் கலந்துகொண்டுதான் எக்காரியமும் நடக்கும்.

தமிழகத்தின் ஒவ்வொரு சாதிக்கும் உரிய வழக்கங்களும் மரபுகளும் ஆசாரங்களும் கட்டுப்பாடுகளும் உறவுகளைப் பிணைக்கின்றன; உறவினரை இணைக்கின்றன. பிறப்பு, இறப்பு, பூப்பெய்துதல், திருமணம், ஆண்டு நிறைவு, ஆண்டுக்கொருமுறை வரும் நினைவு நாள் போன்ற நிகழ்ச்சிகளில் உறவினர்கள் ஒன்று கூடுவது வழக்கம்.

தங்கள் தங்கள் சாதிக்குள்ளேயே மணமகனையும் மணமகளையும் தேர்ந்தெடுத்து மண முடிப்பது மரபு.

## 10. கருவுற்ற மகளிர்

கருவுற்ற மகளிர் பற்றிய கட்டுப்பாடுகள் தமிழ்நாட்டில் அதிகம். கருவுற்ற ஒரு பெண் தனியே உறங்கக்கூடாது; வடக்கே தலை வைத்துப் படுக்கக்கூடாது; இருட்டிய பிறகு வெளியே போகக்கூடாது. கிரஹண காலத்தில் உலக்கை பிடிக்கக்கூடாது. வாயிற்படியில் உட்காரக்கூடாது. புகைப்படம் எடுத்துக் கொள்ளக்கூடாது. இவை போன்று இன்னும் பல.

மனைவி கருவுற்றிருக்கும் போது கணவன்மார்கள் முகச்சவரம் செய்துகொள்வதில்லை. சித்திரை மாதம் கடும் வேனிற் காலம். அப்போது மகப்பேறு என்பது கடுமையாக இருக்கும். ஆகவே, அதைத் தடுக்கச் சில ஏற்பாடுகள் செய்யப்படுவதுண்டு. சிறப்பாக ஆடி மாதம் கணவன் மனைவி உடலுறவு கூடாது என்பர். இதற்காகவே 'ஆடிக்கு அழைத்தல்' என்னும் பெயரில் பெண்ணைத் தாய்வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவர்.

பழனிமலைப் பகுதியில் வாழும் முதுவர் என்னும் இனத்தார் குழந்தை பிறந்த மூன்றாம் நாள் தாயையும் குழந்தையையும் ஆற்றில் நீராட்டுவர்.

குழந்தைக்கு முடி இறக்குவது, காது குத்துவது என்பது எல்லாக் குழந்தைகட்கும் செய்தே தீர வேண்டிய சடங்குகள்.

செட்டிநாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆண்பிள்ளைகளுக்குக் கார்த்திகைப் புதுமை என்னும் சடங்கையும், பெண்களுக்குத் திருவாதிரைப் புதுமை என்னும் சடங்கையும் 13 வயது அளவில் நிகழ்த்தி வருகின்றனர்.

'புதுமை' செய்வது என்பது ஒரு கடமையான சடங்காக நடந்து வருகின்றது. திருவாதிரைச் சடங்கு செய்துகொள்ளும் பெண்கள் வீடு வீடாகச் சென்று,

" ஆடி ஆடி வாரோம்
அவரைக்காய் போடுங்க ;
பாடிப் பாடி வாரோம்
பாடவரங்காய் போடுங்க ;
கூடிக் கூடி வாரோம்
கொத்தவரைக்காய் போடுங்க"

எனப் பாடி வருவதை இப்போதும் காணலாம்.

## 11. திருமணம்

ஒரு சாதியினர் அதே சாதிக்குள்தான் பெண் கொடுப்பதும் கொள்வதும் செய்ய வேண்டுமென்ற வழக்கம் இடைக்காலத்தில் ஏற்பட்டது. திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்ற நம்பிக்கை நிலவுகிறது.

ஆனால்,சங்க காலத் தமிழர் திருமண முறை இதற்கு முற்றிலும் மாறுபட்டது.

"யாயும் யாயும் யாரா கியரோ ;
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே !

என்பதுதான் பண்டைத்தமிழர் மணநெறி.

## 12. இயற்கை எய்துதல்

ஒருவர் இறந்துவிட்டார் என்று கூறுவது தமிழ் மரபன்று. இறைவன் திருவடி நீழல் அடைந்தார், இயற்கை எய்தினார், சிவலோக பதவி அடைந்தார், பரமபதம் அடைந்தார் எனக் கூறுவதுதான் மரபு.

மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஏகாதசி அன்றோ இறப்பது சிறந்த பேறு எனக் கருதப்படுகிறது.

சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தால் அந்த வீட்டில் மற்றொரு சாவு நேரும் என நம்பப்படுகிறது. 'சனிப் பிணம் துணை தேடும்' என்பது பழமொழி.

இறந்த வீட்டுக்குச் சென்றால் தீட்டு ; தலை முழுகிவிட்டுத்தான் அவரவர் தத்தம் வீட்டினுள் நுழைவர்.

பிணத்தைப் பாடையில் தூக்கிச் செல்லும் போது, யார் யார் தூக்கிப் போக வேண்டுமென்ற விதிமுறை உண்டு. பெண்கள் சுடுகாட்டுக்குச் செல்லும் வழக்கம் தமிழ்நாட்டில் இல்லை.

"வீடுவரை மனைவி ;
வீதிவரை உறவு ;
காடுவரை பிள்ளை ;
கடைசிவரை யாரோ ?"

என்பது சாவு வேதாந்தப்பாடல்.

## 13. பச்சை குத்துதல்

உடம்பில் பச்சை குத்திக்கொள்ளுதல் என்பது, சில நாகரிகமற்ற பகுதி மக்களிடையே இன்றும் காணப்படுவதொன்று.

கடவுளர்கள், தேள், பாம்பு முதலான உருவங்களையோ, அவரவர் பெயர்களையோ கை, நெற்றி, முழங்கைக்கு மேலுள்ள பகுதி ஆகியவற்றில் பச்சை குத்திக்கொள்வர்.

பச்சை குத்துவதில் குறத்திகள் தேர்ச்சி பெற்றவர்கள். அகத்திக் கீரை இலைச்சாந்திலிருந்து தயாரிக்கப்பட்ட மெழுகும், சேங் கொட்டைப் பாலும் சில சாயங்களும் கலந்த கலவையில் பச்சை குத்தப்படுகிறது. குத்தும் போது சில தையல் ஊசிகளைப் பயன்படுத்துகின்றனர்.

## 14. சகுனம்

சாத்திரங்களிலும் சகுனங்களிலும் பெருமளவு நம்பிக்கை உடையவரகள், தமிழர்கள்.

வீட்டை விட்டு வெளிப்படும்போது கால் இடறுவது கெட்ட சகுனம். அருகால் தலையில் இடித்தால் 'தடுக்கிறது' என்பார்

கள். திரும்பவும் வீட்டினுள் வந்து உட்கார்ந்து, ஒரு டம்ளர தண்ணீர் குடித்துவிட்டுத்தான் புறப்படுவார்கள்.

பூனை குறுக்கே போவது கெட்ட சகுனம். கரிச்சான் குருவி வலமிருந்து இடம் சென்றால் நல்ல சகுனம்.

“ வால் நீண்ட கரிக்குருவி
வலமிருந்தே இடம்சென்றால்
கால்நடையாய்ப் போனவர்கள்
கனகதண்டி ஏறுவரே”

என்பது நம்பிக்கை.

காடை இடப்பக்கம் பறந்து செல்வது நல்ல சகுனம்.

“கட்டுக் காடை இடமானால்
குட்டிச் சுவரும் பொன்னாகும்”

என்பது பழமொழி.

கழுதை கத்துவது நல்ல சகுனம்; ஆனால், கழுதையைப் பார்த்துவிட்டுச் செல்வது கெட்ட சகுனம்

புறப்படும் போது வழியில் நாவிதன், விறகுக்கட்டு, ஒற்றைப் பார்ப்பான் போன்ற சிலர் எதிர்ப்படுவது தீய சகுனம். சுமங்கலி, நிறைகுடம் ஆகியவை எதிர்ப்படுதல் நற்சகுனம் என்னும் நம்பிக்கை இன்றும் உண்டு.

காகங்கள் ஒரு வீட்டின் முன் கரைந்தால் விருந்தினர் வருவர் என்னும் நம்பிக்கை சங்க காலத் தமிழ் மக்களிடையிலும் இருந்து வந்ததாக அறிகிறோம். விருந்து வரக் கரைந்த காக்கையைப் பாடிய ஒரு புலவர், ‘காக்கை பாடினியார் நச்செள்ளையார்’ எனப் பெயர் பெற்றார்.

ஒருவனுடைய நிலத்தில் அளவுக்கு மீறி விளைச்சல் ஏற்படு மானால் அது அவன் உயிர் நீப்பதற்கான அபாய அறிகுறி எனக் கருதப்பட்டது.

## 15. கண்ணேறு

கண்படுதல் என்பது இன்றும் நிலவி வரும் ஒரு நம்பிக்கை. ஒருவனுடைய கண், கொள்ளிக்கண்ணாக இருந்தால் அவன் பார்வை பட்ட பொருள்கள் பாழாகிவிடும் என நம்புகின்றனர்.

திருஷ்டிக்கு காரணமானவரின் காலடி மண்ணை எடுத்துவந்து, விராட்டியில் கண்ணுள்ள கொட்டாங்கச்சியைக் கொளுத்தி வைத்து, அதில் உப்பையும் மிளகாயையும் இட்டுப் புகையெழுப்பித் தலைசுற்றிக் கொண்டுபோய்த் தெருவில் கொட்டுவர்.

புதிய வீடுகளுக்குக் கண்படாமல் இருக்கப் பூசணிக்காய் ஒன்றில் கரும்புள்ளிகள் குத்தித் தொங்கவிடுவர்.

விளைச்சலில் கண் திருட்டி விழாமல் இருக்க வைக்கோல் துணிகளாலான பொம்மைகளைச் செய்து கழிகளில் நாட்டி வைப்பர். இதற்குச் சோளக்கொல்லைப் பொம்மை என்று பெயர் வழங்குகிறது.

ஒரு பொருளைச் சாப்பிடும் போது எவரேனும் பார்த்துக்கொண்டிருந்தால் சாப்பிடுபவனுக்கு வயிற்றுவலி வந்துவிடும் என்பர்.

இத்தகைய நம்பிக்கைகள் பலப்பல இன்றும் நிலவி வருகின்றன.

# பவளம்

## தமிழகம் இன்று



## தமிழகம்—இன்று

1. பரப்பும் எல்லைகளும்
2. மாவட்டங்களும் தலைநகரங்களும் அவற்றின் பரப்புகளும்
3. மலைகளும் ஆறுகளும்
4. தமிழகத்தின் சிறப்பிடங்கள்
5. அமைச்சரவை
6. அன்னை தமிழுக்கு அரசு ஆற்றியுள்ள அரும்பணிகள்
7. தமிழ்த் தாளிகைகள்
8. பிறநாடுகளில் தமிழர் வாழ்வும் அதன் விளைவுகளும்
9. கனியிருப்பக் காய் கவர்தல்
10. திருவள்ளுவராண்டு
11. தமிழ் எண்கள்
12. தமிழ்ப்பெயர்கள்
13. அயல்நாடுகளில் தமிழ் :
    (அ) இலங்கைத் தமிழ் இலக்கியம்
    (ஆ) மலேசியத் தமிழ் இலக்கியம்

# பவளம்

பவளம், நவமணிகளுள் இறுதியில் இடம் பெற்றுள்ள இரத்தினம். பவளம், முத்து என்ற இருமணிகளும் தோன்று வதற்கு இடமாக உள்ளமையால் கடலுக்கு 'இரத்தினாகரம்' என்னும் பெயர் ஏற்பட்டது என்பர்.

கடலில் படிந்து வாழும் உயிரினங்களுள் பவளப்பூச்சிகளும் ஒரு வகை. அப்பூச்சிகளின் கழிவுப்பொருள்களான கொடிப் பாறைகளே நாம் அணியும் அழகிய பவழ மணிகள்.

இதிலிருந்து ஓர் உண்மையை நாம் உணர வேண்டும். பவளம் என்பது உண்மையான இரத்தினக்கல் அன்று. இன்று நாம் காணும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழகமும் உண்மையான சங்க காலத் தமிழகம் அன்று.

இரத்தினக் கற்கள் ஒருவகை; அவற்றினின்றும் மாறுபட்ட பவளம் வேறு வகை. எனினும் அது ஓர் இரத்தினம்தான்!

சங்க காலத் தமிழகம் ஒருவகை; அதனின்றும் எவ்வளவோ வகைகளில் மாறுபட்ட இக்காலத் தமிழகம் வேறு வகை. வேறு பட்டாலும் இது தமிழகந்தான்!

இவ்வொப்புமை கருதி இக்காலத் தமிழகம் பவழ மணியாக ஈண்டு அறிமுகம் பெறுகின்றது.

## 1. பரப்பும் எல்லைகளும்

தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,30,357 சதுர கிலோ மீட்டர்.

இதன் கடற்கரை நீளம் 1200 கி. மீட்டர். மக்கள் தொகை 1971-இன் கணக்குப்படி ஏறத்தாழ $4\frac{1}{8}$ கோடி. (4, 11, 03,125)

பாரத யூனியனில் உள்ள மாநிலங்களுள் தமிழ்நாடு, பரப்பில் பன்னிரண்டாவது இடத்தைப் பெறுகிறது; மக்கள் தொகையில் ஏழாவது இடத்தைப் பெறுகிறது.

தமிழ்நாட்டின் தலைநகர், சென்னை.

தமிழ்நாட்டின் வடக்கில் ஆந்திரம்
வடமேற்கில் கர்நாடகம்
மேற்கில் கேரளம்
கிழக்கில் வங்காள விரிகுடா
தெற்கில் இந்தியப் பெருங்கடல்.

மேற்கில் உள்ள மலைகள், கிழக்குச் சமவெளிகள் என இரண்டு இயற்கைப் பிரிவுகள் தமிழகத்தில் உள்ளன.

## 2. மாவட்டங்களும் தலைநகர்களும் பரப்புகளும்

ஆட்சி வசதியை முன்னிட்டுத் தமிழ்நாடு பதினாறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களும் தலைமை அலுவலகம் உள்ள இடங்களும் கீழே தரப்படுகின்றன.

| | மாவட்டம் | | தலைநகர் |
|---|---|---|---|
| 1. | சென்னை | — | சென்னை |
| 2. | செங்கற்பட்டு | — | காஞ்சிபுரம் |
| 3. | வடஆர்க்காடு | — | வேலூர் |
| 4. | தென்னார்க்காடு | — | கடலூர் |
| 5. | சேலம் | — | சேலம் |
| 6. | தருமபுரி | — | தருமபுரி |
| 7. | கோயமுத்தூர் | — | கோயமுத்தூர் |
| 8. | நீலகிரி | — | உதகமண்டலம் |
| 9. | திருச்சிராப்பள்ளி | — | திருச்சிராப்பள்ளி |
| 10. | தஞ்சாவூர் | — | தஞ்சாவூர் |
| 11. | மதுரை | — | மதுரை |
| 12. | இராமநாதபுரம் | — | மதுரை |
| 13. | திருநெல்வேலி | — | திருநெல்வேலி |
| 14. | கன்னியாகுமரி | — | நாகர்கோயில் |
| 15. | புதுக்கோட்டை | — | புதுக்கோட்டை |
| 16. | பெரியார் மாவட்டம் | — | ஈரோடு. |

மாவட்டப் பரப்புகள்

| | மாவட்டம் | பரப்பு ச. கி. மீட்டர் | மக்கள் தொகை இலட்சம் | ச. கி. மீட்ட ருக்கு நெருக் கம் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 127 | 24 | 19299 |
| 2. | செங்கற்பட்டு | 7850 | 29 | 365 |
| 3. | வட ஆர்க்காடு | 12147 | 37 | 305 |
| 4. | தென் ஆர்க்காடு | 10888 | 36 | 331 |
| 5. | தருமபுரி | 3718 | 17 | 174 |
| 6. | சேலம் | 8633 | 30 | 346 |
| 7. | கோயமுத்தூர்* | 15602 | 44 | 278 |
| 8. | நீலகிரி | 2548 | 5 | 193 |
| 9. | மதுரை | 12611 | 40 | 311 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 14258 | 39 | 269 |
| 11. | தஞ்சாவூர் | 9681 | 39 | 394 |
| 12. | இராமநாதபுரம் | 12507 | 29 | 227 |
| 13. | திருநெல்வேலி | 11614 | 32 | 279 |
| 14. | கன்னியாகுமரி | 1651 | 12 | 729 |
| 15. | புதுக்கோட்டை | 4600 | 10 | 217 |

[*பெரியார் மாவட்டப் பிரிவினைக்கு முன்]

## 3. மலைகளும் ஆறுகளும்

தமிழ்நாட்டின் மலைகள் :

நீலகிரிமலை, ஆனைமலை, பழனிமலை, கோடைக்கானல் மலை, ஏலமலை, அகத்தியமலை, சவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்விராயன் மலை, கொல்லிமலை, பச்சை மலை, கஞ்சமலை, ஏர்க்காடு மலை என்பன.

தமிழ்நாட்டில் பாயும் ஆறுகள் தென்மேற்குப் பருவக் காற்றாலும் வடகிழக்குப் பருவக்காற்றாலும் மழைநீர் பெறு கின்றன. எனவே, இவற்றில் மழைக்காலத்தில்தான் நீர் பெருகி ஓடும். கோடைக் காலத்தில் வற்றிவிடும். காவிரி, வைகை போன்ற பேராறுகளில்கூட இக்காலத்தில் நீரைக் காண முடியாது.

பொதுவாகக் கூறுமிடத்துத் தமிழ் ஆறுகள் வட இந்தியப் பேராறுகளைப் போன்ற வற்றாத நீர்ப்பெருக்கு உடையவை அல்ல ; நீளமும் குறைந்தவை. அவற்றுள் முக்கியமானவை காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, தாமிரபரணி என்பன.

## 4. தமிழகத்தின் சிறப்பிடங்கள்

**மதுரை :**

தமிழகத்தின் வரலாற்றுப் புகழ் பெற்ற தென்னகத்தின் தலை நகரம். பழமையான வரலாறு வாய்ந்தது. வெளிநாட்டாரின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

காணத்தக்க இடங்கள் :

மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருமலை நாயக்கர் மண்டபம், பொற்றாமரைக்குளம், அஷ்டசக்தி மண்டபம், கிளிக்கட்டி மண்டபம் முதலியன.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் மண்டபத் தூண்கள் சிற்ப வேலையில் உலகப் புகழ் பெற்றவை.

பொற்றாமரைத் தடம் புண்ணியத் தீர்த்தங்களில் மிகச்சிறந்த தெனப் போற்றப்பட்டு வருகிறது.

வடக்குக் கோபுரத்தை அடுத்துள்ள ஆடி வீதியில் ஐந்து கற்றூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை சங்கீதத் தூண்கள் என வழங்கப்படுகின்றன. இவற்றைத் தட்டினால் கர்நாடக இசையின் ஏழு சுர ஒலிகளும் எழுவது வியப்பூட்டும் நிகழ்ச்சி யாகும்.

மாரியம்மன் வண்டியூர்த் தெப்பக்குளம், இராயர் மண்டபம், ஏழு கடல்கள் ஆகியவையும் மதுரையில் காணத்தக்கவை.

**கொடைக்கானல் :**

மிக்க அழகு வாய்ந்த கோடைவாழ் மலைத்தலங்களுள் கொடைக் கானலும் ஒன்று. எங்கும் ஒரே பசுமையான காட்சிகள், மேடையிலே வீசும் மெல்லிய பூங்காற்று எப்போதும் குளுகுளு வென வீசும் இனிமை, மிதமான வெப்பம் ஆகியவை இவ் விடத்தின் சிறப்புகள். வெப்பம் தாங்காத கோடைக் காலத்தில் பல உயர்மக்கள் இவ்வூரை நாடிச் செல்வர்,

'தென்னிந்திய இரயில்வேயின் மலைநிலைய இளவரசன்' என்னும் சிறப்புப்பெயர் கொடைக்கானல் புகைவண்டி நிலையத்திற்கு உண்டு.

இங்குள்ள கொடைக்கானல் ஏரியில் மே மாதம் ஒரே திருவிழாவாக இருக்கும். 'படகு' விடும் உல்லாசப் பயணிகளால் ஏரி நிறைந்திருக்கும். குதிரைச்சவாரி வசதிகளும் உண்டு.

**பழனிமலை :**

'பழனிமலை' என்னும் பெயரைக் கேட்டால் போதும், பக்தர்களின் நெஞ்சமெல்லாம் பனிக்கட்டி போல உருகி நெகிழத் தொடங்கும்.

பாலமுருகன் பழனிமலை உச்சியில் பண்டாரக் கோலத்துடன் நிற்கும் காட்சியைக் காண்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் படியேறிச் செல்கின்றனர்.

குன்றுதோறாடும் குமரனை, குறிஞ்சிநிலக் கோமகனைக் குறமகள் வள்ளியின் காதல் மணாளனைக் குளிரக் குளிர, பன்னீராலும் பாலாலும் திருமுழுக்காட்டுகின்றனர்; தேனையும் சந்தனக் குழம்பையும், பஞ்சாமிர்தத்தையும் திருமேனியில் அப்பித் திருமஞ்சனமாட்டுகின்றனர். இளநீராலும் எண்ணெயாலும் முழுக்காட்டுகின்றனர். நாள் முழுவதும் அடியவர் செய்யும் அருச்சனைகளாலும் திருமுழுக்குகளாலும் தெய்வக்குமரன் திக்குமுக்காடுகின்றான்.

நாழிகைக்கொரு கோலம் புணைந்து அன்பருக்கு அருளமுதத்தை வாரி வழங்குகின்றான். தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் கண்டு வணங்க வேண்டிய கவின்மலை—அருள்மலை —கண் கண்ட தெய்வமலை — பழனி மலை.

**வைகை அணைக்கட்டு :**

பாண்டி நாட்டில் உள்ள அணைக்கட்டுகளுள் காணத்தக்க இடம், வைகை அணைக்கட்டு. இது ஒரு சுற்றுலாத் தலம். மதுரையிலிருந்து தேக்கடி செல்லும் பாதையில் ஆண்டிப்பட்டி புகைவண்டி நிலையத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

**சென்னை :**

தமிழகத்தின் தங்கத் தலைநகர். இந்தியாவின் இணையற்ற நகர்களுள் நான்காவது இடத்தைப் பெற்றிருப்பது. 'தென்னிந்தியாவின் வாயில்' (The Gateway of South India) எனப் புகழ் பெற்றது. வரலாறு படைத்த தமிழ்ப்பெருநகரம்.

உலகத்தில் அழகில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள மரீனாக் கடற்கரை சென்னையில்தான் உள்ளது. சாந்தோம் கடற்கரை, எலியட் கடற்கரை, அடையாற்றுக் கடற்கரை ஆகிய பகுதிகளும் சிறப்பானவைகளே.

ஏறக்குறைய 15 கிலோமீட்டர் நீளமும் 130 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் கொண்டது, சென்னை மாநகர். 9 கிலோமீட்டர் அகலமும் நீளமுமான கடற்கரையை உடையது.

அழகிய—வரலாற்றுச் சிறப்பு மிக்க—கலை நிறைந்த மாநகர், சென்னை.

கி. பி. 1639-இல், விசயநகர மன்னரின் கவர்னராயிருந்த வெங்கடாத்திரி என்பவரிடமிருந்து ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் இவ்விடத்தை விலைக்கு வாங்கினர். அப்போது சென்னைப்பட்டினம் இல்லை; மீன் பிடிக்கும் பரதவர்கள் வாழ்ந்த சிறு குப்பம்தான் இருந்தது.

சிறு குடிசைகள் இருந்த இடத்தில் சிங்கார மாளிகைகள் பல எழுந்தன. செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டி ஆங்கிலேயர்கள் தமது வாணிகத்தை வளர்த்தனர். அப்பகுதி 'வெள்ளையர் பட்டினம்' எனவும், பிற பகுதிகள் 'கருப்பர் பட்டினம்' எனவும் வழங்கப்பட்டன.

1766-முதல் சென்னை வளரத் தொடங்கியது. அருகில் உள்ள கிராமங்களெல்லாம் வளைக்கப்பட்டு அவ்விடங்களில்கட்டடங்கள் கட்டப்பட்டன. தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், தபால் நிலையங்கள், ஊர்காவல் நிலையங்கங்கள் பல்வகை அலுவலகங்கள் இப்படிப் படிப்படியாக வளர்ந்தன. புகைவண்டிப் பாதை அமைக்கப்பட் பிறகு சென்னையின் புகழும் செல்வாக்கும் அதிகரித்தன.

திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், எழும்பூர், புரசைவாக்கம், தண்டையார்ப் பேட்டை, திருவொற்றியூர், நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, எண்ணூர், வேப்பேரி, சதயங்குப்பம், சாந்தோம், மண்ணடி, அடையாறு, தாம்பரம், பல்லாவரம், கிண்டி, பூந்தமல்லி, தியாகராயநகர், கீழ்ப்பாக்கம், கோடம்பாக்கம், சேப்பாக்கம், மீனம்பாக்கம்- இவ்வாறு சென்னை, பலப்பல பகுதிகளாக விரிந்து 'தலைநகரம்' என்னும் பெயரால் இணைந்து தென்னிந்தியாவின் முதன்மைத் துறைமுக நகராய்த் திகழ்கின்றது.

சென்னை மாநிலம் என்னும் பெயர் 1968 - ஆம் ஆண்டு முதல் 'தமிழ்நாடு' என மாற்றப்பட்டுவிட்டது.

## சென்னையில் காணத்தக்க சிறப்பிடங்கள்

### 1. மயிலைக் கபாலீசுவரர் கோயில்

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. மாடமலி மயிலையில் எந்நாளும் பெருவிழாக்கள் நடைபெற்று வந்தன என இவர் பாசுரங்கள் குறிக்கின்றன.

கபாலீசுவரருக்கு ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறும் தேர்விழா மிகச்சிறப்பானது. கோயிலை அடுத்துப் பெரிய தெப்பக்குளம் அமைந்துள்ளது. மயிலையின் கடற்கரை 'சாந்தோம்' என வழங்கப்படுகிறது.

### 2. பார்த்தசாரதிப் பெருமாள் கோயில்

இதுவும் பாடல் பெற்ற வைணவப் பெருங்கோயில். மிகச்சிறப்பாக இன்றும் பொலிவுடன் திகழ்கின்றது. ஏப்ரல் மாதம் பிரம்மோற்வசம் பெருஞ்சிறப்புடன் நடக்கிறது. திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள இக்கோயில் ஆழ்வார்களால் பாடப்பெற்றது.

தமிழ்க்கவிஞர் பாரதியார் வாழ்ந்த இல்லம் இப்போதும் பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் தெருவில் உள்ளது. சென்னையின் இதயம்போன்றவை மயிலையும் திருவல்லிக்கேணியும். இதனை அடுத்துள்ள மரீனாக் கடற்கரை உலகப்புகழ் பெற்றது. கோடம்பாக்கம் வடபழனியாண்டவர் கோயில், கந்தகோட்டம் கச்சாலீசுவரர் கோயில், தியாகராயநகர் சைவ வைணவக் கோயில்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## கிறித்தவ மாதா கோயில்கள் :

### 3. அன்னை செயிண்ட் மேரி ஆலயம் :

இது ஆசியாவிலேயே பழமையானதெனப் புகழ் பெற்றது.

1678 - 80 இல் ஜார்ஜ்டவுனில் ஆர்மீனியன் தெருவில் அமைந்துள்ளது.

### 4. செயிண்ட் தாமஸ் கதீட்ரல் :

சாந்தோமில் தங்கிப் பணிபுரிந்த தாமஸ் பெயரால் நிறுவப்பட்டது. சென்னை நகரின் வரலாற்றோடு தொடர்புடையது. மரீனா பீச்சின் தென்சாலையில் அமைந்துள்ளது.

**கடற்கரைகள் :**

**5. மரீனாக் கடற்கரை :**

உலகப் புகழ் பெற்றது. மிக மிக அழகானது. அழகில் உலகக் கடற்கரைகளுள் இரண்டாவது இடம் வகிப்பது. மிக நீளமானது. சேப்பாக்கம் அரண்மனை, விவேகானந்தா இல்லம் (Ice House) அகில இந்திய வானொலி நிலையம், சாந்தோம் செயிண்ட் தாமஸ் கதீட்ரல், அரசினர் மாளிகை விடுதி, நீச்சல் குளம், சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடங்கள் ஆகியவை மரீனாக் கடற்கரைப் பகுதியில் உள்ளன.

தமிழகப் பேரறிஞர் அண்ணாவின் கல்லறை இங்குதான் அமைந்துள்ளது. எதையும் தாங்கும் இதயம், என்றும் ஆறாத வெப்பப் பெட்டிக்குள் உறங்கிக்கொண்டிருப்பதை இன்றும் காணலாம்.

**எலியட் கடற்கரை**

குளிப்பதற்கு வாய்ப்பானது. படகுகள் இங்கு வாடகைக்குக் கிடைக்கும்.

**எண்ணூர்க் கடற்கரை**

உப்பங்கழிமுகத்துறை. இங்கும் படகில் ஏறிச் சென்று கடற் காட்சிகளைக் காணலாம்.

எலியட்பீச் சாலையில் அமைந்துள்ள பாம்புப்பண்ணை, விலங்குக் கண்காட்சி சாலை, பழம்பொருள் பாதுகாப்பு நிலையம் (Museum), கன்னிமாரா நூல் நிலையம், நேரு விளையாட்டரங்கம், கிண்டி மான்கள் சரணாலயம், துறைமுகம், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, கலாக்ஷேத்திரம், அயன்புரத்திலுள்ள இரயில்வே பெட்டித் தொழிற்சாலை (I. C. F.), மீனம்பாக்கம் விமான நிலையம் போன்றவை சென்னையில் காணத்தக்க இடங்களாகும்.

**வேடந்தாங்கல் :**

தமிழகத்தில் உள்ள பறவைகளின் சரணாலயம் இது. வெளி நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான பறவைகள் குறிப்பிட்ட காலங்களில் இங்கு வந்து தங்குகின்றன. சீசன் முடிந்தவுடன் போய்விடுகின்றன. சில பறவைகள் ஏரியில் உள்ள மரக் கிளைகளில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. காஞ்சிபுரத்திலிருந்து செஞ்சி நோக்கி வரும் பாதையில் இச்சுற்றுலாத் தலம் அமைந்துள்ளது. பறவைகளை

பைனாகுலர் மூலம் ஒரு டவரில் இருந்து பார்க்க வசதி செய்திருக்கிறார்கள்.

**திருக்கழுக்குன்றம் :**

கழுகுகள் பூசை செய்த இடம் கழுக்குன்றம் என வழங்கப்பட்டது. இது புராணச்செய்தி என ஒதுக்கிவிட முடியவில்லை. இக்காலத்திலும் இரண்டு கழுகுகள் எங்கிருந்தோ (வாரணாசி என்பர்) குறிப்பிட்ட நேரத்தில் திருக்கழுக்குன்றத்தின் உச்சியில் வந்து இறங்குகின்றன. அர்ச்சகர் இடும் படையல் பொருள்களான பொங்கல் உணவு முதலியவற்றைத் தின்றுவிட்டு மீண்டும் பறந்து போய்விடுகின்றன.

சென்னையிலிருந்து 70-ஆவது கிலோமீட்டர் தொலைவில் உள்ளது திருக்கழுக்குன்றம். இதிலுள்ள இறைவர் வேதகிரீஸ்வரர்.

**காஞ்சிபுரம் :**

தமிழகத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற பண்டைய மாநகர், காஞ்சிபுரம். 'கலைமலிந்த காஞ்சி' என இது போற்றப்பட்டுள்ளது. 'நாளந்தா' என உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களான தின்னாகரையும் தருமபாலரையும் ஈன்றெடுத்த பெருமை உடையது, காஞ்சி. பல்லவ மன்னர்களின் ஆட்சியில் தலைநகரமாகத் திகழ்ந்த காஞ்சி, இன்று தமிழகத்திற்கு அண்ணாவைத் தந்த தலைநகரமாகப் பெருமை பெற்றுள்ளது.

காஞ்சிபுரம் கைத்தறி நெசவுக்கும் பட்டுப்புடைவைக்கும் பெயர் பெற்றது. 'காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்' என்பது பொருள் பொதிந்த பழமொழி.

காஞ்சியில் கைலாசநாதர் கோயில், ஏகாம்பரேசுவரர் கோயில், காமாட்சியம்மன் கோயில், கச்சபேசுவரர் ஆலயம், வைகுந்தப் பெருமாள் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில் முதலியன காணத்தக்கவை.

**திருத்தணிகை :**

தற்காலத் தமிழகத்தின் வட எல்லையாக விளங்குவது முருகன் தலமான திருத்தணிகை. முருக பக்தர்களுக்குத் திருத்தணிகை வணக்கத்திற்குரிய பெருந்தலம்.

திருப்பதி மலை வாழும் வெங்கடேசப் பெருமாள் தமிழர்களை அடியோடு கைவிட்டுவிட்டு ஆந்திர நாட்டைச் சார்ந்துவிட்ட

போதிலும் பண்டைத் தமிழ்க்கடவுளான முருகர், தமிழ் அன்பர்களைக் கைவிடாமல் தமிழ்நாட்டில் தங்கி, பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றார்.

திருத்தணிகை, சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலம். முருகன் வள்ளியை மணந்த இடம் இது; காஞ்சியிலிருந்து அரக்கோணம் வழியே செல்லும் பாதையில் சென்றால் திருத்தணியை அடையலாம்.

**மகாபலிபுரம் :**

'கலங்கள் இயங்கும் கடல்மல்லை' எனப் பாடலில் குறிக்கப்பட்ட மாமல்லபுரம் இன்று பொலிவிழந்துள்ளது. இது பல்லவர் காலத்தில் பெரும் துறைமுகப்பட்டினமாய் விளங்கியது. மாமல்லபுரச் சிற்பங்கள் பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டு. பஞ்சபாண்டவர் ரதங்கள், பாறைச் சிற்பங்கள் ஆகியவை வெளிநாட்டுப் பயணிகளை மிகவும் கவர்கின்றன. அண்மையில் சென்னை வந்த பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் இவற்றைப் பார்த்துவிட்டு 'இவை என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன' என்று பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

குடைவரைக் கோயில்கள் எனப்படும் கிருஷ்ண மண்டபம், தர்மராசா மண்டபம், வராக மண்டபம், மகிடாசுரமர்த்தினி மண்டபம், திருவிக்ரம மண்டபம், சிவமண்டபம், இராமானுச மண்டபம், ஆதிசேஷன் மீது திருமால் அறிதுயில் கொள்ளும் மண்டபம், ஆகிய எல்லா மண்டபங்களும் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் காட்சியளிக்கின்றன.

**தூத்துக்குடி**

தென்னிந்தியாவில் முத்துக் குளிக்கும் இடங்களில் முதன்மை பெறுவது தூத்துக்குடிதான். இங்கு சிறந்த முத்துகள் எடுக்கப்பட்டு மேல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

கொச்சிக்கு அடுத்த நிலையில் வர்த்தகம் நடைபெறும் சிறந்த துறைமுகம் இது.

**திருவண்ணாமலை :**

புராணப் புகழ் பெற்ற குன்றம், திருவண்ணாமலை. சென்னையிலிருந்து புறப்பட்டு காஞ்சிபுரம், போளூர் வழியாக வரும் பாதை திருவண்ணாமலையை அடைகிறது.

அருணாசலேசுவரர் கோயில், மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. கார்த்திகைத்தீபம் திருவண்ணாமலை உச்சியில் ஏற்றப்படுவது காணத்தக்க காட்சி. இரமண மகரிஷியின் ஆச்சிரமம் இங்கு சிறப்புற்றது.

**சாத்தனூர் அணைக்கட்டு :**

திருவண்ணாமலையிலிருந்து 19 கி.மீ. தூரத்திலுள்ள சாத்தனூர் அணைக்கட்டு மிகச்சிறந்த, அழகான இயற்கைச் சூழலை உடைய சுற்றுலாத் தலம். அழகான பூங்கா ஒன்று இங்கு உள்ளது. உயிருடன் உள்ளதைப் போன்ற உருவங்கள் இங்கு பொம்மை வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

**செஞ்சி :**

தேசிங்கு மன்னன் ஆண்ட வீரக்குன்றம், செஞ்சி. இது கோட்டையாக வளைத்துக் கட்டப்பட்டிருப்பதால் செஞ்சிக் கோட்டை எனப் பெயர் பெற்றுள்ளது. திருவண்ணாமலையில் இருந்து 38-ஆவது கிலோ மீட்டரில் செஞ்சி உள்ளது. நகரம், கோட்டைக்குப் பக்கத்தில் குன்றின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இராசகிரி, கிருஷ்ணகிரி, சந்திராயன் துர்க்கம் என்ற மூன்று மலைகளின் இணைப்புதான், செஞ்சிக் கோட்டை. இதன் உச்சியில் அமைந்துள்ள சுனை ஒன்று குறிப்பிடத்தக்கது. அதன் சுவைமிக்க நன்னீர் கோடை காலத்திலும் வற்றுவதில்லை.

**சிதம்பரம் :**

"சிதம்பரம் போகாமல் இருப்பேனோ ?—என்
சென்மத்தை வீணாகக் கழிப்பேனோ ?"

நந்தனார் தினந்தோறும் பாடிக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் பழம்பதி, சிதம்பரம்.

பழைய நூல்களில் இதன் பெயர் தில்லையம்பதி.

ஊரில் எவ்விதச் சிறப்பும் இல்லாவிடினும் இரண்டு சிறப்பிடங்கள் இதன் புகழை உலகறியச் செய்கின்றன.

எல்லையற்ற இறைவன் தில்லையம்பலத்தில் திருநடம் புரிகின்றான். சைவர்களுக்குக் கோயில் என்றால் சிதம்பரத்தைத் தான் குறிக்கும். முதல் பெருமை இம்மணிமாடக் கோயில்.

இரண்டாவது பெருமை, அண்ணாமலை அரசர் அவர்களால் இதன் கிழக்கே நிறுவப்பட்டுள்ள கலைக்கோயில். தில்லைக் கூத்தன் திருக்கோயிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் சிதம்பரத்தின் சிறப்பமிசங்கள். இவற்றை இணைத்து ஓர் அழகான பாடலில் கவிமணி பாடுகின்றார்:

'தில்லைப் பதியுடையான் சிற்றம் பலந்தன்னில்
அல்லும் பகலும்நின் றாடுகின்றான்—எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து'

**இராமேசுவரம்**

தென்னகத்தின் கோடியில் உள்ள புனித கடற்றுறைத் தலம் இராமேசுவரம். இதைப் பற்றிய குறிப்பு அகநானூற்றில் உண்டு. இராமேசுவரம் கோயில் 4000 அடி நீளமுள்ள பிரகாரம் உடையது.

**பூம்புகார் :**

பண்டைக் காலத்தில் சோழ மன்னரின் துறைமுகப்பட்டினமாக இருந்த பெருநகர் பூம்புகார். இது காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயருடன் விளங்கியது. காவிரி கடலொடு கலக்கும் சங்கமத் துறையில் அமைந்திருந்தது.

இப்போது கடற்கரைச் சிற்றூராகக் காட்சியளிக்கிறது. மாயவரத்துக்குக் கிழக்கில் 29-ஆவது கிலோ மீட்டரில் பூம்புகார் உள்ளது. கடல் நீராட விரும்புவோர்க்கும், சுற்றுலாப் பயணிகட்கும் இது ஒரு கவர்ச்சி தரும் இடம்.

அண்மையில், முன்னாள் தமிழக முதல்வரும் கலைஞருமான திரு. மு. கருணாநிதி அவர்களது பெருமுயற்சியால் இங்கு பல அரிய சிற்ப வேலைப்பாடமைந்த சிலைகளும், மண்டபங்களும் அமைக்கப்பட்டன. சிலப்பதிகாரக்கதை முழுவதும் பண்டை மரபு மாறாமல் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் வரும் பாவை மன்றம், தோரணவாயில், பட்டி மன்றம் போன்றவற்றைச் சித்திரிக்கும் காட்சிகள் கவினுற அமைக்கப்பட்டுள்ளன. தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் கண்டு களிக்க வேண்டிய இடம் பூம்புகார்.

அண்மையில் வரலாற்றிலேயே முதன்முதலாகத் தமிழ் அன்னைக்கெனத் தனி உருவச்சிலை அமைத்து ஓவியம் தீட்டப் பெற்ற இடம், அன்னையின் உருவம் உருப்பெற்ற இடம், பூம்புகார்.

இவ்வரிய முயற்சி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேரறிஞர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

**தரணி புகழும் தஞ்சை மாநகர் :**

தமிழகத்தின் வீர வரலாறு படைத்த வளம் பெறு மாநகர், தஞ்சை.

சங்க காலத்தில் இந்நகர் 'ஆவூர்' என வழங்கப்பட்டதென்றும், வலிய கோட்டை ஒன்றினால் சூழப்பட்டதென்றும் வரலாறுகள் கூறுகின்றன. இன்றும் கோட்டை மதில் சிதைவுகளும், அகழிச் சுவடும் காணப்படுகின்றன. தஞ்சன் என்பவனால் ஆளப்பட்ட ஆவூராதலின் தஞ்சாவூர் எனப் பெயர் பெற்றது.

இது சோழ மன்னரின் தலைநகரமாகப் பல்வகைச் சிறப்பு களுடன் திகழ்ந்தது. இன்றும் திகழ்ந்து வருகின்றது.

'தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்' எனப் போற்றப்படுகிறது தஞ்சைத் தரணி. திருச்சிராப்பள்ளியிலிருந்து கிழக்கே 55-ஆவது கிலோ மீட்டரில் இந்நகர் உள்ளது.

தஞ்சை சரசுவதி மஹால் நூல் நிலையம், மியூசியம், சிவகங்கைத் தோட்டம், தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஆகியவை காணத்தக்க இடங்கள். இங்குள்ள மருத்துவமனை புகழ் பெற்றது.

**கும்பகோணம் :**

தமிழகத்தின் கோவில் மாநகர் என்று கூறினால் அது கும்ப கோணத்தையே குறிக்கும். காரணம், தெருவுக்கு இரண்டு கோயில்களையாவது இந்நகரில் காணலாம்.

சற்றேறக்குறைய 300 கோவில்கள் இங்குள்ளன. சோழர் காலத்தில் இந்நகர் குடந்தை என்னும் பெயரால் பெருஞ் சிறப்புப் பெற்றிருந்தது.

இதில் 12 ஆண்டுகட்கு ஒருமுறை நிகழும் மகாமக விழா அனைத்திந்தியப் புகழ் பெற்றது. வடநாட்டில் கும்பமேளாவைப் போல் தென்னாட்டில் மகாமக விழா கருதப்படுகிறது.

ஆதி கும்பேசுவரர் கோயில், சக்கரபாணி சுவாமி கோயில், சாரங்கபாணி கோயில் என்பவை புராணப் புகழ் பெற்ற கோயில்கள்.

கும்பகோணத்தை அடுத்துள்ள திரிபுவனம், பட்டு நெசவுக்குப் பெயர் பெற்றது.

**திருச்சிராப்பள்ளி :**

தென்னாட்டுப் பெருநகர்களுள் சீரும் சிறப்பும், பண்டைப் பெருமையும் பெற்றது திருச்சிராப்பள்ளி. சோழரின் தலைநகர மான உறையூர் பழங்காலத்தில் பெரும்புகழ் பெற்றிருந்தது. இன்று உறையூர் ஒரு பகுதியாக அமைய, திருச்சி பெருஞ் செல்வாக்குப் பெற்றுவிட்டது.

திருச்சி மலைக்கோட்டை உச்சியில் தாயுமானவர் கோயில், சலவை செய்யப்பட்ட கருங்கல்லால் அமைந்துள்ளது. பல்லவர் காலச் சிற்பத்திறனுக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ் கிறது. அதற்கும் மேலுள்ள உச்சிப்பிள்ளையரர் கோயிலில் இருந்து பார்த்தால் நகரம் முழுவதும் தெரியும்.

இதனை அடுத்துள்ள திருவரங்கம், புகழ் பெற்ற வைணவத் தலம் ; திருவானைக்கா, சைவர்களின் வழிபாட்டுத்தலம். திருச்சிராப்பள்ளி, தென்னிந்திய இரயில்வேயின் முக்கிய கேந்திர மாக அமைந்துள்ளது. திருச்சி மலைக்கோட்டை அயல்நாட்டுப் பயணிகளைக் கவர்ந்துள்ளது.

## 5. அமைச்சரவை

தமிழ்நாடு, அ.தி.மு.க. அமைச்சரவையால் ஆளப்பட்டு வருகிறது.

**தமிழக ஆளுநர் :** மாண்புமிகு சாதிக் அலி.

**தமிழக முதலமைச்சர் :** மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன்.

**சட்டமன்றத் தலைவர் :** உயர்திரு. க. இராசாராம்.

**அமைச்சர்கள்:**

உயர்திரு. இரா. நெடுஞ்செழியன் - நிதி.
,, எஸ். டி. சோமசுந்தரம் - வருவாய்த்துறை.
,, எஸ். அரங்கநாயகம் - கல்வி.
,, எச். வி. ஹண்டே - சுகாதாரம்.
,, பண்ணுருட்டி
எஸ். இராமச்சந்திரன் - மின்சாரம்.

| | | |
|---|---|---|
| ,, | எஸ். முத்துசாமி | - போக்குவரத்து. |
| ,, | கே. காளிமுத்து | - விவசாயம். |
| | ப. குழந்தைவேலு. | - உள்ளாட்சித்துறை |
| ,, | எஸ். இராகவானந்தம் | - தொழிலாளர் நலத்துறை |
| ,, | கே. ஏ. கிருஷ்ணசாமி | - ஊரகத் தொழில் துறை |
| ,, | சி. பொன்னையன் | - கூட்டுறவு. |
| திருமதி. | கோமதி சீனிவாசன் | - சமூக நலத்துறை |
| உயர்திரு. | கா. இராசா முகம்மது | - நீர்ப்பாசனத்துறை |
| ,, | இராம. வீரப்பன் | - செய்தி, சுற்றுலா, |
| ,, | எஸ். என். இராசேந்திரன் | - கைத்தறி. |

## 6. அன்னை தமிழுக்கு அரசு ஆற்றியுள்ள அரும்பணிகள்

இன்றைய தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக்காக எவ்வளவோ நல்ல பணிகளையும் உதவிகளையும் செய்து வருகிறது.

தொடக்க நிலையில் அவ்வரசு செய்த பணிகள் முதற்கொண்டு இன்றைய பணிவரை இங்கு இடம் பெறுகின்றன.

1. சென்னை மாநிலம் என்னும் பெயரைத் 'தமிழ்நாடு' என மாற்றியமைத்தது.

2. தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், வாய்மையே வெல்லும் என்பன போன்ற நல்ல தமிழ்ச்சொற்களை வழங்கியது.

3. பேருந்துகளில் வள்ளுவர் படம் அமைத்து அவரது குறள் ஒன்றையும் எழுதும்படி செய்தது.

4. மரீனாக் கடற்கரையில் தமிழ்ப்புலவர்கள், அறிஞர்கள் உருவச்சிலைகளை நிறுவியது.

5. வரலாற்றுச் சின்னமே இல்லாத வரண்ட தமிழகத்தில் எங்கணும் சின்னங்களை நிறுவியது.

பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை, இராசராசன் சிலை, வல்வில் ஓரி சிலை, வள்ளுவர் கோட்டம், அண்ணா சதுக்கம், ராஜாஜி

அறிவாலயம், காமராஜ் நினைவாலயம் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போன்ற 'வள்ளுவர் கோட்டம்' ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

6. தமிழ்ச்சான்றோர் இல்லங்களை நினைவுச் சின்னமாக்கியது.

7. பல்கலைக் கழகங்கட்குத் தமிழ்ப்பேரறிஞர்களைத் துணை வேந்தராக்கியது. (மு. வ., தெ. பொ. மீ., வ. சுப. மாணிக்கம்) தமிழாசிரியர்களும் தலைமையாசிரியராகும் தகுதியை அளித்தது.

8. தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொணர்ந்தது.

9. வயதான — ஓய்வு பெற்ற — வசதியற்ற தமிழாசிரியர், தமிழ்க் கலைஞர்கட்கு மாதந்தோறும் ரூ. 250 உதவித் தொகை அளித்தது.

10. தமிழ் அறிஞர்கட்கு விருதுகள் நல்கியது.

11. குமரிமுனையில் வள்ளுவர் நினைவாலயம் எழுப்பத் திட்டமிட்டது.

12. தமிழ்க்கலை—நாகரிகம் ஆகியவற்றை ஆய்ந்து வளர்க்கும் வகையில் தமிழ் மையம் அமைத்தது.

சுருங்கக் கூறினால், கோட்டையிலே இன்று தமிழ் கொலுவிருக்கிறது. நாட்டிலும் நல்ல தமிழ் நடமாடுகிறது. தமிழ் அன்னை அரியாசனத்தில் அமர்த்தப்பட்டுவிட்டாள்.

தமிழ்ப் பொற்காலம் பூத்து வருகின்றது.

தமிழக அரசு உலகத் தமிழ் மாநாட்டை நடத்துகின்றது.

## 7. தமிழ்த்தாளிகைகள் (Journals)

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சாதனங்களுள் சிறப்பிடம் பெறுபவை செய்தித்தாள்கள், தாளிகைகள்.

காலையில் எழுந்ததும் காபி குடிக்க மறந்தாலும், செய்தித்தாள் படிக்க மறப்பதில்லை என்னும் அளவுக்கு அவை வாழ்வில் பங்கு வகித்து வருகின்றன.

அவை பற்றிய விவரங்கள் சில இங்கு தரப்படுகின்றன.

தாளிகை முறையை கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் முதன் முதல் தொடங்கி வைத்தவர்கள் வெனிஸ் நகரத்தினர். அதன்பின் ஏனை நாடுகள் அம்முறையைப் பின்பற்றின. இந்தியாவில் அதனை அச்சுப்பொறிகள் மூலம் வளர்த்த பெருமை ஆங்கிலேயர்க்குரியது.

இந்தியத் தாளிகைகள் முதன் முதல் வங்காளத்தில் தோன்றின.

சமாசார்தீபம், கௌமுதி, பிரவாகர் போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இன்று பல தாளிகைகள் வெளிவருகின்றன. அவற்றுள் சில:

சுதேசமித்திரன், தினமணி, தினமலர், மாலை முரசு, முரசொலி, நவமணி, நவ இந்தியா, நம் நாடு, தமிழ்நாடு, விடுதலை, மக்கள் குரல், தினத்தந்தி, தினமலர்.

உலகனைத்தையும் கடல்கள் சூழ்ந்துள்ளதுபோல உலகமெங்கும் தமிழின் தனிப்பெரும் சிறப்பு, தமிழ் மண்ணின் தனிப்பெரும் தன்மை பரவியுள்ளது.

## 8. பிற நாடுகளில் தமிழர் வாழ்வும் அதன் விளைவுகளும்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது அவ்வையின் அமுதவாக்கு. தமிழர்கள் கடல் கடந்து பல நாடுகளுக்கும் சென்று, அங்கெல்லாம் தமிழ்ப் பண்பாட்டை வித்தினர். அந்நாட்டுச் செல்வங்களைப் பெருக்கினர். உலக நாடுகள் பலவற்றில் தமிழர் சென்று தங்கிப் பணியாற்றிய செய்திகளை அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளில் காண்கின்றோம். கிழைத்தீவுகளில் தமிழர் நிறுவிய பல அரசுகள் உண்டு.

இன்று தமிழர் பிலாய், பம்பாய், ரூர்கேலா போன்ற நகரங்களில் வாழ்கின்றனர். அங்குத் தமிழ்ப்பண்பாட்டை வளர்க்கும் தமிழ் மன்றங்களை நிறுவியுள்ளனர். அங்குள்ள தொழிலாளரோடு ஒன்றுகூடி உறவாடி வாழ்கின்றனர்.

**மொழிக்கலப்பு**

பிற மொழி பேசும் மக்களோடு தமிழர் பல காலமாகப் பல வகைகளில் தொடர்பு கொண்டு வாழ்ந்ததன் காரணமாகப் பிறமொழிச் சொற்கள் பல தமிழில் புகுந்து நிலை பெற்றுவிட்டன. அவ்வாறே தமிழ்ச்சொற்களும் பிற மொழிகளில் குடியேறியுள்ளன.

'லேவாதேவி' என்கின்றோம். இது இந்திமொழிச்சொல். 'லேனா' என்றால் எடுத்தல், 'தேனா' என்றால் கொடுத்தல். 'கொடுக்கல் வாங்கல்' என்பது தமிழ்நாட்டார் வழக்கு. 'வாங்குதல் கொடுத்தல்' என்பது வடநாட்டார் வழக்கு. பணம் கடன் தரும் போது ஒரு மாத வட்டியை எடுத்துக்கொண்டு தானே கொடுக்கிறார்கள் !

## 9. கனியிருப்பக் காய் கவர்தல்

தமிழில் வந்து கலந்துள்ள வேற்றுமொழிச் சொற்களை முற்றிலும் நீக்கிவிடுவதென்பது முடியாத காரியம். புதிதாக வந்து கலப்பதையும் தடுக்க முடியாது.

ஆனல்,

வழக்கமாகப் பேசுவதற்குக் கனி போன்ற நல்ல தமிழ்ச்சொற்கள் இருக்கும் போது பலர், வேண்டாத பிற சொற்களைக் கலந்து பேச முற்படுவது பேதைமை. ஆங்கில அறிவையோ, வடமொழி அறிவையோ காட்டுவதற்காகப் பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவது. தாய்மொழியைக் கொலை செய்வதாகும்.

'தண்ணீர் வேண்டும்' எனக் கேட்பதில்லை; 'ஜலம் கொடுங்கள்' என்றே கேட்கின்றனர். 'நாற்காலியில் உட்காருங்கள்' என்று கூறுவதற்கு நாணம்; 'சேரில் உடகாருங்கள்' என்று கூறுவதில் ஒரு தனி மகிழ்ச்சி !

இப்போக்கினைப் புரட்சிக்கவிஞர் பின்வருமாறு சாடுகின்றார்.

"உணவுதரு விடுதிதனைக் கிளப்பெனவேண்
டும்போலும்; உயர்ந்த பட்டுத்
துணிக்கடைக்குச் சில்க்ஷாப் எனும்பலகை
தொங்குவதால் சிறப்புப் போலும் ;

மணக்கவரும் தென்றலிலே குளிராஇல்
லை? தோப்பில் நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது? தமிழகத்தின்
தமிழ்த்தெருவில் தமிழ்தா னில்லை!"

தமிழ் பயின்ற - தமிழைக் கொண்டே வயிறு வளர்க்கின்ற தமிழ்ப் புலவரிடத்தும் காணப்படும் இவ்விழிதகைமை கண்டு மனம் வருந்துகின்றார் பாவேந்தர் பாரதிதாசன்; அவர்கள் திருந்த வழியும் கூறுகின்றார்:

"தனித்தியங்கத் தக்கதெனத் தமிழ்பற்றித்
தமிழ்ப்புலவர் சாற்றுகின்றார்;
இனித்திடுமவ் விருநூலில் வடமொழிஏன்?
வடஎழுத்துக் கொழுங்குதான் ஏன்?
தனித்தமிழில் இந்நாட்டுத் தக்கபுதுக்
காப்பியம், நன் னூல்இயற்ற
நினைப்பாரேல் நம்புலவர் நிலவாவோ
ஆயிரநூல் தமிழகத்தே!"

தமிழை நாம் பலதுறைகளில் புறக்கணிக்கின்றோம். தமிழ்த்தாய் புறக்கணிக்கப்படுவதைக் கண்டும் உணர்வு கொள்ளாமல் ஒதுங்கி நிற்கின்றோம். இத்தகைய எருமை நிலை கண்டு உள்ளங் கொதிக்கின்றார் புதுவையார்;

"காற்செருப்பைப் பிறனொருவன் கழிவிடத்தில்
தள்ளிடினும் பொறாத உள்ளம்,
மேற்படுத்தும் எவற்றினுக்கும் மேற்பட்ட
தண் மொழியைத் தமிழைத் தீயோர்
போற்றுதற்கு உரியதொரு பொதுவினின்று
நீக்கிவைத்தால் பொறுப்ப துண்டோ?
வேற்றுவரின் வடமொழியை வேரறுப்பீர்
கோயிலிலே மேவி டாமே!"

என முழங்குகின்றார்.

# 10. திருவள்ளுவர் ஆண்டு

காலங்களைக் கணக்கிடுவதற்கு ஆண்டு முறை பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

வடமொழியாளர் இதனை 'அப்தம்' என்பர். 'சகாப்தம்' என்பது 'சக ஆண்டு' எனப் பொருள் தரும். யுகங்களைச் சகாப்த முறையில் கணக்கிடுவர்.

'சாலிவாகன சகாப்தம்' என்ற முறை இதனை உணர்த்தும்.

கிறித்தவர்கள் ஏசு கிறித்து பிறந்த நாளிலிருந்து தம் ஆண்டின் காலத்தைக் கணக்கிடுகின்றனர். வரலாற்று நிகழ்ச்சிகள் கி.பி., கி . மு. ஆண்டுகளில் குறிக்கப்படுகின்றன.

மகம்மது நபி அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குக் கல்லெறி பட்டுச் சென்றடைந்த ஆண்டின் தொடக்கம் மகம்மதியர்களுக்கு 'ஹஜிரி' என்ற ஆண்டு முறையாக அமைந்தது. விக்கிரம சகம், கொல்லம் போன்ற ஆண்டு முறைகளும் பின்பற்றப்படுகின்றன.

இவ்வாறே தமிழர்கள் திருவள்ளுவர் பிறந்து வாழ்ந்த காலத்தை அடிப்படையாகக்கொண்டு தம் ஆண்டு முறையைக் கணக்கிட்டு வருகின்றனர் இது 'திருவள்ளுவர் ஆண்டு' எனக் குறிக்கப் பட்டு வருகின்றது.

இப்போது நடைபெறுவது கி.பி. 1981 - ஆம் ஆண்டு. இதற்கு இணையான பிற ஆண்டுகளையும், திருவள்ளுவர் ஆண்டின் காலக்கணக்கையும் பின்வரும் பட்டியல் உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| கிறித்துவ ஆண்டு — | கி. பி. | 1980 - 81. |
| சாலிவாகன சகாப்தம் | ,, | 1902. |
| கலியப்தம் | ,, | 5081. |
| பசலி ஆண்டு | ,, | 1389 - 90. |
| கொல்லம் ஆண்டு | ,, | 1155 - 56 |
| வர்த்த — ஹஜிரி | ,, | 1400 - 1401 |
| விக்ரம சகம் | ,, | 2036 - 37. |
| திருவள்ளுவர் ஆண்டு | ,, | 2012. |

## 11. தமிழ் எண்கள்

இக்காலத்தில் 1, 2, 3, 4 என வழங்கப்படும் எண்கள் அராபிய எண்கள் ஆகும். இவை உண்மையில் இந்திய எண்களே. இந்தியாவிலிருந்து அரேபியாவுக்குச் சென்று அங்கிருந்து அயல் நாடுகளில் பரவியமையால் இவ்வாறு பெயர் பெற்றன. தமிழகத்திலும் இவ்வெண்களே பயிலுகின்றன. எழுதுவதற்கு மிகச் சுலபமாக இருப்பதால் இவை பல இடங்களிலும் பின்பற்றப்படுகின்றன. எனினும் தமிழருக்கெனத் தனி எண்கள் உண்டு.

அவை :

| | |
|---|---|
| 1 — க | 7 — எ |
| 2 — உ | 8 — அ |
| 3 — ங | 9 — கூ |
| 4 — ச | 10 — ய |
| 5 — ரு | 100 — ா |
| 6 — சா | 1000 — சூ |

## 12. தமிழ்ப்பெயர்கள்

பிறந்த குழந்தைகளுக்குப் பெயரிடுவதில் ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு முறையைப் பின்பற்றி வந்துள்ளது.

சங்க காலத்தில் பெயரிடப்பட்ட முறை இப்போது பின்பற்றப் படவில்லை. இடையில் பிறமொழிப் பெயர்களை இட்டு வழங்குவதில் தமிழர்கள் பேரார்வம் கொண்டிருந்தனர்.

மாலா, வனஜா, கமலா, ரமா, பிரபா, சதீஷ், ரமேஷ், பாபு, சுரேஷ் போன்ற பெயர்கள் பெரும் செல்வாக்குப் பெற்றன.

இக்காலத்தில் தனித்தமிழில் பெயர் வைத்து அழைக்க வேண்டும் என்ற தன்னுணர்வு தமிழர் உள்ளத்தே தலை எடுக்கத் தொடங்கியுள்ளது. அம்முயற்சிக்குச் சிறிதளவாவது பயன் விளையுமெனக் கருதிப் பின்வரும் சில பெயர்களைத் தருகின்றோம்.

## பெண்பாற்பெயர்கள்

அங்கயற்கண்ணி
அமுதா
அமுதரசி
அமுதமொழி
அமுதமலர்
அமுதச்செல்வி
அரசி
அருமைச்செல்வி
அருமைமணி
அருளம்மை
அருளரசி
அருண்மங்கை
அருள்நங்கை
அருள்மொழி
அருள்செல்வி
அல்லி
அல்லிமலர் மங்கை
அல்லிக்கொடி
அழகரசி
அழகம்மை
அழகி
அழகு மயில்
அழகு நிலா
அழகு மலர்
அழகோவியம்
அறச்செல்வி
அறிவழகி
அறிவுச்செல்வி
அறிவம்மை
அன்னக்கிளி
அன்னக்கொடி
அன்னம்மை
அன்பரசி
அன்பழகி
அன்பு மொழி
அன்புக் கிளி
இசையரசி
இசையமுது
இளங்குயில்
இளநிலா
இளவரசி
இளவழகி
இளவேனில்
இனியாள்
இன்பமலர்
இன்பநிலா
கண்ணகி
கண்ணழகி
கவிதா
கனிமொழி
கன்னல் மொழி
கலையரசி
கலைவாணி
கலைச்செல்வி
கலைமலர்
கிளிமொழி
குமுதம்
குமுதவல்லி
குயிலி
செம்மலர்
செம்பவளம்
செங்கனி
செல்வி
தமிழரசி
தமிழ்ச்செல்வி
தாமரைச்செல்வி
தேனருவி
தேன்மொழி
நிறைமதி
பூங்கொடி
பூங்கோதை
பூங்குழலி

பூம்பாவை
பொற்கொடி
பொன்மயில்
பொன்னிலவு
மணிமொழி
மணியரசி
மலர்விழி
மல்லிகை
மாதுளை
மாதவி
முத்தழகி
வளர்மதி
வடிவுக்கரசி

### ஆண்பாற்பெயர்கள்

அண்ணல் தங்கோ
அமுதன்
அரசு
அரங்கண்ணல்
அருள்நம்பி
அழகன்
அழகுமணி
அழகுப்பாண்டியன்
அறவாணன்
அறிவழகன்
அறிவுடை நம்பி
அன்பழகன்
இசையரசு
இளங்கீரன்
இளங்கோவன்
இளஞ்செழியன்
இளவழகன்
இனியன்
கலைவாணன்
கலைமணி
குயிலன்
செம்பியன்
செங்குட்டுவன்
தமிழ்ச்செல்வன்
தமிழ்வாணன்
தமிழரசு
தென்னரசு
நெடுமாறன்
பன்னீர்ச் செல்வம்
பொன்னிலவன்
பொன்னிவளவன்
பூங்குன்றன்
பொன்முடி
மலர்வண்ணன்
முத்தழகன்

## 13. அயல் நாடுகளில் தமிழ்

இலங்கையில் பழங்காலத்திலிருந்தே தமிழ், சிறுபான்மையான—ஆனால் செல்வாக்கு மிகுந்த கூட்டத்தினரின் தாய்மொழியாக இருந்து வந்துள்ளது. தென்னிந்தியாவில் வாழ்ந்த பௌத்தர்கள் இலங்கைவாழ் பௌத்தர்களோடு எப்போதும் தொடர்பு கொண்டே வாழ்ந்துள்ளனர்

பிற்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் இரகு வமிசம், தட்சிண கைலாச புராணம் போன்றவற்றைப் படைத்தனர். ஆறுமுக நாவலர், விபுலானந்தர், தனிநாயக அடிகள் போன்றாரின் தமிழ்த்தொண்டு மகத்தானது.

நெருங்கிய தொடர்பு காரணமாகப் பல தமிழ்ச்சொற்கள் சிங்கள மொழியில் ஏறி இரண்டறக் கலந்துவிட்டன.

## (அ) இலங்கைத் தமிழிலக்கியம்

தமிழ், கடல் கடந்து சென்றுள்ள நாடுகளில் குறிப்பிடத்தக்கவை இலங்கை, மலாசியா, தென்னாப்பிரிக்கா, பர்மா, பிஜித்தீவுகள் ஆகியன. இவற்றுள் தமிழகத்துடன் மிக நெருக்கமான தொடர்புடையது இலங்கை.

சங்க காலத்துக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழகம் ஈழத்தோடு தொடர்புகொண்டிருந்தது. சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதன் தேவனார் பாடியதாக ஏழு பாடல்கள் உள்ளன.

பத்துப்பாட்டினுள் ஒன்றான பட்டினப்பாலை

"ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்"

எனக் குறிக்கின்றது.

சேரன் செங்குட்டுவன், ஒருமுலை இழந்த திருமாபத்தினிக்கு எடுத்த கற்கோயில் விழாவுக்குக் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' வந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் பேசுகின்றது.

இன்றும் இலங்கையில் பத்தினிக்கடவுள் வழிபாடு உண்டு. கண்ணகியைச் சிங்களவர்கள்கூட 'பத்தினித் தெய்யோ' என வழங்கி வழிபடுகின்றனர்.

கி. பி. 11- ஆம் நூற்றாண்டில் இலங்கை சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போது முதலாம் இராசராசன் பொலனருவையில் வானவன் மாதேவீச்சரம் என்ற சிவன் கோயிலை எழுப்பினான். இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்களவர்களும் தமிழைப் போற்றியதாக வரலாறு கூறுகின்றது.

இலங்கையில் கி. பி. 18- ஆம் நூற்றாண்டில்தான் குறிப்பிடத்தக்க இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டதெனலாம். இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில்தான் தமிழில் அச்சடிக்கப்பட்ட நூல்கள் பழக்கத்திற்கு வந்தன.

'மானிப்பாய்' என்னுமிடத்தில் அமெரிக்கப் பாதிரிமார் நிறுவிய அச்சு இயந்திரம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலர் நிறுவிய வித்தியானு பாலன இயந்திரசாலை ஆகியவை இலங்கைத் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

முதன் முதலில் ஈழத்தில் தோன்றிய தமிழ்ச் 'செய்தித்தாள்' உதய தாரகை -*1841.* இதைத் தொடர்ந்து வெளிவந்தவை:

சத்திய வேத பாதுகாவலன்
இந்து சாதனம்
ஞானப்பிரகாசம்
சன்மார்க்க போதினி
இலங்கை நேசன்
உதயபானு
ஈழகேசரி,
வீரகேசரி
தினகரன்
சுதந்திரன்
கலைச்செல்வி
தேனருவி.

இவை தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன.

செய்தித்தாள்களேயன்றி. *1948*- ஆம் ஆண்டிற்குப் பின் பல சங்கங்கள் தோன்றித் தமிழ்ப்பணி புரிந்தன. அவற்றுள்,

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்
அகில இலங்கை எழுத்தாளர் சங்கம்.
இலக்கிய அன்பர் வட்டம்
யாழ் இளம் எழுத்தாளர் சங்கம்
தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம்
இலக்கிய இரசிகர் குழு.
தமிழ் எழுத்தாளர் மன்றம்

முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

இலங்கையின் தற்காலத் தமிழிலக்கிய வகைகளில் முதலில் தோன்றியவை, நாவல்களே.

1896- இல் திருகோணமலை சரவண முத்துப்பிள்ளை எழுதிய 'மோகனாங்கி' என்பதே ஈழத்தில் தோன்றிய முதல் நாவல். இதன்பின்னர் எழுதப்பட்டவை :

வீர சிங்கன் கதை, இரத்தினபவானி, உதிரபாசம், விஜயசீலம். — சி. வை. சின்னப்பிள்ளை.

சித்தகுமாரன் - 1925 — இடைக்காடர்.

தொடக்கத்தில் துப்பறியும் நாவல்களே மலிந்திருந்தன.

பூங்காவனம் — மா. சிவராமலிங்கம் பிள்ளை.

செல்வரத்தினம் — வே. க. நவரத்தினம்.

குலநாயகி திலகவதி — ம. க. சின்னையா.

மேகவர்ணன் — வே . வ. சிவப்பிரகாசம்

இக்காலத்தை ஒட்டித் தோன்றிய தமிழ்நாட்டு நாவல்களும், மலேசிய நாவல்களும் இதே நிலையில்தான் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 1927 - இல் அ. நாகலிங்கம் எழுதிய சாம்பசிவ ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம் என்ற நூல் இதற்கு விதி விலக்கானது.

1940 - ஆம் ஆண்டிற்குப் பின் வெளிவந்த பல நாவல்கள் பொழுதுபோக்கு ஒன்றையே நோக்கமாகக்கொண்டு எழுதப்பட்டன. இவற்றை எழுதியவர்களுள் இளங்கீரன், கசின் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1956- க்குப் பின் இலங்கை நாவல்களில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. அவற்றில் ஈழத் தமிழ்மக்களின் வாழ்க்கையில் அமைந்த அழுத்தமான பின்னணியையும், நாவலுக்குரிய கட்டுக்கோப்பையும் காணலாம்.

அத்தகைய நாவல்களைப் படைத்த முதல் சிற்பி செ. கணேசலிங்கன் அவர்கள். இவருடைய நாவல்கள் ஈழத் தமிழ் வரலாற்றில் முதலிடம் பெற்றுள்ளன.

அவை :

நீண்ட பயணம் — 1965
சடங்கு — 1966

தரையும் தாரகையும் — 1968.
போர்க்கோலம் — 1969
மண்ணும் மலர்களும் — 1970

மற்றையோர் எழுதியவை :

தீ-1961 — எஸ். பொன்னுத்துரை
குட்டி-1963
சொந்தக்காரன்-1968 — பெனடிக்டியோ பாலன்.
ஒரு நாள் பிரயாணம்-1965 — க. கயிலைராசன்.
ஆச்சி பயணம் போகிறாள்-1969 — செங்கை ஆழியான்
வெள்ளரி வண்டி-1968 — சண்முகநாதன்.

இந்நாள்களிலும் பெருநூலாக வெளிவருகின்ற நாவல்களை விடத் தொடர்கதை அளவில் நின்றுவிடும் நாவல்களே மிகுதி கவிதைகள் என்னலாம்.

**கவிதை இலக்கியம்**

இலங்கைத் தமிழ் வரலாற்றில் 40 ஆண்டுக் காலமாகக் கவிதைகள் பெருகிவருகின்றன.

1938 - ஆம் ஆண்டில் தோன்றிய பிள்ளைப்பாட்டு என்ற நூல் தான் இலங்கைக் கவிதை நூல்களின் முன்னோடி.

இதன் பின் அ. சோ. நடராசன், நாவற்குழியூர் நடராசன், மகாகவி, சாரதா, சோ. தியாகராசன். செ. கதிரேசம்பிள்ளை, பரம ஹம்சதாசன், முருகையன், மு. செல்லையா, நீலவாணன், திமிலைத் துமிலன் போன்ற பல கவிஞர்கள் தோன்றிக் கவிதை இலக்கியங்களை வளர்த்தனர்.

இவர்களுள் கிராமியச் சூழ்நிலையை அடியொற்றிக் கவிதைப் பொருளில் மட்டுமன்றி நடையிலும் புதுமையைக் கையாண்ட வர், மகாகவி. கவிஞர்களில் இவர் ஒரு தனி இடத்தைப் பெற்றுள் ளார்.

கவிதை நாடகங்களில் (பா நாடகங்கள்) மகாகவியின் 'கோடை முற்றிற்று', 'புதியதொரு வீடு' என்பனவும், முருகையன் எழுதிய, 'தரிசனம்', 'வந்து சேர்ந்தன' என்பனவும், அம்பியின் 'வேதாளம் சொன்ன கதையும்' குறிப்பிடத்தக்கவை.

தமிழ் இலக்கியத்தில் 'சிறுகதை' முன்னணியில் நிற்பதைப் போலவே ஈழத்திலும் சிறுகதை இலக்கியம் வளர்ந்து வருகிறது.

1942-இல் தோற்றுவிக்கப்பட்ட மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கம இப்பணியை ஊக்குவித்து வருகிறது. சிறுகதை எழுத்தாளருள் டொமினிக் ஜீவா, கே. டானியல், செ. கணேசலிங்கன், காவலூர் ராசதுரை, ரகுநாதன், நீர்வை பொன்னையன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாடகத்துறையில் இலங்கையில் அவ்வளவு வளர்ச்சியைக் காண முடியவில்லை.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் நல்லூர் ப. கந்தப் பிள்ளை, அ. சுவாமிநாதர், நாகேசையர், அராலி முத்துக்குமாருப் புலவர் முதலியவர்கள் சில மேடை நாடகங்கள் எழுதினர். எனினும் நாடக நூல்கள் மிகுதியாக எழவில்லை.

20-ஆம் நூற்றாண்டு நாடகாசிரியர்களுள் சிறப்பிடம் பெறுபவர் இலங்கையர் கோன். இவர் பல ஓரங்க நாடகங்கள் எழுதியவர். 'பச்சோந்திகள், லண்டன் கந்தையா, மிஸ்டர் குகதாசன், மாதவி மடந்தை, விதானையார் வீட்டில்' என்பன அவற்றுள் சிறந்தவை.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள், பிழையற்ற இலக்கணம் அமைந்த நல்ல தமிழ் நூல்களும், உரைநூல்களும் எழுதியவர்.

தொல்காப்பியத்திற்கு அருமையான இலக்கணக் குறிப்பு எழுதிப் பதிப்பித்த கணேசையரும், சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை போன்றவர்களும் தமிழ் அன்னைக்கு அருந்தொண்டு ஆற்றியவர்கள் என்பது வரலாறு கூறும் உண்மைகள்.

### (ஆ) மலேசியத் தமிழ் இலக்கியம்

தமிழ்நாட்டிற்கும் மலேசியாவுக்கும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

1840-ஆம் ஆண்டில் மலேசியாவிலுள்ள வெல்லெஸ்லி மாநிலத்திலும், கெடா மாநிலத்திலும் புதைபொருள் ஆராய்ச்சி நிகழ்த்திய ஜேம்ஸ் லோ என்ற ஆராய்ச்சியாளர் பல நூற்றாண்டுகட்கு முன்னரே அங்கு இந்தியர் குடியேறி வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கண்டெடுத்து அறிவித்துள்ளார்.

1786-இல் பினாங்கு ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்து ஏற்பட்ட பல தொடர்புகள் இந்த நூற்றாண்டு வரை நீடித்

துளளன. இந்திய வணிகரும் தொழிலாளரும் ரப்பர், கரும்பு, காப்பி, தென்னை ஆகிய தோட்டங்கள் மலேசியாவில் பெருகப் பெருக மேன்மேலும் சென்று குடியேறத் தொடங்கினர். 1860 முதல் 1957 வரை இவ்வாறு குடியேறியவர் தொகை நான்கு மில்லியன் எனக் கணக்கிட்டுள்ளனர்.

பிழைப்பதற்காகச் சென்ற இடமெனினும் தமிழர்கள் அம்மலை நாட்டைத் தங்கள் சொந்த நாடாகவே எண்ணி வாழத் தலைப் பட்டனர். தமிழையும் மலேயாவையும் தமது இரு கண்களாகவே கருதி வந்தனர்.

அங்கு உள்ள இலக்கியங்களின் போக்கைத் தழுவி, சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் விடுதலைக்கு முன்பும் அவர்கள் வெளியிட்ட நூல்களுள் குறிப்பிடத்தக்கவை சில;

1887 : வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல், சிங்கை நகர் அந்தாதி.

1893 : சல்லாப லாவணி.

1900 : சீறாச் சதகம்.

1928 : முருகவேள் பஞ்சரத்தினப் பாமாலை.

1929 : தண்ணீர்மலை சிவஷண்முகநாதனின் பக்தி சுரக் கீர்த்தனை.

1931 : பினாங்கு தண்ணீர்மலை முருகன் ஆடுமயில் பாடல்கள்.

1936 : கோலாலம்பூர் பத்துமலை சக்தி வடிவேலர் காவடி அலங்கார ஆசிரிய விருத்தம்.

1941 : பினாங்கு ஜெனரல் மருத்துவ மனையில் வீரையா செய்த பரிதாபக் கொலைச்சிந்து.

1932 : மலேயா நாட்டில் வெள்ளத்தால் விளைந்த விபரீதச் சிந்து.

1934 : மலேயா நற்காலச் சிந்து.

**செய்தித்தாள்கள் :**

அன்று முதல் இன்றுவரை மலேசியத் தமிழிலக்கியத்தை உரு வாக்கியவை செய்தித்தாள்களே எனலாம். செய்திகளைத் தருவதை மட்டும் பணியாகக் கொள்ளாமல் இலக்கிய வளர்ச் சிக்கும் அவை பெரிதும் உதவின.

அவற்றுள் குறிப்பிடத்தக்கவை :

1923 : தமிழகம், தமிழ் நேசன்.
1929 : தமிழரசி.
1931 : தமிழரசு.
1930 : மலாய் நாடு.
1932 : தமிழர் பாதுகாவலன் ; மலாயா தூதன்.
1933 : தமிழன், தமிழ்ப்பூங்கா.
1934 : தமிழ்த்தாய் ; தமிழ்ச்செல்வன்.
1935 : தமிழ் முரசு, மலாய் மணி.
1937 : மலாயா மித்திரன்.
1939 : தமிழ்க்கொடி ; தமிழ்ச்சுடர்.
1946 : மலாயா வர்த்தக மணி, தமிழ்ப் பூஞ்சோலை.
1948 : தமிழ்ச்சுடர் ; மலாயா நண்பன், தமிழாசிரியன்.
1954 : தமிழ் ஓசை.
1956 : தமிழ்க்குயில், மலைமகள், தமிழ் ஜோதி.
1957 : மலாயா
1958 : மலை நாடு, தமிழ்த் தொண்டன்.
1963 : மலாசியா மலர், தமிழ் மலர், தமிழ்ப் பூங்கா.

அங்குள்ள தமிழர்களின் நெஞ்சம் 'தமிழை' எப்போதும் மறந்ததில்லை என்பதற்கு இவற்றுள் பெரும்பாலும் 'தமிழ்' என்றே தொடங்கியுள்ளமை ஒரு சான்றாகும்.

இவை மலேசியத் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்கன.

**கவிதைத் தொகுப்புகள் :**

1. மலாயாவில் தமிழ்க் கவிதைகள் —பரிதா மாணளன்.
2. கவிதைத் திரட்டு —தில்லை முகம்.
3. கவிதைப் பித்தன் கவிதைகள் —வேலுசாமி.
4. இளந்தளிர் (சிறுவர் கவிதை நூல்) —முரசு —நெடுமாறன்.
5. இதய ஓசை —சிங்கை முகிலன்.
6. கவிதை மலர்கள் —ந. பழனிவேலன்.

**நாவல்கள் :**

1. கருணாகரன் அல்லது காதலின் மாட்சி (1917) —வெங்கடரத்தினம்.
2. சன்மார்க்க விசயம் (1918) —பாலசுத்தரம்.

3. தோட்டக்கலை மர்மம் அல்லது
பத்துமலைக் கள்வன் (1932) —கோ. பார்த்தசாரதி.
4. கோரகாந்தன் (1934) —மு. சீ. செல்லத்துரை.
5. மதன பூரணி (1931) —கே. எஸ். பாண்டியன்.
6. நேசமலர் அல்லது கற்றோரின் கனா (1936) —சிவஞானம்.
7. அழகானந்த புஷ்பம் (1936) —க. டொமினிக்.

இவற்றுள் பல துப்பறியும் நாவல்கள். தமிழகத்தில் எழுதப்பட்ட நாவல்களைப் பின்பற்றி எழுதப்பட்டவை.

**மலேசிய விடுதலைக்குப் பின் எழுதப்பட்ட நாவல்கள் :**

8. மல்லிகா—1957
9. மாலாவின் துறவு—1965
10. மூங்கில் பாலம்—1963
11. அந்த நதியில் இரண்டு மீன்கள்—1967
12. மாயை—1967
13. நீர்ச்சுழல்—1958
14. வாலிபக்கிழவன்—1970
15. அல்லிமலர்—1971
16. மலேசிய மங்கை—1971

மலேசியத் தமிழிலக்கியத்தில் இன்று முன்னணியில் நிற்பவை சிறுகதைகளே எனலாம். கதை வகுப்புகள், திறனாய்வு வகுப்புகள், சிறுகதைப் போட்டிகள், இலக்கிய வட்டக் கூட்டங்கள், பவுன் பரிசுத் திட்டம்ஆகியவை சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன.

**தாய்லாந்தில் பாவை விழா :**

தமிழ்நாட்டில் மார்கழித்திங்களில் நடைபெறும் பாவை விழா செல்வாக்குப் பெற்றது. சைவர்களுக்குத் திருவெம்பாவையும் வைணவர்களுக்குத் திருப்பாவையும் சமய இலக்கியச் செல்வங்கள்.

மார்கழித்திங்களில் கன்னிப் பெண்கள் வைகறையில் நீராடி ஆற்றங்கரை, குளத்தங்கரைகளில் மண்ணாற் பாவை செய்து

வழிபட்டு, நாட்டில் மழை பெய்து வளஞ்சுரக்க வேண்டுமெனப் பாடி நோன்பு நோற்பது பாவை விழா எனப்படும்.

தாய்லாந்திலும் இப்பாவை விழா கொண்டாடப்படுகின்றது.

அதுவும் மழைத் திருவிழாவே. அதனை 'லோரம்பா' என வழங்கு கின்றனர், 'லோரம்பா' என்பது தமிழ்ச்சொல். தமிழில் பாவைப் பாடல்கள் 'ஏல் ஓர் எம்பாவாய்' என முடிகின்றன. இச்சொற் றொடரே 'லோரம்பா' எனத் திரிந்து வழங்குகின்றது.

119656

18/11/90

—

ஏஷியன் அச்சகம், சென்னை - 600014